
உங்கள் பிரதிகளுக்கு முன் பதிவு செய்யுங்கள்





# மங்கை

## அடுத்த இதழ் (ஜுலை '97)

## அக்கரை ஆலயச் சிறப்பிதழ்

அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, சிங்கப்பூர், கனடா, இங்கிலாந்து, ஹாங்காங், ஜப்பான், இலங்கை மற்றும் பல வெளிநாடுகளில் உள்ள ஆலயங்கள் பற்றிய சிறப்புக் கட்டுரைகளுடனும், மெய்சிலிர்க்க வைக்கும் வண்ணப்படங்களுடனும் 'அக்கரை ஆலயச் சிறப்பிதழ்' தயாராகிறது.








கண்டி கதிர்காமக் கந்தனின் அருள் ஒளி வீசும் முழுப்பக்க வண்ணப்படத்துடன் கலபாக்கம் அடிகளார் எழுதும் கதிர்காமக் கந்தன் - சிறப்பு கட்டுரை


மற்றும் இதுவரை நீங்கள் கேள்விப் பட்டிராத அக்கரை ஆன்மீகச் செய்திகள்.

வெளிநாடுகளில் வாழும் பக்தர்கள் வாழ்வில் **சத்ய சாயி பாபா** நிகழ்த்திய அற்புதங்கள்.



HINDU TEMPLE SOCIETY OF CANADA


உங்கள் பிரதிகளுக்கு முன் கூட்டியே கடைக்காரரிடம் சொல்லி வையுங்கள் ஏமாற்றத்தைத் தவிருங்கள்



## —ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராச் சாரிய சுவாமிகள்

"பிறருக்கு உபகாரம் செய்வதற்கே நமது சரீரம் ஏற்பட்டிருக்கிறது" என்பது ஆன்றோர் மொழி. 'பரோபகாரார்த்தம் இதம் சரீரம்' என்பார்கள். தேகத்தில் நல்ல தெம்பு இருக்கிறபோதே, பிறருக்காக நன்றாக உழைக்க உடலில் சக்தி இருக்கிறபோதே, யுவர்கள் சேவை நெறியில் ஈடுபட வேண்டும். பிறருக்கு சேவை செய்வதற்காகவே தேக பலத்தை நன்கு காத்துக் கொள்ள வேண்டும். தேகபலத்தை விட ஒழுக்க பலம் முக்கியம். நமது மதம் கூறுகிற சாசுவத தர்ம நெறியின் படி சுத்தமான வாழ்வு வாழ வேண்டும். இப்படியெல்லாம் இருந்தால்தான் பிறருக்கு நல்ல முறையில் சேவை செய்ய முடியும்.

சமூக சேவை உண்மையாக இருக்க வேண்டுமெனில் சேவை செய்கிறவர்களுக்கு தர்மத்திலும், சத்தியத்திலும் தளராத பிடிப்பு இருக்க வேண்டும். அவர்களுக்குப் பயம் என்பதே கூடாது. பயமற்ற நிலை வேறு; ஹிம்சை வழியில் நடப்பது வேறு. இரண்டையும் குழப்பிக் கொள்ளக் கூடாது. யுவர்களுக்கெல்லாம் உதாரணமாக இருப்பவர் ஆஞ்சநேய சுவாமி. அவருக்கு இருந்த பலம் மிகப் பெரியது. ஆயினும் பக்தியில் தோய்ந்து, அடக்கத்துடன், விநயமே ஸ்வரூபமாகச் சேவை செய்து கொண்டிருந்தார். பயமென்பதே அவருக்கு இல்லை. ஆனாலும் ஹிம்ஸை வழியில் அவர் சென்றதில்லை. சொந்த நலனுக்காகப் பலத்தைப் பிரயோஜனப் படுத்தவில்லை. துர்பலருக்குக் கொடியவரால் கஷ்டம் ஏற்பட்டால் தம் நலனையும் பொருட்படுத்தாமல் பலவீனரை ரட்சிப்பதில் அஞ்சா நெஞ்சராகச் சேவை செய்தார். சிவாஜியும் இப்படிப்பட்ட ஓர் உதாரண புருஷர். தேக பலம், அஹிம்ஸை, பயமற்ற நிலை இவற்றோடு சொந்தக் கஷ்டங்களைப் பாராட்டாமல் பிறருக்கு உதவும் பான்மையும் சேர்ந்தால் அது மிகப் பெரிய சீலமாகும். இதற்கே 'க்ஷத்ர தர்மம்' என்று முன்னாளில் பெயர் சொல்லப்பட்டது.



'க்ஷதாக்கில த்ராயதே இதி க்ஷத்ரம்' - பிறரைத் தீமையிலிருந்து காப்பதே க்ஷத்ரம் என்பது இதன் பொருள். 'க்ஷத்திரியர்' என்ற பெயர் இதிலிருந்துதான் பிறந்தது. இப்போது நம் நாட்டு யுவர்கள் இந்த க்ஷத்ர தர்மத்தை மேற்கொள்ள நிரம்ப அவசியமிருக்கிறது. பலிஷ்டர்களைக் கண்டு பயப்படக் கூடாது. பலவீனவர்களை பய முறுத்தவும் கூடாது. பலவீனர்களைப் பலவான் கொடுமைப்படுத்தாதபடி காப்பாற்ற வேண்டும். இதுவே சேவையில் ஈடுபட்ட யுவர்களின் தர்மம்.

துரதிருஷ்ட வசமாக இதற்கு நேர்மாறான போக்கைக் காணும்போது வருத்தமாக இருக்கிறது. பலவீனர்களைப் பயமுறுத்தி ஹிம்சை முறையால் பணிய வைக்கிற போக்கு நல்லதல்ல. பலம் படைத்தவர்கள் பலத்தை துஷ்பிரயோகம் செய்யும்போது அதைக் கண்டு பயப்படுவதும், அதேபோல் தங்கள் பலத்தை துஷ்பிரயோகம் செய்து பலவீனர்களைப் பயமுறுத்துவதும் தேசத்துக்கு நல்லதல்ல. தனி மனிதர்கள் உறுதியும் ஆத்ம பலமும் கொண்டிருப்பது, அவர்கள் கட்டுப்பாட்டுடன் ஒன்று கூடி ஐக்கியமாக உழைப்பது, தீமையையும் அடக்கு முறையையும் கண்டு அஞ்சாது நெஞ்சுறுதியுடன் போராடுவது - இவையெல்லாம் இந்த சமூக சேவை காரியத்தில் அடக்கம். லோக க்ஷேமம் ஒன்றே லட்சியமாகக் கொண்டு இந்த காரியத்தை நடத்திக் காட்டினால், நாட்டின் ஒழுக்கம் மிக உயர்ந்த நிலை அடையும்.

மனிதர்களுக்குச் சேவை செய்வதே பகவானுக்குச் செய்கிற பூஜை. தனியாக பகவத் தியானம், பூஜை ஏதுவும் வேண்டாம்' என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் கோயில்கள் முதலிய வழிபாட்டிடங்கள் வேண்டியதில்லை என்றும், அவற்றை வைத்திய சாலைகளாகவும், பள்ளிக்கூடங்களாகவும் மாற்றிவிட வேண்டும் என்றும் சொல்கிறார்கள். மனிதர்களுக்கு ஆறுதல் தருவது, நோய் பிணி போக்குவது, கல்வியறிவு தருவது [illegible] தத்துவங்கள். அதில் பகவான் [illegible] என்பதும் பரம சத்தியம். ஆனால் யோசித்துப் பார்க்கும்போது 'மனித சேவையே பகவத் சேவை' என்ப தன் மாற்று வாசகமும் பரம சத்தியம் என்று தோன்றுகிறது. பகவத் சேவை செய்வதும் மனிதர்களின் நன்மைக்காகத்தான் என்று தெரிகிறது. அதுவே மற்ற சமூக சேவைகளை விட, மனிதனுக்கு நிரந்தர நலனைத் தருவதுமாகும்.

ஆஸ்பத்திரியில் நோயாளிகளைச் சொஸ்தம் செய்து அனுப்புகிறோம். அப்புறம் அவர்கள் நல்லவர்களாக வாழ வேண்டாமா? லோகத்துக்குக் கெடுதல் செய்கிறவர்களாகவும், தங்களுக்கே அனர்த்தம் செய்து கொள்பவர்களாகவும் அவர்கள் இருந்தால் அவர்களைச் சொஸ்தப்படுத்தியதன் பயனை நாம் அடைய முடியுமா? புத்திக் கோளாறு உள்ளதாகச் சொல்லப்படும் பலரை என்னிடம் அழைத்து வந்து சொஸ்தப்படுத்த வேண்டும் என்று கேட்கிறபோது, நான் இந்த ரீதியில்தான் உள்ளுக்குள் நினைத்துக் கொள்கிறேன். அதை அப்போது அவர்களிடம் சொன்னால் என்னிடம் ஆறுதல் தேடி வருகிறவர்களுக்கு மனசு கஷ்டப்படும். அதனால் சொல்வதில்லை. இப்போது பொதுவாகச் சொல்கிறேன்: புத்திபூர்வமான ஒரு தவறைச் செய்தால்தான் அது பாபமாகிறது. புத்தி தங்கள் வசத்திலேயே இல்லாமல் சித்தப் பிரமம் பிடித்தவர்கள் செய்கிற எதுவும் பாபம் இல்லை. ஏதோ பூர்வ பாபத்துக்காக அவர்கள் இப்படியாகியிருக்கிறார்கள். ஆனால் இப்போது அவர்களுக்கு பாபமில்லை. நாம் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது போல் சித்தப் பிரமை பிடித்தவர்கள் பேசுவதில்லை. மனசில் எது வருகிறதோ அதையே சொல்கிறார்கள். இவர்களையும் 'சொஸ்தப்படுத்துவது' என்கிற பெயரில் மற்றவர்களைப் போல் ஏன் ஆக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுவதுண்டு.

ஆஸ்பத்திரி வைத்து உடல் வியாதியைத் தீர்ப்பது போதாது. நோயாளிகளது மனசில் கெட்ட எண்ணங்கள் என்ற வியாதி இல்லாமல் செய்வதே அதைவிட முக்கியம். இவ்வாறேதான் பள்ளிக்கூடம் வைத்துப் படிப்பை விருத்தி செய்கிறோம். படித்து வெளிவந்தவர்கள் யோக்கியர்களாக இல்லாவிட்டால் பள்ளிக் கூடம் வைத்த பயன் நமக்கு ஏன்? வித்யாசாலையோடும் வைத்திய சாலையோடும் மநுஷ்யனின் வாழ்வு முடிந்து விடுகிறதில்லை. அவன் நல்லவனாக இருக்க வேண்டும். இப்படி நல்லவனாக்கிற நிலையங்களாக ஆலயங்களும் - ஆஸ்பத்திரி போலவே - அவசியம் இருக்கத்தான் வேண்டும். நாம் நல்லவர் ஆவதற்காக பகவத் தியானம், பூஜை இவை வேண்டியவைதான்.

மனிதனின் உடம்புக்கு ஆரோக்கியம் தருவது, புத்திக்குப் படிப்புத் தருவது, அவனுடைய தரித்திரத்தை நீக்கிச் செல்வச் சுபிட்சம் தருவது எல்லாவற்றையும் விட அவனை பகவானிடம் சேர்ப்பதே பேருபகாரம்.

மனிதனையே தெய்வமாக நினைத்து அவனுக்குச் சேவை செய்வது சிலாக்கியம் தான். ஆனால் நாம் அப்படி நினைப்பதோடு நிற்காமல் அவனை உண்மையாகவே தெய்வீகத்தில் ஈடுபடுத்த வேண்டும். இதற்காகவே ஆலயங்களை அவசியம் பேண வேண்டும்.

நல்லவனாவதற்குப் பக்தி தேவை இல்லை என ஒரு வாதம். ஆனால் நடைமுறையில் பலவிதமான சுயநல ஆசைகளால் ஆட்டி வைக்கப்படுகிற ஜீவனைப் பரிசுத்தப்படுத்துவதற்கு பக்தியைப் போன்ற சாதனம் வேறு இல்லை. 'பகவான் என்ற ஒருவன் சர்வ சாட்சியாகவும், சர்வ சக்தனாகவும் இருந்து கொண்டு நம் கர்மங்களுக்குப் பயன் தருகிறான்' என்கிற பய பக்தி உணர்ச்சிதான் யுக யுகாந்தரமாக மனிதனைத் தர்ம மார்க்கத்தில் நிறுத்துவதற்குப் பெரிய ஊன்றுகோலாக இருந்து வந்திருக்கிறது.

பக்தியின் லட்சியம் நல்லவனாக ஆக்குவது மட்டுமல்ல. நமக்குக் காரணமான சக்தியைத் தெரிந்து கொண்டு, அதற்கும் நமக்கும் பேதமில்லை என்ற பரம ஞானத்தை அடைந்து சம்சாரச் சுழலிலிருந்து தப்புவதே பக்தியின் லட்சியம் [illegible] உலகத்துக்கு நல்லவனாக நடக்கவும் கூட அது [illegible] அவன் செய்யும் சமூக சேவையே அவனு[illegible]

—கல்யாணி



22SL26.



# தொண்டுகள் சிறுகதைகள் அல்ல...

## —திருமதி நிர்மலா அண்ணாத்துரை

[illegible]



"ஒவ்வோர் ஆண்டும் கல்யாண நாளன்று, சமூக அமைப்புகளுக்கு ஏதேனும் உதவிகள் செய்ய வேண்டும் என்று அவர் விரும்புவார். அந்த வகையில், தாம்பரம் 'காது கேளாதோர் வாய் பேசாதோர் பள்ளி'க்கு குழந்தைகள் அமர்வதற்கான இருக்கைகள் வாங்கிக் கொடுத்தார்.

திருமணம் என்பது நம் சமூக அமைப்பில் மிக ஆடம்பரமான விழா என்றுதான் பலரும் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவரோ பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் மிக மிக எளிமையான முறையில் திருமணம் நடத்தி, அதில் மிச்சப்படுத்திய தொகையைச் சேவை இல்லங்களுக்குக் கொடுத்தார்.

முதல் மகனின் திருமணத்திற்கு 40 பேரை அழைத்தார். இரண்டாவது மகனுக்கோ 20 பேரை மட்டுமே அழைக்கப் போவதாகச் சொல்லுகிறார்.

தன் கல்யாணத்துக்குக் கூட அழைப்பிதழில் 'அன்பளிப்பு எதுவும் ஏற்கப்படாது!' என்று அச்சிட்டார்.

திருமண விழா என்று மட்டும் அல்ல... பிறந்த நாள் விழாக்களின் போதும், அவருக்குச் சேவை எண்ணமே முன்னிற்கும். அண்மையில் (டிசம்பர்) பிறந்த நாளின் போது 'உதவும் கரங்'களுக்கு 15,000 ரூபாய் கொடுத்து மகிழ்ந்தார்.

சிறு வயதில் இருந்தே என் கணவர் போராடிப் போராடி வாழ்க்கையில் முன்னேறியவர். எனவேதான், தன் தேவைகளை எவ்வளவு சுருக்கிக் கொள்ள முடியுமோ, அந்த அளவிற்குச் சுருக்கிக் கொள்கிறார். தேவைக்கு மேல் வசதிகள் பெருகினால், நிம்மதி குறைந்துவிடும் என்பதில் அவர் தெளிவாக இருக்கிறார். அதனால்தான், சமூக சேவைகளில் கவனம் செலுத்தி நிம்மதி காண்கிறார்.

சமீபத்தில் இலங்கை அகதிக் குழந்தைகள் பெங்களூரில் அவதிப்படுகிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டு, அங்குள்ள 230 குழந்தைகளுக்கும் ஆடைகள் தைத்துக் கொடுக்க முன் வந்தார்.

"யான் பெற்ற இன்பம், பெறுக இவ்வையகம்" என்னும் பெரு நோக்கில், தமிழகம் முழுவதும் பத்து மையங்களை உருவாக்கி, இலவச காந்த சிகிச்சை மற்றும் ஆலோசனைகளையும் அவர் வழங்கி வருகிறார்.

சென்னை, கவிமண்டபம் அருகில் அச்சுதானந்தம் என்பவர் நடத்திக் கொண்டிருக்கும் 'சத்திய சாயி அறக்கட்டளை' அமைப்பில் மாற்று மருத்துவத்தை இலவசமாக மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார். வசதியற்ற மாணவர்களுக்குத் தட்டச்சு, கணிப்பொறிக் கல்விகள், இசைக் கல்வி ஆகியவற்றை அந்த அமைப்பு இலவசமாகவே தருகிறது. (முகவரி 61, அருந்தூண் தெரு, கவிமண்டபம், இராயபுரம்.)

சென்ற ஆண்டு நாகை வேளாங்கண்ணி மாதா கோயிலிலும், 25 சகோதரிகளுக்கு மூன்று நாட்கள் மாற்று மருத்துவப் பயிற்சி கொடுத்துள்ளார். 'காட்பாடி ரெயில் சிட்டி ஜூனியர் சேம்பர்' அவரது சேவைகளைப் பாராட்டி 'Best Service Award' வழங்கிச் சிறப்பித்தது.

—தொண்டுகள் சிறுகதைகள் அல்ல, அவை தொடர்கதைகள்... அவரைப் பொறுத்தவரையில் அவை வளர்ந்து கொண்டே இருக்கும்...!

தொகுப்பு: செல்வி மதிவாணன்

### தோஷம் நீங்க...

**ஞாயிற்றுக் கிழமை** அம்பாளை வழிபட்டு கோதுமை தானம் செய்தால், சூரிய பகவானால் உண்டாகும் தோஷம் நீங்கும்

**திங்கட் கிழமை** அம்பாளை வழிபட்டு பச்சரிசி தானம் செய்தால், சந்திர கிரக தோஷம் அகலும்

**செவ்வாய் கிழமை** அம்பாளை வழிபட்டு துவரை தானம் செய்தால், செவ்வாய் தோஷம் மறையும்.

**புதன் கிழமை** அம்பாளை வழிபட்டு பச்சைப் பயறு தானம் தந்தால் புத கிரக தோஷம் அகலும்

**வியாழக்கிழமை** அம்பாளை வழிபட்டு மூக்கு கடலை தானம் செய்தால், குரு கிரக தோஷம் அகலும்

**வெள்ளிக்கிழமை** அம்பாளை வழிபட்டு மொச்சை தானம் செய்தால், சுக்கிர கிரக தோஷம் அகலும்

**சனிக் கிழமை** அம்பாளை வழிபட்டு எள் தானம் செய்தால், சனி கிரக தோஷம் விலகும்

**பிரதி தினம் ராகு காலத்தில்** அம்பாளை வழிபட்டு உளுந்து தானம் செய்தால் ராகு கிரக தோஷம் விலகும்.

**பிரதி தினம் எம கண்ட காலத்தில்** அம்பாளை வழிபட்டு கொள்ளு தானம் செய்தால், கேது கிரக தோஷம் நீங்கும்.

**அமாவாசை திதி**யில் அம்பாளை வழிபட்டால், சகல பீடைகளும் விலகி விடும்

**பௌர்ணமி**யில் அம்பாளை வழிபட்டால், சகல சௌபாக்கியமும் உண்டாகும்.

**—நன்றி: பவானி புத்தகத்திலிருந்து**

தொகுப்பு: 'ராதா'

# பத்திரிகைத் துறையில்

# பெண்கள்

''கீதாச்சார்யன்'' எனும் வைணவ ஆன்மீகப் பத்திரிகையின் துணை ஆசிரியை திருமதி பூமா வெங்கட கிருஷ்ணன். திருமணத்தன்று தங்கள் கலாச்சார, சம்பிரதாய உடையான மடிசார் கட்டியதை (இருபது வயது முதல்) இன்று வரை மாற்றாமல், சென்னைப் பல்கலைக் கழகத்தில் படிக்கின்ற போதும், தொடர்ந்து வைணவத் துறை மாணவிகளுக்குக் கற்றுக் கொடுக்கின்ற போதும் மடிசாரில் சென்று வருபவர்.

''கீதாச்சார்யன்' 78ஆம் ஆண்டு என் கணவரால் ஆரம்பிக்கப் பட்டது. அந்த சமயத்தில் வண்ணப்படங்கள் வெளிவராத சமயம், சிறு பத்திரிகையில் வண்ணப்படம் வெளியிட்ட முதல் பத்திரிகை 'கீதாச்சார்யன்' எனும் பெருமை பெற்றது. முதல் அட்டை வண்ணப் படம் திருவல்லிக்கேணி பார்த்த சாரதி பெருமாளும் தொடர்ந்து நூற்று எட்டு வைணவ திவ்யஸ்தலங்களும் வந்து கொண்டிருக்கின்றன. சாண்டில்யன், கண்ணதாசன், நா.பா, ஸ்ரீவேணுகோபாலன் போன்ற எழுத்துலக ஜாம்பவான்கள், ஆன்மீகத் தொண்டாகக் கருதி கட்டணம் ஏதுமின்றி கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

''வைதீக உடையான பஞ்சகச்சத்தையும், மடிசாரையும் இன்றும், இந்த காலகட்டத்திலும் அணிவது நீங்கள்தான். வைணவம், ஆன்மீக சிந்தனை, பத்திரிகை, நல்லொழுக்கம் இவற்றுடன் உடையிலும் பொருத்தமாக காணப்படுகிறீர்கள்'' என்று அனைவரும் பாராட்டுகின்றனர். மடிசார் கண்டு மரியாதையாக மாமி (சிறு பெண்ணாக இருந்தாலும்) என்று என்னை அழைப்பது எனக்குப் பெருமை தருகின்றது. சில இடங்களில் என் கணவரது நெற்றி நாமத்தையும், பஞ்சகச்சத்தையும் அருகில் என்னையும் பார்க்கும் மாணவர்கள் 'கோவிந்தா கோவிந்தா' என்று கிண்டலாக சொல்லும் போது கோபமாக நான் பேச யத்தனிக்கும் சமயம் என் கணவர் என்னைத் தடுத்து 'கோவிந்தா' எனும் கடவுள் நாமத்தை சொல்லும் அவர்களுக்கு நம்மால் புண்ணியம் கிடைப்பதை ஏன் தடுக்கிறாய்? விடு.'' என்பார். ஒரு விளம்பரப் படத்துக்காக ஒரு நிமிடம் மடிசாரில் என்னை காஃபி ஊட்டுவது போல் படம் எடுக்க அனுமதி கேட்டனர். நான் மறுத்து விட்டேன். பணத்துக்காக அந்த சம்பிரதாய உடையை நான் அணிவது போல் தோன்றும் என்பதுடன், நான் என் ஆத்ம திருப்திக்காகவே அணிகிறேன் என்று சொல்லி மறுத்து விட்டேன்.

ஆன்மீகம் தவிர, பல்கலைக் கழகம் நடத்திய 'ரங்கோலி' போட்டியில் முதல் பரிசு பெற்றுள்ளேன். என் மகன் மதுசூதனன் பத்தாம் வகுப்பு படிக்கின்றான். அவனுக்கும் ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடு. இரண்டாயிரம் திவ்யபிரபந்தப் பாடல்கள் இன்று அவனுக்கு மனப்பாடமாகத் தெரியும். நாங்கள் மிகுந்த ஆசாரத்துடன், வைதீகத்துடன் இருப்பதால் வெளியில் எங்கும் சாப்பிடுவதில்லை. கிணற்று நீர் உள்ள இடங்களில் மட்டும்தான் சில சமயம் சாப்பிடுவோம். இன்று வரை இதை கடைப்பிடித்து விட்டோம், நாளை எப்படியோ தெரியவில்லை'' என்றார் பூமா.

'ஆண்டாள்' படம் ஒன்று எட்டுக் கோணக் கண்ணாடியுடன் அமைந்து முத்து, கற்கள், ஜரிகையால் அலங்கரிக்கப்பட்டு, பிரேம் போடப்பட்டு திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் ஆண்டாள் பிரகாரத்தில் மாட்டியிருந்தது கண்டு, அதை தயார் செய்து மாட்டியது பூமாதான் என்பதை அறிந்து அது பற்றி கேட்டோம். ''ஆமாம்; நான்தான் அதை மாட்டினேன். முதன் முதலில் 'கீதாச்சார்யன்' பத்திரிகை நிதிக்காக 95ஆம் ஆண்டு திருமதி வைஜயந்தி மாலா அவர்களின் நிகழ்ச்சியை நடத்தினோம். திருப்பாவை முப்பதையும் மிக அழகாக அபிநயித்து நிகழ்ச்சியை வெற்றிகரமாக ஆக்கிய அவருக்கு தலைமை தாங்கிய அன்றைய கவர்னர் திரு. சென்னா ரெட்டி அவர்களின் கையால் அழகிய நினைவுப் பரிசாக என்ன தரலாம் என்று யோசித்து ஆண்டாள் படம் ஒன்றை வாங்கி அழகிய வேலைப்பாடுகள் செய்து தந்தேன்.



பூமா வெங்கடகிருஷ்ணன் தம்பதி

பார்ப்பதற்கு விலை உயர்ந்த தஞ்சை ஓவியம் போல் இருக்கும் அதன் நேர்த்தியை கவர்னரும், வைஜயந்திமாலா அவர்களும் மிகவும் பாராட்டினார்கள். பலருக்கும் அதை அன்பளிப்பாகத் தர ஆரம்பித்தேன். அதன் அழகில் ஈடுபாடு கொண்ட பலரும் கேட்பதால் தற்போது அதன் அடக்க விலை மட்டும் வாங்கிக் கொண்டு செய்து தருகிறேன்.

உடையில் மட்டும்தான் பழைய சம்பிரதாயம். ஆனால் எண்ணங்களில், செயல்களில் முற்போக்கான தம்பதிகள் இவர்கள் என்பதும், பூமாவின் திறமையை அவரது கணவர் எந்த அளவு ஊக்குவித்து பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக உருவாக்கி, பெண்களுக்கு பெருமை சேர்த்துள்ளார் என்பதை அறிந்து பெண்மனம் மகிழ்வு கொண்டது, பெருமைப்பட்டது. வாழ்த்துக்களை சொல்லி விடை பெற்றோம்

—பானுமதி ராமச்சந்திரன்

(தொடரும்)




# மாணிக்கக் கல்லின் பலன்கள்

'காலம் ஒருநாள் மாறும் நம் கவலைகள் யாவும் தீரும்' என்று வானொலியில் இசைத்த பாட்டு வரிகளை ரசித்தபடி வீட்டு வேலைகளை முடித்த நான், கைகளைப் புடவைத் தலைப்பில் துடைத்தவாறே, அப்பாடா! என்று ஊஞ்சலில் வந்து அமர்ந்தேன். ஊஞ்சலில் ஆடிக் கொண்டே அருகிலிருந்த மாத இதழ்களைப் புரட்டிக் கொண்டிருந்த போது, அருணா ஜெம்ஸ் அண்டு டைமண்ட்ஸ் விளம்பரம் என் கண்ணில் பட்டது. ஏற்கனவே பலர் வாயிலாக அந்தக் கடையைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த நான், நேரில் சென்று பார்த்த போது ஆடம்பரமில்லாத அறையில் எளிமையாக ஒருவர் அமர்ந்து ஜாதகப் பலன்கள் கூறிக் கொண்டிருந்தார். நவரத்தினக் கடை என்றால் ஷோ-வாக இருக்கும் என்று எதிர்பார்த்து வந்த நான் அந்த சூழலைப் பார்த்து திரும்பிச் செல்லாமல் உள்ளே சென்று அமர்ந்தேன். ஜாதகப் பலன்கள் கூறியவர்தான் நவரத்தினக் கடை உரிமையாளர் **திரு. கந்தையா பிள்ளை** என்பதைத் தெரிந்து கொண்டேன்.

என் முறையும் வந்தது. அவர் கூறிய ஜாதக விபரங்கள் அனைத்தும் உண்மையானதாகவும், மனதிற்கு திருப்தியாகவும் இருந்தது. என் ஜாதகப் பலனுக்குரிய இரத்தினம் கெம்பு இரத்தினம் (Red Ruby) என்றும் கெம்பு இரத்தினத்திற்குரிய பயன்களையும் கூறிய போது என்னுள் தோன்றிய வியப்பிற்கு அளவே இல்லை.


**திரு. கந்தையா பிள்ளை** அவர்கள் கெம்பு ரத்தினம் பற்றி கூறியதாவது:-

நவரத்தினங்களின் மகிமையை எளிதாக மதிப்பிட முடியாது. கிரகங்களுக்கும், நவரத்தினங்களுக்கும் முக்கிய தொடர்பு உண்டு. அதாவது கிரகங்களின் ஒளியானது நவரத்தினங்களிலும் ஊடுருவுகின்றது என்பதே உண்மை. நவரத்தின வகைகளான கெம்பு, முத்து, பவளம், பச்சை, புஷ்பராகம், வைரம், நீலம், கோமேதகம், வைடூரியம் போன்றவற்றில் முதன்மையாக விளங்குவது சூரியனுக்குரிய கெம்பு இரத்தினம்தான். அனைத்து கிரகங்களுக்கும் மைய நாயகனாக (மூல காரணமாக) சூரியனை வணங்குவது போல் நவரத்தினங்களின் மையமாக மதிக்கப்படுவது சூரியனுக்குரிய கெம்பு இரத்தினம்தான். நல்ல மனிதனை 'மனிதருள் மாணிக்கம்' என்று அழைப்பது போல் நவரத்தினங்களில் கெம்பு இரத்தினத்தை '**மாணிக்கம்**' என்று அழைக்கிறார்கள். நவரத்தினங்களின் சக்திகளை அனுபவ பூர்வமாகத்தான் உணர முடியும். ஒருவருக்கு ஜாதக பலனில் சூரியன் சரியான கிரகத்தில் அமையாவிட்டால் ஜாதகக்காரர்களுக்கு பிரச்னை அதிகமிருக்கும். சரியான குடும்பம் அமையாமை, தொழில் தடை, புத்திர பாக்கியமின்மை, வியாதி, வாழ்நாள் முழுவதும் துன்பம் போன்ற இடர்களை அனுபவித்தே தீர வேண்டும்.

இதனைத் தவிர்க்க சூரியனுக்குரிய கெம்பு இரத்தினத்தை அணிவதால் அணிந்தவருக்கு முதன் முதலாக அவரது தோற்றத்திலேயே கம்பீரம் ஏற்படுவதை உணரலாம். பண்டைக் கால மன்னர்களின் கிரீடத்திலும், மற்ற ஆபரணங்களிலும் கெம்பு இரத்தினம் பதிக்கப்பட்டு இருக்கும். சூரியனுக்கு முன்னால் கிரகங்கள் அஸ்தங்கம் (பஸ்பம்) ஆவது போல் கெம்பு இரத்தினம் அணிந்த மன்னர் முன் எதிராளிகள் பய உணர்ச்சியினால் அடங்கி மன்னருக்கு மரியாதை கொடுக்கும் தன்மையை ஏற்படுத்துகிறது.

அதே போல் அந்தக் காலத்துப் பெண்கள் தாங்கள் அணியும் ராக்கொடி, ஜடைபில்லை, வளையல், மோதிரம், நெக்லெஸ் (கழுத்து ஆரம்) போன்ற நகைகளில் பெரும்பாலும் கெம்பு இரத்தினம் பதித்து அணிந்திருந்ததால் அவர்களது இல்லத்திற்கு சூரியனின் பார்வை கிடைக்கும்படியான சூழ்நிலை அடைந்து எல்லாவிதமான பலன்களையும் அடைந்தார்கள் என்பது நிதர்சனமான உண்மை.

விலையுயர்ந்த கெம்பு இரத்தினமாக கருதப்படுவது இரத்தச் சிவப்பு நிறமுள்ள பர்மா இரத்தினங்களைத்தான். இரத்த ஓட்டம் தடைபட்டால் உடலுக்கு உயிரோட்டமில்லை. அதுபோல் தரமில்லாத இரத்தினத்திலும் உயிரோட்டமிருக்காது. கெம்பு இரத்தினம் வாங்கும் போது பர்மா கெம்புதானா என்று கேட்டு வாங்குவது நல்லது. தற்போது பர்மா சுரங்கத்திலிருந்து இரத்தினம் கிடைப்பது அரிதாக இருப்பதால் பழைய இரத்தினங்கள்தான் வியாபாரத்திற்கு வந்து கொண்டிருக்கிறது.



கெம்பு இரத்தினமானது அணிபவர்களுக்கு தெம்பும், தைரியமும் கொடுப்பதால் குடும்ப ஷேமம் விருத்தியடைகிறது. தம்பதிகளுக்குள் ஒற்றுமை பெருகி உடல் ஆரோக்கியத்தையும் கொடுக்கிறது. நீரழிவு, மாரடைப்பு, இரத்த அழுத்தம் போன்ற வியாதிகளின் பிடியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபட செய்யும். இந்த இரத்தினத்தை வெள்ளியிலோ, தங்கத்திலோ பதித்து அணியலாம். தங்க நகை போன்று தரமான நவரத்தினங்களுக்கும் மறுவிலை உண்டு.

நவரத்தினங்களை வாங்குபவர்கள் ஏமாற்றுபவர்களை கண்டு முன்னெச்சரிக்கையோடு வாங்குவது நல்லது. அதுபோல் வியாபாரிகளும், எத்தனையோ துயர்களை சுமந்து வரும் வாடிக்கையாளர்களை வியாபார நோக்கம் ஒன்றே குறியாக கருதி தரமான இரத்தினங்களைத் தராமல் ஏமாற்றுவது பாவமான செயலாகும். உணவில் விஷத்தை கலப்பவர்களுக்குக் கூட கடவுளிடம் சிறிதளவு பாவமன்னிப்பு உண்டு. ஆனால் தரமில்லாத இரத்தினங்களைக் கொடுத்து ஏமாற்றுபவர்களுக்கு மன்னிப்பே கிடையாது என்றார்.

நவரத்தினங்களின் தன்மையை புரிந்து கொள்ள அனுபவமும், திறமையும் உள்ளவர்களால் மட்டுமே முடியும். மேலும் நவரத்தினங்களை பற்றி மட்டும் முழுமையாக தெரிந்தால் போதாது. ஜாதகப் பலன்கள் பற்றியும் முழுமையாக கணிக்கத் தெரிந்திருக்கணும். இவை இரண்டும் மிகத் தெளிவாகத் தெரிந்தவரால் மட்டுமே தரமான ஜாதி இரத்தினங்களை தேர்வு செய்ய முடியும். எந்தக் கடை வியாபாரி தான் விற்ற இரத்தினங்களை மீண்டும் 60 - 70% விலைக்கு தாங்களே வாங்கிக் கொள்கிறார்களோ அந்த கடைதான் தரமான இரத்தினம் விற்கும் கடை என்பதை புரிந்து கொள்ளலாம்.

வாடிக்கையாளர்களின் மனநிறைவே எனது வியாபாரத்தின் மூலதனம் என்று கூறிய **திரு. கந்தையா பிள்ளை** அவர்களின் நல்லெண்ணத்தைக் கண்டு பாராட்டி விடை பெற்றேன்.

எருக்கை சமித்தில் ஆசையுள்ளவர், சிவந்த கிரணமுள்ளவர் ஸிம்மாதிபதி காச்யப கோத்ரம் - நவக்கிரக மண்டலத்தில் நடு நாயகமாக விளங்கும் சூரிய பகவான் சதா மங்களத்தைச் செய்யட்டும்.

*மு.கு: வாடிக்கையாளர்களின் விருப்பதிற்கிணங்க பிரதி வாரம் ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 10 மணி முதல் மாலை 2 மணி வரை அலுவலகம் திறந்திருக்கும்.*

**அருணா ஜெம்ஸ் அண்டு டைமண்ட்ஸ்**

37, நடேசன் தெரு (சிவா விஷ்ணு கோயில் அருகில்), தி. நகர், சென்னை – 600017. போன்: 4338394

Advt



# எங்கும் எதிலும் எப்போதும் நல்லதையே காணுங்கள்!

## —ஸ்ரீஅன்னை

மனித நேயத்தை மக்கள் மனதில் உணர்த்த தம் வாழ்க்கையை அர்ப்பணித்து ஆன்மீகத் தொண்டாற்றிய மகளிருள் குறிப்பிடத்தக்கவர் பாண்டிச்சேரி ஸ்ரீ அன்னை.

''பிறப்பால் நான் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவளானாலும் ஆன்மீக நோக்காலும், மனோ தர்மத்தாலும் இந்தியாவைச் சேர்ந்தவள்'' என்று தன்னைப் பற்றிக் குறிப்பிடும் ஸ்ரீ அன்னை 1914ம் ஆண்டு மார்ச் 29ம் தேதி மாலை 3.30 மணிக்கு ஸ்ரீ அரவிந்தரை முதன் முறையாகச் சந்தித்தார். 'மிரா ரிச்சார்டு' எனகிற இயற் பெயருடைய அந்த மாதுதான் தற்போது உலகம் முழுவதிலும், ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்தின் அன்னையென அறியப்படுகிறார்.

இளம் வயதிலேயே ஸ்ரீ அன்னை மனித இயல்புக்கு மேம்பட்டவராக இருந்தார். மகா இந்தியா 1958 பிப்ரவரி இதழில் கே.டி. சேதனா எழுதிய ஒரு கட்டுரையில், அன்னையின் இளம் பிராயத்துச் சம்பவங்கள் தரப்பட்டிருக்கின்றன.

அன்னை தாம் சிறுமியாயிருந்ததிலிருந்தே, தம்மிடம் மனித இயல்புக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி இருக்கிறதென்றும் பல சமயங்களில் தமது உடலினுள் நுழைந்து, அது விசித்திரமாகச் செயல்படுகிறதென்றும் உணர்ந்திருந்தார். இந்த சக்தியே தமது உள்ளார்ந்த ஜீவன் என அறிந்திருந்தார். அவருக்குள் வந்திறங்கும் அந்த மாபெரும் சக்தி, மாகாளியின் சக்தியே என்பதை அவர் தமது பிற்கால வாழ்வில் உணர முடிந்தது. தமது பதினாறாவது வயதில், அன்னை சித்திரம் பயில ஒரு பள்ளியில் சேர்ந்தார். அங்கு பயின்றவருள் மிகவும் சிறியவளான அன்னை, எப்போதும் மிகவும் கம்பீரமாகவும் தமது வேலையில் சுறுசுறுப்புடனும் இருப்பார். மனதில் எந்நேரமும் ஆழ்ந்த சிந்தனை. புன்முறுவலிப்பது கூட அபூர்வமாக இருந்தது.

தன் மகளின் புத்தி பேதலித்து விட்டதோ எனக் கவலையுற்ற அவரது தாய் ஏன் இவ்வாறு இருக்கிறாய்? எனக் கடிந்து கொண்ட போது அதற்கு அவர் ''உலகத்தின் துயரங்கள் யாவற்றையும் தாம் தாங்க வேண்டியுள்ளது'' எனக் கூறினார்.

இரவு உறங்கும் போது, அன்னைக்கு பல உபதேசகர்கள் மறைமுகமாக ஆன்மீகத் தத்துவங்களைப் போதித்தனர். அவர்களுள் பலரை தன் வாழ்வின் பிற்காலத்தில் ஸ்ரீஅன்னை சந்தித்தார். இவ்வாறு அவர் கண்ட உபதேசகர்களுள் ஒருவருடன் ஸ்ரீ அன்னைக்கு ஆழ்ந்த ஆன்மீக உறவு ஏற்பட்டது. அந்த சமயங்களில் இந்தியத் தத்துவங்கள், மதங்கள் பற்றி அன்னைக்கு எதுவுமே தெரியாத போதிலும் இவரைக் ''கிருஷ்ணர்'' என நினைத்து ஒருநாள் இவரைச் சந்திப்போம் இவருடன் தான் தமக்கு இடப்பட்ட ஆன்மீகப் பணி, ஆன்மீகத் தொண்டு நடைபெறப் போகிறது என்பதை ஸ்ரீ அன்னை உணர்ந்திருந்தார்.

அதே நேரம் புதுவையில் ஸ்ரீ அரவிந்தரின் ஆன்ம சாதனை தீவிரமாகி இறைவனுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு, வேத ரிஷிகளின் அற்புத அனுபவங்களும் உபநிஷத முனிவர்களின் அகண்ட ஞானமும் எளிதில் கைவரப் பெற்ற வேளையில், நாட்டுப் பணிகளுக்குப் பிறகு உலகப் பணியாற்ற மனித குலத்தை உய்விப்பதற்காக அருந்தவம் புரிய, மனித நேய மேம்பாட்டை வலுப்படுத்த, ஸ்ரீஅன்னையின் உதவி அத்தியாவசியமானது என்பதை அறிந்து அவரது வருகைக்காகக் காத்திருந்தார்.

1914ம் ஆண்டு மார்ச் 29ம் தேதி ஆன்மீக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நன்னாள். அன்றுதான் இரு பெரும் ஆன்மீக சக்திகள் சந்தித்தன.

ஸ்ரீஅரவிந்தரைத் தான் சந்தித்த முதல் சந்திப்பிலேயே தமது சாதனையைத் திறம்படச் செய்வதற்கு வழி காட்டியவரும் தாம் கிருஷ்ணர் என்று அழைத்துக் கொண்டிருந்த மகா புருஷரும் இவரே எனவும், இவ்வுலகின் அறியாமை இருளை ஒளிமயமான அறிவாக மாற்றவல்ல சக்தி இவரே எனவும் பரிபூரணமாகக் கண்டு கொண்டார்.

1915 பிப்ரவரி 22ம் தேதி உலகப் போர் காரணமாக பிரான்சுக்கு ஸ்ரீ அன்னை திரும்பிப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பிறகு 1916ல் ஜப்பான் போக நேர்ந்த அன்னை, அங்கு நான்கு ஆண்டுகள் இருந்துவிட்டு பிறகு 1920ம் ஆண்டு ஏப்ரல் 24ம் தேதி புதுவை வந்து பிறகு அங்கேயே நிரந்தரமாகத் தங்கி, ஆன்மீகத் தொண்டுகளில் ஈடுபட்டார்.

ஸ்ரீஅன்னை வருவதற்கு முன் ஆசிரமம் இருக்கவில்லை. ஸ்ரீ அரவிந்தரைச் சுற்றி 4.5 பேர் ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள். ''ஆசிரமம் ஸ்ரீ அன்னையின் படைப்பு'' என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். ஒளியும், எழிலும், எளிமையும் பொலிவும் உடைய உயர்ந்ததோர் வாழ்க்கைக்கு உலகிற்கு ஓர் உதாரணமாக இன்று ஆசிரமம் விளங்குகிறது. ஸ்ரீ அன்னை இருக்கும் இடத்தில் எழிலும், ஒழுங்கும், எளிமையும் எப்போதும் குடி கொண்டிருக்கும்.

1914ம் ஆண்டு ஆகஸ்ட் 15ல் ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னையின் முழு ஒத்துழைப்போடு ''ஆர்யா'' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். இப்பத்திரிகையின் குறிக்கோள், உலக வாழ்வின் பிரச்னைகளில் ஒழுங்கு பூர்வமான ஆய்வும், பல வகையான அளவில் பரந்துபட்ட அறிவினை இணைக்கும் வழியினை உருவாக்குதலும், மனித குலத்தின் பல்வேறு மதப் பாரம்பரியக் கருத்துக்களை ஒன்றுபடுத்துதலுமாகும்.

1926ம் ஆண்டு நவம்பர் 24ம் தேதி ஆசிரம வரலாற்றில் ஒரு முக்கிய நாள். அன்று ஸ்ரீ அரவிந்தருக்கு அவருடைய யோகத்தில் ஓர் அரிய சித்தி ஏற்பட்டது. பேரொளி நிரம்பிய உயரிய ஆன்மீக உணர்வு ஒன்று (ஸ்ரீ கிருஷ்ணருடைய உணர்வு) அன்று ஸ்ரீ அரவிந்தரின் உடலில் இறங்கியது. ஸ்ரீ அரவிந்தர் அந்த சித்தியை அடைந்த போது, அன்று ஆசிரமத்தில் இருந்தவர்களும் அன்று ஏதோ ஒரு ஒளி வாய்ந்த உயர் உலகில் இருப்பதாக உணர்ந்தார்கள்.





அன்று ஸ்ரீ அரவிந்தரின் உடலில் இறங்கிய உணர்வு மேல் மானஸ உணர்வாகும். (overmind consciousness)

அதிமானஸம் (supermind) என்பது அதைவிட உயரிய ஆன்மீக உணர்வாகும். பல்லாயிரமாண்டுகளாக புவியின் கணக்கிலா இடர்களுக்கும் துயர்களுக்கும் இறுதித் தீர்வு காணவல்ல ஆனந்த ஆற்றல் அதிமானஸத்திடமே உள்ளது. அதைக் கீழே இறக்கி புவி உணர்வில் நிலைநாட்டுவதே இறைவன் ஸ்ரீ அரவிந்தருக்கு அளித்திருந்த அருட்பணி. அப்பணியை நிறைவேற்ற ஸ்ரீ அன்னை உடனிருந்து பாடுபட்டது கொஞ்ச நஞ்சமல்ல. ஸ்ரீ அன்னைக்கு 24 மணிநேர வேலை. ஸ்ரீ அரவிந்தருக்கு 24 மணி நேர யோக சாதனை. இதில் அனேக ஆண்டுகள் ஸ்ரீ அன்னைக்கு உறக்கம் என்பதே இல்லாத அளவிற்கு வேலை இருந்தது.



ஸ்ரீ அரவிந்தர் 1950ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ம் தேதி தம் உடலை நீத்தார்.

ஸ்ரீ அரவிந்தர் தமது நுண்ணுடலில் இருந்து கொண்டு, முன்னைவிட தீவிரமாகச் செயலாற்றத் தொடங்கி விட்டார் என்பதையும் ஸ்ரீ அன்னை வெளிப்படுத்தினார். 1956 பிப்ரவரி 29ம் தேதியன்று ஸ்ரீ அரவிந்தரது பெரும் இலட்சியம் சித்தியடைந்தது. புவியில் அதிமானஸ வெளிப்பாடு ஏற்பட்டது. நுண் உடலில் வேலை முடிந்தபின் ஸ்ரீ அன்னை, பரு உடலிலும் அதன் அணுக்களிலும் இந்த அதிமானஸ சக்தியை இறக்கி அவைகளை உருமாறச் செய்யும் கடினமான வேலையில் இறங்கினார்.

ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம் ஸ்ரீ அன்னையால் உருவாக்கப்பட்ட ஓர் ஒப்பிலலாத சமுதாயமாகும். 1952ம் ஆண்டு குழந்தைகளுக்காக ஸ்ரீ அரவிந்தர் அனைத்து நாட்டு கல்வி மையத்தை ஸ்ரீ அன்னை உருவாக்கினார். இப்புவியில் புத்தம் புதியதோர் தெய்வீக இனத்தைத் தோற்றுவிப்பதே ஸ்ரீ அன்னையின் குறிக்கோள். அதற்கு ஆசிரமம் மையமாக இயங்குகிறது.

புதுவைக்குச் சுமார் பத்துமைல் தூரத்தில் ''ஆரோவில்'' என்ற புது நகரத்தை ஸ்ரீ அன்னை தோற்றுவித்தார். இங்கு இந்தியர்களும் வெளிநாட்டவர்களும் யாதொரு வேறுபாடின்றி ஏற்றத்தாழ்வின்றி, சாதி மத பேதமின்றி, யாதொரு தளையுமின்றி, சரிநிகர் சமானமாக ஆத்ம சுதந்திரத்தில் வாழ ஸ்ரீ அன்னை வாய்ப்பு அமைத்துக் கொடுத்துள்ளார்.

1973 நவம்பர் 17ம் தேதி தமது உடலை நீத்தது வரை புதுவையில் ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தை விட்டு அகலாத ஸ்ரீ அன்னை இன்றும், இப்போதும் தம் நுண்ணுடலில் இருந்து கொண்டு முன்னைவிட தீவிரமாக செயலாற்றி வருவதை ஒவ்வொரு பக்தரும் தத்தம் அனுப வங்கள் வாயிலாக மெய்ப்பாடாக உணர முடிகிறது.

ஆசிரம பிரதான கட்டிடத்தில் நூற்றுக்கணக்கான மலர்ச் செடிகள் உள்ளன. ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை சமாதி நாள்தோறும் காலை 4 மணிக்கு அன்றலர்ந்த மலர்களால் வெகு அழகாக அலங்கரிக்கப்படுகிறது. ஒவ்வொரு மலரும் தெய்வ குணங்களில் ஒன்றைக் குறிப்பதாகக் கூறும் ஸ்ரீ அன்னை தம் ஆசியையும் ஆன்ம உதவியையும் நாள்தோறும் தம் பக்தர்களுக்கு மலர்கள் மூலம் வழங்கி வருகிறார்.

நல்ல சிந்தனை, நல்ல வாக்கு, நல்ல செய்கைகள் குறிப்பாக நல்ல தொண்டு போன்றவற்றை ஸ்ரீ அன்னைக்கு மலர்கள் மூலம் காணிக்கையாகச் செலுத்தி அவர் தம் ஆசியையும் ஆன்ம உதவியையும் பெற்று வாழ்வில் நலன்கள் பல அடைவோமாக!

—சீதா தெய்வசிகாமணி

## ஸ்ரீஅன்னையின் போதனைகள்

- மனக்கிளர்ச்சி, பரபரப்பு, கலக்கம் இவைகளைத் தவிர். எல்லா சூழ்நிலைகளிலும் பூரண அமைதியுடன் இரு. ஆனால் நீ இன்னமும் என்ன முன்னேற்றம் செய்ய வேண்டியிருக்கிறது என்பதை அறிந்து கொள்வதில் கவனமாக இருந்து, காலதாமதம் செய்யாமல் உடனே தேவையான முன்னேற்றத்தைச் செய்.
- நீ என்ன செய்து கொண்டிருந்தாலும் நீ முன் வைத்துள்ள இலட்சியத்தை ஒருபோதும் மறவாதே. இந்த மாபெரும் கண்டுபிடிப்பு வேலையில் சிறிது பெரிது என்ற வேறுபாடு கிடையாது. எல்லாமே முக்கியமானவைதாம்.
- நீ ஏதாவது பேசுவதற்கு முன், சொற்கள் உன் வாயை விட்டு வெளிவருவதற்கு முன் உன்னுடைய சொற்களைக் கட்டுப்படுத்தி சரியாக உபயோகிப்பதற்காக சொற்ப நேரம் செலவிடு. மிகவும் இன்றியமையாதவைகளை மட்டுமே பேசு.
- எப்போதும் அன்பு காட்டு; காரசாரமான கைப்பான விமர்சனங்களை விடு. எதிலும் தீமையைப் பார்க்கும் பழக்கத்தை தவிர். எங்கும் இறைவனது அருளின் பிரசன்னத்தையே பார்ப்பது என்று உறுதி செய்து கொள். அப்பொழுது ஓர் அற்புதம் நிகழ்வதை நீ காண்பாய். உன்னுள்ளே மட்டுமல்லாமல் உன்னைச் சுற்றிலும் அமைதி, மகிழ்ச்சி, நம்பிக்கை இவை கொண்ட ஒரு சூழல் உருவாகும். உன் உள்ளத்திலும் அமைதியும் மகிழ்ச்சியும் நிரம்பும். உன்னுடைய பெரும்பாலான உடல் கோளாறுகள் கூட மறைந்து விடும்.
- அன்பற்ற, குற்றங்காண்கிற, எரிந்து விழுகின்ற, கடுகடுப்பான மனப்பான்மை வயிற்று ஜீரண வேலையை மிகவும் பாதிக்கிறது என்பதைக் கண்டிருக்கிறார்கள். இடைவிடாது முயன்று எங்கும் எதிலும் எப்போதும் நல்லதையே காண்கின்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- நீ நிரந்தரமாக உன்னிடமிருந்து களைய வேண்டிய முதல் குறைபாடு அச்சம். அது மிகப் பயங்கரமான நோயை விடவும் ஆபத்தானது.
- பிறர் உன்னை எப்படி நடத்திய போதிலும் சினத்திற்கு இடம் தராதே. இறைவன் பால் உனக்கு தூய, கலப்பற்ற அன்பு இருப்பதால் பிறருடைய மனத்தாங்கல், கெட்ட எண்ணங்கள் ஆகியவற்றிலிருந்து உன்னை எப்படிக் காப்பது என்பதை அவனிடமே விட்டுவிடு.
- நீ உன்னை முழுவதுமாக இறைவனுக்குக் கொடுத்து விட்டால் அவனே உன் யோகத்தைச் செய்கிறான். நீ செய்வதில்லை. சிலர் வேகமாக முன்னேற விரும்புகிறார்கள். இலட்சியத்தை அடைவதில் நிச்சயமாக இருக்க விரும்புகிறார்கள். அவர்கள் முழுப் பொறுப்பையும் இறைவனிடமே விட்டு விடுகிறார்கள்.
- நாம் பிரார்த்தனை செய்வதைப் போலவே வேலையையும் செய்வோமாக. ஏனெனில், வேலையே உடல் இறைவனுக்குச் செலுத்தும் மிகச் சிறந்த பிரார்த்தனையாகும்.
- துணிவு கொள்! நம்பிக்கை வை! நல்லதையே எதிர்பார்! சுரங்கப் பாதையின் முடிவில் பேரொளி உள்ளது. போராட்டத்தின் இறுதியில் இறைவனின் வெற்றி நிச்சயம்,

தொண்டுச் சிறுகதை

# மனிதம் ஒன்றே புனிதம்

சாந்தா வரதன்



சுரேஷ் இப்படி சொல்வான் என்று பார்வதி கொஞ்சம் கூட நினைத்து பார்க்கவில்லை. அந்த வார்த்தை அவளை அப்படியே அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது.

"என்னங்க உங்களத்தான்... சுரேஷ் சொன்னதை கேட்டீங்களா?" - கணவர் சுந்தரத்திடம் அதை சொல்ல வாயெடுக்குமுன் இடைமறித்தார் அவர். "எல்லாம் எனக்கு தெரியும் பார்வதி" - சுந்தரத்தின் அலட்சியமான பதில் பார்வதிக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

"என்ன உங்களுக்கு தெரியும்? இதுக்குத்தான் அவனை பெரிய படிப்பு படிக்க வச்சோமா? பெரிய வேலையும் வாங்கி கொடுத்தோமா?"

"இப்ப என்ன நடந்து போச்சுன்னு தைய தக்கான்னு குதிக்கிறே?"

"இன்னும் என்ன நடக்கணும். நாம அவன ஒண்ணும் சும்மா படிக்க வைக்கலே... லட்சம் லட்சமா செலவழிச்சு படிக்க வச்சிருக்கோம்" - பார்வதி பேச்சில் அனல் பறந்தது.

"பிள்ளைகளை படிக்க வைக்கிறது பெத்தவங்க கடமைதாங்கறத மறந்துட்டியா பார்வதி?"

"கடமைதான், யாரு இல்லேன்னா... அதுக்காக தம்படி காசுகூட வரதட்சணை வாங்க மாட்டேன்னு அடம் பிடிக்கறானே அது மட்டும் என்ன நியாயமாம்?" இவர்களின் ஒரே மகன் சுரேஷ் பற்றித்தான் புகார்ப் பட்டியலை கணவரிடம் வாசித்துக் கொண்டிருந்தாள் பார்வதி.

நடுத்தர குடும்பந்தான் என்றாலும் சுரேசை பெரிய படிப்பு படிக்க வைத்து வேலைக்கு அனுப்பும் அளவுக்கு வசதி இருந்தது. தான் கை நிறைய சம்பாதிப்பதால் தனக்கு வரும் மனைவி கழுத்து நிறைய நகையோடு வரவேண்டுமென்றோ, லட்சம் லட்சமாக வரதட்சணை தர வேண்டுமென்றோ அவன் எதிர்பார்க்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் வரதட்சணையை அவன் அடியோடு வெறுத்தான். அவனின் இந்த முடிவால்தான் தாய் பார்வதி வெடித்துக் கொண்டிருந்தாள். வரப் போகும் மருமகள் உடல் முழுக்க நகை அணிந்து தன்னோடு கோவில் குளத்துக்கு வரவேண்டும். அதைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் மகன் இப்படி மண்ணை தூவுவான் என்று எதிர்பார்க்காததால் இத்தனை களேபரம்.

"தனக்கிருக்கும் இந்த ஆசை கணவருக்கு இல்லாமல் போய்விட்டதே... என்ன மனுஷன் இவர்" - மனதிற்குள் சபித்தாள் பார்வதி.

மகனிடம் எப்போதும் கலகலப்பாக பேசிக்கொண்டிருக்கும் பார்வதி அவனின் முடிவுக்கு பின் சரியாக முகம் கொடுக்கவில்லை. "தனது தேவையை அறிந்து வாய்க்கு ருசியாக சமைத்துப் போடும் அம்மா எங்கே? சின்னக் குழந்தை போல தினமும் வாசல் வரை வந்து வழியனுப்பிய... அந்த அம்மா எங்கே? சோர்ந்த முகத்து டன் ஆபீசில் இருந்து திரும்பினால்... சுடச்சுட ஸ்டிராங்கா காபி போட்டு தருவாளே அந்த அம்மா எங்கே? நான் எடுத்த இந்த முடிவு சரிதானே. இதற்காக அம்மா இத்தனை கவலைப்படுவானேன்... ஆத்திரப்படுவானேன்" - சுரேஷ் மனதிற்குள் ஏதோ ஒரு இனம் தெரியாத சோகம் கப்பியது.

ஒரே மகன்... ஆசை ஆசையாக வளர்த்த மகனின் திருமண நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆனால் பார்வதியிடம் மட்டும் எந்த பரபரப்பும் காணப்படவில்லை. ஒப்புக்காக ஏதோ... நடித்துக் கொண்டிருந்தாள் என்றுதான் சொல்லவேண்டும். ஆசையாக மகன் எடுத்து தந்த பட்டுச் சேலையைக்கூட முக மலர்ச்சியுடன் வாங்கிக் கொள்ளவில்லை. "அம்மா... பாத்தியா உன் மருமகளுக்கு நானே செலக்ஷன் பண்ணி எடுத்த பட்டுப் புடவை... நல்லா இருக்காம்மா?" - தாயிடம் பட்டுப் புடவையை திறந்து காட்டியபோதும் கடமைக்கு கூட அவள் நன்றாக இருக்கிறது என்று சொல்லவில்லை.

"வயசு ஆக... ஆக... இப்படித்தான் மனுஷாள் குணமே மாறிப் போயிடறது... உனக்கு திருமணமாகிட்டா எல்லாம் சரியா போயிடும் சுரேஷ்" - தந்தை சுந்தரம் மட்டும் அவ்வளவு ஆசுவாசப்படுத்தி இருக்காவிட்டால் நிஜமாகவே அவன் உடைந்து போய் இருப்பான்.

"வரதட்சணை இல்லாமல் திருமணம் செய்தால் ஏன் இவர்களுக்கு ஆத்திரம் வருகிறது. மகன் கை நிறைய சம்பாதிக்கிறான்... கேட்டதை எல்லாம் வாங்கித் தருகிறான். எந்தவித குறையுமின்றி பெற்றோர்களை பார்த்துக் கொள்கிறான். இது போதாதா இவர்களுக்கு... இதைவிட ஒரு பெரிய சந்தோசத்தையா வரதட்சணை தந்துவிடப் போகிறது. சே... வயசு ஆக... ஆக புத்தி மழுங்கி போய்விடும் என்பது அம்மா விஷயத்தில் எத்தனை உண்மையாகி விட்டது...

வீட்டில் இருந்து அலங்கரிக்கப்பட்ட காரில் சுரேஷ் பவனி வந்து கொண்டு இருந்தான். திருமண மண்டபத்தை கார் நெருங்கும் போது அந்த காட்சி அவன் நெஞ்சை நெகிழச் செய்தது. ஆனாலும்... முகூர்த்த நேரம் நெருங்கிக் கொண்டு இருந்ததால் திருமண மண்டபத்துக்குள் வந்து விட்டான்.

"நேரமாகிறது... மாப்பிள்ளையை அழைச்சுண்டு வாங்கோ" - புரோகிதர் குரல் கொடுத்ததும்தான் தாமதம்... சுரேசை இழுத்துக் கொண்டு மணவரையில் அமரச் செய்தவர் சுந்தரம்தான். பார்வதி தூரத்தில் நின்று கொண்டதோடு சரி...

ஒரு வழியாக திருமணம் முடிந்தாயிற்று. வரதட்சணை இல்லாத திருமணம் என்பதால் கூடியிருந்த அத்தனை பேரும் சுரேசை வாழ்த்தினர். ஆளாளுக்கு புகழாரம் சூட்டினர். பெண் வீட்டார் வரதட்சணை தான் கொடுக்கவில்லையே தவிர தடபுடலாக விருந்து படைத்து அசத்தி இருந்தனர்.

சுரேஷ் தனது புது மனைவியுடன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதுதான் அந்த ஞாபகம் வந்தது. பாதி சாப்பிட்ட கையோடு விர்ரென்று வெளிவாசலுக்கு ஓடி வந்தான். திருமணத்துக்கு வந்தவர்கள் புது மாப்பிள்ளை எச்சில் கையுடன் ஓடுவதைக் கண்டு திகைத்து போய் விட்டார்கள். "என்ன இந்த பையன் வரதட்சணை வேண்டாமுன்னுட்டானாம்... ஒருவேளை அவனுக்கு ஏதாவது புத்தி கித்தி சரியில்லாமல் இருக்குமோ" - சுரேசின் இந்த செய்கையால் பலர் கதை கட்ட ஆரம்பித்தனர்.





அனைவரின் அதிர்ச்சி தெளியும் முன் அந்த பெரியவரை... கையை பிடித்து இழுத்து வந்து கொண்டிருந்தான்.

குளித்து பல நாள் ஆன தேகம்... ஆங்காங்கே கிளிசல்களுடன் பெயருக்கு உடலை மறைக்கும் சட்டை... பசியால் பஞ்சடைந்த கண்கள்... இதுதான் பெரியவரின் சொத்து என்று அடையாளம் காட்டிக் கொண்டு இருந்தன. "திருமணம் முடிந்து முழுசாக ஒரு மணி நேரம் கூட ஆகவில்லை. அதற்குள் புதுப்பெண் தம்மை பற்றி என்ன நினைப்பாள்" - என்பது பற்றி கொஞ்சம் கூட அவன் எண்ணிப்பார்க்கவில்லை. அந்த பெரிய வரை தன் பக்கத்தில் அமரச் செய்தான். பெரிய வாழை இலை ஒன்றை விரித்து அவருக்கும் உணவு பரிமாறச் சொன்னான்.

"உண்மையிலே மாப்பிள்ளைக்கு ஏதோ ஆகிவிட்டது... இல்லாவிட்டால் இப்படி நடந்து கொள்வாரா... முன்பின் விசாரிக்காமல் தனது மகளை கொடுத்துவிட்டோமோ" - சுரேசின் மாமனார் தலையில் கை வைத்தபடி மண்டபத்தின் ஒரு ஓரத்தில் கவலை தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்து விட்டார். "என்ன ராமசாமி... போயும் போயும். ஒரு கிறுக்கனுக்கா உம்ம பொண்ணைக் கட்டி வச்சீர். வரதட்சணையே இல்லேங்கறதால இப்படி ஏமாந்து விட்டீரே" - பெண்ணின் உறவினர்கள் அவர் காது படவே பேசினர்.

பெற்றவர்கள் தங்கள் குழந்தைகளுக்குகூட இத்தனை வாஞ்சையோடு உணவு பரிமாற மாட்டார்கள். அத்தனை பரிவோடு... பெரியவர் சாப்பிடுவதை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் சுரேஷ். மணப்பெண்... அவமானத்தால் ஓடிச் சென்று தனது தாயின் மடியில் முகம் புதைத்து அழத் தொடங்கினாள்.

"மானம் போகறது... குத்துக்கல்லாட்டம் நிக்கறீங்களே... போய் நாக்க பிடுங்கிகிட்டு சாகற மாதிரி கேளுங்க" - சுரேசின் அம்மா பார்வதி கணவன் சுந்தரத்தை உசுப்பேத்தினாள். "வரதட்சணையே வாங்கமாட்டேன்... என்று பிடிவாதம் பிடித்தபோது... அதற்கு தானும் கூட சேர்ந்து ஒத்து ஊதினது... எல்லாம் பொய்யாகி விடக் கூடுமோ... என்று சுந்தரம் கலக்கமடைந்தார். விர்ரென்று மகனை நோக்கி பாய்ந்தார்.

"ஏன்டா... எத்தனை நாளா... இப்படி எங்களை கேவலப்படுத்தணும்னு திட்டம் போட்டிருப்பே... தெருவில பிச்சை எடுத்து திங்கற ஒருத்தர கூட்டிக்கிட்டு வந்து இப்படி கல்யாண மண்டபத்தையே... நாறடிக்கிறியே... உனக்கு வெட்கமா இல்லே... வேணும்ணா ஒன்னு செய்... ஊர்ல உள்ள அத்தனை பிச்சைக்காரங்களையும் கூட்டி வந்து சாப்பாடு போடு... நாங்கல்லாம் வெளியே போயிடுறோம்" - அத்தனை பேர் மத்தியிலும் மகனை திட்டித் தீர்த்தார் சுந்தரம்.

"தந்தை இப்படி திட்டுகிறாரே... உறைக்கவில்லையா அவனுக்கு?" ஊகூம்... எதையும் அவன் பொருட்படுத்தினதாக தெரியவில்லை. அந்த பெரியவரின் சாப்பாட்டு மீதுதான் அவனது முழுக் கவனமும் பதிந்திருந்தது.

"என்னடா நான் பாட்டுக்கு பேசிட்டு இருக்கேன்... உனக்கு அந்த பிச்சைக்காரன்தான் பெரிசா போயிடிச்சா" மகனை அடிக்க கையை ஓங்கினார் சுந்தரம்...

"மாமா... அவர அடிக்காதீங்க... அடிக்காதீங்க" - தாயின் மடியில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்த மணப்பெண் விருட்டென்று பாய்ந்து வந்து மாமனார் சுந்தரத்தின் கைகளை பிடித்துக்கொண்டாள்.

"பாத்தியாடா... திருமணமாகி உன் முகத்தை கூட இன்னும் முழுசா பாக்கலே... அவளுக்கு இருக்கிற... உணர்வு உனக்கு இல்லாம போச்சேடா..."

அந்த பெரியவர் சாப்பிட்டுவிட்டு பெரிதாக ஒரு ஏப்பம் விட்டார்... பல நாட்கள் பட்டினியால் கிடந்த தேகம்... சுரேசின் திருமணச் சாப்பாட்டால் முழுமையாக நிரம்பி இருந்தது...

"ஏன் இப்படி ஆத்திரப்படறீங்கப்பா?" - இத்தனை நேரத்துக்குப் பிறகு வாய்திறந்தான் சுரேஷ்.

"நமக்கு வசதி இருக்கு... வயிறு முட்ட மூணு வேளை சாப்பிடுறோம்... அது ஜீரணமாகணுமேங்கறதுக்காக... ஓமவாட்டர்... மிளகு ரசமுனு குடிக்கிறோம்... ஆனா... ஒரு நேர பசிய கூட தீர்க்க வழியில்லாம தெருத் தெருவா பிச்சை எடுக்கறாங்களே... அவங்கள பத்தி நீங்க யாராவது நெனச்சு பாத்ததுண்டா? ஆடம்பரமா விருந்து படைப்பீங்க... சாப்பிட்டு விட்டு இலையில் மிச்சம் வச்சு அதை குப்பையில் கொட்டுவீங்க... கேட்டா கவுரவப் பிரச்னை என்பீங்க... ஆனா வயிற்றுப் பசியால் துடிச்சிட்டு இருக்கிற ஒருத்தருக்கு உணவு தந்தா... அதை பைத்தியக்காரத்தனம்பீங்க... ஆத்திரப்படுவீங்க... பாவம் அந்த பெரியவரை பாருங்க... எவ்வளவு சந்தோஷமா சாப்பிட்டு போறத... நல்ல சாப்பாடே பாத்திராத அவருக்கு என்னோட கல்யாண சாப்பாட தந்தது... தவறா... சொல்லுங்க?" - சுரேஷ் இதைச் சொன்னதும்... அத்தனை பேர்ன தலைகளும் வெட்கத்தால குனிந்தன.

சுரேசின் புது மனைவி அன்பு கமந்த புன்னகையோடு அவனை நோக்கினாள்... அதில் ஆயிரம் அர்த்தங்கள் வெளிப்பட்டன.

# காக்கும் கரங்கள்



காக்கும் கரங்கள். சென்னை வளசர வாக்கத்தில் 'மூளை வளர்ச்சி குன்றிய குழந்தை'களுக்காக நடத்தப்படும் அன்பு இல்லம். 'சிவ சக்தி சத்ய சாயி சாரிடபில் டிரஸ்டு' அமைத்து பொறுப்பேற்று நடத்துபவர் குமாரி விஜயகுமாரி.

4 வயதிலிருந்து 40 வயது வரை சுமார் 30 குழந்தைகள் இருக்கிறார்கள். ஆம், இவர்கள் என்றும் குழந்தைகள்தான்!

***இவர்களை கவனித்துக் கொள்ள, பயிற்சிக்கு உங்களுக்கு உதவி செய்ய யாராவது இருக்கிறார்களா?***

இரண்டு பெண்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு மாதச் சம்பளம் உண்டு. படித்த சேவை மனப்பான்மை கொண்டவர்கள் அவ்வப்போது இவர்களுக்கு பயிற்சி, பாடம், கதைகள் என்று ஓய்வு நேரத்தில் வந்து சொல்லிக் கொடுப்பார்கள். இங்கு, சுற்றி இருப்பவர்கள் எல்லோரும் மிகவும் நல்லிதயம் கொண்டவர்கள்! மாதத்தில் ஒருநாள் என்ற முறை வைத்துக்கொண்டு, 30 நாட்களும் ஒவ்வொரு வீட்டிலிருந்து இரவு சாப்பாடு செய்து தருகிறார்கள்! ஞாயிறு, விடுமுறை விசேஷ நாட்களில் சாயி பக்தர்கள் சேவா சமிதிகள், என்று இவர்களுக்கு சாப்பாடு அனுப்புவதும் வழக்கம். இங்குள்ளவர்களின் அன்பும், ஆதரவும்தான், இதை நடத்த தைரியமும், மனோபலமும் தருகிறது" என்று நன்றியோடு கண்கள் பனிக்கக் கூறுகிறார்.

***இவர்களுக்கு தினசரி பயிற்சிகள் உண்டா?***

கண்டிப்பாக. ஆரம்பத்தில் இவர்களைப் பழக்குவது மிகவும் சிரமமாக இருந்தது. நம்பிக்கை இழக்காமல் இங்கிருப்பவர்களுக்கு முக்கியமாக Toilet Sense பழக்கி விட்டோம். இது மிக முக்கியம். பிறகு தன்னைத்தானே கவனித்துக் கொள்ள பழக வேண்டும். மெதுவாக படிப்படியாக பயிற்சி அளிக்கிறோம். இது மட்டுமல்ல அவ்வப்போது I.Q. test செய்கிறோம். அதன் அடிப்படையில் தேவையான பயிற்சி அளிக்கிறோம். இங்கு வந்த முருகேஸ்வரிக்கு 2 வருடத்தில் விடாமல் பயிற்சி அளித்ததில் தைக்க கற்றுக் கொண்டு ஒரு நாளைக்கு 10... 15/- ரூபாய் சம்பாதிக்கும் திறமை வந்திருக்கிறது. மோகனுக்கு salesmen பயிற்சி. அவனும் 15/- ரூபாய் சம்பாதிக்க முடியும். எதுவுமே செய்ய முடியாத படுத்த நிலையில் இருப்பவர்களுக்கு 'பிஸியோ தெரபி' சிகிச்சை அளிக்கிறோம். இதில் 2 குழந்தைகள் தேறி மெதுவாக நிற்க பழகி விட்டார்கள்!

இதுபோல இங்கிருந்து 3 குழந்தைகள் ஓரளவு தெளிந்து, பள்ளிக்குப் போகும் தகுதியைப் பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்குத் தேவை அன்பு; பாசம் பரிவு. பொறுமையாக நாம் சொல்லிக் கொடுத்தால் கற்றுக் கொள்கிறார்கள்.

அவரவர் மனநிலை ஏற்ப, பயிற்சி மிக அவசியம். பாலாஜிக்கு பாட்டில் ஆர்வம். Junior பாலாஜிக்கு Dance ஆடுவது பிடிக்கும். ரமணிக்கு நாம் பாடினால், ராகம் கண்டு பிடிக்கும் திறமை இருக்கு! இப்படி இவர்கள் திறமையை கண்டுபிடித்து வெளிக் கொணர்வது தான் எங்கள் முயற்சி"

***—லக்ஷ்மி ஸ்ரீநிவாஸ்***

*உதவ விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: காக்கும் கரங்கள், பிளாட் எண் 77 கதவு எண் 34, டாக்டர் ராதா கிருஷ்ணன் ரோடு, ராமகிருஷ்ணா நகர், சென்னை-87.*

# கண்ணிலே அன்பிருந்தால் கல்லிலே தெய்வம் வரும்

**—கவிஞர் டி.எஸ்.பாலு**

**தொ**ண்டு உணர்விற்கு அடிப்படையே அருள் உணர்வுதான்.

அந்த உணர்வு இருந்த காரணத்தால்தான் குளிரால் நடுங்கிய கோல மயிலுக்குத் தன் போர்வையை நல்கினான் பேகன்;

கொழுக்கொம்பு இல்லாமல் தவித்த முல்லைக் கொடிக்குத் தேர் கொடுத்தான் பாரி;

ஆயுளை அதிகரிக்கும் அரிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல், ஔவைக்கு வழங்கி மகிழ்ந்தான் அதிகமான்...

உயிருடன் போராடிய புறாவிற்காக தன்னையே தந்தான் சிபி.

இதயம் நிமிர்ந்து எழுந்தால், இமயம் வளைந்து கொடுக்கும் என்பதை வாழ்கின்ற போதே வரலாறாக்கிக் காட்டினார்கள் அப்பெருமக்கள்.

பாட்டுத் தொண்டு புரிந்த நச்செள்ளையார் என்ற சங்ககாலப் பெண் பாற் புலவர், நாட்டுத் தொண்டாற்றுவதே ஒரு புதல்வனின் கடமை என்பதை அழகாக உணர்த்தினார்.

*''ஈன்று புறம் தருதல் என்தலைக்
கடனே
சான்றோன் ஆக்குதல்
தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக்
கடனே
ஒளிறு வாள் அருஞ்சமம்
முறுக்கிக்
களிறு எறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே''*

என்பது அவர் பாடிய பாடல். சமூகத்தில் ஒவ்வொருவரும் அவரவர் கடமைகளை ஒழுங்காகச் செய்தால் மட்டுமே, வாழ்க்கைத் தேர் எவ்வித இடர்களும் இல்லாமல், வசந்தத்து வீதியில் வெற்றி வலம் வர முடியும் என்பதை அவர் மிகத் தெளிவாக விளக்கினார்.

நாடு நமக்கு என்ன செய்தது என்று கேட்காமல், நாட்டுக்கு நாம் என்ன செய்தோம்? என்ற வினாவை, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு உள்ளமும் உற்சாகமாகக் கேட்டிட வேண்டும்.

## நாவுக்கரசரின் நற்பணி

*''பாலனாய்க் கழிந்த நாளும்,
பனிமலர்க் கோதைமார் தம்
மேலனாய்க் கழிந்த நாளும்,
மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும்
குறிக்கோள் இலாது கெட்டேன்''*



என்று பாடினார் சைவப் பெரியார் திருநாவுக்கரசர். ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்னும் குறிக்கோளுடன் 81 ஆண்டுகள் வாழ்ந்து தொண்டு புரிந்த அவரே, மிக அடக்கத்துடன் 'குறிக்கோள் இலாது கெட்டேன்' என்றால் நாம் எதை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம் என்பதைச் சிந்திக்க வேண்டாமா...?

**''மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே''** என்று கூறியதுடன் **''வாய்த்தது நம் தமக்கு ஈதோர் பிறவி, மதித்திடுமின்''** என்றும் திருநாவுக்கரசு பெருமான் செம்மாந்து கூறினார். **''அரிது, அரிது, மானிடராய்ப் பிறத்தல் அரிது''** என்றார் ஔவை மூதாட்டி. **''மானிடம் வென்றதம்மா''** என்று மகிழ்ந்தவரோ கம்பர். இப்படிப்பட்ட கீர்த்தி மொழிகளைப் பெற்றிருக்கும் மனிதன், தனக்குக் கிடைத்துள்ள பிறப்பை எப்படிப் பயன்படுத்தப் போகின்றான் என்ற பொறுப்பு அவனிடத்தில்தான் உள்ளது. 'அறநெறிச்சாரம்' என்னும் நீதி நூல் அதற்குரிய வழியைக் கூறுகிறது:

*''இன்சொல் விளை நிலமா ஈதலே
வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை
எருவட்டி
அன்பு நீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனும்
ஓர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்''*

என்று அறிவிப்பு செய்கின்றது. இன்சொல்லை விள்ளநிலமாக உவமித்து, ஈதலை வித்தாக்கி, வன்சொல்லைக் களைகள் ஆக்கி, அவை களைந்து வாய்மையினை எருவாக்கி, அன்பை நீராக்கி, அறக்கதிர்களை விளைவித்துக் கொள்ள வேண்டும் என்னும் அருமையான கருத்தை நயமாகக் கூறிய அந்தப் பாடல், ஒவ்வொருவர் நெஞ்சம் பதியம் போட வேண்டிய உதயப் பாடல்; உன்னதப்பாடல்.

## திருமூலர் உணர்த்தும் தொண்டு

''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்''. இந்த மொழி திருமூலருக்குச் சொந்தம். இறைவனை வணங்குவதற்கு அவர் காட்டும் வழி, மிக எளிமையானது; ஏற்றம் கொண்டது. பச்சிலை ஒன்று போதும், இறையை வழிபட; புல் ஒன்று போதும்; பசுவின் பசியைப் போக்க! கைப்பிடிச் சோறு போதும்; பசி நோய் களைய! ஒன்றுமே கிடைக்கவில்லையா... அன்பான சொற்கள் போதும், மனித நேயம் வளர்க்க - என்று அவர் காட்டும் வழி மிக எளிமையானது; ஏற்றம் கொண்டது.

*''யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு
பச்சிலை;
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு
வாயுறை;*







*யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி;
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே''*

திருமூலரின் கருத்தையே பாரதியாரும் இப்படி வழிமொழிகிறார்:

*''நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்!''*

இன்றைய அவசர யுகத்தில், மென்மையான வார்த்தைகளுக்கும் பஞ்சம்; அன்பான நடத்தைகளுக்கும் நாடு கடத்தல். இன்றைய வாழ்வில் மனிதனின் அவசரத்தன்மை எப்படி இருக்கின்றது என்பதைக் கவிஞர் தமிழன்பன் இப்படி எழுதிக் காட்டினார்:

''என்ன சேது, எப்போ வந்தீங்க?
இருபது வருஷமாச்சு பார்த்து...
இதோ 'இருபத்து நாலு' வருது... வரட்டுமா
பார்ப்போம் பிறகு...''

24-ஆம் எண் பேருந்து 'ஓடி' வந்தவுடன், 20 ஆண்டுகள் முந்தைய நட்பு 'நின்று' போய் விடுகிறது...

## பறவையிடத்தில் அன்பு

அஃறிணை உயிர்களிடத்தும் அன்பு பாராட்டிய சங்க காலப் பண்பாட்டை, 'அகநானூறு' என்னும் நூலில் படித்து நெகிழ்கிறோம்:

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், தன் வினை முடித்து வீடு நோக்கி வருகின்றான். அவன் அமர்ந்து வரும் தேர், 'கண, கண' என மணி ஓசையை எழுப்பிக் கொண்டே வருகிறது. அதைக் கேட்ட தலைவன், பதற்றம் அடைந்து உடனே தேரை விட்டு இறங்குகின்றான். ஐயோ... துணையுடன் இருந்து தேனை உறிஞ்சி, உண்டு கொண்டிருக்கும் பறவைகளை, இந்த ஓசை ஓட்டிவிடுமே என்று கலங்கி, தேர் மணிகளின் நாக்கினைக் கட்டுகின்றான்; பின் ஓசை எழும்பாத வகையில் தேரை ஓட்டிச் செல்லுகின்றான். இப்படி, ஒரு மனிதனின் பறவை நேயத்தை, அழகு மணி வார்த்தைகளால் அகநானூறு-

*''பூத்த பொங்கர்த் துணையோடு
வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத்
தேரன்''*

என அளவிட்டுக் காட்டியது. அந்த நேயம் இன்று எங்கே சென்றது...?

## மணிமேகலை கூறிய தொண்டு நெறி

**''உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராதியல்வது நாடு''** என்றார் வள்ளுவர். பசி என்னும் பிணி ஒழிய, மனிதர்கள் தொண்டு செய்ய வேண்டும் என்பதே மணிமேகலை என்னும் காப்பியம் உணர்த்தும் பேரறமாகும். **''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே''** என்பது சாத்தனாரின் சத்தான மொழி.

*''அறன் எனப்படுவது யாதெனக்
கேட்பின்
மறவாது இதுகேள்; மன்னுயிர்க்கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்லெனக் காவலன் உரைக்கும்''*

என்று தம் காவியத்தின் மூலம் எழுதிக்காட்டியவரும் சாத்தனாரே! அறம் என்று சொல்லப்படுவது, உலக உயிர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றைத் தருவதுதான் என்று தொண்டு நெறிக்கே ஒரு விடியல் விளக்கைக் காட்டுகின்றார் சாத்தனார். அவர் காட்டிய அந்த வழியில் சற்றும் வழுவாமல் இளையான்குடி மாறநாயனார். தாம் ஈட்டிய பொருளை உண்டி நாலுவிதத்திலும், சுவை ஆறு திறத்திலும் அமுது செய்வித்ததாக நெகிழ்ச்சியுடன் பெரியபுராணம் கூறும்.

கவிஞர் வல்லம் வேங்கடபதி அவர்களும்,

*''வீடே உறவாய் முடங்குகையில்
விழி இரண்டும் இருள்கிறது
நாடாய் உலகாய் எழுகையிலே
நால்நால் திசையும் ஒளிர்கிறது...
ஊன் உடல் உள்ளம் மலர்கையிலே
ஓயா இரவும் உதிர்கிறது
மானுடம் போற்றும் பெருநெறியில்
மரண எல்லை மறைகிறது...!''*

என்று தொண்டுப் பிரகடனத்திற்கு அணிமுரசாக, ஒரு கவிதை சமைத்தார். இந்தக் கவிதையைப் படித்ததும், நம் மனத்தில் ஒளிவிடுகின்றன சில மாமணிகள்:

## வள்ளலார் உள்ளம்

*''அருட் பெருஞ்ஜோதி தெய்வம்,
எனை ஆண்டு கொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த
தெய்வம்''*

என்று அருட்ஜோதியை ஆண்டவனாக்கி, அந்த ஜோதியை அகிலம் எங்கும் இருப்பவர் வணங்க வேண்டும் என்று ஆர்வப் பாட்டிசைத்தார் வள்ளல் பெருமான்.

**''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம், மனம் வாடினேன்''** என்று பயிர் நேயம் பாடிய அந்தப் பாச வள்ளல், படைத்தவன் தம்மை இவ்வுலகில் படைத்ததன் காரணத்தை,

*''அகத்தே கறுத்துப் புறத்தே
வெளுத்து
இருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத்து அடைவித்திட...''* என்று எழுதிக் காட்டினார்.

**''அப்பா! நான் வேண்டுதல் கேட்டு
அருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்க்கு எல்லாம் நான் அன்பு
செயல் வேண்டும்''**

என்ற வள்ளலாரின் மனிதநேய வரிகள், ஐ.நா. சபையின் முகவரிகளாக இடம்பெறப் போவது எப்போது...? என்பதைத்தான் பொது நல உள்ளங்கள் பெரிதும் விரும்புகின்றன...

**மங்கை**

**ஜுன் '97**

**மகளிர் மாத இதழ்**

**பெண்கள் நாட்டின் கண்கள்**

ஆசிரியர் : விஸ்வம். பிரசுரம் : டால்டன் பப்ளிகேஷன்ஸ். அச்சிடுபவர் : பிரசாத் பிராசஸ் (பி) லிமிடெட், சென்னை-26.

தனிப்பிரதி விலை ரூ.9.00, வருட சந்தா : ரூ.108.00, வெளிநாட்டு விலை : மலேசியா, சிங்கப்பூர் ஒரு எம். டாலர். இலங்கை : இந்திய ரூபாய்கள் 7.20.

வெளிநாட்டு சந்தாதாரர்கள் அனுப்ப வேண்டிய முகவரி :
டால்டன் பப்ளிகேஷன்ஸ்,
'சந்தமாமா பில்டிங்ஸ்',
வடபழனி, சென்னை-600 026.

உள்நாட்டு சந்தாதாரர்கள் அனுப்ப வேண்டிய முகவரி :
டால்டன் ஏஜன்சி,
'சந்தமாமா பில்டிங்ஸ்',
வடபழனி, சென்னை-600 026.

அட்டை ஓவியங்கள்: கேசி

# தொண்டுக்கு ஒரு அப்பூதியடிகள்

**63** நாயன்மார்களில் ஒருவரான அப்பூதி அடிகள் சோழநாட்டு, திங்களூரில் பிறந்தார். இறைவனிடத்து அன்பும், அடியார்களது தொண்டினை அறிந்து, பெருமைப்படுத்தியும் வந்தார். திருநாவுக்கரசு சுவாமிகளான அப்பரை, தான் நேரில் கண்டறியாது அவரைக் கேட்டறிந்து அவரது இறைத் தொண்டில் மனம் கவரப்பட்டு, அவரையே தெய்வமாக கொண்டொழுகும் பண்பினராக வாழ்ந்து வந்தார். அது மட்டுமல்ல அவர் தனது மக்களுக்கும், வீட்டு விலங்கினங்களுக்கும், மற்ற பொருள்களுக்கும் கூட திருநாவுக்கரசு என்னும் பெயரையே வைத்து வழங்கினார்.

தாம் அமைத்த திருமடம், தண்ணீர் பந்தல், சாலை, குளம், முதலியவற்றிற்கும் கூட ''திருநாவுக்கரசு' என்ற பெயரைச் சூட்டி திருநாவுக்கரசரின் பெயரையே மந்திரமாக, ஜபமாக கொண்டிருந்தார்.

ஒரு சமயம் திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பழனம் ஈஸ்வரனை தரிசித்து திங்களூர் வழியாக வந்தார். அங்கே திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல் என்று இருப்பதைக் கண்டு வியந்தார். அங்குள்ளோரை, ''இப் பெயரிட்டு இதனை அமைத்தவர் யார்?'' என்று கேட்டார். பலரும் அவ்வூரிலுள்ள அப்பூதியடிகள், திருநாவுக்கரசர் மீது கொண்டிருந்த பற்றுதலையும் அதனால் அவர் பெயரையே தண்ணீர் பந்தலுக்கு சூட்டிய விவரத்தையும் கூறினார்கள். இதனைக் கேட்டறிந்த நாவுக்கரசர் உண்மையிலேயே வியந்து போனார்.



நாவுக்கரசர் நேராக அப்பூதியடிகள் இல்லத்திற்கே சென்று அவர் வீட்டு வாசலில் நின்றார். சிவனடியார் ஒருவர் வந்திருப்பதைக் கண்ட அப்பூதியடிகள் அவரை வரவேற்று உபசரித்தார். நாவுக்கரசர் அவரிடம் அவ்வூரிலுள்ள எல்லாவற்றிற்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் உங்கள் பெயரை வைத்துக் கொள்ளாது வேறொருவரின் பெயரை வைத்ததன் காரணம் என்ன என்று கேட்டார்.

அது கேட்ட அப்பூதி அடிகள் மனம் கலங்கினார். தனக்கிழைத்த தீங்குகளையும், சூழ்சசிகளையும், இறைவனுக்கு செய்து கொண்டிருக்கும் திருத்தொண்டின் பெயராலே வென்ற நாவுக்கரசரின் பெயரோ, வேறொரு பெயர்? இறைவனின் திருவடிக்கு அன்பு செய்யும் தொண்டாலே இம்மையிலும் நாம் பிழைக்கலாம் என்பதை என் போல் யாவரும் தெரியும் பொருட்டு அருளி வரும், திருநாவுக்கரசரின் பெயரோ வேறொரு பேர் என்று கண் கலங்கிக் கேட்டார்.

கல்லினில் பிணைத்துக் கடலில் இட அதனையே தெப்பமாக கொண்டு கரையேறிய, திருநாவுக்கரசரின் பெயரை இவ்வுலகில் அறியாதவர் யார் உளர்? மங்கலமான சிவவேடத்துடன் விளங்கும் நீவிர் இத்தகைய வெம்மை மொழி கூறியதுடன், நாவுக்கரசரின் பெருமையை அறியாத நீவிர் யார்? எங்குள்ளீர்? இயம்புக என்று பதைபதைத்துக் கேட்டார் அப்பூதியடிகள்.

வந்திருந்த சிவனடியார் அப்பரே என்பதை அப்பூதியடிகள் அறியாததால் வந்த விளைவுதான் இது.

அப்பூதியடிகளின் அன்பின் பெருமையை அப்பர் அறிந்தார். மிக வும் பணிவாக ''புறசமயத் துறையினின்றும் கரையேறும் பொருட்டு இறைவன் சூலை நோய் தந்து ஆட்கொண்ட அந்தச் சிறுமையோன் யானே'' என்றார்.

அப்பூதியாரின் அன்புக்கு முன்னே அப்பரே சிறுவனாகிவிட்டார். தம் எதிரே நிற்பவர் அப்பரே என்றுணர்ந்த அப்பூதியடிகள் கைகளைத் தலை மேல் குவித்து, கண்களில் ஆனந்தம் பெருக கூத்தாடினார். மகிழ்ச்சிப் பெருக்கால் கூத்தாடினார். உடனே அவரது காலில் வீழ்ந்து வணங்கினார்.

அற்றவர் அற நிதியம் பெற்றாற்போல் அக மகிழ்ந்தார். வீட்டினுள் சென்று அனைவரையும் அழைத்து வந்து வணங்கச் செய்தார். அப்பரை உள்ளே அழைத்துச் சென்று ஆசனத்தில் அமர்த்தி உபசரித்துத் திருநீறு பெற்று அணிந்து மகிழ்ந்தார். திருவமுது செய்யுமாறு விண்ணப்பித்தார். அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்! அப்பரும் அன்புக்குக் கட்டுப்பட்டார். அமுதுக்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்தன.

தம் மூத்த பிள்ளையாகிய மூத்த திருநாவுக்கரசினை அழைத்து வாழையிலை அறுத்து வர அனுப்பினார். தனக்கும் பணி செய்ய பேறு கிடைத்ததை எண்ணி மகிழ்ந்த அம்மைந்தனும் தோட்டத்துள் நுழைந்து வாழைக் குருத்தொன்றை அரிந்தான். அப்போது, அங்கிருந்த நல்ல பாம்பு ஒன்று அவனது கையில் தீண்டி விட்டது. கையை உதறி விட்டு வேகமாக ஓடிவந்து இலையை தன் தாயிடம் கொடுத்துவிட்டு கீழே விழுந்தான். விஷம் தலைக்கேற இறந்தான். அப்பூதியாரும் மனைவியும் நிலையை அறிந்தனர். அடியார் அமுதுண்ண தாமதமாகுமே என்றெண்ணினர். உடனே புதல்வனை பாயினுள் வைத்து மூடி வீட்டின் பின்புறத்தில் மறைத்து வைத்து, அதை வெளியே காட்டாதவாறு அடியாரை அமுதுண்ண எழுந்தருளுமாறு வேண்டினர்.

அப்பரும் ஆசனத்தில் அமர்ந்து அனைவருக்கும் திருநீற்றினை வழங்கினார். அப்போது அங்கே மூத்தவன் இல்லாததைக் கண்டு அவனை அழைத்து வரச் சொன்னார். ஆனால் அப்பூதியடிகள் ''இப்போது இங்கு அவன் உதவமாட்டான்'' என்றார் இந்த உரையைக் கேட்ட அப்பர் உள்ளத்தில் திருவருளால் ஒரு தடுமாற்றம் உண்டாயிற்று. நிகழ்ந்தது என்ன என்று அப்பர் வினவ, அப்பூதியடிகள் உண்மையை உரைத்தார்.

அப்பர் பெருமான், சிறுவனது உடலை அவ்வூர் ஆலயத்திற்கு கொண்டு வருமாறு செய்து இறைவன் முன்பு கிடத்தி 'ஒன்றுகொலாம்' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். மூத்த திருநாவுக்கரசு தூங்கி எழுவதைப் போல உயிர்பெற்று எழுந்தான். அப்பர் அவனுக்கும் திருநீறளித்து மகிழ, கண்டவர் அனைவரும் போற்றினர். ஆனால் அப்பூதி அடிகளும் அவரது துணைவியாரும் ''அடியார் திருவமுதுக்குச் சிறிது இடையூறு செய்தான் இவன்'' என்று வருந்தினர்.

அப்பூதியாரையும், குழந்தைகளையும் உடனமர்த்தி நாவுக்கரசர் திருவமுது உண்டார். சில நாட்கள் அங்கு தங்கினார். பின்பு, திருப்பழனம் சென்று இறைவனை வணங்கினார். ஆங்கு பாடிய அப்பதிகத்தில் அப்பூதியடிகளின் தொண்டின் பெருமையைச் சிறப்பித்து பாடினார் திருநாவுக்கரசரின் திருவடிகளையே உறுதிப் பொருளாகக் கொண்டு அவர் பெயரையே தவமாகவும் நலமாகவும் கொண்டு, சொல்லியும் எழுதியும் சிறந்த முகதிப் பதத்தை பெற்றார் அப்பூதியடிகள்.

**அருள் ஞானி கல்பாக்கம் அடிகளார்.**






மங்கை

ஆகஸ்ட் '97 இதழ்

அம்மா சிறப்பிதழ்

ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்குப் பின்னும் ஒரு 'தாய்' இருக்கின்றாள்.

அந்த தாயின் தர்மங்களையும், தியாகங்களையும், ஆலய மனதையும் போற்றிச் சிலிர்க்கும் இதழாக... ஆகஸ்ட் '97 மங்கை முழுக்க முழுக்க அம்மா சிறப்பிதழாக மலர்கிறது.

விலை ரூ 9


## பல்சுவை பரங்கி

பரங்கிக் காயில் (சிவப்பு பூசணி) நாம் சாதாரணமாக சாம்பார், வற்றல் குழம்புதான் செய்வோம். இப்பொழுது பூசணி, பரங்கி அதிகம் கிடைக்கும் நேரம். அதில் வேறு சில சுவை யான பதார்த்தங்களையும் செய்து சாப்பிடலாமே!

### பரங்கிக்காய் ஸ்வீட் பூரி

***தேவையான பொருட்கள்:-***

பரங்கிக் காய் 1/2 கிலோ, வெல்லம் 1/2 கிலோ, உப்பு சிறிது, கோதுமை மாவு 3 கப், எண்ணெய் வேகவிட

***செய்முறை:-***

பரங்கியை தோல் நீக்கி சிறு துண்டாக்குங்கள். வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு, அதில் துண்டங்களைப் போட்டு, சிறிது உப்பு போட்டு நன்கு வதக்கவும் பரங்கிக்காய் பாதியளவு வெந்ததும், அதில் வெல்லம் போட்டு நன்கு கிளறவும். வெல்லம் கரைந்து சேர்ந்து கொண்டதும், ஆற விடவும் அத்துடன் கோதுமை மாவு சேர்த்து பூரிக்கு பிசைவது போல் பிசைந்து சிறு சிறு பூரிகளாக இட்டு, எண்ணெயை அடுப்பில் வைத்து காய்ந்ததும் பூரிகளை பொன்னிறமாக பொரிக்கவும் பரங்கி வெல்லக் கலவையுடன் கோதுமை மாவு தேவையென்றால் மேலும் கொஞ்சம் சேர்த்துக் கொள்ளவும் கோதுமை மாவிற்கு பதில் மைதா மாவு சேர்த்தும் செய்யலாம்

### பரங்கிக்காய் போளி

***தேவையான பொருட்கள்:-***

பரங்கிக்காய் 1/4 கிலோ சர்க்கரை 200 கிராம், தேங்காய் 1 மூடி, ஏலப்பொடி, நெய் 1/2 ஆழாக்கு, மைதா மாவு 2 கப், கேசரி பவுடர்

***செய்முறை:-***

பரங்கிக்காயை தோல் சீவி துண்டுகளாக்கவும் வாணலியில் சிறிது நெய்விட்டு துண்டங்களை நன்கு தீயாமல் வதக்கவும். முக்காலளவு வெந்ததும் இறக்கி பிசைந்து கொள்ளவும். 1/4 கப் நீரில் சாக்கரையைப்போட்டு பாகுவைத்து, துருவி சற்று அரைத்த தேங்காயையும், வெந்து பிசைந்த பரங்கிக் காயும்போட்டு கருளக்கிளறி எடுக்கவும். கிளறும போது கேசரி பவுடர் சேர்க்கவும். சற்று ஆறியதும், நன்கு நைஸாக அரைக்கவும் ஏலப் பொடி போட்டு எலுமிச்சை அளவு உருண்டைகளாக உருட்டவும்.

மைதாவுடன் 1/4 டீஸ்பூன் உப்பு, மஞ்சள் பொடி போட்டு நீர் விட்டு பிசையவும் 4 ஸ்பூன் நல்லெண்ணெய் விட்டுப் பிசையவும் வாழை இலையில் நெய் தடவி மைதா மாவு விழுதை எடுத்து வைத்துத் தட்டி, நடுவில் பரங்கி பூரணம் வைத்து, மூடிக் கவிழ்த்து மெல்லியதாகத் தட்டி, அடைக் கல்லில் நெய் தடவி போளிகளைப் போட்டு வேகவிட்டு எடுக்கவும்.

### பரங்கி சொஜ்ஜி அப்பம்

மேறகூறிய முறையிலேயே எல்லாம் செய்து மூடிய உருண்டையை போளியாக தட்டாமல், சற்று கனமாக வட்டமாக தட்டி, வாணலியில் எண்ணெய் வைத்துக் காய்ந்ததும் அதில் போட்டு வேகவிட்டு எடுக்கவும்

### பரங்கி துவையல்

***தேவையான பொருட்கள்:-***

இளம் பரங்கி கொட்டை நறுக்கிய துண்டம் (தோலுடன்) 1 கப், மிளகாய் வற்றல் 7, உப்பு, புளி சிறிது, உளுத்தம் பருப்பு 1 ஸ்பூன், பெருங்காயம் சிறிது, எண்ணெய்

***செய்முறை:-***

4 ஸ்பூன் எண்ணெயில் பெருங்காயம், உளுத்தம் பருப்பு, மிளகாய், [illegible] அதில் நறுக்கிய பரங்கித் துண்டங்களைப் போட்டு நன்கு வதக்கவும். ஆறியதும் அத்துடன் மிளகாய் வற்றல், உப்பு, புளி, பெருங்காயம் சேர்த்து அரைத்து கடைசியாக உளுத்தம் பருப்பு வைத்து கரகரப்பாக அரைக்கவும்

### பரங்கிக்காய் ஹல்வா

***தேவையான பொருட்கள்:-***

பரங்கி 1/2 கிலோ, சாக்கரை 10 ஸ்பூன், தேங்காய் துருவல் 1/2 கப், ஏலப்பொடி, கேஸரி பவுடர், நெய் 4 ஸ்பூன், முந்திரி 6

***செய்முறை:-***

பரங்கிக் காயை தோல் சீவி சிறு துண்டங்களாக்கி, வாணலியில் சிறிது நீர் விட்டு நன்கு குழைய வேகவிடவும் பிறகு கரண்டியால் மசித்து சாக்கரையைப் போட்டு தேங்காய்த் துருவலைப் போட்டு, கேஸரிப் பவுடரும் போட்டு நன்கு சேரும் வரை கிளறவும் நெய்யில் முந்திரியை வறுத்துப் போட்டு ஹல்வாவில் கொட்டி, ஏலப்பொடியும் போட்டு சேர்த்துக் கிளறி இறக்கவும் சாக்கரை தேவையானால் அதிகம் சேர்த்துக் கொள்ளவும்.

### பரங்கி பால் கூட்டு

இளம் பரங்கிக் கொட்டையை தோல் நீக்கி சிறு துண்டுகளாக்கவும் ஒரு பாத்திரத்தில் நீர் விட்டு நறுக்கிய துண்டங்கள் 1 கப் போட்டு நன்கு வெந்ததும், அதில் 5, 6 ஸ்பூன் சாக்கரை போட்டு கரைய விடவும் கரைந்து சேர்ந்ததும் 2 ஸ்பூன் அரிசிமாவு 1/2 கப் பாலில் கரைத்து விட்டு நன்கு கொதி சேர்ந்து கொதித்ததும், ஒரு ஸ்பூன் எண்ணெயில் கடுகு, உளுத்தம் பருப்பு தாளிக்கவும் [illegible] பாலுடன் பூதியாக பாதி தேங்காய் [illegible] [illegible] நீர் அதிகமாக இருந்தால் பரங்கித் துண்டங்களை [illegible] சாக்கரை சேர்க்கவும்

**—ராதா பானு**



ஆலைக்குடும்பத்தின் வழியில் வந்த அனிதாவை சமீபத்தில் சந்தித்துப் பேசினோம். ''நான்கு வயதில் நாட்டியப் பள்ளியில் சேர்ந்தேன். எனது புகழுக்கும், பெருமைக்கும் காரணம் எனது குருவான திரு. தனஞ்செயனும், திருமதி. சாந்தா தனஞ்செயனும்.

'நாட்டியம் ஒரு தகவல் தொடர்பியம்' (Dance as a media of communication) என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்கிறேன். நாட்டியத் துறையில் இருப்பதாலும், சமூகவியல் எடுத்துப் படித்திருப்பதாலும், ஏதாவது சமூகப் பிரச்னையை எடுத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்ய நினைத்தேன். எந்த நாட்டிற்குச் சென்றாலும், நாட்டியம் ஆடும் பொழுது, மொழி தெரியவில்லை என்றாலும் நாட்டியத்தை, அவர்கள் பாவனைகளையும், அபிநயங்களையும் வைத்துப் புரிந்து கொண்டு ரசிக்கிறார்கள். இதுவே இந்த ஆராய்ச்சியில் எனக்குத் தூண்டுகோலாக இருந்தது.

***நீங்களே வடிவமைத்துச் செய்த நாட்டிய நாடகங்கள் பற்றி?***

முதலாவதாக நவ வித பக்தி. 94ம் ஆண்டு பாரதீய வித்யா பவனில் திரு. டி. எஸ். பார்த்தசாரதி தலைமையில், திருமதி டி. கே. பட்டம்மாள் முன்னிலையில் நடந்தது. நவவித பக்தி செய்யும் பொழுது சிறிய பெண் இவள் எப்படி என்ன செய்யப் போகிறாள் என்ற எதிர்பார்ப்பு கூடியிருந்த அனைவரிடமும் இருந்தது. நிகழ்ச்சி நன்றாக அமைந்ததாகப் பத்திரிகைகளும், பெரியவர்களும் பாராட்டினர்.

இரண்டாவதாக 95ம் ஆண்டு மியூசிக் அகாடெமியில் அன்னமாச்சார்ய கீர்த்தனைகளை முழுவதுமாக வைத்து நடத்திய 'அன்னமய்ய சன்னிதி'யும் அனைவராலும் போற்றப்பட்டது. நிகழ்ச்சியை மிகவும் ரசித்த சங்கீத கலாநிதி திருமதி எம். எஸ். சுப்புலட்சுமியும், திரு. சதாசிவம் அவர்களும் என்னைப் பாராட்டி ஆசீர்வதித்தது என் பாக்கியம்.

மூன்றாவதாக 96ம் ஆண்டு பாரதீய வித்யா பவனில் நடந்த 'அக்னி சம்பூதா' - இது எல்லாவற்றையும் விட சிறந்தது என அனைவராலும் போற்றப்பட்டது.

***'அக்னி சம்பூதா'வில் திரௌபதியின் பிறப்பு குறித்து, அதை நாட்டிய நாடகமாகச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் எப்படி வந்தது?***

திரௌபதி நெருப்பிலிருந்து பிறந்தவள். அவளின் பிறப்பின் ரகசியங்களையும், மூன்று [illegible]களையும் குறித்த கதை. அது திரௌபதி இல்லையென்றால் மகாபாரதம் இல்லை. மகாபாரத யுத்தம் இல்லை என்றால் 'பகவத் கீதை' உருவாகியிருக்காது. டாக்டர் பப்பு வேணுகோபால் உருவாக்கத்தில் திரு. வி. எஸ். நரசிம்மன் அவர்கள் இசையில் உருவான 'அக்னி சம்பூதா' எல்லா விதத்திலும் திருப்தியை அளித்து எனக்கு மிகவும் புகழ் சேர்த்தது.

திரௌபதி [illegible] எனது குரு திரு. தனஞ்செயன் அவர்களே [illegible] ... [illegible] பாராட்டினார் [illegible].

[illegible]

நகர பண்பாட்டுக் கழகம்

சமீபத்தில் மதுரையில் 'City Cultural Association' என்ற நகர பண்பாட்டு கழகம் 1996ஆம் ஆண்டில் ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கும் தனிநபர் மற்றும் வியாபார நிறுவனங்களைப் பாராட்டி பரிசுகள் வழங்கியது.

இந்த விழாவில் பத்து பேர் தங்கள் உடல் உறுப்புகளை தானமாக வழங்க உறுதி மொழி அளித்தார்கள். மயானத்தில் தண்ணீர் வசதிக்கு உதவி, இருதய ஆபரேஷனுக்கு உதவி போன்ற நிதி உதவிகளையும் CCA செய்தது.

1983ஆம் ஆண்டு முதல் 13 ஆண்டுகளாக வர்த்தகம் மட்டுமின்றி கலை, இலக்கியம், பண்பாடு, விளையாட்டு ஆகிய அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கும் சாதனையாளர்களை ஊக்குவித்து ஆண்டுதோறும் பெரிய விழா நடத்தி விருதுகளை வழங்கி வருகிறார்கள்.

ஏழை எளிய மாணவர்களுக்கு இலவச நோட்டு புஸ்தகம் வழங்குதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல், கிராமப்புற ஏழைகளுக்கு உதவுதல், ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கு



தல், ஏழைப் பெண்களுக்கு தையல் மிஷின்களை கொடுத்தல் போன்ற தொண்டுகளை CCA செய்து வருகிறது.

CCA அவார்டு பெற்றவர் எண்ணிக்கை மூவாயிரத்தை தொட்டு விட்டது. இருபத்தி ஏழு அங்கத்தினர்களுடன் துவங்கி இன்று ஆயிரம் அங்கத்தினர்களை கொண்ட அபூர்வ அமைப்பாக ஜொலிக்கிறது.

உறுப்பினர்களின் கருத்துக்களையும், ஒப்புதல்களையும் ஒருங்கே பெற்று அதன் பிறகு சென்னை, பெங்களூர் ஆகிய நகர்களில் இருந்து வெளிவரும் மார்க்கெட் சர்வே நிறுவனங்களின் பரிந்துரைகளை பெற்ற பிறகே சாதனை புரிந்த நிறுவனங்கள் விருது பெற தேர்வு செய்யப்படுகிறது. அதுபோல் ஒவ்வொரு துறையில் சாதனை படைத்த தனி நபர்களை தேர்வு செய்ய தன்னிச்சையான அமைப்பாளர்களை கொண்ட ஒரு குழு செயல்பட்டு வருகிறது. முழுக்க முழுக்க தனித்திறமை சேவை மனப்பான்மை அடிப்படையிலேயே தேர்வு செய்யப்படுகிறது.


அனாதை ஆசிரமங்கள், பார்வையற்றோர் பள்ளிகள், முதியோர் பாதுகாப்பு நிலையங்கள், உடல் ஊனமுற்றோர் பள்ளிகள் இவைகளை நடத்தி வரும் சமூக சேவகர்களை ஊக்குவித்து CCA விருது தரப்படுகிறது.

இந்த நகர பண்பாட்டு கழக தலைவர் திரு. பிரான்சிஸ் பாண்டின் சுறுசுறுப்பான இளைஞர். பிரியங்கா குரூப் நிறுவனங்களின் சேர்மனான இவர் CCA அகில இந்திய தலைவராக செயல்படுகிறார்.






"எல்லோர் கவனமும் எங்கள் மீது! தாங்க்யூ, என்டைஸ்!"




என்டைஸ்
பள்ளிச்சீருடைகள்.
துடிப்புடன் திகழும்
பள்ளிப்பருவத்திற்கு
உறுதியான துணை.
படிக்கும்போதும்,
விளையாடும்போதும்.
என்டைஸ் சீருடை.
இளைய பாரதத்தின்
இதயத்தில்
இடம் பெற்றது.

என்டைஸ்
பள்ளிச்சீருடைகள்
சிறந்த ரகங்கள். சரியான விலை.
நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பொரேஷன் (தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) லிமிடெட் ஒரு மைய அரசு நிறுவனம்

நம் வேதங்கள், புராணங்கள் அனைத்துமே முதலில் அன்னையைத்தான் தொழச் சொல்கின்றன. தமிழ் கூறும் நல்ல நூல் யாவையும் அன்னைக்கே முதலிடம் தருகின்றன.

'மாதா பிதா குரு என்ற வரிசையில் கடைசி இடம்தான் அந்த ஆண்டவனுக்கே. பெற்றோரைக் குறிப்பிடும் பொழுது கூட 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' - என அன்னையை முதலில் குறிப்பிடுகிறோம்.

'ஆண்டவன் நம் ஒவ்வொருவருடனும் நேரில்வந்து இருக்க முடியாத நிலையில்தான் அன்னையை நம்முடன் இருக்கச் செய்கிறான்' - என்று எப்போதோ படித்து வரிகள் இவரை சந்தித்த போது நம் நினைவில் வந்தன. ஒரு குறையுமில்லாத குழந்தைகள் பிறக்கும் போதே வேண்டாதவைகளை மனதில் எண்ணி, அலுத்துக் கொள்வோரிடையே இவர் வித்தியாசமானவர்.

இரண்டாவதாகப் பிறந்த பெண் குழந்தை 'டவுன் சின்ட் ரோம்' - என்ற குறைபாடு உடையதாக இருந்ததைக் கண்ட இவர் அதற்காக இடிந்து போகாமல் அந்தக் குழந்தையுடனேயே - தன்னை முழுவதும் அர்ப்பணித்துக் கொண்டதுடன் இந்தக் குறைபாடு பற்றி முழுமையாக ஆராய்ந்து - இது போன்ற குழந்தைகளுக்காக ஒரு சிறப்புப் பயிற்சிகள் தரும் ஒரு பள்ளியையும் நடத்தி வருபவர். இன்று வேண்டுமானால் 'டவுன் சிண்ட் ரோம்' பற்றி பலர் முழுமையாக அறிந்திருக்கலாம். ஆனால் 16 வருடங்களுக்கு முன்பு...?

ஆம் தனக்கு மகள் பிறந்த உடனேயே இந்தக் குறைபாடு பற்றிய ஆராய்ச்சியைத்



# அன்னை ஓர் ஆலயம்





துவங்கி - பலநாடுகளுக்கும் சென்று இது பற்றி விரிவாக அவர்களின் பெற்றோர் களுக்குத் தெளிவான விளக்கம் தந்து அவர்களுடைய கவலையைப் போக்கி உள்ள அந்தப் பெண்மணிதான் திருமதி ரேகா ராமச்சந்திரன். அவர் நடத்தி வரும் அந்தப் பள்ளி 'மாத்ரு மந்திர்'.

அன்னையே கோவிலாகி விட்ட பின்பு அங்கு கவலைக்கு இடமேது? இனி இந்தக் குறைபாடுகள் பற்றி, மாத்ரு மந்திரில் தரப்படும் சிறப்புப் பயிற்சிகள் பற்றி திருமதி ரேகா சொல்வதைக் கேட்போமா?

''தந்தையிடமிருந்து 23 க்ரோமோஸம்களையும், தாயிடமிருந்து 23 க்ரோமோஸம்களையும் (மொத்தம் 46) பெற்றதான் ஒரு குழந்தை உருவாகிறது.

46 இருக்க வேண்டிய இடத்தில் கூடுதலான ஒன்று பெற்று 47 க்ரோமோஸம் ஆகிவிட்டால் வருவதுதான் இந்த 'டவுன் சின்ட்ரோம்'.

வாழ்க்கையில் எனக்கு எல்லா செல்வங்களையுமே அதிகமாகத் தந்து விட்ட ஆண்டவன் என் மகளுக்கு ஒரு க்ரோமோஸமையும் கூட கொடுத்து விட்டானோ என்று கூட நான் நினைப்பதுண்டு (புன்னகைக்கிறார்) இப்படி கூடுதலாக வரும் க்ரோமோஸம் தந்தை அல்லது தாய் யாரிடமிருந்து வேண்டுமானாலும் வரலாம்.

பிறக்கும் குழந்தைகளில் 600க்கு ஒன்று இது போன்ற குறையுடன் பிறக்கின்றன என்கிறது புள்ளி விவரம்.

'ஜீன்' தரும் அற்புதங்களாக அமைபவைதான் நம் ஒவ்வொருவரின் தோற்றங்களும் - குணநலன்களும் இந்த குறையுடன் பிறக்கும் குழந்தைகளின் தோற்றமே கூட சாதாரண குழந்தைகளிடமிருந்து மாறுபட்டு இருக்கும்.





பிறந்த குழந்தைகளின் தலை சாதாரண குழந்தைகளின் தலையை விட கொஞ்சம் சிறியதாக தலையின் பின்புறம் சற்று தட்டையாக, வாய் அடிக்கடி திறந்து, நாக்கு சற்று வெளியே நீட்டி, கண்கள் கொஞ்சம் மேல் நோக்கி - இரு விழிகளுக்கிடையே அதிக தூரம் அமைந்து, கை கால்கள் பெருத்தும் - அளவில் சிறுத்தும், கால் விரல்களுக்கிடையே அதிக இடைவெளி அமைதல் - போன்ற அடையாளங்கள் 'டவுன் சின்ட் ரோம்' குழந்தைகளுக்கு உண்டு.

இந்த அத்தனை அடையாளங்களுமே ஒரு குழந்தைக்கு அமைய வேண்டுமென்பதில்லை. சில குழந்தைகளுக்கு இதில் ஒன்று அல்லது இரண்டும், இன்னும் சில குழந்தைகளுக்கு இதிலேயே வேறு இரண்டு அடையாளங்களும் இருக்கலாம்.

இது போன்ற குழந்தைகளுக்குப் 'புரிந்து கொள்ளும் சக்தி' சாதாரண குழந்தைகளை விட சற்று குறைவுதான். ஆனாலும் இவர்களுக்குப் பயிற்சி அளித்து - பலமுறை (அவர்களுக்குப் புரியும் வரை) நன்கு சொல்லிக் கொடுத்தால் நிச்சயம் பலன் கிடைக்கும்.

இது போன்ற குழந்தைகள் பிறந்தவுடன் பெற்றவர்கள் அதிர்ச்சி அடைவதைத் தவிர்த்து - இவர்களைப் பற்றி விவரங்களை முழுமையாக அறிந்து கொள்வதுடன் சில ஜீரணிக்க முடியாத உண்மைகளையும் ஏற்கும் பக்குவத்திற்கு வர வேண்டும்.



இந்த 'டவுன் சின்ட்ரோம்' என்பது ஒரு நோயல்ல - குறைபாடு தான். இதை பூரணமாகக் குணமாக்குவது என்பது முடியாத காரியம்.

இதுபோன்றவையை உணர்த்தவும், இந்த குறையுள்ள குழந்தைகளுக்கு சிறப்புப் பயிற்சி தரவும் துவக்கப்பட்டதுதான் **'மாத்ரு மந்திர்'**. 1984ல் துவக்கப்பட்டது இந்த பள்ளி மற்றும் ஆராய்ச்சி மையம். இது போன்ற குழந்தைகள் பற்றி ஆராய அமைக்கப்பட்ட முதல் மையம் இது.

இதன் திட்டங்களும் செயல்பாடுகளும் சென்னையின் தென் மேற்கு ரோட்டரி சங்க உறுப்பினர்கள், மேற்கு ஆஸ்திரேலிய 'பால் வின்' ரோட்டரி சங்கம், அகில உலக ரோட்டரி 'பவுண்டேஷன்' ஆகியவை இணைந்து உருவாக்கியவை.

இக்குறையுடன் பிறக்கும் குழந்தைகளை (கிளினிகல் மற்றும் க்ரோமோஸம்) நன்கு ஆராய்ந்து, உறுதி செய்து, பதிவு செய்து கொண்டு ஜனத் தொகையில் இது எத்தனை சதவிகிதம் என்பதையும் கணக்கெடுப்போம்.

இக்குழந்தைகளுக்கு சிறப்பான பயிற்சிகள் தந்து மறு வாழ்வு கொடுத்து, இந்த சமுதாயத்துடன் இணைய வைப்பதுதான் மாத்ரு மந்திரின் நோக்கம். பெற்றோருக்கும் இதை உணர வைப்பதுடன், குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் முறைகளையும் கற்றுத் தருகிறோம்.

இந்த குறையுடன் பிறக்கும் குழந்தைகளுக்குப் பிறந்த ஒரு மாதத்திலேயே பயிற்சிகளைத் தொடங்கி விட வேண்டும். தூங்கும் போது கூட இந்தப் பயிற்சிகளைத் தொடர வேண்டும்.

3 வயது வரை தர வேண்டிய மிக முக்கியமான அடிப்படை பயிற்சிகள் - 'டாய்லெட்' பழக்கங்கள் சுயமாக தாங்களே எடுத்து சாப்பிடும் பயிற்சிகள்.

மூன்று வயது வரை இந்த பயிற்சிகள் சிறப்புப் பள்ளியான 'மாத்ரு மந்திரில்' தரப்பட்ட பின்பு சாதாரண பிள்ளைகள் படிக்கும் பள்ளியில் சேர்க்க வேண்டும். இது மிகவும் அவசியமானது. மற்ற குழந்தைகளுடன் கலந்து பழக இது உதவி செய்யும்.

இந்த வயதுகளில் அதிகமான பாடமோ, எழுத்துப் பயிற்சிகளோ கிடையாதே? அவர்களால் படிக்க முடியாவிட்டாலும், ஒரே வகுப்பிலேயே நிறுத்தி வைக்கப்பட்டாலும் கூட அவர்கள் 11 அல்லது 12 வயது வரை சாதாரண பள்ளியிலேயேதான் இருக்க வேண்டும்.

12 வயதை நெருங்கும் போது குழந்தைகளே வித்தியாசங்களை உணர்ந்து அந்தப் பள்ளியில் தொடர்வதை விரும்பாத நிலை வரும் போது மீண்டும் மாத்ரு மந்திருக்கே அழைத்துக் கொள்கிறோம். அவர்களிடம் உள்ள திறமைகளை வெளியே கொண்டு வந்து அதை நன்கு வளர்க்கும் படியான பல வித 'வொகேஷனல்' பயிற்சிகள் தருகிறோம். இங்குள்ள குழந்தைகளில் சிலர் கம்ப்யூட்டர் கற்று வருகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்கிறார் திருமதி ராமச்சந்திரன்.

கிளம்பும் நேரம் அவருடைய மகள் பப்லியுடன் பேசினோம். இவள் பிறந்த பின்புதான் மாத்ரு மந்திர் மற்றும் 'டவுன்ஸ் ரிஸர்ச் பவுண்டேஷனும்' துவக்கப்பட்டது.

''உனக்கு என்ன பிடிக்கும் பப்லி?''

''ஆன்ட்டி எனக்கு 'டெக்கிலே' படம் போட்டு பார்ப்பது ரொம்ப பிடிக்கும். இப்போது கூட சினிமாதான் பார்த்துகிட்டு இருந்தேன்.''

''எந்த நடிகர் பிடிக்கும்?''

''எனக்கு ராம்கியும், நிழல்கள் ரவியும் பிடிக்கும்''

''சினிமா தவிர வேறு என்ன பிடிக்கும்?''

''கம்ப்யூட்டர் ரொம்ப பிடிக்கும். நான் கம்ப்யூட்டர் கிளாசுக்கும் கூட போறேன்'' - என்றபடியே தன் சமீபத்திய பிறந்தநாள் போட்டோ ஆல்பத்தை எடுத்து வந்து நம் அருகில் உட்கார்ந்தபடி காண்பிக்க ஆரம்பித்தாள்.

சிவப்பு பட்டுப் புடவையில் நெற்றியில் விபூதி குங்குமம் மிளிர கையில் திரிசூலத்துடன் அம்பாள் வேடத்திலதான் இருப்பதை மகிழ்ச்சியுடன் காட்டினாள். ஆனால் புகைப்படத்தில் அவள் கண்ணாடியுடன் இருந்ததை சுட்டிக் காட்டி கேட்க, ''நான் எப்போதுமே கண்ணாடி போட்டிருப்பேன். அதை ஏன் கழட்டணும்? அதைக் கழட்டினா நான்தான்னு அடையாளம் தெரியாது. அதோடு இது கொஞ்சம் வித்தியாசமாக இருக்கட்டுமே?'' வெகு இயல்பாக அவள் சொன்னதைக் கேட்டு நாம் அசந்துதான் போனோம்.

கிளம்பும் நேரம் திருமதி ரேகா ''ஹார்மோன் குறைபாடுகளுக்கு மருந்து தருவது போல தற்போது இது போன்ற குறைபாடுகளுக்கு ஏற்ற உணவைக் கொடுத்து இதை நீக்க அமெரிக்காவில் முயற்சி செய்து வருகின்றனர். இது ஓரளவு பலனும் தருகிறது. இங்கே உள்ள ஒரு குழந்தைக்கு இது போன்ற உணவு முறை தற்போது தரப்பட்டு வருகிறது. இது கொஞ்சம் விலை அதிகமானதுதான். ஆனாலும் பலனும் இருக்கிறதே! பப்லியை அங்கே அமெரிக்கா அழைத்துச் சென்று இந்த உணவு முறைகளை அறிமுகம் செய்யப் போகிறேன்'' என்றார்.

# சங்கமித்திரை முதல் சபானா ஆஸ்மி வரை


ருக்மிணி லட்சுமிபதி


ஆர்.எஸ். சுப்புலட்சுமி


சரோஜினி தேவி நாயுடு

சுயநலமின்றி சமூகக் கண்ணோட்டத்தோடு மேற்கொள்ளப்படுகின்ற அரிய செயலை 'தொண்டு' என்கிறோம்.

பழைய காலத்திலிருந்தே 'என் கடன் பணி செய்து கிடப்பதே! என்று வாழ்ந்த பெண்கள் பலர்.

மாமன்னன் அசோகன் மகளாகப் பிறந்ததும், புத்தமதம் பரப்பும் நோக்கோடு பல காலம் பயணம் செய்து இலங்கை சென்று வாழ்ந்த முதல் பெண் தூதுவரான சங்கமித்திரை கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் ஆற்றிய பழந்தொண்டு மகத்தானது.

காரைக்கால் அம்மையாரும், மங்கையர்க்கரசியும், திலகவதியும் மிகச் சிறந்த தொண்டர்களாக உயர்ந்து வாழ்ந்தனர்.

நமது நாட்டில் ஆணுடை தரித்து 1857ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களுக்கு எதிராக நிகழ்ந்த முதல் சுதந்திர போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்தவர் ஜான்ஸியின் ராணி லட்சுமிபாய். அவரைத் தொடர்ந்து அவரது பெயரிலேயே தமிழ்ப் பெண்மணி ஒருவர் வீர நேதாஜி நிறுவிய இந்திய தேசீயப் படையில் ஆயுதம் தாங்கி தளபதியாக பணியாற்றினார். அவர் சமூக சேவகி அம்மு சுவாமிநாதனின் மகளான காப்டன் லட்சுமி செகல்.

தென்னாப்பிரிக்கா நாட்டில் காந்தியடிகள் அறப் போராட்டம் துவங்கியபோது அதற்காகச் சிறை சென்றவர் 16 வயதே நிரம்பிய தில்லையாடி வள்ளியம்மாள்.

காந்தியடிகளின் கரம் பிடித்து, அவரது போராட்டங்களில் எல்லாம் உற்ற துணையாக நின்ற அன்னை கஸ்தூரி பாவைதான் மறக்க முடியுமா?

அயர்லாந்தில் பிறந்தாலும் இந்தியாவையே தமது தாயகமாக கொண்டு, அதன் சுதந்திரப் போராட்டத்திலும் தீவிர பங்கு பெற்று பெண் கல்வி, சமூக சீர்திருத்தம், ஆன்மீக விடுதலை, சாரண இயக்கம் ஆகிய துறைகளிலும், ஈடுபட்டவர் அன்னி பெஸண்ட் அம்மையார்.

அதன் பின் 'இந்தியாவின் நைட்டிங்கேல்' என்று புகழ் பெற்ற கவிக்குயில் சரோஜினி தேவி நாயுடு, தமிழ் நாட்டின் ருக்மிணி லட்சுமிபதி போன்ற நமது நாட்டு பெண்களின் தொண்டு உலகச் சரித்திரத்தில் தனியிடம் பெறுமளவிற்கு உயர்ந்திருந்தன.

மேரி கியூரி போலந்து நாட்டின் தலை நகரமான வார்ஸாவில் 1867ஆம் ஆண்டு எளிய குடும்பத்தில் பிறந்தார். மனியா என்ற அழைக்கப்பட்ட அவர் பிறவி மேதையாக அறிவியல் துறையில் சிறந்து விளங்கினார். பிரான்ஸ் நாட்டிலுள்ள பாரீஸ் சென்று அங்கு எம்.ஏ. பட்டம் பெற்றார். பௌதீக பேராசிரியரான பியரி கியூரியை மணந்தார்.

தம்பதி இருவரும் ஒழுகும் கூரையுடன் கூடிய அதிக வசதியில்லாத சோதனைக் கூடத்தில் கடுமையாக உழைத்து புற்று நோய்க்கு மருந்தான ரேடியத்தைக் கண்டு பிடித்தனர்.

1903-ஆம் ஆண்டு மேரி கியூரிக்கு பௌதிகத்திற்காக நோபல் பரிசு அளிக்கப் பட்ட போது, அப்பரிசைப் பெற்ற முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவரானார். இரண்டாவது முறையாக 1911-ஆம் ஆண்டு வேதியியல் நோபல் பரிசு அளிக்கப்பட்டது. ரேடியேஷனில் அதிக நேரம் சோதனை செய்ததினால் அவர் உடல் நிலை கெட்டது. எந்த நோய்க்காக மருந்து கண்டுபிடித்தாரோ, அந் நோயே 1934-ஆம் ஆண்டு அவரையும் பலி வாங்கியது. விஞ்ஞான தொண்டுக்காக தன்னையே அர்ப்பணித்த தியாக தீபம் அவர்.

மேரி கியூரி ஒரு பெரிய விஞ்ஞானியாக வாழ்ந்ததோடு மட்டுமல்லாமல் பெண்ணிற்கு சம உரிமை அளிக்காத காலத்தில் பெண்ணியத்திற்காக போராடியவர் என்ற கௌரவத்திற்கும் உரியவராகிறார்.

1424-ஆம் ஆண்டு - பிரான்ஸ் நாட்டில் டாம்ரிமி என்ற கிராமம். கல்வியறிவு இல்லாத 12 வயது பெண் ஆடு மாடுகள் மேய்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தாள். தெய்வ பக்தி நிரம்பியவளாக இருந்ததினால் அடிக்கடி இறைவனை நினைத்துக் கொள்வாள்.

ஒரு சமயம் கடவுள் அவளிடம் பேசுவதாக உணர்ந்தாள். "உனது நாட்டை அன்னியர்களிடமிருந்து காப்பாற்றி, ரீம்ஸ் கதீட்ரலில் மன்னருக்கு முடி சூட்டு விழா நடத்து!" என்று கர்த்தர் கட்டளைப் பிறப்பித்ததாக அவள் எல்லோரிடமும் சொன்னாள். அவரது தந்தையே அதை நம்பவில்லை. ஆனால் சிறுமி ஜோன் தனது எண்ணத்தை கைவிடாமல் அதற்கான முயற்சிகளில் இறங்கினாள்.

ராபார்ட் என்ற படைத் தலைவர் அவரது இடையறாத வேண்டுகோளை ஏற்று சில போர் வீரர்களை அவளோடு அனுப்பி வைத்தார். ஜோனும் ஆணுடை தரித்து ஷினான் என்னும் நகரத்திற்குச் சென்று இளவரசன் சார்லஸிடம் தனது திட்டத்தை விளக்கினாள். சார்லஸ் அவளிடம் ஒரு படையினை ஒப்படைத்தவுடன் முன்னமே அறிவித்தபடி காதரைன் தேவாலயம் சென்று, 5 சிலுவைகள் பொறிக்கப்பட்ட கத்தியையும் பெற்றுக் கொண்டாள்.

தெய்வீகத்தை பெற்றிருந்த அவளது தலைமை பிரெஞ்சு வீரர்களுக்குத் தனித்தொரு உற்சாகத்தைக்








மேரி கியூரி


மிருணாள் கோரே


ஸபானா ஆஸ்மி


மேதா பட்கர்

கொடுத்தது. அவர்களை எதிர்த்த ஆங்கிலேயர்களை முறியடித்து ஆர்லியன்ஸ் நகரை அவர்களிடமிருந்து மீட்டனர். கர்த்தர் இட்ட கட்டளைப்படி சார்லஸ் இளவரசருக்கு ரீமஸ் நகரில் ஜோன் உடனிருக்க முடி சூட்டு விழா நிறைவேறியது.

ஃப்ளாரன்ஸ், இத்தாலி நாட்டிலுள்ள அழகிய ஊர். அங்கு 1820ஆம் ஆண்டு மே மாதம் 12 நாள் பிறந்த நைட்டிங்கேலை பிறந்த ஊரையும் சேர்த்து 'ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல்' என்றழைத்தனர் அவரது ஆங்கிலேயப் பெற்றோர்கள்.

வசதியான குடும்பத்தில் பிறந்தாலும் நைட்டிங்கல்லின் கவனம் என்னவோ நர்ஸிங் பணியில் திரும்பியது.

எல்லா பெற்றோர்கள் போலவே தங்களதுமகள் நைட்டிங்கலும் திருமணம் செய்து கொண்டு வசதியாக வாழ வேண்டுமென்று விரும்பினார்கள் அவரது பெற்றோர்கள். ஆனால் நைட்டிங்கேல்லுக்கு நர்ஸிங் தொண்டு தான் வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது.

ஸிட்னி ஹெபர்ட் என்பவர் அவரது நோக்கம் ஈடேற காரணமாக இருந்தார். நைட்டிங்கேலின் பெற்றோர்களின் மனத்தை மாற்றி, வேண்டிய உதவிகளைச் செய்தவர் அவர்.

ஜெர்மானிய நாட்டில் நர்ஸிங் பயிற்சி பெற்று இங்கிலாந்தின் மருத்துவ விடுதிகளில் பணியை துவக்கினார். லண்டனிலுள்ள மருத்துமனையை திறம்பட நிர்வகித்த போது அவரது புகழும் உயர்ந்தது.

அவருக்கு உலகப் புகழ் அளித்தது, கிரிமியாவில் நடந்த பெரும் போர் தான். அங்கு காயமுற்ற போர் வீரர்களை சரியாக கவனிக்க மருத்துவ வசதிகள் இல்லாத போது அது பற்றி 'டைம்ஸ்' பத்திரிகை கடுமையாக விமர்சித்தது. போர் அமைச்சராக இருந்து ஸிட்னி ஹெபர்ட் நைட்டிங்கேல்லிடம் போர் வீரர்களை கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி பணித்தார். 1854ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், சில நர்ஸ்களுடன் துருக்கியிலுள்ள ஸ்கட்டாரி நகரை அடைந்து, அங்குள்ள மருத்துவமனையில் நர்ஸிங் பணியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

பல இடையூறுகளிடையேயும் அவர் தமது பணியை மேற்கொண்டார். கூட உழைத்த நர்ஸ்களும் இராணுவ அதிகாரிகளும் வேண்டிய ஒத்துழைப்பு கொடுக்கத் தயங்கிய சமயத்திலும், மனம் தளராமல் அவர் பணியாற்றினார். அங்குள்ள குழப்பமான நிலைமையை சீர்ப்படுத்த தானே முழுபொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்.

அவரது பணிக்கு தடையாக இருந்த 'சிவப்பு நாடா' என்று சொல்லப்படுகின்ற அதிகாரிகளின் அலட்சியம், மெத்தன போக்கு ஆகியவை கண்டு அஞ்சாமல், போர் வீரர்களின் நலனையே கருத்தில் கொண்டு துணிவுடன் சில நடவடிக்கைகளை செயலாற்றினார்.

தினமும் மருத்துவப் பணிகள் முடிந்த பின்பு, உலகமே தூக்கத்தில் ஆழ்ந்திருந்த இரவு வேளையில் கையில் விளக்கேந்தி, நோயாளிகள் இருக்கும் ஒவ்வொரு வார்டிற்கும் வருகை தந்த அந்த பெண்மணி ஒரு தேவதைபோல நோயாளிகளுக்கு காட்சியளித்தார். அதன் காரணமாகவே அன்பாக அவரை 'விளக்கு ஏந்திய பெண்மணி' (A Lady with a Lamp).என்று அழைத்தனர்.

திருமணமாகிய இரண்டு மாதத்திலேயே கணவனை விபத்து ஒன்றில் பறிகொடுத்து 11 வயதில் கைம்பெண்ணான ஆர்.எஸ். சுப்புலட்சுமி மனம் தளராமல், கல்வியை தொடர்ந்தார். அன்றைய கட்டுப்பட்டியான சமூகத்தின் பழிப்புகளுக்கு அஞ்சாமல் கல்வித்துறையில் பணியாற்றிய தோடு ஆதரவின்றி தவித்த அபலைப் பெண்களுக்காக அவர் நிறுவிய சமூக அமைப்புகள் அவரது தொண்டிற்கு அடையாளமாக இன்றும் திகழ்கின்றன.

'குட் எர்த்' என்ற இலக்கிய தரம் வாய்ந்த நூலினால் நோபல் பரிசு பெற்ற பேர்ல் எஸ். பெர்க் சமூகத் தொண்டிலும் சிறந்து விளங்கினார்.

அண்மையில் நமது நாட்டின் 32வது ஞான பீட விருதைப் பெற்ற வங்காள மொழி எழுத்தாளர் திருமதி மகா ஸ்வேதா தேவி பொதுத் தொண்டின் அவசியத்தை வலியுறுத்தி சொன்னதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அவர் சொன்னார்: "பொறுப்புணர்ச்சியுள்ள எந்த எழுத்தாளரும் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்களின் நலனிற்காகப்பாடுபட வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் இவ்வுலகம் அவரை மன்னிக்காது."

சோஷியலிஸ இயக்கத்தோடு இணைந்த தொழிலாளர் சங்கத் தலைவராக இருந்த வஸந்த் கானோல்கரின் மகள் மேதா பட்கர்.

சிறுவயதிலேயே தனது விடுமுறை நாட்களை ஆதிவாசிகளின் குடியிருப்பில் கழித்த காரணத்தினால் அவர்களது பிரச்னைகளை நன்கு உணர்ந்து கொள்ளும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

'டாடா இன்ஸ்டிட்யூட் ஆஃப் சோஷியல் ஸயன்ஸ்' என்ற சமூக ஆய்வு நிறுவனத்தில் எம்.ஏ. படிக்கும் போது அவர் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட பொருள் Self mobilised action groups of Tribals

அதன் பிறகு அவருக்கு கம்யூனிட்டி எய்டு அண்ட் ஸ்பான்ஸருஷிப் ப்ரோகிராமில் உயர் பதவி தேடி வந்தது. ஆதிவாசி மக்களோடு தனது முழு நேரத்தை செலவிட முடிவெடுப்பதற்கு முன் சில காலம் சேரி மக்களுக்காகப் பாடுபட்டார். 'யுவா' என்ற அமைப்பையும் துவக்கி, கீழ் மட்டத்து மக்களோடு தொடர்பு கொண்டார். பின்னர் மகாராஷ்டிரத்திலுள்ள துலே மாவட்டத்திலுள்ள ஆதிவாசி மக்களுக்காக உழைத்தார். அவர்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்க அவரும் அவரது சக போராட்ட வீரர்களும் பல மேற் கொண்டதினால் ஆதிவாசிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமானார்கள். அவர்கள் அவரை 'மேதா பஹன்' என்று அன்பாக அழைக்கிறார்கள்.

'நேஷனல் அல்லயன்ஸ் ஆஃப் பீப்பிள்ஸ் மோவ்மென்ட்' என்ற அமைப்பின் மூலம் பல போராட்டங் களுக்கு வழி காட்டி வருகிறார். 1991ஆம் ஆண்டு ஸ்வீடன் தேசத்து 'ரைட் லிவ்லி அவார்டு' பெற்றவர் மேதா பட்கர்.

மும்பையில் கார் என்ற பகுதியில் 1928ஆம் ஆண்டு பிறந்த மிருணாள் கோரே சிறுவயதிலேயே சோஷியலிஸ் இளைஞர் அணியின் பணிகளில் ஈர்க்கப்பட்டார். தமது 20ஆம் வயதில் அவரோடு இணைந்து பணியாற்றிய சக தொண்டரான கேசவ் என்ற பாண்டு கோரேயை திருமணம் செய்து கொண்டார்.

புற நகர் பகுதியான கோரேகானில் பகுதியில் குடியேறிய தம்பதி அப்பகுதி மக்களின் தேவைகளுக்காக போராடினர். 1958ஆம் ஆண்டு அன்புக் கணவர் கோரேயை இழந்த போதிலும், அவரது பணியை நிறுத்தாமல் கோரேகான் மக்களோடு சேர்ந்து அவர்களுக்காக உழைத்தார். குறிப்பாக அவர்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, மின்சாரம், கழிவறை முதலியவற்றில் மிகுந்த அக்கறை காட்டினார். அவரால் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி பெருகியதை அடுத்து அவரும் 'பானிவாலி பாய்' என்றழைக்கப்பட்டார்.

மக்களின் இதயத்தில் அழியாத இடம் பெற்று விட்ட அவர் நகர சபை உறுப்பினராகவும், லோக்சபா அங்கத்தினராகவும், ஜனதாதள தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

பெண்களுக்காக 'ஸ்வாதர்' என்ற அமைப்பை நிறுவியுள்ளார் 'கேசவ் கோரே சமாரக் அறக்கட்டளை' மூலமாக பல அரிய திட்டங்களை செயலாக்கி வருகிறார்.

கவிஞர், நாடக நடிகர், கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் என்று பிரபலமான கைஃபி ஆஸ்மியின் மகள் சபானா ஆஸ்மி.

பெற்றோர்கள் இருவரும் 'இப்டா' என்ற இந்தி நாடகக் குழுவில் பங்கு கொண்டிருந்ததினால், பள்ளி நாட்களிலேயே நாடக ஆர்வம் ஏற்பட்டது. மும்பையின் புனித சேவியர் கல்லூரி படிப்பிற்குப் பின் பூனாவிலுள்ள திரைப்படக் கல்லூரியில் கற்று தன்னை சினிமாத்துறைக்கு தகுதியாக்கிக் கொண்டார்.

அவர் நடித்த முதல் படமான 'அங்கூரே' நட்சத்திர அந்தஸ்தை பெற்றுக் கொடுத்தது. தம் நடிப்பாற்றலுக்கு நான்கு முறை தேசீய விருதுகள் பெற்றதோடு, பல சர்வதேச படங்களிலும் பங்கேற்று இந்தியாவிற்கு பெருமை தேடித் தந்தவர். அண்மையில் கானடா நாட்டுத் தயாரிப்பான 'ஃபையர்' (Fire) படத்தில் அவரது நடிப்பிற்காக ஸில்வர் ஹுகோ விருதும் கிடைத்துள்ளது.

நடிப்பதோடு, அதோடு பாட்டுடன் சமூகப் பணிகளில் பங்கெடுத்து வருகிறார் ஸபானா. அவர் நடித்த பல படங்களில் அவரை ஈர்த்த பல சமூகப் பிரச்னைகளே முக்கியத்துவம் அடைந்துள்ளன.

அவர் இணைந்துள்ள 'நிவாரா ஹாக்' என்ற அமைப்பு சேரி வாழ் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது சேரியில் வாழ்வோர் யாரையும் எதிர் பார்க்காமல் தங்களது சொந்த காலில் நிற்க அவரது அமைப்பு பக்கபலமாக இருக்கிறது.

நர்மதா அணைத் திட்டத்தை எதிர்த்து 'ஜல் சமர்ப்பண்' போராட்டத்தையும் நடத்தியவர் அவர். 'சேரி மக்களை வேறிடங்களுக்கு மாற்றுவதினால் பிரச்னை தீராது' என்பதை பலமுறை அரசிற்கு வலியுறுத்துவதோடு அதற்கான போராட்டங்களில் கலந்து கொண்டவர். ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் உரையாற்றும்போது கூட இந்திய பிரச்னைகள்தான் அவரது கருப்பொருளாக அமைந்திருந்தன.

மதச் சார்பில்லாத கொள்கைப் பிடிப்புடைய ஸபானா ஆஸ்மி பெண்ணுரிமையை எங்கும் முழங்கி வருகிறார். 'பத்மஸ்ரீ' விருது கொடுத்தபோது அதிலுள்ள 'ஸ்ரீ' ஆண்களை மட்டுமே குறிக்கிறது என்று சுட்டிக் காட்டியவர்.

அரசு அமைக்கப்பட்ட பல குழுக்களில் அங்கத்தினராக பொறுப்பேற்றுள்ள ஸபானா ஆஸ்மி நேரடியான அரசியலில் இதுவரைக்கும் இறங்காமல் சுயமாக செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

தொண்டே தவம் என்று வாழ்ந்த - வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த அன்பு தீபங்கள் பெண் தாய் அல்ல தாய்க்குத் தாய் என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறார்கள்

—சிவப்ரியா

# தத்தெடுப்பு



தாய்மைக்கு இலக்கணமாக, எடுத்துக்காட்டாக தொன்றுதொட்டு விளங்கியவர் அந்த தீராத விளையாட்டுப் பிள்ளையான கண்ணனின் வளர்ப்புத் தாயான யசோதை.

இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் தத்துப் பெற்றோர்கள் ஒரு சங்கம் வைத்து அதன் வழியே தத்தெடுப்பை மிகவும் வெளிப்படையாக ஒப்புக் கொண்டு சமுதாயத்தில் தத்துப் பிள்ளைகளின் நிலையும், உரிமையும், பெற்ற பிள்ளைகளை விட எந்த விதத்திலும் வித்தியாசமானதல்ல என்பதை உணர்த்தி வருகிறார்கள்.

திருமதி விமலா விட்டல் அவர்களது மகளான திருமதி வித்யா சங்கர், தனது முதல் பெண் குழந்தைக்குத் துணையாக ஒரு ஆண் குழந்தையை தத்தெடுத்திருக்கிறார். இவரது மகன் திரு வினோத் தனது முதல் ஆண் குழந்தைக்குத் துணையாக ஒரு பெண் குழந்தையை தத்தெடுத்திருக்கிறார். விமலா விட்டல் சொன்னார்...

தத்தெடுக்க உயர்ந்த உள்ளமும் பரந்த மனதும், மன உறுதியும் மிகவும் அவசியம். தத்தெடுப்பது ஒரு நல்லெண்ணச் செயல். ஒரு கருணை செயல் அல்ல, ஆனால் தத்தெடுக்க, சாதி மதம் என்ற குறுகிய வட்டத்தைச் சார்ந்த எண்ணங்களை ஒருவர் கடந்திருக்க வேண்டும்.

என் மகள், ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள், அந்தப் பெண்ணிற்கு நான்கு வயதாகும் போதுதான் ஒரு குழந்தையை தத்தெடுக்கப் போவதாகக் கூறினாள். முதலில் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. காரணம் அவர்கள் மனதளவில் ஒரு குழந்தையை தன் குழந்தையாக ஏற்றுக் கொள்வார்களா என்பது தான். ஆனால் இந்தக் கால மனிதர்களாயிற்றே. மன உறுதியும், தைரியமும் அவர்களுக்கு நிறையவே இருந்தது. நாங்கள் அனைவரும் அந்த ஆண் குழந்தையை எடுத்துக் கொண்டு முதலில் கோவிலுக்குச் சென்றோம். கடவுளை வணங்கி ஆசீர்வாதம் பெற்று வீட்டிற்கு அழைத்து வந்தோம்.

என் மகனும், மருமகளும் தனது முதல் ஆண் குழந்தைக்குப் பிறகு ஒரு பெண் குழந்தையை தத்தெடுத்தார்கள். இறைவன் அருளால் நம் வாழ்வில் ஒரு குழந்தைக்கு நல்ல வாழ்வு கொடுக்க முடிகிறதே என்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

என் மகள் வித்யா இது போன்ற பல பெற்றோர்களுடன் இணைந்து சங்கம் நடத்தி வருகிறாள்.

நாம் எந்த வயதுக் குழந்தையை வேண்டுமானாலும் தத்தெடுக்கலாம். நம் சமுதாயத்தில் நாற்பது வயதைத் தாண்டியவர்கள் கூட ஒரு வயதுக் குழந்தையைத்தான் தத்தெடுக்க நினைக்கிறார்கள். ஏனென்றால் அந்தக் குழந்தைக்கு புத்தி தெரிய ஆரம்பிக்கும்போது தங்களை பெற்றோராக ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை. ஆனால் அந்தக் குழந்தை வளரும் போது பெற்றோர் வயோதிகம் அடைகிறார்கள். இந்த நிலையில் அந்தக் குழந்தைக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க முடியுமா? அது மட்டுமன்றி அந்தக் குழந்தை தன்னை ஒத்தவர்களின் பெற்றோரையும் தன் பெற்றோரையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது சந்தேகங்கள் பல எழும்.

பெற்றோர்களின் விவரத்தைப் பற்றி குழந்தை கேட்கும்போது சொல்லத் தயங்கக் கூடாது. தத்தெடுத்த பெற்றோரின் விவரங்களும், தத்துக் கொடுத்தவர்களின் விவரங்களும் சட்டப்படி நீதி மன்றங்களில் அந்தரங்கமாக Seal வைத்து விடுவார்கள். அதே சமயம் குழந்தை வளரும்போது பல கேள்விகள் கேட்கும். பக்குவமாக எடுத்துச் சொல்ல வேண்டும். மூன்று அல்லது நான்கு வயதிலேயே புரியும் அளவிற்கு தத்தெடுத்த விவரத்தைக் கூற வேண்டும். எக்காரணம் கொண்டும் தத்தெடுத்த விவரத்தை மறைக்கக் கூடாது. மூன்றாம் மனிதர் மூலம் ஒரு குழந்தை தன் பெற்றோர் தத்துப் பெற்றோர் என்று அறிவது ஆபத்தானது

—அபர்ணா



# ஜன்னல்

*பெண்களின் விழிப்புணர்ச்சி நம் நாட்டில் எத்தனை சதம் முன்னேறியுள்ளது?*

**—முருகேசன், தேனி.**

சுதந்திர இந்தியாவின் வயது இன்று 50. பெண்களின் விழிப்புணர்ச்சி சதவீதம் 50க்கு மேல் தாண்டவில்லை என்று நினைக்கிறேன்.

★ *சாதாரணமாக பெண்களுக்கு ஆண்கள் மீது இருக்கும் நம்பிக்கை போல், ஆண்களுக்கு பெண்கள் மீது இருப்பதில்லையே? ஏன்?*

**—எஸ். ராஜகோபால், திருச்சி - 16.**

என்றுமே ஆண்களுக்கு பெண்களின் சம்பாத்தியத்திலும், உழைப்பிலும்தான் நம்பிக்கை அதிகம்.

*கிழவியின் சிரிப்பு - குழந்தையின் சிரிப்பு. ஒப்பிடுக:*

**—பி. கோவிந்தசாமி, ஊத்தங்கரை.**

முன்னது - முதிர்ந்த அனுபவ சிரிப்பு.

பின்னது - மொட்டு மடல் அவிழும் சிரிப்பு.

*ஒவ்வொரு ஆணின் முன்னேற்றத்தின் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்ற உண்மையை சில ஆண்கள் மறுக்கிறார்களே?*

**—வேடபட்டி கற்குவேல், விளாத்திகுளம்.**

அந்த சில ஆண்களிடம் குடிகொண்டுள்ள அகம்பாவம், அகங்காரம் அறியாமை இவைதான் காரணம்.

*காதலித்து மணந்த தம்பதியினரிடத்தில்தான் ஒற்றுமையின்மையும், குடும்பப் பூசலும் தோன்றுகிறதே. என்ன காரணம்?*

**—ஜி.ஏ. வேளா, சென்னை - 15.**

ஆசை அறுபது நாள். மோகம் முப்பது நாள். அதனால் காதலும் கசந்து விடுகிறதோ?

*விபச்சாரம் செய்த பெண்ணுக்கு தண்டனை கொடுப்பது போல, ஆண்களுக்கும் தண்டனை கொடுக்கும் சட்டம் கொண்டு வந்தால் விபச்சாரத்தைத் தடுக்க முடியுமா?*

**—ச. லட்சுமி, கரூர்.**

தண்டனை இருவருக்குமே கிடைத்து விடுகிறதே. அதாவது 'எய்ட்ஸ்' என்ற நோயைக் குறிப்பிடுகிறேன்.

*பெண்களுக்கு அழகு 'வாழ்க்கையிலா'? 'அலங்காரத்திலா'?*

பெண்களின் அழகு அடக்கத்தில்.

*ஓரளவு வசதியுள்ள முதியவர்கள் கூட, 'முதியோர் இல்லம்' சென்று விட விழைகிறார்களே. ஏன்?*

**—என்.கே. ஈசுவரி, பெங்களூர்.**

இளையவர்களின் அன்பான அரவணைப்பு கிடைக்காமல் போவதனால்தான்.

*மனைவியை வேலைக்கு அனுப்பிவிட்டு அவள் சம்பளத்தில் உடம்பை வளர்த்துக் கொண்டு, அவளைஅடிமையாக நடத்தி ஊர் சுற்றித் திரிபவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

**—அ.சு. கிருஷ்ணன், சென்னை - 39.**

'கையாலாகாதவர்கள்'.

*கோவிலுக்குச் செல்லாமல் வீட்டிலேயே கடவுளைக் கும்பிடுகிறேன். நான் இவ்வாறு செய்வது சரிதானா? என் பிரார்த்தனையை கடவுள் ஏற்றுக் கொள்வாரா?*

கடவுள் இல்லாத இடமேயில்லை. உங்களுக்கு உள்ளேயே இருக்கும் கடவுள், எப்படி பிரார்த்தனையை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பார்?

*ஆன்மீகத்தில் அதிக நாட்டம் கொண்டவர்கள் ஆண்களா? பெண்களா?*

**—கே.ஆர். உதயகுமார், சென்னை - 1.**

ஆன்மீகத்தில் இருவருக்குமே நாட்டம் இருந்தாலும், வெளிப்படையாகத் தெரிவது ஆண்களிடத்தில்தான்.

*ஒரு ஆணைக் காட்டிலும், பெண் எப்போது பலசாலியாகிறாள்?*

குழந்தையைப் பெற்றெடுக்கும் போது.

*மனைவி அமைவது மட்டும்தான் இறைவன் கொடுத்த வரமா?*

**—ஆர். வசந்தகுமாரி, சென்னை - 1.**

ஏன்? கணவன் அமைவது இறைவன் வரமில்லையா என்ன?

*ஒரு நல்ல கணவனை எப்படி அறிந்து கொள்ளலாம்?*

உண்மையாகவே மனைவியின் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும்போது.

*ஒரு பெண் எந்த நேரத்தில் அதிக பெருமிதம் கொள்வாள்?*

'தாய்மை' அடையும் போது.

*பணத்தின் மீது வைக்கும் மதிப்பை மனிதனின் குணத்தின் மீது வைப்பதில்லையே ஏன்?*

**—எம்.எம். ஆனந்தன், வந்தவாசி.**

குணத்தின் அருமை பணத்துக்கு எங்கே தெரியப் போகிறது.

*இக்காலப் பிள்ளைகள் பெற்றோர்களை மதிப்பது இல்லையே?*

**—பி. கோவிந்தசாமி, ஊத்தங்கரை.**

இக்காலப் பெற்றோர்களும், பிள்ளைகளின் மனத்தை அறிந்து புரிந்து கொண்டு அவர்களை அன்போடு வழி நடத்திச் செல்ல வேண்டும்.

*ஒரு ஆண் தவறு செய்தால் மன்னித்து விடும் இந்த சமுதாயம் ஒரு பெண் தவறு செய்யும்போது மன்னிப்பதில்லையே ஏன்?*

தவறு செய்பவர்கள் தண்டனை பெற்றே ஆகவேண்டும். அது ஆணானாலும் சரி. பெண்ணானாலும் சரி.

*கர்வம் - அகங்காரம். இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?*

**—ஜி.ஏ. வேளா, சென்னை - 15.**

சாதனை செய்ததினால் வருவது - கர்வம்.

முட்டாள்தனத்தினால் வருவது - அகங்காரம்.

*பெண்களின் முன்னேற்றத்தை ஆண்களால் ஒப்புக் கொள்ள முடியவில்லையே ஏன்?*

**—என். கலா, பாண்டிச்சேரி.**

தாழ்வு மனப்பான்மைதான் காரணம்.

★ *குடும்பம் என்ற கூட்டிற்குள் வாழும் கணவன், மனைவி என்ற பறவைகள் எப்படி வாழ்ந்தால் வாழ்க்கை கடினமின்றி வழி நடத்திச் செல்லலாம்?*

**—கவிதமிழ்க் கதிர், வேப்பேரி.**

கணவன், மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொண்டு, ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து, கருத்து ஒருமித்து வாழ்க்கை நடத்தினால் நல்வாழ்வு அமையும்.

★ *மனித வாழ்க்கைக்குத் தேவையானது அன்பா? அறிவா?*

**—இரா. மீனாட்சி, சென்னை - 7.**

அறிவாற்றலுடன் கூடிய 'அன்பு'

*ஒருவனது வாழ்க்கை வளமாக வழிகாட்டியாக விளங்குவது தன்னம்பிக்கையா? விடா முயற்சியா?*

**—வெண்முகில் வேந்தன், சென்னை.**

விடாமுயற்சியுடன் கூடிய "தன்னம்பிக்கை".

*பதில்கள்:* ***திருமதி. கலோச்சனா ராமசேஷன், துணைத் தலைவி,*** *எக்ஸ்னோரா இண்டர்நேஷனல்.*

★ **பரிசுக்குரிய கேள்விகள்.**

# கடமை

"ஐயா... வணக்கம்ங்க..." சிரித்துக் கொண்டு, எதிரில் வந்து நின்று, பணிவாய் கும்பிட்டவனை ராமகிருஷ்ணன் ஏறிட்டுப் பார்த்தார். தன் எதிரில் நிற்கும் செந்திலை... அடையாளம் கண்டுகொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை!

"நாளைக்கு 'நண்பர்கள் நற்பணி மன்றம்' துவங்கறோம் சார். அதை நீங்கதான் வந்து திறந்து வைக்கனும். நான் அந்த மன்றத்துல செயலாளராய் பொறுப்பேத்திருக்கேன்..."

சம்மதித்தார்.

அவரிடம் ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்திருக்கிறார்கள். பெரும்பாலும் அவர் மாணவர்கள் அனைவரும் நல்லபடியாய் இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கும் போது மனசுக்கு இதமாய், சந்தோஷமாயிருக்கும். அதே சமயம், வாழ்க்கை பிடிபடாமல் எந்த வேலையிலும் உட்காராமல் அலைக்கழியும் பேர்களைப் பார்க்கும் போது மனசுக்குள் ஊமை முள் தைத்தது போல் வலிக்கும். கடவுளே... சீக்கிரம் இவர்களுக்கு ஒரு நல்ல வழி பிறக்காதா என்ற பிரார்த்தனை எழும். செந்திலைப் பார்க்கும் போது சந்தோஷம், வருத்தம்... இரண்டு உணர்வும் சேர்ந்து எழுந்தது அவருள்.

மறு நாள் ஒன்பதே காலுக்கே, ஆட்டோவில் வந்து இறங்கி விட்டான் செந்தில். பளிச்சென்று குளித்து, சலவை டிரஸ் போட்டு வந்திருந்தான். அக்குளில், கறுப்பு வண்ண தோல்பை ஒன்றை இடுக்கி வந்திருந்தவன். பரபரப்பாயிருந்தான். "ஐயா... ரெடியாயிட்டீங்களா?..." என்று வேகமாக கேட்டுக் கொண்டு வந்தபோது, ராமகிருஷ்ணனை வீட்டுக்குள் பார்க்க முடியவில்லை. "பின்னாடி சாக்கடை வழிக்கிறார்..." என்றார் அவரது மகன்.

"சாக்கடை... வழிக்கறாரா..."

செந்தில் வீட்டின் பின் பக்கம் போய் பார்க்க, ராமகிருஷ்ணன் இருந்த கோலம்... அவனை சற்று எரிச்சல் படுத்தியது. வெற்று உடம்புடன் தலையில் ஒரு முண்டாக கட்டிக் கொண்டு, கையில் இரும்பு குச்சி வைத்து, பொறுமையாய் சாககடை குத்திக் கொண்டிருந்தார். செந்திலை பார்த்ததும் சிரித்தார். "பத்துக்கு தானே ஃபங்ஷன். ஆட்டோலதானே போப் போறது. இங்கர்ந்து ஒன்பது அம்பதுக்கு கிளம்பினால் போதுமே..."

காபி குடித்துவிட்டு, பேப்பரை கையில் எடுத்தபோது, ராமகிருஷ்ணன் சாக்கடை சுத்தம் பண்ணிவிட்டு வீட்டுக்குள் வந்தார். குளித்து விட்டு வர, சின்னச் சின்ன வேலைகள் அவருக்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்தன...

"அம்மா மரகதம்... மஞ்சப் பையில ரேஷன் கார்டும் போட்டுக் கொடு. வர்ரப்ப... சர்க்கரை போடறானானு பார்த்துடறேன்..."

"கல்யாணம் மீட்டர் ரீடிங் குறிச்சிருக்கேன். நூத்தறுபது ரூபாயும், நாற்பது காக கொடு கட்டிடறேன்"

"திவ்யாவுக்கு எக்ஸாம் ஃபீஸ் கட்டணும். இன்னைக்கு கட்டிடறேன்..."

"அந்த வாஷ்பேஸின் பைப்பை திறக்க முடியல. பிளம்பரைத்தான கூப்பிடணும். ஆபீஸ் போற வழியில்... கடையில் சொல்லிரு..."

"சத்யா...! அந்த ஐயன் பாக்ஸைத் தொடாதே. தாத்தா உனக்கு யூனிஃபார்ம் அழகாய் தேய்ச்சு வச்சிருக்கேன் பார். அதை எடுத்துக்க..."

உத்தரவுகள் கொடுப்பதும், வேலைகளைக் கேட்டு வாங்குவதுமாய் உள்ளிருந்து அவர் குரல் கேட்க, கேட்க... செந்திலுக்கு மலைப்பாயிருந்தது. 'சார் இவ்வளவு வேலைகளை செய்யிறாரா...! இந்த வயதிலும் இத்தனை விசாலமாய் வியாபித்து இயங்க முடிகிறதா?... விழி அகன்று வியந்தான்.

"என்ன செந்தில்... புறப்படலாமா?..."



ராமகிருஷ்ணன் தயாராகி வந்து நின்றபோது, மணி ஒன்பதே முக்கால். வந்து ஆட்டோவில் உட்கார்ந்தார்கள்.

"ஸாரிப்பா... என்னால் இந்த டயத்துக்குதான் புறப்பட முடியுது. வீட்டு வேலைகளை அப்படியப்படியே போட்டுட்டு வரமுடியலை. அப்படி வந்தாலும் மனசு அடிச்சிக்கும்..."

"உங்களுக்கு வீடு ரொம்ப முக்கியமா போச்சு சார்..."

செந்தில் குரலில் என்ன விதமான உணர்ச்சி பிரதிபலிக்கிறது என்பதை ராமகிருஷ்ணன் கண்டு கொண்டார். புன்னகைத்தார்... "வீடுங்கறது என்ன? நாட்டின் ஒரு பகுதி. ஊரில் ஒரு அங்கம். தெருவில் ஒரு பிரிவு. வீடு நல்லாயிருந்தால் நாடு நல்லாருக்கும். தன்னையும் தன் வீட்டையும் சரியா வச்சிக்க முடியாதவனால் நாட்டுக்கு பெருசா எதுவும் செஞ்சுர முடியாதுங்கறது என் கணிப்பு. ஒருவனுடைய சேவை, அவன் வீட்டுலருந்து ஆரம்பிக்கணும். தன்னை சுற்றியுள்ள மனிதர்களை கவனிச்சுட்டுதான் அவன் மற்றவர்களைக் கவனிக்க போகணும். வீட்டில் எதையும் கவனிக்காமல் குப்பையாய் விட்டுட்டு, பொதுச் சேவை செய்யப் போனால்... அந்த சேவையில் முழுமையிருக்காதுப்பா. அது தன் உடம்புல தொற்று நோயை வச்சிகிட்டு, எதிராளிக்கு ஆரோக்கியத்தைப் பத்தி அறிவுரை சொல்ற மாதிரி. சரிதானே..."

செந்தில் சங்கடமாய் புன்னகைத்தான்... வீட்டில், தனக்கான கடமைகளை மறுதலித்து விட்டு வந்திருந்த அவனுக்கு, ஆசிரியரின் பேச்சு ஊசியாய் குத்தியது. அவர் வார்த்தையிலிருந்த நியாயத்தை யோசித்தான். நிஜம் தான், இப்போது, அவர் திருப்தியாய் புறப்பட்டு வருகிறமாதிரி, என்னால் வரமுடிந்திருக்கிறதா? ஓடிஓடி வேலைகள் செய்தாலும் வீட்டு நினைப்பு கொக்கியாய் நெஞ்சில் சிக்கியிருக்கிறதே...

வீட்டில் என்ன நடக்கிறது என்று கூட தெரியாமல்... வெளி சேவைகளில் அப்படி என்ன சாதித்துவிட்டேன் நான்... 'உடம்பு சௌகரியமில்லாமல் கிடக்கும் அப்பாவுக்கு ஒரு மாத்திரை வாங்கி கொடுத்திருக்கிறேனா?... பிள்ளைகள் எந்த வகுப்பில் படிக்கிறார்கள் என்று தெரியுமா எனக்கு... மனைவிக்கு அனுசரணையாய் ஒரு காரியமாவது செய்ததுண்டா... முதலில் தன்னை நம்பியிருக்கும் குடும்பத்தாருக்கு, தான் செய்ய வேண்டிய கடமையை ஆற்ற வேண்டாமா நான்?...

"பொது காரியங்கள்ல இறங்கறவனுக்கு, மன நிம்மதி இருக்கணும் முதல்ல, அப்ப தான், செய்யற சேவையிலும் ஈடுபாடு வரும் எதிலிருந்தோ தப்பிச்சுக்கறதுக்காக, சமூக சேவைக்கு ஓடி வரக்கூடாது. அப்படி வந்தால்... பணத்துக்காக வர்ரவர்களுக்கும், இவர்களுக்கும் அதிக வித்தியாசமிருக்காது."

செந்தில் உணர்ந்து கொண்டவனாய் தலையசைத்தான். ராம கிருஷ்ணன் அவன் கையை அழுத்தினார்...

"உங்கப்பா தினமும் என்னை பார்ப்பார். வீட்டை நீ ரொம்ப அலட்சியப்படுத்தறேன்னு வருந்துவார். ஊருக்கெல்லாம் நல்லவனாயிருந்து வீட்டுக்கு கெட்டவனாயிருக்கறது நல்லதில்லே... வீடுதான் ஒரு மனுஷனின் ஊற்றுக் கண். அதுதான் அவனுக்கு ஆனந்த பூந்தோப்பு. அங்கதான் அவன் வாழ்க்கை மையம் இருக்கு. அதையும் கொஞ்சம் சீரா வச்சிக்கணும். அப்பா வியாதியில இருக்க, ஊருக்கு வைத்தியம் பார்க்க ஓடறது... மாதா வயிறு எரிய மகேசன் பூஜை பண்றாப்ல. இல்லையா? பொதுக்காரியம்செய். தடுக்கலை. அதே சமயம், வீட்டையும் கொஞ்சம் கவனி..." சொல்லச் சொல்ல, இறங்க வேண்டிய இடம் வந்தது இறங்கினார்கள்.


செந்தில், துவக்க விழாவை வேகமாய் நடத்தத் துவங்கினான். வேலையை முடித்து விட்டு அவசரமாக அவன் வீட்டுக்கு போக வேண்டியிருந்தது. வீட்டில், அவனுக்காக பல வேலைகள் இருந்தன.

—படுதலம் சுகுமாரன்

*அரிசி மாவு 3 கப், பொட்டு கடலை மாவு 1 கப் சேர்த்து தேன் குழல் தயார் செய்து பாருங்கள். புதுவிதமாக இருக்கும்.*

*—என். ஆர். சித்ரா*

# சுவாமி விபுலானந்தரின் தமிழ்த் தொண்டு




"கடவுள் என் முன் தோன்றினால், எனக்கு முத்தி தரும்படி கேட்க மாட்டேன். முத்தி என்னளவில் நின்றுவிடும். அதிலும் பார்க்க எல்லோரும் இன்புறும்படி சேவை செய்வதானால், அதிலுள்ள இன்பமோ ஒப்பற்றது. ஆனபடியால், சேவை செய்ய வரம் தா! என்று இப்படிக் கேட்பேன்" - இவ்வாறு சொன்னவர் யார் என்று கேட்கிறீர்களா...? அவர்தான் 'யாழ்நூல்' என்னும் புகழ் நூல் தந்த விபுலானந்த அடிகளார்.

"அவர் ஒரு தத்துவ ஞானி, விவேகானந்தத்தின் விழுமிய தோற்றம். அவர் ஒரு இசை அறிஞர், நவீனத்துவம் உணர்ந்த இசை நூல் வல்லவன். அவர் ஒரு கல்வி அறிவாளன், தமிழை அறிவியல் மொழியாக்க முயன்று முனைந்து முன்னுதாரணமாய் நின்ற சான்றோன். அவர் ஒரு தமிழியலாளன். தமிழைச் சகல தரத்திலும் மேலோங்க வைப்பதை வாழ்வெனக் கொண்ட பேரறிஞர். அவர் ஒரு மாமனிதன். இரக்கமும் எளிமையும் மானுட நேயமும் கொண்ட ஆனால் - சுய கௌரவத்தால் மனிதன் உயர்வடைவான் என்று வாழ்ந்த உன்னதம்" - இப்படி விபுலானந்தரை நம் மனக்கண் முன் நிறுத்துகிறார் எழுத்தாளர் **செ. யோகநாதன்** (நூல்:- இன்றும் கேட்கும் குரல்: விபுலானந்தர்).

காரைத்தீவில் உள்ள (இலங்கை) காரேறுமூதூரில் இந்தச் சாதனைச் சரித்திரம் 27.3.1892-இல் பிறந்தது. மயில்வாகனன் என்னும் இனிய பெயர் இவருக்கு இயற்பெயர். நல்லரத்தினம், சாமித்தம்பியார், வசந்தராசப்பிள்ளை, சிவகுருநாதப்பிள்ளை, வைத்தியலிங்க தேசிகர்... இவர்கள் எல்லாரும் விபுலானந்த அடிகள் என்னும் விருட்சத்துக்கு இளமையில் அறிவு நீர் வார்த்தவர்கள். பன்னிரண்டு வயதிற்குள்ளேயே நன்நூல், திருக்குறள், சூடாமணி, பாரதம் ஆகியவற்றை விபுலானந்தர் கற்றுத் தேர்ந்தார். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம், ஆறுமுக நாவலரின் அருந்தமிழ் நூல்களில் மனசை இறக்கி வைத்து, மதியின்பம் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தினர் நடத்திய தேர்வு, அரசினர் பொறியியல் கல்லூரி நடத்திய தேர்வு, மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய, 'பண்டித'த் தேர்வு. இலண்டன் பல்கலைக் கழகம் நடத்திய பி.எஸ்ஸி தேர்வு ஆகியவற்றில் தம் திறமைச் சுவடுகளைப் பதித்தார்.

தொண்டுகளால் புகழ் பெற்ற இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர் சர்வானந்தர். நாட்டுத் தொண்டு, நல்ல பணிகள், ஆகியவற்றில் நாட்டம் செலுத்திய சுவாமி சர்வானந்தரை, இலங்கையில் (1916-இல்) சந்தித்துப் பேசும் வாய்ப்பு விபுலானந்தருக்குக் கிடைத்தது. அந்தச் சந்திப்பு, அடிகளார் வாழ்வில் ஒரு திருப்பு முனையையே ஏற்படுத்தியது என்றால் மிகையில்லை. தமிழுக்கும், தமிழ்ச் சமயத்துக்கும் தொண்டு புரிய அந்தத் தென்றல் நுழைந்துவர, தன் விசால சாளரங்களைத் திறந்து வைத்தது இராமகிருஷ்ண மடம். 1924-ஆம் ஆண்டு, சித்திராப் பௌர்ணமி நாளில், அடிகளாருக்கு 'சுவாமி விபுலானந்தர்' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தார் சுவாமி சிவானந்தர்.

**"மக்களுக்குத் தொண்டு செய்வதே உன்னதமான மதம்"** என்னும் கருத்தை அடிகளார், தம் சொல்லிலும் செயலிலும் எழுத்திலும் வலியுறுத்தி மகிழ்ந்தார்.



அடிகளார், பல துறைகளிலும் எழுதித் தன் எழுத்து வித்தகத்தைப் பொறித்துள்ளார். இராமகிருஷ்ண மடத்திற்காகக் கதிர்காமம் முதல் கயிலாயம் வரை சென்று, எழுத்தாலும் பேச்சாலும் சமரச சன்மார்க்கம் பரப்பினார். மதுரைத் தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், கொழும்பு விவேகானந்த சபை... இவையெல்லாம் அவரது உழைப்பாலும், ஊக்குவிப்பாலும் உன்னதம் பெற்றன.

இலங்கையில் இனிய தமிழை வளர்க்க, கழகம் ஒன்று காண விரும்பினார் விபுலானந்தர். எனவே, தம் காலத்தில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களுடன் தொடர்பு கொண்டார். விளைவு 1922-ஆம் ஆண்டு 'ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்' தோற்றம். இந்தச் சங்கத்தில்தான், புகழ் பெற்ற ஈழத் தமிழறிஞர் பாவலர் துரையப்பா பிள்ளை செயற்குழு உறுப்பினராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழுடன் ஆங்கிலம், வடமொழி, இலத்தீன், கிரேக்கம், வங்காளம், பாலி, அரபு, சிங்களம் ஆகியவற்றையும் கற்றுணர்ந்த விபுலானந்தர், மேனாட்டுக் காவியங்களையும் மொழி பெயர்த்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அவர் 'நாடகத் தமிழ்' பற்றிப் பேசிய சொற்பொழிவே பிறகு 'மதங்க சூளாமணி' என்ற நூலாக வெளிவந்தது. 1925-இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர் அவர்களுக்கு பொற்கிழி வழங்கிச் சிறப்பிக்க, தங்க விழாவொன்று எடுத்தனர். அவ்விழாவில் கலந்துகொண்டு, உரை நிகழ்த்தியதன் மூலம் பதிப்புத்துறை தொடர்பான அடிகளாரின் புலமை வெளிப்பட்டது.

சிதம்பரத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட பரிந்துரை செய்த அடிகளார், அதன் **முதல் தமிழ்ப் பேராசிரியராகவும்** பதவி ஏற்றுக் கொண்டார். பழந்தமிழர் கையாண்ட யாழ்களைப் பற்றிய ஆராய்ச்சியில் முற்றும் முழுதுமாகத் தம்மை ஈடுபடுத்த அடிகளார் எண்ணங் கொண்டார். அதற்குத் தமது பேராசிரியர் பதவி இடம் கொடுக்காததால், 1933-ஆம் ஆண்டில் தன் பதவியைத் துறந்தார்.

1947-ஆம் ஆண்டு, இந்திய நாட்டின் வரலாற்றில் மட்டும் முக்கியமான நாள் அல்ல; இசைத் தமிழ் வரலாற்றிலும் முக்கியமான ஒரு நாள். ஆம்; அந்த ஆண்டில்தான் 14 ஆண்டுகள் இடைவிடாது உழைத்து இயற்றிய 'யாழ் நூல்' வெளியிடப்பட்டது. திருக்கொள்ளம் புதூர்க் கோயிலில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில், 20/21.6.47 ஆகிய இரண்டு நாட்கள், வெளியீட்டு விழா மிகச் சிறப்புடன் நடைபெற்றது.

"உ.வே. சாமிநாதையர் சிலப்பதிகாரத்தை முதன் முறையாக அச்சிட்டது 1892-ஆம் ஆண்டிலாகும். அந்த ஆண்டில் யானும் பிறந்தேன் ஆதலினாலே, பள்ளியில் படிக்கும் காலத்திலே மூத்தோர் கையிலே அந்நூல் பிரதி இருக்கக் காண்பதும், என் கையினாலே அதைத் தீண்டுவதும் எனக்குப் பேருவகை தரும் செயல்களாய் இருந்தன என்று யாழ்நூல் பற்றியச் சிந்தனை தன் மனதில் தோன்றியதற்குரிய காரணத்தை கூறுகிறார் அடிகளார்.

"விஞ்ஞானம், கணிதம், சங்கத்தமிழ் - இவற்றையெல்லாம் அறிந்தவர்கள்தாம் இந்த ஆராய்ச்சியைச் செய்ய முடியும்!" என்று பாராட்டி உரைத்தார் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்.

இராமகிருஷ்ண மட வெளியீடுகளான 'ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம்', 'VEDANTA KESARI', 'PRABUDDHA BHARATHA' ஆகிய ஏடுகளுக்கும், கொழும்பு விவேகானந்த சபை வெளியிட்ட 'விவேகானந்' ஏட்டுக்கும் விபுலானந்தர் ஆசிரியராக இருந்து எழுத்துப் பணி ஆற்றினார்.

'தமிழ்ப் பொழில்', 'செந்தமிழ்', 'குமரன்', 'கலைமகள்', 'பஞ்சாமிர்தம்' 'MODERN REVIEW', 'CALCUTTA REVIEW' மற்றும் சென்னை அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பிரசுரங்கள், 'ஈழகேசரி', 'இந்து சாதனம்', 'YOUNG INDIA' ஆகிய ஏடுகளிலும் அவர் கட்டுரைகள் வெளிவந்து புகழ் பெற்றன.

அடிகளாரின் எழுத்து, அறிவும் ஆழமும் பெற்று அழகு சேர்த்த எழுத்தாகும். 'கலைமகள்' இதழில் 'சோழ மண்டலத் தமிழும் ஈழ மண்டலத் தமிழும்' என்ற இனிய கட்டுரையும், 'தமிழ் எழுத்துக் குறை' என்ற கட்டுரையும் சிறப்பாக வெளியிட்டார்.

ஈழத்துக் கவிதை வரலாற்றில், அடிகளாருக்குத் தனித்த இடம் உண்டு. "நீல வானிலே நிலவு வீசவே மாலை வேளையே மலைவு தீருவோம்" போன்ற இசைப்பாடல்களையும் அவர் புனைந்துள்ளார். தேவி வணக்கம், தேவபாணி, கோயில் மலர் மாலை, பெருந்தேவபாணி, போன்ற பல பாடல்களை அவர் எழுதியிருக்கின்றார். மற்ற கவிஞர்கள் படைத்த பாடல்களை சிறப்புற மொழிபெயர்த்தும், தமிழ் உலகுக்கு அறிமுகப் படுத்தியுள்ளார்.

கம்பர், வள்ளுவர், இளங்கோ அடிகளார் பாடல்

களில் இளம் பருவத்தில் இருந்தே அடிகளாருக்கு ஆர்வம். அந்த மூவரைத் தவிர, வங்கம் தந்த தங்கக் கவிஞராம் தாகூரின் கவிதைகளிலும் தனி ஈடுபாடு இருந்தது. 'கவி கிரேட்டர்' என்று தாகூரைக் கனிந்து உரைத்த அடிகள், அவர் யாத்த 85 பாடல்களை மொழிபெயர்த்து, அப்பாட்டுப் படையலுக்குப் 'பூஞ்சோலைக் காவலன்' என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

கிரேக்கக்கவிஞர் ஹோமரின் படைப்புகளாம் இலியட், ஒடிசி ஆகிய காவியங்களின் சில பகுதிகளை அடிகளார் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். 'மேற்றிசைச் செல்வம்' என்னும் தலைப்பில், அவர் படைத்த அறிவுப்பேழை, மொழி பெயர்ப்புக் கட்டுரைகள் பலவற்றைக் கொண்டதாகும்.

ஷேக்ஸ்பியரின் 'ஜூலியஸ் சீசர்' என்ற நாடகத்தில் ஒரு பகுதியை மொழி பெயர்த்ததுடன் ஷேக்ஸ்பியரைக் கம்பருடன் ஒப்பிட்டும் வியந்தார். "ஆங்கில மொழி, உலகில் வழங்கும் காலம் வரையில், அப் பெருங் கவியின் பெயர் நின்று நிலவும்" என்று விபுலானந்தர் புகழ்ந்துரைத்தார். கவிஞர் மில்டனின் 'சுவர்க்க நீக்கம்' (பேரடைஸ் லாஸ்ட்) என்னும் காவியத்தின் சில பகுதிகளையும் அவர் மொழி பெயர்த்தார்.

"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்னும் பாரதியின் மொழியைப் பற்றிக் கொண்ட அடிகளார், அறிவியலை அழகு தமிழில் அணிவகுக்கச் செய்திடப் பெரு நம்பிக்கை கொண்டார். அவருக்கு இருந்த அறிவியல் அறிவே, 'யாழ் நூலை' உருவாக்கவும் வழிவகுத்தது. அறிவியலை, ஆக்கபூர்வமாக தமிழில் செயல்படுத்த வேண்டும் என்றால், கலைச் சொற்களை உருவாக்க வேண்டுமென்று அறிஞர் துணையுடன் அவர் ஈடுபட்டார். அதன் விளைவு 'தமிழர் கல்விச் சங்கம்' என்னும் நல்லமைப்பு.

அறிவியலைத் தமிழில் எவ்வாறு எழுதலாம் என்பது குறித்தும், அடிகளார் ஒரு நூலைப் படைத்தார். அந்த நூலின் பெயர் 'விஞ்ஞான தீபம்'.

அடிகளாரின், அறிவியல் மொழிபெயர்ப்பு ஆற்றலுக்கு ஒரு சான்று:-

Oxides என்னும் வகுப்புப் பொருள்களைப் பொன்மதி (Gold Oxide), வெண்மதி (Silver Oxide), செம்மதி(Copper Oxide), என்று இவ்வாறு பெயரிட்டு ஆளுதல் எவ்வளவு அழகாக இருக்கின்றது..." இப்படிக் கூறுகிறார் விபுலானந்தர்.

1938-இல் 'கலைச் சொற்கள்' என்ற நூலை, 'சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்' வெளியிட்டது. கணிதம், வேதி நூல், மர நூல், விலங்கு நூல், வரலாறு, புவியியல் போன்ற தலைப்புகளில் அமைந்த இக்கலைச் சொல்லாக்க அகராதியின் பொதுத் தலைவராகவும், வேதி நூல் தலைவராகவும் அடிகள் பணிபுரிந்தார். பத்தாயிரம் சொற்கள், இந்நூலில் மொழி பெயர்க்கப்பட்டு அணிவகுக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளர்களுக்குள் சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்த அடிகளார், 1942-இல் யாழ்ப்பாணத்து 'மறுமலர்ச்சிச் சங்கத்தில் பேசும் போது, எழுத்தாளர்களை நோக்கி இப்படிக் கூறினார்.

"நீங்கள் உங்கள் மனோதர்மத்தின் படி நன்றாக எழுதுங்கள்; புதியன புதியனவாக எழுதித் தமிழை வளருங்கள். ஆனால், மற்றவர்களைக் கண்டிக்கத் துணியாதீர்கள். சொந்த மண் மணம் வீசும் சிறுகதைகளையும் நாவல்களையும் அதிகமாக எழுதுங்கள். எழுத்தில் எப்போதும் சொற்செட்டும், இலக்கணமும், கருத்தாழமும் இருக்க வேண்டியது அவசியம்."

வாழ்நாள் எல்லாம் தமிழுக்கும், தமிழிசைக்கும் தொண்டு செய்த அந்தப் புயல், 19.7.47-இல் ஓய்ந்தது. 21.7.47-ஆம் நாள் சிவானந்த வித்தியாலயக் கல்லறையில் அடிகளார் உடல் அடக்கம் செய்யப்பெற்றது. அந்தக் கல்லறையில், சில சொல் மலர்கள் என்றைக்கும் வாடாமல் பூத்திருக்கின்றன... எப்படி?

*"வெள்ளை நிற மல்லிகையோ*
*வேறு எந்த மாமலரோ*
*வள்ளல் அடி இணைக்கு*
*வாய்த்த மலர் எதுவோ?*
*வெள்ளை நிறப் பூவும் அல்ல;*
*வேறு எந்த மலரும் அல்ல;*
*உள்ளக் கமலமடி*
*உத்தமனார் வேண்டுவது"*

-இந்தச் சொல் மாலையைப் புனைந்தவர் யார் என்கிறீர்களா...? அவரும் விபுலானந்த அடிகளே.

**—குடந்தை பாலு**





# ஆத்ம திருப்தி

### திருமதி உஷா ரகுநாதன்

பிரதி பலன் எதிர்பாராது செய்கின்ற எந்த காரியமும் மனதுக்கு திருப்தி தரும. பள்ளி செல்லும் குழந்தைகள் சிலருக்கு பண உதவி செய்து வருகிறேன். கஷ்டம் என என்னிடம் வருபவர்களுக்கு எந்தவித மறுப்புமின்றி என்னால் முடிந்த அளவு உதவிகள் செய்ய கடவுள் எனக்கு வழிவகுத்து கொடுத்துள்ளதை நினைக்கும் போது ஆத்ம திருப்தி ஏற்படுகிறது. பணத்தால்தான் சமூக சேவை செய்ய முடியும் என்பது அல்ல. நம்மோடு பழகுபவர்கள் கஷ்டத்தில் இருக்கும் போது, அவர்களுடன் ஆதரவாக, அன்பாக பேசி அவர்களை சந்தோஷப்படுத்தலாம். அன்பினால் எதுவும் சாதிக்க முடியும். சிரமப்படுபவர்களுக்கு சின்னசின்ன உதவிகளை செய்யலாம்.

### திருமதி புவனா முரளி

கண்களில் பீதியுடன் மிரள மிரள விழித்தபடி, இந்தியில் பேசியபடி திருநின்றவூர் வீதிகளில் ஒரு சிறுமி. தொடர்ந்து பல நாட்களாய் பட்டினி. தெருக்களில் சுற்றியபடி இருந்ததால் உடலெங்கும் தலையெங்கும் புண்கள். நல்ல மனம் படைத்த சிலர் அக்கறையுடன் விசாரித்ததில் அவள் சொன்னதிலிருந்து புரிந்து கொண்டது... பம்பாய் இரயில் நிலையத்தில் அவளது சொந்தப் பெற்றோர்களாலேயே யாருமில்லாமல் விடப்பட்ட இருந்த நிலையில், 'ஏதோ ஆபத்து தனக்கு' என்ற உள்ளுணர்வு உந்த டக்கென்று ஏதோ ஒரு ரயிலில் ஏறி, தப்பித்து பல ரயில்கள் ஏறி இறங்கி இறுதியாக திருநின்றவூர் வீதிகளில்... சிறுமியின் பெயர் உஷா. மூன்றரை வயதான இன்னொரு இளம் பிஞ்சு. திருவள்ளூர் இரயில் நிலையம் அருகில் வக்கிர மனம் படைத்த ஒருவனால் பாலியல் வன்முறைக்கு ஆளாகிக் கொண்டிருந்த நிலையில் பீதியுடன் அம்மா... என்று அலற... அக்கூக்குரல் அருகே உள்ளவர்க்காரர்களின் காதுகளில் மோதி கூட்டம் விரைந்துவர... கொடியவன் தப்பியோடி விட்டான். மனமெங்கும் பயம்... உடலெங்கும் காயங்கள்... தனக்கு நேர இருந்த கொடுமை என்ன... ஏன் அப்படி நிகழ்ந்தது என்று விளங்காத நிலையில் பிரமை பிடித்தாற் போன்றிருந்த அச் சிறுமியின் பெயர் செல்வி.

கருணை உள்ளமும், சமுதாயப் பொறுப்பும் உள்ள பொதுமக்கள் மேற் கூறிய இரு சந்தர்ப்பங்களிலும் சம்பந்தப்பட்ட சிறுமிகளை நான் தொடர்பு கொண்டுள்ள **'சேவாலயா'** என்றும் நிறுவனம் நடத்தி வரும் அனாதை இல்லத்திற்கு அழைத்து வந்தனர். உடற்காயங்களுக்கு மருந்திட்டு, அன்பான அரவணைப்பாலும், ஆதரவான வார்த்தைகளாலும் மனக்காயத்தை மறக்கடித்து, மற்ற பிள்ளைகளுடன் கலந்து பேசி சிரித்து விளையாடி பழகுகின்ற சூழ்நிலையில், பாதுகாப்பான இடத்தில் இருக்கிறோம் என்ற பத்திர உணர்வுடன் சேவாலயா நடத்தி வரும் பள்ளியில் படிக்கின்றனர் இருவரும்.

### திருமதி கீதா ரவி

நாங்கள் எங்கள் இல்லத்திலேயே கடந்த ஒரு வருடமாக தொடர்ந்து ஒவ்வொரு சனியன்றும் மாலை 1 1/2 மணி நேரம் கூட்டுப் பிரார்த்தனை என்ற அமைப்பை ஏற்படுத்தி உள்ளோம். இதில் பெரியவர் முதல் சிறியவர்கள் வரை பங்கு பெறச் செய்து வருகிறோம்.

இந் நிகழ்ச்சியில் பக்திப் பாடல்கள், தியானம், ஸ்லோகம் சொல்லிக் கொடுத்து முதல் சிறந்த நீதிக் கதைகள், நமது கலாச்சாரம், பண்பாடு பொது அறிவுச் செய்திகள் முதலியவற்றை சிறுவர்களுக்கு எளிதில் மனதில் பதியும்படி செய்துவருகிறேன்.

இதன் மூலமாக சில இளைய தலைமுறையினர் நல்வழிப் பாதையில் சென்று தங்கள் ஆற்றலை சிறந்த வழியில் பயன் படுத்தினால் அதுவே எனக்கு ஆத்ம திருப்தியும் மகிழ்ச்சியையும் கொடுப்பதாக அமையும்.

பேட்டி: [illegible]

# நிஷாவின் ஓவியங்கள்

சமீபத்தில் மதுரை பாண்டியன் ஹோட்டலில் 'EMBRYONIC EMOTIONS' என்ற தலைப்பில் நடைபெற்ற வித்தியாசமான ஓவிய கண்காட்சியை காணச் சென்றிருந்தோம். உயிரோட்டமுள்ள ஓவியங்களை வரைந்திருந்த நிஷாவை சந்தித்து பேசினோம்...







- நிலக்கடலையில் வைட்டமின் 'இ' கணிசமான அளவு உள்ளதால், இதை தாராளமாக சாப்பிட்டு வர இருதயம் பலப்படும். இரத்த அழுத்த நோய் ஏற்படாது.
- கர்ப்பமாக இருக்கும் பெண்கள் அடிக்கடி காபி குடித்தால் கர்ப்ப சிதைவு ஏற்பட அதிக வாய்ப் புள்ளது என அமெரிக்காவிலுள்ள மகப்பேறு ஆராய்ச்சி மையத்தில் கண்டுபிடித்து உள்ளார்கள்.
- பப்பாளிப் பழத்தை பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் குடற் புழுக்களை வெளியேற்றும். உடல் நலம் வலுப் பெறும்.
- கோடையில் உடல் குளிர்ச்சிக்கு தயிர் சாதத்துடன், நான்கைந்து சின்ன வெங்காயத்தையும் தோலுரித்து சாப்பிட்டு வருவது நல்லது.

—ரமா ராமநாதன்

**ஓவியம் வரையத் துவங்கியது எப்போது?**

''எல். கே. ஜி. படிக்கும் போதே வரையத் துவங்கி விட்டேன். முதல் வகுப்பு படிக்கும் போதே பல்கலைக் கழக போட்டியில் பரிசும் பெற்றேன்.

ஸ்கெட்ச் பென், கலர் பென்சில்களை வைத்து இயற்கை காட்சிகள், உருவங்களை வரைய ஆரம்பித்தேன். போஸ்டர் கலர் போடத் துவங்கினேன். பிறகு ஆயில் பெயின்டிங்கில் ஆர்வம் ஏற்பட்டு வரைந்து வருகிறேன்.

ப்ளஸ் டூ மாணவியான நான் எங்கள் ஓவிய ஆசிரியர் திரு. சந்தான கிருஷ்ணன் அவர்களிடம் முறைப்படி ஓவியம் கற்றேன். பிரபல ஓவியர் திரு. ரபீக் அவர்களிடம் பேப்பர் துண்டுகளை ஒட்டி ஓவியம் உருவாக்கும் 'கொலாஜஸ்' கலையை கற்றேன்''

**ஓவிய கலையில் நீங்கள் பெற்ற பாராட்டுகள்... பரிசுகள்...**


''பல ஓவிய போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளை... பாராட்டு சான்றிதழ்களை பெற்று இருக்கிறேன்.

பிரபல கிரிக்கெட் வீரர் கபில்தேவ் படத்தை கொலாஜஸ் முறையில் வரைந்து அவரிடம் காண்பித்தேன். என் ஓவிய திறமையை பாராட்டி கபில் என்னை வாழ்த்தி படத்தில் கையெழுத்து போட்டுத் தந்தார். அதனை பெருமையாக கருதுகிறேன்.

இந்த ஓவிய கண்காட்சியை திறந்துவைத்த நமது மாண்புமிகு முதல்வர் கலைஞரின் புதல்வர் திரு மு. க. அழகிரி அவர்கள் என்னை பாராட்டியதை பெருமையாக நினைக்கிறேன். ரோட்டரி சங்கம் சார்பிலும் எனக்கு பாராட்டு விழா நடந்தது. இந்த ஓவிய அரங்கில் இடம் பெற்ற எனது ஓவியங்களுக்கு பொருத்தமான தலைப்புகளை தந்துள்ளேன். ஒவ்வொரு ஓவியத்தை பலரும் குறிப்பிட்டு பாராட்டினார்கள்''

**உங்கள் ஓவிய திறமையை ஊக்குவித்தவர்கள் பற்றி...**

''தொழில் அதிபரான என் தந்தை திரு. சுந்தரகோபால், ஸ்ரீமுக வாசவி சேவை நிறுவனம் மூலமாக பல சமூக சேவைகளை செய்து வரும் என் தாய் திருமதி புஷ்பா, என் தம்பி நிக்கில் மூவரும் எனக்கு வரைவதற்கு முழு உற்சாகம் தந்து வருகிறார்கள்''



சமரச ஞானன் . சாந்த சொரூபன்; சீரடி போற்றும் சாயி தேவனே;
உயிர் நலம் காக்கும் உத்தமத் தொண்டர்; உள்ளம் நிறைந்தவர் சீரடித் தெய்வமே.

—நெல்லை அருள்மணி

# மயிலாப்பூர் ஷீர்டி சாயிபாபா கோயில்



ஸ்ரீநரசிம்ம சுவாமிஜி

வியாழக்கிழமை மாலை 6 மணி.

துவாரகாமாயி சன்னதியில் குர் ஆன்!

தியான மண்டபத்தில் சாயிபஜன்!

பிரதான சன்னதியில் சாயி சகஸ்ர நாமம்!

நிலைக் கண்ணாடி எதிரே பிரார்த்தனைக்காக ஏற்றப்பட்ட மெழுகுவர்த்திகள்!

இந்த இந்து, முஸ்லீம், கிருஸ்துவ மத ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் எங்கே கண்ணாரக் காணலாம் தெரியுமா? சென்னையில் மயிலாப்பூரில் இருக்கும் ஷிர்டி சாயிபாபா கோவிலில்தான்!

பல்லாண்டுகளாக தம் பக்தர்களுக்கு பேரருள் பாலித்து வரும் ஸ்ரீ ஷிர்டி சாயிபாபா எழுந்தருளியுள்ள மயிலை ஷிர்டி பாபா கோவிலின் விழாக்கால பூஜைகள் பற்றியும், வழிபாட்டு முறைகள் பற்றியும் சாயி பஜன் மண்டலியின் பிரதான அங்கத்தினர்களும் ஆல் இண்டியா சாயி சமாஜ் கமிட்டி அங்கத்தினர்களுமான திருமதி ராதா ராஜகோபாலன், திருமதி காமாட்சி வரதராஜன், திருமதி லெக்ஷ்மி ஆகியோர் கூறும் கருத்துக்கள் இதோ: இவர்களுள் திருமதி ராதா ராஜகோபாலன் அவர்கள் சுமார் 50 வருடங்களாக கோவில் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பாபாவின் அருளைப் பரிபூரணமாக அனுபவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

"1942ல் இந்த பாபா கோவில் கட்டப்பட்டது. 1987ல்தான் பிப்ரவரி 2ம் தேதி அன்று பாபாவின் திரு உருவச் சிலை இங்கு வைக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் திரு. நரசிம்ம சுவாமிஜி ஷிர்டி சாயிபாபாவின் படம் மட்டும் வைத்து பூஜைகள் ஆரம்பித்தார்.

ஆரம்ப நாட்களிலிருந்தே ஒவ்வொரு வியாழக் கிழமையும் மாலை பஜன், ஆரத்தி, பிரசாதம் என்கிற முறை இருந்து வருகிறது. 8 மணி அளவில் தீபாராதனை நடைபெறும். இந்த பஜன் மண்டலி 1982ல் ஆரம்பித்து 15 வருடங்களாக சிறப்பாக இயங்கி வருகிறது. ஆரம்பித்த புதிதில் 10 பேர் அங்கத்தினர்களாக இருந்தார்கள்.

இந்த பஜன் மண்டலியில் இருக்கும் சிலர் ஆல் இண்டியா சாயி சமாஜின் கமிட்டி மெம்பர்களாகவும் இருந்து வருகிறார்கள். இந்த பஜன் மண்டலீ குழுவினர் பஜனைகளில் ஈடுபடுவது மட்டுமின்றி திருவிழா நாட்களில் கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதிலிருந்து, பிரசாதம் கொடுப்பது வரை தங்களை இயல்பாகவே ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பாபா மஹா சமாதி ஆனது அக்டோபர் 1918ம் வருடம் விஜயதசமி அன்று. ஒவ்வொரு ஆண்டும் இந்த மஹா சமாதி விழா பத்து நாட்களுக்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மஹாளய அமாவாசை அன்று இங்கு கோவி



லில் கடஸ்தாபகம் செய்து பத்து நாட்களுக்கு தினமும் சாயி பஜனுடன் மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் பிறகு 7 மணி முதல் 9 மணி வரையும் பிரபல வித்வான்களைக் கூப்பிட்டு இரண்டு கச்சேரிகள் நடத்தி வருகிறோம். பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம், அன்ன தானம் என்று வெகு விமரிசையாக நடத்து



விளக்கு பூஜை

வருகிறது. ஷிர்டியில் விஜய தசமியன்று மஹா சமாதி தினமாகக் கொண்டாடுகிறார்கள். ஆனால் இங்கு பாபா மறைந்த திதியான ஏகாதசி திதி அன்று மஹாசமாதி தினமாக அனுஷ்டிக்கிறோம். பாபா சமாதி தினம் கொண்டாடுவது போலவே நரசிம்ம சுவாமிஜிக்கும் அவர் மறைந்த திதியன்று பூஜைகள் நடத்தி வழிபடுகின்றோம்.

அடுத்து மார்கழி மாதம் முழுவதும் அதாவது டிசம்பர் கடைசி இரு வாரங்களும் ஜனவரி முதல் இரு வாரங்களும் காலை 4.30 மணிக்கு இங்கு கோவிலில் பஜன் மண்டலியினர் கூடி காலை சரியாக 5 மணி முதல் 6 மணி வரை பஜன் நடத்துகிறோம். ஒவ்வொரு வருடமும் ஜனவரி 1 புத்தாண்டு தினமும் மயிலாப்பூர் பாபா கோவிலில் சிறப்பாகக் கொண்டாடப்படுவது யாவரும் அறிந்ததே. டிஸம்பர் 31ம் தேதி இரவு 8 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பிக்கும். பக்தர்கள் க்யூ வரிசையில் நின்று தங்கள் கையால் பாபாவிற்கு சங்காபிஷேகம் செய்யலாம். அப்போது பிரபல பாடகர்களின் பஜன்கள் நடைபெற்ற வண்ணம் இருக்கும். சரியாக 12 மணிக்கு புத்தாண்டு பிறக்கும் நேரம் பாபாவிற்கு தீபாராதனை காட்டப்படும். அப்போது பக்தர்கள் திரண்டு தங்களை மறந்து பாபாவின் அருள் வேண்டி வழிபாடு செய்வார்கள்.

பிப்ரவரி மாதம் 15ம் தேதி பீஷ்ம அஷ்டமி விழா நடைபெறும். அன்று விஷ்ணு சகஸ்ர நாமம் சொல்லி ஆயிரத்தெட்டு ரோஜாப் பூக்

களால் அபிஷேகம் செய்யப்பட்டு பிரசாதம் வழங்கப்படும்.

குரு பௌர்ணமி தினத்தன்று ஸ்ரீ நரசிம்ம சுவாமி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வியாச பூஜை ஒவ்வொரு வருடமும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அன்று கட பூஜை செய்து அந்த கடதீர்த்தத்தால் பாபாவிற்கு அபிஷேகம் செய்கிறோம். அன்று பேரிச்சம்பழம், கொட்டைப்பாக்கு, எலுமிச்சம்பழம் இவற்றை பிரசாதமாக வழங்குகிறோம். அன்று விஷ்ணு சகஸ்ரநாமம் சொல்லி வழிபாடு நடைபெறுகிறது. மேலும் யாரும் உடல் நலமில்லாமல் இருந்தால் அப்போது அவர்கள் பெயர் சொல்லி கூட்டுப் பிரார்த்தனை வழிபாடும் அன்று நடைபெறும். அந்த கூட்டுப் பிரார்த்தனை வழிபாட்டால் உடல் நலம் தேறி குணம் அடைந்த பக்தர்கள் எண்ணற்றோர் என்று சொல்லலாம்.

மேலும் இந்தக் கோவிலில் நடைபெறும் விழாக்களில் மற்றொரு சிறப்பு அம்சம் பொருந்திய விழா வருடந்தோறும் நடைபெறும் விளக்கு பூஜை. சக்தி வடிவமான பெண்களால் இந்தக் கோவிலுக்குச் சக்தி வர வேண்டும் என்று கூறி ஸ்ரீ நரசிம்ம சுவாமிஜி சுமார் 50 வருடங்களுக்கு முன்பே இந்த குத்து விளக்கு பூஜையை ஐந்து பெண்மணிகளை மட்டுமே வைத்துத் துவங்கி வைத்தார் இப்போது ஹால் கொள்ளாத அளவிற்கு சுமார் 150 முதல் 200 பெண்மணிகள் இந்த விளக்கு பூஜையில் கலந்து கொண்டு பலனடைகிறார்கள். இந்த பூஜையின் போது பெண்கள் விளக்கு மட்டும் கொண்டு வர வேண்டும். பூஜைக்கான தேங்காய், வெற்றிலை, பாக்கு, பூ, ரவிக்கைத் துண்டு ஆகியவற்றை இங்கு கோவிலிலேயே நாங்கள் கொடுப்போம்.

அடுத்து, இங்கு கோவிலில் வருடத்தில் ஒரு முறை ''சத்சரித்திரா'' படிக்கிறோம். ராமாயணத்தில் சுந்தரகாண்டம் எவ்வளவு முக்கியமோ, மகாபாரதத்தில் பகவத்கீதை எவ்வளவு முக்கியமோ அதே போல பாபா பக்தர்கள் சத்சரித்திரா (பாபாவைப் பற்றிய சரிதம்) படிக்க வேண்டியது அவசியம். சத்சரித்ரா மொத்தம் 50 அத்தியாயங்கள் அடங்கியது. ஒரு நாளைக்கு 7 அத்தியாயம் வீதம் ஒரு வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வியாழக்கிழமை முடிக்கிறோம். கடைசி நாளன்று பாபாவிற்கு மிகவும் பிடித்த போளி, பருப்பு வடை வைத்து நைவேத்தியம் செய்து பக்தர்களுக்கு வழங்குகிறோம்.

''சப்தாகம்'' எனப்படும் விழாவும் ஆண்டு தோறும் தொடர்ந்து ஏழு நாட்கள் பக்தர்களால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. அதாவது வருடம் தோறும் நவம்பர் மாதத்தில் 7 நாட்கள் 'ஓம் சாயி ஸ்ரீ சாயி ஜெய ஜெய சாயி' எனும் திருநாமம் விடாமல் சொல்லப்படும்.

மேலும் இந்தக் கோவிலில் வருடம் 365 நாளும் அணையாமல் எரிந்து கொண்டிருக்கும் துனி எனும் அக்னியில் மட்டையுடன் கூடிய தேங்காய், நெற்பொரி, கல்கண்டு, திராட்சை சேர்ப்பித்து தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்பவர்கள் ஏராளம் என்று சொல்ல வேண்டும்.

மேலும் நாங்கள் பக்தர்களுக்கு குறிப்பாக சொல்ல வேண்டியது ஒன்று இருக்கிறது. நிறைய பேர் கோவிலில் எம் முறையில் வலம் வந்து வணங்க வேண்டும், என்ற கேட்ட வண்ணம் இருக்கிறார்கள். அவர்களுக்காக இதோ:




சாயி பஜன் பாடல்கள் பன்னிரெண்டு கொண்ட கேசட் ஒன்று வெளி வந்திருக்கிறது. அனுராதா பட்வாலின் அமுதக் குரலில் தனிப் பாடல்களாகவும் கோஷ்டி கானமாகவும் பாடப்படும் இவை மொழி தெரியாதவர்களும் கேட்டு ரசிக்கும்படியாக இனிய மெட்டுக்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சாயி பாபா அந்தர்யாமி, நாமன் ஹை ஹமாரா, சாய்க்யாரா வச்சன் போன்ற தனிப்பாடல்களும் சாயி க்ருபா கரோ, சாயிபாபா கீ ஷரண், சாயிபாபா தயா கரோ போன்ற கோஷ்டி கானப் பாடல்களும் மெய் மறந்து அனுபவிக்கச் செய்தன. சாயி பாபா பக்தர்கள் மட்டுமின்றி யாவரும் கேட்டு மகிழத்தக்க கேசட் இது.

முதலில் கோவிலின் முன் கோபுர வாசல் வழியாக நுழைந்து சன்னிதானத்திற்கு வந்து பூஜ்யஸ்ரீ நரசிம்ம சுவாமியின் சாய்ந்த நாற்காலியை வலம் வந்து வணங்கி உண்டியல் இருக்கும் இடத்திற்குச் சென்று தங்களால் இயன்ற காணிக்கையைச் செலுத்திவிட்டு துவாரகாமாயியாக (தாயாராக) இருக்கும் பாபாவை வணங்கிவிட்டு, 'துனி' எனும் அக்னியில் மட்டையுடன் கூடிய தேங்காய், பொரி, கல்கண்டு, திராட்சை போன்ற காணிக்கைகளை சேர்ப்பித்துவிட்டு, சுவாமிஜியின் தியான மண்டபம் சுற்றி வந்து வணங்கி, பிறகு குருஸ்தானமான வேப்ப மரத்தடியில் இருக்கும் பாதுகையை தங்கள் கோரிக்கையை மனதால் நினைத்து வணங்கி அந்த மரத்தில் மாங்கல்ய பிரார்த்தனைக்கு மஞ்சள் கயிறும், புத்திர பாக்கியத்திற்கு தொட்டிலும் கட்டி வேண்டிக் கொள்ள வேண்டும்.

பிறகு சன்னதிக்குள் நுழைந்து அங்கு கல் மேல் அமர்ந்து அனுக்கிரஹம் புரிந்து கொண்டிருக்கும் சீரடி பாபாவின் ஹஸ்தம் பாதம் சேர்ந்து இருக்கும் ஹஸ்தபாதத்தை கண்ணில் ஒற்றிக் கொண்டு குனிந்து பாதத்தில் சிரஸை வைத்து ''என் பாபங்களைப் போக்கி, சகலவிதமான துன்பங்களையும் நீக்கி அருள வேண்டும்'' என வேண்டி சன்னதியில் பிரசாதமாகக் கொடுக்கப்படும் தீர்த்தம், விபூதி (துனியில் எடுக்கப்படும் சாம்பல்) குங்குமம் இவற்றைப் பெற்றுக் கொண்டு, மேடையில் இருக்கும் பாதுகையை வணங்கிவிட்டு சன்னதியிலிருந்து வெளிவர வேண்டும். சுற்றி வந்து மண்டபத்தினுள் வந்து அனைவருடனும் சேர்ந்து–

*''ராஜாதி ராஜ யோகி ராஜ பரபிரும்ம சச்சிதானந்த*
*சமஸ்த சத்குரு ஸ்ரீ சாயிநாத் மஹாராஜ்கி ஜெய்''*
*''சத்குரு நரசிம்ம சுவாமிஜிக்கு ஜெய்''*

என்று ஜெய கோஷம் எழுப்பும் போது நாம் அடையும் இன்பத்திற்கு எல்லையே இல்லை எனலாம்.

பூஜ்ய ஸ்ரீ நரசிம்ம சுவாமிகளைப் பற்றி ஒரு சிறிதேனும் அவசியமாகக் குறிப்பிட்டால்தான் நாம் குரு அவர்களுக்கு கடமைப்பட்டவர்களாவோம். நாம் அனைவரும் ஸ்ரீசாயிநாதரைப் பற்றி ஒரு சிறு அளவாவது அறிவதற்கு நமது சுவாமிகள்தான் மூல புருஷர்.

ஸ்ரீநரசிம்ம சுவாமிகள் அவர்கள் சேலத்திற்கு அருகில் உள்ள பவானி என்ற ஊரைச் சேர்ந்தவர். அவர் மிகச் சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்ததோடு, இந்திய சுதந்திரப் போராட்ட வீரராகவும் விளங்கினார். மகாத்மா காந்தி அவர்களுடனும், ஹோம் ரூல் இயக்கத்தில் அன்னிபெசண்ட் அம்மையார் அவர்களுடனும் நெருங்கிப் பழகியவர். பூஜ்ய ஸ்ரீநரசிம்ம சுவாமிகள் சென்னை மாநில மேல்சபை (மெட்ராஸ் லெஜிஸ்லேடிவ் கவுன்சில்) உறுப்பினராக இருந்து, பிரிட்டிஷார் ஆட்சிக்காலத்தில் மேல் சபையில் முதன் முதலாக தாய் மொழியாகிய தமிழ் மொழியில் உரையாற்றினார்.

ஒரு காலகட்டத்தில் பூஜ்ய ஸ்ரீநரசிம்ம சுவாமிகள் தான் இனிதே நடத்தி வந்த இல்லற வாழ்வைத் துறந்து, துறவறத்தினை ஏற்று திருவண்ணாமலையில் ஸ்ரீரமண மகரிஷியின் குகைக்கு அருகில் இரண்டு ஆண்டுகள் இருந்தும், பிறகு தனது உண்மையான குருவைத் தேடி வடமாநிலங்கள் பலவற்றிற்கு சென்று கடைசியாக மகாராஷ்டிராவில் உள்ள சகோரியில் இருந்த ஸ்ரீஉபாசனி மகாராஜா மூலம் ஷீரடிக்குச் சென்று தனது குருநாதராகிய ஸ்ரீசாயி பாபாவைக் கண்டு கொண்டார். பின்னர் ஸ்ரீ சாயிநாதரைப் பற்றி உலகிற்கு பிரச்சாரம் செய்தார். அதன் பயனாக அகில இந்திய சாயி சமாஜம் சீரோடும், சிறப்போடும் திகழ்கிறது.

விளக்கமாகக் கூறிய பஜனை மண்டலியினருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

கருணா மூர்த்தியான ஸ்ரீ சீரடி சாயி பாபாவை அனுதினமும் வணங்கி அவரது பேரருளைப் பெறுவோமாக!

–சீதா தெய்வசிகாமணி

# சட்ட உதவிக்கரம்



திருமணமாகி 1 1/2 வருடமாகிறது. காதல் திருமணம். பெற்றோர்கிடையாது. என்பாட்டி (அம்மாவின் அம்மா) உடன் தான் தங்கியிருந்தேன். என் கணவர் ஒரு தனியார் அலுவலகத்தில் வேலை பார்க்கிறார். எங்கள் காதலுக்கு என் பாட்டி குறுக்கே நிற்கவில்லை. அவர் தனது பெற்றோர் வேறொரு ஊரில் இருப்பதாகவும், எங்களது காதலை ஏற்க மாட்டார்கள் என்றும், வீட்டாரை எதிர்த்துக் கொண்டு திருமணம் செய்தார். திருமணமான ஒரு வருடம் கழித்துதான் அவர் ஏற்கனவே திருமணமானவர் என்பதும், அவரது மனைவி உயிரோடு இல்லை என்பதும், அவருக்கு மூன்று வயதில் ஒரு பெண் குழந்தை இருப்பதும் (அக்குழந்தை அவரது பெற்றோரிடம் வளர்கிறதாம்) எனக்குத் தெரிய வந்தது. இப்போது நானும் 6 மாதம் கர்ப்பமாக இருக்கிறேன். உண்மை தெரிந்த பிறகு, எனக்கு என் கணவரது முகத்தைப் பார்க்கக் கூட பிடிக்கவில்லை. அவருடன் எனக்கு பேச்சு வார்த்தை இல்லை. இந்நிலையில் நான் அவரை விவாகரத்து செய்ய முடியுமா? அப்படிச் செய்தால் எனக்கு ஜீவனாம்சம் கிடைக்குமா? எவ்வளவு கிடைக்கும்?

திருமணத்திற்கு முன்பு மனைவி இருந்து அவள் மூலம் ஒரு குழந்தையையும் பெற்று விதவன் ஆன பிறகு திருமணம் செய்து கொள்வது சட்டப்படி தவறு இல்லை. திருமணம் செய்து கொள்ளும் போது உயிருடன் ஒரு மனைவி இருந்தால் தான் சட்டப்படி அது தவறு. இரண்டாவது திருமணம் செல்லாது. மற்றபடி விவாகரத்து பெற்ற பின்பும் மறுமணம் செய்து கொள்ளலாம். உங்கள் கணவர் உண்மையை கூறி உங்களை திருமணம் செய்து கொண்டிருந்தால் அது சிறப்பாக இருந்திருக்கும். ஆயினும் அதற்கும் மேல் சிறந்தது நீங்கள் பழையதை மறந்து அவர் பெண் குழந்தையையும் உங்கள் குழந்தையாக சுவீகரித்து எல்லோரும் ஒன்றாக வாழ்வது. என் கணவர் ஒரு விதவன், குழந்தை உள்ளவர். அவர் முகத்தைப் பார்க்கப் பிடிக்கவில்லை. அதனால் எனக்கு விவாகரத்து வேண்டும் என்று கேட்டால் அவை விவாகரத்துக்குப் போதிய சட்டரீதியான காரணங்கள் அல்ல. அதனால் உங்களுக்கு இவ்வகையில் ஜீவனாம்சமும், விவாகரத்தும் கிடைக்க வாய்ப்பில்லை.

நான் சென்னையில் உள்ள கல்லூரியில் முதல் வருடம் படித்துக் கொண்டிருக்கிறேன். என் தம்பி பத்தாம் வகுப்பு படிக்கிறான். என் தந்தை ஒரு குடிகாரர். வேலைக்குச் செல்வதில்லை. என் தாயார்தான் இரண்டு வீடுகளில் சமையல் வேலை செய்து எங்கள் இருவரையும் படிக்க வைக்கிறார். குடிப்பதற்காக ஏதேதோ பொய்யைச் சொல்லி என் தந்தை ஊர் முழுக்க கடன் வாங்கியிருக்கிறார். கடன் கொடுத்தவர்கள் தினமும் எங்கள் வீட்டு வாசலில் வந்து நின்று கொண்டு அவமானப்படுத்துகின்றனர். என் அம்மாவை நினைத்தால் எனக்கு வேதனையாக இருக்கிறது. கையில் காசு இல்லாத போது என் அம்மாவை, அப்பா கண்டபடி அடித்துக் கொடுமைப்படுத்துகிறார். நாங்கள் அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியுமா? அதற்கு நாங்கள் யாரை, எப்படி அணுக வேண்டும்?

உடல்ரீதியாகவோ மனரீதியாகவோ கொடுமைப்படுத்த யாருக்கும் உரிமையில்லை. உங்கள் அம்மா நினைத்தால் உங்கள் அப்பாவிற்கு இந்திய தண்டனைச் சட்டம் மூலம் தன்னை கொடுமைப்படுத்தியதற்காக தண்டனை வாங்கித் தர முடியும். அருகில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தன் கணவன் குடித்து விட்டு அடித்து திட்டி துன்புறுத்துவதாக புகார் கொடுத்து வழக்கு தொடுக்க வற்புறுத்தி அவரை கைது செய்து சிறையில் இடலாம்.



சட்டப்படி நிவாரணங்களை நாடுவதற்கு முன் - முதலில் நீங்கள் அவரது குடிப் பழக்கம் நீங்க ஏதேனும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுங்கள். குடிப் பழக்கத்தால் அவர் அக்கஹாலிக் ஆக மாறியிருந்தால் அது ஒரு வியாதி. மருத்துவத்தால் சரி செய்யக் கூடிய வியாதி. உங்கள் அம்மாவும் நீங்களும், உங்கள் தம்பியும் கூட அவருடன் counselling-க்கு சென்றால் மாற்றம் வர வழி உண்டு.

நான் ஒரு அரசாங்க அலுவலகத்தில் ஸ்டெனோவாக வேலை செய்கிறேன். என்னுடைய மேலதிகாரி கடிதங்கள் டிக்டேட் செய்யும் சாக்கில் என்னிடம் எப்போதும் இரட்டை அர்த்தத்தில் பேசுகிறார். எனக்கு தர்மசங்கடமாகவும், அருவெறுப்பாகவும் இருக்கிறது. அவர் என்னிடம் மட்டும்தான் இப்படி நடந்து கொள்கிறார். அலுவலகத்தில் உள்ள மற்ற பெண் ஊழியர்களிடம் மிக நாகரீகமாக நடந்து கொள்வதால், என் பேச்சை யாரும் நம்ப மறுக்கிறார்கள். நான் திருமணமானவள் என்று தெரிந்ததும், என் அந்தரங்க விஷயங்களை அநாகரீகமாக விசாரிக்கிறார். இந்த நிலைமையை நான் சட்டப்படி சமாளிக்க வழி உண்டா?

நீங்கள் முதலில் ஒரு Micro-Tape Recorder வாங்கி உங்கள் மேல் அதிகாரி பேசுவதை tape செய்யுங்கள். முடிந்தால் அதில் பதிவு செய்யும் போதே வெளியில் ஒலிபரப்ப முடியும் என்றால் அதையும் பொருத்தி செய்யவும். உங்கள் மேலதிகாரியை இதைவிட சிறப்பாக துகிலுரித்து காட்ட முடியாது. ஒலிபரப்புவது சிரமம் என்றாலும் ஒலிப்பதிவு செய்வது எளிது. ஒலிப்பதிவு செய்தபின் நீங்கள் அதை வைத்து அவமானப்படுத்தும் மேலதிகாரிக்கும், உங்கள் இலாகாவுக்கும் மந்திரிக்கும் கூட எழுத்து மூலம் தெரிவித்து மேலதிகாரியின் மேல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். அலுவலகத்தில் அதிகாரிகள் தங்கள் கீழ் வேலை செய்பவர்களை அநாகரீகமாக நடத்துவது சட்டப்படி குற்றம். அதற்கு நீங்கள் தகுந்த ஆதாரங்களுடன் அவர் மேல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

என் வயது 57. என் கணவருக்கு இரண்டாவது மனைவி. எங்களுக்கு ஒரு மகள் இருக்கிறாள். முதல் மனைவிக்கு ஒரு மகளும், மகனும் இருக்கிறார்கள். ஆறு மாதங்களுக்கு முன்பு என் கணவர் இறந்து விட்டார். அவரது சொத்துக்கள் (சுய சம்பாத்தியம்) தனக்கும், தன் குழந்தைகளுக்கும் மட்டுமே சேரும் என்று முதல் மனைவி கூறுகிறார். அது உண்மையா? எனக்கும், என் மகளுக்கும் அவரது சொத்தில் பங்கு கிடையாதா? எங்களது எதிர்கால தேவைக்கு நாங்கள் என்ன செய்ய முடியும்?

இரண்டாவது மனைவிக்கு சட்டப்படி எந்த உரிமையும் இல்லை. நீங்கள் சட்டப்படி மனைவியாக அங்கீகாரம் பெறாதவர். ஆனால் உங்கள் மகளுக்கு அவளுடைய தந்தையின் சுய சம்பாத்தியத்தில் அவருடைய அம்மா உயிருடன் இருப்பின் அவருக்கும், அவரது மனைவி, இரண்டு குழந்தைகளுடன் சேர்ந்து ஐந்தில் ஒரு பங்கும் (அம்மா இல்லாவிட்டால் நாலில் ஒரு பங்கும்) கிடைக்கும். பெண்கள் தங்கள் எதிர்காலத்திற்கு என்ன செய்ய முடியும்? கணவன் கை விட்டால் ஜீவனாம்சத்தோடும், இறந்து விட்டால் அவர் இறப்பூதியம், ஓய்வூதியம் என்று ஒரு சார்பு தன்மையுடனேயே ஏன் இருக்க வேண்டும்? அவர் படிப்புக்கும் திறமைக்கும் ஏற்ப வேறு யாரிடமும் கையேந்தாது சுயமாக ஒரு வேலை தேடியோ, செய்தோ பிழைக்கலாம். அந்தக் காலத்திலேயே என்.எஸ். கிருஷ்ணன் படத்தில் கூறியது போல் பெண்கள் கைவசம் இட்லி செய்யும் தொழிலாவது இருக்க நாம் பிறரிடம் அது கணவனாக இருந்தாலும் சார்ந்து இருப்பதை விட்டு தன் கையே தனக்கு உதவி என்று வாழ்க்கையின் சவால்களை ஏற்று எதிர் நீச்சல் போட்டு சாதித்துக் காட்ட வேண்டும்.

என் கணவருக்கு சந்தேக மனப்பான்மை அதிகம். நான் அவரைவிட அதிகம் சம்பாதிக்கிறேன். அதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எதற்கெடுத்தாலும் என் மீது சந்தேகப்படுகிறார். எங்களுக்கு குழந்தைகள் இல்லை. நான் அவர் மீது உயிரையே வைத்திருக்கிறேன். ஆனால் அவர் நான் யாரிடம் சிரித்து பேசினாலும், அடிக்கடி தகாத வார்த்தைகளால் திட்டி என்னை சித்ரவதை செய்கிறார். எனக்கு அவர் மீது பாசம் இருந்தாலும், அவர் நடந்து கொள்ளும் முறை எனக்கு அவர் மீது விவாகரத்து செய்து விடும் எண்ணத்தை ஏற்படுத்துகிறது. கணவனது சந்தேக குணத்தைக் காரணம் காட்டி ஒரு பெண் விவாகரத்து செய்ய முடியுமா?

தாராளமாக. காரணமின்றி சந்தேகப்படுவது Mental Cruelty. மனரீதியாக கொடுமைப்படுத்துகிறார் கணவர் என்று கூறி விவாகரத்து கோரலாம். குழந்தை ஏதும் பிறப்பதற்கு முன் நீங்கள் முடிவெடுத்து பிரியவும். இல்லையென்றால் உங்கள் இருவர் பிரிவினால் குழந்தையின் normal வளர்ச்சி பாதிப்படையும். சந்தேகம் என்பது கொடிய நோய். அதை முற்றவிட்டு நீங்களும் உங்கள் வாரிசுகளும் தொடர்ந்து கஷ்டப்படத் தேவையில்லை.

சட்ட ஆலோசனை: **வழக்கறிஞர் துரை ராமலிங்கம்**
தொகுப்பு: **வினா**

# அஸ்திவாரம்

பத்து நாட்களாய் அனுவுக்கு ஜுரம். குழந்தை கண்ணைத் திறக்காமல் கிடந்தவள் இப்போதுதான் இரண்டு நாட்களாய் அரைவாய்க் கஞ்சி கேட்டுக் குடிக்கிறாள்.

'அம்மா... மிஸ் திட்டுவாங்க... அடுத்த வாரம் மிட் டேர்ம் டெஸ்ட் டும்மா...' என்றது அத்தனை தளர்ச்சியிலும். சமாதானப்படுத்தினாள்.

மீனாவுக்கு இன்னொரு செய்தியும் வந்தது. சரளா வருகிறாளாம். நாத்தனார். பத்து நாட்கள் தங்கிப் போகிற உத்தேசமாம்.

கணேசன் பரபரப்பாய்த் தெரிந்தான்.

''ரொம்ப நாளா சொல்லிண்டு இருந்தா, இப்பதான் வர முடியுது... எல்லா சாமானும் இருக்கோல்லியோ. அவ வந்த பிறகு லிஸ்ட்டோட வந்து அது இல்லை... இது இல்லைன்னு சொல்லாதே...'' என்றான்.

என்ன அன்னிய தேசத்திலிருந்து வெளி நாட்டு தூதரா வருவது... சொந்த அக்கா. அதற்கேன் இத்தனை ஆர்ப்பாட்டம். முனகிக் கொண்டாளே தவிர லிஸ்ட்டைக் கொடுத்து விட்டாள்.

''என்னது, பத்து தேதிதான் ஆகிறது. அதற்குள்ளே எல்லாம் வாங்கணுமா...'' என்றான் படபடப்பாய்.

''நம்ம மூணு பேருக்கு வாங்கினது. இப்ப உங்க அக்கா, அவ குழந்தைகள்னு ஒரு பட்டாளமே வருது... எப்படி போதும்?''

''பட்டாளம்... கிட்டாளம்னு அசிங்கமாப் பேசாதே...''



மீனா பேசவில்லை. அடுப்படி வேலை அப்படியே கிடக்கிறது. அடிக்கடி வராமல் நின்றதால் துணி தோய்க்க வைத்திருந்தவளையும் நிறுத்தியாகி விட்டது. அந்த வேலை வேறு சேர்ந்து கொண்டது. செலவுகளுக்கு என்ன செய்யலாம் என்ற யோசனையில் கணேசன் மூழ்கிப் போனான்.

சரளா குழந்தைகளோடு வந்து விட்டாள். பத்தாவது படிக்கிற பெண். ஆறாவது படிக்கிற பையன். சரியான வால்கள். ஓட ஆரம்பித்தால் தடுக்கி எப்போது விழப் போகிறார்கள் என்ற கவலை வந்து விடும். 'ஓ' வென்ற இரைச்சல் வேறு.

அனுவைத் தனியே எச்சரித்து இருந்தாள்.

''நீ ஓடாதே இப்பதான் உடம்பு தேவலை. மறுபடி படுத்தால் பரீட்சை எழுத முடியாது...''

படிப்பு ஒருபுறம்... சகாக்களின் விளையாட்டுக் கவர்ச்சி மறுபுறமாய் அனு அலைக்கழிந்தது.

''என்ன பண்ணப் போறே...''

சரளா சமையலறைக்குள் வந்து நின்றாள். கூடவே கணேசனும்.

''பாயசம் பண்ணிரேன்'' இது கணேசன்.

''வடை உண்டா...''இது சரளாவின் பையன்.

மீனாவுக்கு இன்னும் என்ன சொல்லப் போகிறார்கள் என்ற யோசனை, அனுவுக்கு இன்னும் கஞ்சி தரவில்லை.

''என்னது கஞ்சியா... யாருக்கு...''

''அனுவுக்கு... ஜொரத்துல படுத்துக் கிடந்தா...''

''கஞ்சி ஏன் தரே... காம்ப்ளான் மாதிரி கொடுக்கலாமே...''

கொடுக்கலாம்தான்.

''அம்மா... கஞ்சி பிடிக்கலைம்மா...''

அனுவிடம் முதன் முறையாய் மறுப்பு! இத்தனை நாள் பேசாமல் குடித்தவள். மீனா அவளுக்கு மட்டும் தெரியும்படி முறைத்தாள்.

''மத்தியானம் டவுனுக்குப் போகலாம்னு... நீயும் வா...'' என்றான் மீனாவிடம்.

''எனக்கு நிறைய வேலை இருக்கு... இவரைக் கூட்டிண்டு போங்கோ...''

''ப்ச்... வேலை எப்பவும்தான் இருக்கு பாரேன் கணேசா...''

கணேசன் தன் பங்கிற்கு வற்புறுத்தினான்.

மீனா பேசாமல் நிற்கவும் சரளா சொன்னாள்.

''அனுவை அழைச்சிண்டு போகலாமா...''

''வேணாம்... இப்பதான் உடம்பு... தேவலை''

''அம்மா... நானும் போறேனே...''

மீனாவுக்கு உள்ளூர எரிச்சல் வந்தது. என்ன மனுஷி இவள்.

''என்ன... கூட்டிகிட்டு போகலாமா...'' என்றான்.

மீனா எதுவும் பேசாமல் கை வேலையில் ஆழ்ந்தாள்.

சரளா குளிக்கப் போன போது கணேசன் வந்து நின்றான்.

''என்னதான் நீ நினைச்சுகிட்டு இருக்கே... பாவம்... வராதவ வந்திருக்கா... ஆசையா நாலு இடம் பார்க்கணும்னு கூப்பிடறா... ஒண்ணு வரேன்னு சொல்லு... இல்லே... வரமுடியாதுன்னு சொல்லு. மௌன சாமியார் மாதிரி நின்னா என்ன அர்த்தம்...''

''அதுதான் என்னால வரமுடியலேன்னு சொன்னேனே...''

''அனுவைக் கூட்டிகிட்டு போனா... என்ன...''

''வெய்யில்ல மறுபடி அலைஞ்சா... நல்லதான்னு நீங்களே முடிவு பண்ணுங்க...''

''உனக்கென்ன கஷ்டம்... கூட வர முடியாதபடி...''

''ஒரு வண்டி துணி கிடக்குது. சமையல் பண்ணதோட சரியா. பாத்திரம் யார் தேய்க்கறது... இவளோட பத்து நாளா ராத்திரி பகல் கண் முழிச்சு. எனக்கே உடம்பு முடியலே...''

''சே... எதைக் கேட்டாலும் ஒரு பதில்... தயாரா வச்சிருப்பியே...'' என்றான் எரிச்சலாய்.

பதில் சொன்னாலும் தப்பு. பேசாமல் நின்றாலும் தப்பா... மீனா கேட்கவில்லை கேட்டால் அதுவும் எரிச்சலூட்டும்.

சரளா குளிக்கப் போனவள் வெளியே வர அரை மணி நேரமானது.

''மீனா... மாடியிலதானே உலர்த்தணும்...'' என்றாள்.

''ஆமா...''

கணேசன் கேட்டான்.

''நீ ஏன் தோய்க்கறே... வச்சிர வேண்டியதுதானே... அவ பார்த்துக்கறா... வெளியே கிளம்பணும்னு சொன்னே... பாவம்... பத்து நாள் ஒரு மாறுதலுக்கு வந்த எடத்துல... ஏன் வேலை...''

சரளா சிரித்தாள்.

''எங்க ஜென்மத்துக்கு எப்பவும் ரெஸ்ட் இல்லே...''

சமையல் வேலை ஒரு வழியாய் முடிய மீனா பாத்ரூமிற்குள் போனாள். சாப்பிட்டு விட்டால் துணி துவைக்க உடம்பு வணங்காது.

என்னது... பக்கட்டில் நனைத்திருந்த துணிகள் எங்கே - காலியாய் இருந்தது.

''கிளிப்தான் போதாது...'' என்றாள் சரளா மாடிப்படி இறங்கி வந்து.

மீனா அவசரமாய்ப் படியேறினாள்.

மொட்டைமாடிக் கயிற்றில் சரளாவின் துணிகளோடு இவர்கள் துணிகளும் காற்றில் ஆடிக் கொண்டிருந்தன.

''ஏன்... நீங்க தோய்ச்சீங்க...''

மீனா கீழிறங்கி வந்து கேட்டாள்.

''அதனாலென்ன... உனக்கும் ஒரு வேலை ஆச்சுதானே... உன் கைச் சமையல் சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு... ஒரு புளிக்கூட்டு பண்ணுவியே... இந்த தடவை அதைப் பண்ணச் சொல்லணும்னு நினைச்சுண்டு வந்தேன்...''

''என்ன சரளா...'' கணேசனும் பதறினான்.

''விடு... அங்கே செய்யும் போது அலுப்பாத்தான் இருக்கும். யாராவது ஷேர் பண்ணிக்கக் கூடாதான்னு பொருமல் வரும். இங்கே செஞ்சா... சந்தோஷம்தான்... வாங்கோ... சாப்பிட்டதும்... நானும் வரேன் பாத்திரம் தேய்க்க வச்சிடலாம்... எல்லோருமா டவுனுக்குப் போலாம்... ஆட்டோல... சௌகர்யமா...''

சுமுகமான உறவுக்கு மனசுதான் அஸ்திவாரம்.

—ரிஷபன்

## பாட்டி சொன்னது

சீரகத்தை தேங்காய்ப்பாலில் அரைத்து, உடலில் தேய்த்து இரண்டு மணி நேரம் கழித்து குளித்து வந்தால், வேர்க்குருக்கள் அகலும்.

**—கே.ஆர். விசாலாட்சி ஆச்சி, திருப்புவனம்.**

வாழைத் தண்டை பருப்புடன் சமைத்து உண்டால் சிறு நீரகத்தில் ஏற்படும் கற்கள் கரையும்.

அரிசி களைந்த நீரில் அகத்திக் கீரையை வேக வைத்து உண்ண பித்தம், தலை சுற்றல் குணமாகும்.

வெங்காயத்தை பச்சையாக சாப்பிட்டு வந்தால் தொண்டைப் புண் குணமாகும்.

**—மு. ருக்மணி, தேனி.**

'சர்ப்' வரும் கவர்களைக் கழுவி சுத்தம் செய்து வைத்துக் கொண்டால் அவற்றில் முக்கியமான ரசீது, பில், கடிதங்கள் இவற்றைப் போட்டு பத்திரப் படுத்தலாம்.

**—எம்.எஸ். சரஸ்வதி, தர்மபுரி.**

சிலர் சமையலின் போது, வெங்காயத்தை நறுக்கி வைத்து விட்டு, நீண்ட நேரம் கழித்து பயன்படுத்துவர். இப்படி செய்வது சரியா? தவறு. அப்படி நறுக்கிய வெங்காயத்தில் தொற்று கிருமிகள் எளிதாக புகுந்து விடும். இதற்கு காரணம்... அதற்குள்ள ஈர்ப்பு சக்திதான்! ஆகவே அதைப் பயன்படுத்தாமல் தூக்கி எறிந்து விட வேண்டும். அல்லது வேண்டும் போது மட்டும் வெங்காயத்தை நறுக்கிக் கொள்ள வேண்டும்.

**—ராஜிராதா, திருச்சி - 14.**

பீங்கான் ஜாடியில் விரிசல் ஏற்பட்டு விட்டதா? எறிந்து விட வேண்டாம். அதில் முக்கால் பாகம் மண் நிரப்பி சிறு செடி வகை குரோட்டன்ஸை வைத்து வளர்க்கலாம்.

**—எம்.எஸ். சரஸ்வதி, தர்மபுரி - 5.**

ரவா தோசை செய்யப் போகிறீர்களா? லேசாக புளிப்பாக இருந்தால் நன்றாக இருக்கும் என எண்ணுகிறீர்களா? அப்படியெனில் சிறிது தயிரை மாவில் இடுங்கள். அது போதும்.

மஞ்சள் முள்ளங்கியை வேக வைக்கும் போது சிறிது சர்க்கரை சேர்த்து வேக வைத்தால் சுவையும் கூடும். மணமும் கூடும்.

**—ஆர். வனிதா, நாகூர்.**

கைக்குழந்தை உள்ள தாய்மார்கள் வெந்தயத்தைச் சேர்த்து அரிசிக் கஞ்சியில் காய்ச்சி உண்டு வந்தால் பால் அதிகம் சுரக்க ஏதுவாகும்.

இரவு படுக்கப் போகும் முன் சிறிது மஞ்சள், பனங்கற்கண்டு, மிளகு இவைகளைத் தூள் செய்து, நல்ல பசும் பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் தொண்டைப் புண், இருமல் நின்று சளி வர ஏதுவாகும்.

பச்சரிசி நொய்யை தேங்காய்ப் பாலில் தேவையான அளவு உரித்த பூண்டுடனும், வெந்தயத்துடனும் கஞ்சி காய்ச்சி சாப்பிட்டு வந்தால் வாய்ப்புண் குணமாகும்.

**—கே. ராஜேஸ்வரி, நல்லாலம்.**

எலுமிச்சம் பழச் சாறு 2 பங்கு, புதினா ரசம் 1 பங்கு கலந்து தினம் 3 வேளை 1 டீஸ்பூன் பருகி வர பசி உண்டாகும்.

சாதிக்காயை பசு நெய்யில் பொரித்து நன்றாக அரைத்து பசுந்தயிரில் குழைத்து சாப்பிட வயிற்றுக் கடுப்பு நீங்கும்.

**—சுபாஷினி, பொன்னாச்சி.**

## அன்புத் தெய்வம்

பத்து மாதம் உன்னை தன் வயிற்றிலே சுமந்து பகல் இரவாய்க் காத்தவளாம்
நித்திரையும் மறந்து உன்னைத் தன் நெஞ்சில் போட்டு வளர்த்தவளாம்
பெற்றெடுத்த பாசத்தினால் அவள் பெரும் துன்பம் சுமந்தவளாம்
குற்றம் குறை ஏதுமில்லாமல் உனக்கு அவள் கோடி நன்மை செய்பவளாம்

கண்ணை இமை காப்பது போல அன்னை உன்னை என்றும் காத்தவளாம், சிறு
கட்டெறும்பும் உன்னை அணுகாமல் கருத்துடனே வளர்த்தவளாம்
அன்னை உன்னை வளர்த்து ஆளாக்க அரும்பாடு பட்டவளாம், இந்த
அகிலமெங்கும் தேடினாலும் அன்னைக்கு நிகர்வேறு எவருமுண்டோ?

தொட்டிலிலே உன்னை உறங்க வைப்பாள், தன் தோளிலும் நித்தம் சுமந்து நிற்பாள்
நீ சுட்டித்தனம் செய்யும் போது உன்னைக் கட்டிப் பிடித்து முத்தம் தருவாள்
வட்ட வட்ட நிலவைக் காட்டி உனது வாயில் பாலும் சோறும் ஊட்டிடுவாள் தான்
பட்ட கஷ்டங்களை எல்லாம், மறந்து உனது கள்ளப் பார்வையிலே சொக்கிடுவாள்



பிள்ளைப் பருவத்திலே உன்னை அள்ளிக் கொஞ்சிடுவாள், உன்
கள்ளமில்லா உள்ளம் கண்டு கொள்ளை இன்பம் கொண்டிடுவாள்
உந்தன் முல்லைச் சிரிப்பழகினிலே அவள் தன்னையே மறந்திடுவாள், தன்
உள்ளத்திலே உனக்காக நித்தம் அந்த இறைவனிடம் வேண்டிடுவாள்

தத்தித்தத்தி நடை நடந்து நீ தள்ளாடி வருகையிலே உன்னைத் தாவிப் பிடித்து
தன் மடியில் கிடத்தி இனிய தாலாட்டுப் பாடிடுவாள், அன்னை
பாடும் பாடல் கேட்டு நீ அயர்ந்து உறங்கும் வேளையிலே அவள்
அங்கும் இங்கும் அசையாமலே உன் அருகிலேயே தவம் கிடப்பாள்

பள்ளி செல்லும் நேரத்திலே உனக்கு இனிய பலகாரம் செய்து தருவாள்
பகட்டான ஆடைகள் போட்டு உன்னை சிங்காரித்து உள்ளம் மகிழ்வாள்
வெள்ளி நிலவைக் காட்டி, தினமும் வேடிக்கையாய் பல கதைகள் சொல்வாள்
விதவிதமாய் பொம்மை வாங்கி உனக்கு விளையாடத் தந்திடுவாள்

உன்னை வளர்க்க அவள் பட்ட பாடு அந்த இறைவன் தான் அறிவானப்பா
என்ன கைம்மாறு செய்தாலும் நீ பட்ட கடன் தான் தீருமாப்பா
அன்னை போல ஓர் அன்புத் தெய்வம் இந்த அகிலத்திலேயே இல்லையப்பா
அதனை உணர்ந்து நீ அன்னையினை வணங்கினால் அவள் ஆசிகள் என்றும் கிடைக்குமப்பா

**—சிங்காரம் வெங்கடேசன்**

# தொண்டின் இலக்கணம் அன்னை தெரசா



**1949** ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 21 ஆம் நாள்; அன்னை பராசக்தி கோயில் கொண்டிருக்கும் கல்கத்தா நகரின் மோத்திஜில் சேரிப் பகுதி. அங்கு வந்த பெண்மணியைச் சுற்றி அந்த சேரியில் வசிக்கும் ஏழை எளியவர்கள் கூடியிருக்கின்றனர். ஆச்சரியமிக்க முகபாவத்துடன் அவர் சொல்வதைக் கவனமாகக் கேட்கின்றனர்.

''உங்களுக்கு தொண்டு செய்வதற்காகவே இங்கு வந்துள்ளேன். உதவி செய்ய என்னை அழைப்பீர்களா?''

அவர் பேசுவது அவர்களுக்குப் புரிகிறது; வெள்ளைப் புடவையிலுள்ளே இருக்கும் வெள்ளை மனதும் அவர்களுக்குத் தெரிகிறது.

தன்னை 'ஏழை' யென்றும், 'ஆசிரியை' என்றும் அறிமுகப்படுத்திக் கொண்டு சுற்றுப்புறத்தை சுத்தம் செய்ய ஆரம்பிக்கிறார்.

ஒவ்வொரு குடிசைக்கும் சென்று குழந்தைகளைத் தேடிப்பிடித்து கல்வி கற்க அழைத்து வருகிறார்.

சில நாட்களுக்குள் ஒரு சிறிய பள்ளிக்கூடம் அங்கு உருவாகுகிறது.

ஏறக் குறைய 48 ஆண்டுகளுக்கு முன் அவர்களுக்கு தேவதூதர் போல் காட்சியளித்த பெண்மணிதான் இன்று உண்மையிலேயே 'பாரத ரத்தினமாக' ஏற்றம் பெற்றிருக்கும் அன்னை தெரஸா.

அன்னை தெரஸா ஐரோப்பாவின் அல்பேனியா நாட்டிலுள்ள செகாப்ஜி என்ற கிராமத்தில் 1910-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27-ஆம் தேதி நிக்கோலஸ் - ரோஸி தம்பதிக்கு மகளாகப் பிறந்தார்.

விவசாய குடும்பத்தைச் சேர்ந்த அவர்கள் தங்களது குழந்தைக்கு வைத்த பெயர் அக்னெஸ் கான்ஷா போஜாக்ஷு.

சிறு வயதிலேயே அவர் இறையுணர்வும் தொண்டுள்ளமும் பெற்றிருந்தது, முற்பிறவியின் தொடர்பினால் ஏற்பட்டது போலும்!

கிரிமியா போரில் காயமுற்ற சேனை வீரர்களுக்கு தேவதை போல் விளங்கி நர்ஸிங் பணிக்கே ஆதர்சப் பெண்மணியாகத் திகழ்ந்த ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் மறைந்தது 1910-ஆம் ஆண்டு ஆகஸ்டு 13-ஆம் நாள். அவரது மறைவிற்கும் அன்னை தெரஸாவின் பிறப்பிற்கும் இடைவெளி 14 நாட்கள்.

'விளக்கு ஏந்திய பெண்மணி' (A Lady with a Lamp) என்று புகழ் பெற்ற ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேலே திரும்பவும் உலகில் ஒளி வீச பிறவியெடுத்திருப்பது போல் அன்னை தெரசாவும் தோன்றியுள்ளார்!

இந்திய மிஷினரிகள் கல்கத்தாவில் செய்யும் பணியை தெரிந்து கொண்ட சிறுமி அக்னெஸ்க்கு தானும் அது போன்ற செயல்களில் ஈடுபட ஆர்வம் கொண்டார்.



லொரேட்டா கன்னிகா மடத்தைப் பற்றிய விவரங்களும் அவரது ஆர்வத்தை வளர்த்தது.

லொரேட்டா கன்னிகா மட உறுப்பினரான பின் ஆன்மீகத் துறையில் கல்வி கற்க அயர்லாந்து சென்றார். அதைத் தொடர்ந்து ஆசிரியத் துறை பயிற்சிக்காக அவர் இந்தியாவில் முதன் முதலாக காலடி வைத்த இடம் டார்ஜீலிங்.

கல்கத்தாவில் புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியையாக 1929-ஆம் ஆண்டில் அவர் பணியைத் துவங்கினார்.

இரண்டாண்டுகளுக்குப் பின்னர் அக்னெஸ் கன்னிகா பெண்களுக்கான கட்டுப்பாடுகளை ஏற்று, தமது வாழ்நாள் முழுவதும் ஏகபெருமானுக்கு அர்ப்பணிக்கும் ஞானஸ்நானத்தினால் 'தெரஸா' வாக ஏற்றம் பெற்றார்.

'தெரஸா' என்ற அந்த புனிதப் பெயர் அவருக்கு ஒரு புதிய வாழ்க்கைத் தத்துவத்தை போதித்திருக்க வேண்டும்! அதன் பின் அவர் 'அன்பின் அவதாரமாகவே' மாறிவிட்டார்.

பதினைந்து ஆண்டுகள் சிறப்புற ஆசிரியர் பணியை நிறைவேற்றிய பின் ஏழைகளிலும் ஏழைகளாக இருப்போருக்கு தொண்டாற்ற புதிய இயக்கமொன்றை உருவாக்க விரும்பினார். மதவிதிகளுக்கு உட்பட்டு, தாம் பணியாற்றும் கிறிஸ்துவமத நிர்வாகத்தின் அனுமதியோடு அதை உருவாக்க எண்ணினார்.

அவரது இந்த வாழ்க்கைக் குறிக்கோளுக்கு முதலில் ஆதரவு கிடைக்காவிட்டாலும், அவரது உதிரத்தில் ஊறியிருந்த தொண்டு மனப்பான்மையை நன்கு உணர்ந்த ரோமின் போப்பாண்டவர் அவரது இயக்கத்திற்கு அனுமதி கொடுத்து கடிதம் எழுதினார்.

அனுமதி கிடைத்தவுடனேயே கல்கத்தா சேரிகளுக்குச் செல்லத் துடித்தார் அன்னை.

பாட்னாவில் மருத்துவப் பயிற்சிக்கான வகுப்புகள் சென்று அதில் தேர்வு பெற்ற பின் தனது லொரேட்டா சீருடைகளை களைந்து, மூன்று நீல நிற பார்டர்களுடன் கூடிய வெள்ளைப் புடவை அணிந்து அன்னை தெரஸாவாக மோத்திஜில் சேரிமக்களுக்கு பழக்கமானார்.

அன்னை தெரஸாவின் சமூக சேவை சிறிது சிறிதாக மக்களுக்குத் தெரிய வந்ததும் பல படித்த பெண்கள் அவரது இயக்கத்தில் இணைய முற்பட்டனர்.

அவரிடம் முதன் முதலாக தீட்சை பெற்ற சுபாஷிணிக்கு தனது இயற் பெயரான அக்னெஸ்ஸை (அக்னெஸ்தாஸ்) சூட்டி

## அன்னையால் பெருமை பெற்ற சில விருதுகள்

1. 'பத்மஸ்ரீ' - 1962 ஏப்ரல்
2. மாக்ஸேஸே விருது - 1962, ஆகஸ்ட் 31
3. குட் ஸமாரிட்டன் - 1971 செப்டம்பர்
4. கென்னடி சர்வதேச விருது - 1971
5. 'டாக்டர்' பட்டம் (அமெரிக்கா) - 1971 அக்டோபர்
6. ஜவஹர்லால் நேரு விருது - 1972 நவம்பர்
7. டெம்பிள்டண் விருது - 1972
8. ஸ்ரீமதி இந்திரா காந்தி விருது
9. இம்பிரியல் கெமிகல்ஸ் இண்டஸ் ரியஸ்விருது
10. போப் ஜான் (23 வயது) சமாதான பரிசு - 1971 ஜனவரி 6
11. ஓ.பி.இ (ஆர்டர் ஆஃப் பிரிட்டிஷ் எம்பயர்) - 1978 ஜூலை.
12. பால்ஸான் சர்வதேச விருது - 1979, மார்ச்
13. நோபல் பரிசு (சமாதானம்) - 1979 அக்டோபர் 16
14. பாரதரத்னா - 1980
15. யூனெஸ்கோ சமாதான கல்விப் பரிசு - 1992

மகிழ்ந்தார். சில நாட்களுக்கு முன்பு அவர் புற்று நோயால் உயிர் துறந்த செய்தியை பத்திரிகைகள் வெளியிட்டன.

1950ஆம் ஆண்டு அக்டோபர் ஏழாம் நாள் அவரது மிஷனேரிஸ் ஆஃப் சாரட்டி (Missionaries of Charity) என்ற கருணை இல்லம் அவரால் துவக்கப்பட்டது.

பின்னர் கல்கத்தா நடைபாதைகளில் அனாதைகளாக உயிர்விடும் மனிதர்களைக் கண்டு இரங்கிய அன்னை அதற்காக தனியிடம் அமைக்க வேண்டி நகராட்சியிடம் கேட்டுக் கொண்டார். அவர்கள் கொடுத்த தர்மசாலா 'நிர்மல் ஹரிதே' என்று பெயர் பெற்றது. இறக்கும் தறுவாயிலுள்ளவர்களுக்கு கருணை காட்டும் இல்லமாக விளங்கியது. அங்கு அவரவர் மதமுறைப்படி இறுதிச் சடங்குகளும் எளிய முறையில் நிறைவேற்றப்படுகின்றன.

அனைத்துக்கும் மேலாக அன்னை தெரஸாவை தெய்வத்திற்கு சமமாக உயர்த்தியது, அவர் தொழுநோயாளிகளை அரவணைத்து ஆற்றிய தொண்டுதான்.

உறவினர்களாலும், நண்பர்களாலும் கைவிடப்பட்ட அருவருப்பு மிக்க தொழு நோயாளிகளுக்காக அமைக்கப்பட்ட 'டிட்டகர் தொழு நோயாளி இல்லம்' இன்று கோயிலாக விளங்குகிறது.

சமூகத்தினால் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளுக்கு 'சிசுபவனம்' என்ற பெயரால் காப்பகம் இயங்குகிறது. குழந்தை கல்வி கற்கும் பருவம் வந்ததும் அவரால் அமைக்கப்பட்ட பாலபவனம் அந்த மேலான தொண்டை பார்த்துக் கொள்ளுகிறது.

இந்த சமூக அமைப்புகள் தொடர்ந்து செய்யும் பணியோடு புயல், புவி அதிர்ச்சி, வெள்ளப் பெருக்கு போன்ற இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்கள் நீக்கும் தொண்டிலும் அன்னை தெரஸா அவ்வப்போது ஆர்வத்தோடு ஈடுபடுகிறார்.

பங்களாதேஷ் போரில் அகதிகளாக வந்து குவிந்த மக்களுக்கு அவர் ஆற்றிய பணிக்கு உலகமெங்கும் பாராட்டுதல்கள் கிடைத்தது.

இன்று உலகமெங்கும் பரவியுள்ள 568 அறநிலைய கிளைகளில் சாதி, மத, இன வேறுபாடின்றி துயர் துடைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அன்னையின் நிர்வாகத் திறனுக்கு சான்றாக அவை விளங்குகின்றன. அங்கே அபயமளிக்கப்பட்டவர்கள் 'அன்னை தெரஸா எங்களுக்கு இறைவன் அளித்த வெகுமதி' என்று நன்றிப் பெருக்கோடு அவரைப் போற்றுகின்றனர்.

அவரது அமைப்புகளிலுள்ள பெண்துறவிகளின் முதல் பணி அதிகாலை ஐந்து மணியளவிலான பிரார்த்தனையோடு துவங்குகிறது. சோறு, பால், பயறு வகைகள் கொண்ட எளிய உணவை புசிக்கின்றனர். ''எளிய வாழ்க்கையை கடைப்பிடிக்காவிட்டால் கடவுளை எவ்வாறு நெருங்குவது?'' என்கிறார் அன்னை தெரஸா.

காரிருளில் சுடராக திகழும் அன்னையைக் குறிப்பிடும் போது பிரபல பத்திரிகையாளரும், எழுத்தாளருமான திரு. குஷ்வந்த் சிங் சொல்லுகிறார்:

''ஏழை, நோயாளிகளுக்கு வெறும் உபதேசம் சொல்பவரல்லர் அவர், அவர்களுடன் இணைந்து தமது வாழ்நாட்களை அவர்களுக்காக செலவிடுகிறார். தமக்கென்று எதுவும் சேர்த்து வைக்காமல் எளிய வாழ்வு நடத்துகிறார்.''

அன்னையின் அன்பு முகத்தை பார்த்ததுமே அவரது சீடராக மாறியவர்கள் பலர். மராத்திய நடிகை சசிகலா வாழ்க்கையில் வெறுப்புற்று அமைதி தேடியபோது அன்னையின் ஆசியினால் இன்று அவரது கல்கத்தா கருணை இல்லத்தில் பணியாற்றி வருகிறார்.

மத, இன, மொழி வேறுபாடுகளை கடந்து எல்லோரும் போற்றத் தக்க மனிதராக உயர்ந்திருப்பவர் அன்னை தெரஸா ஒருவர் தாம்.

அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற அன்னையின் உடல் நிலை 1983ஆம் ஆண்டு பாதிக்கப்பட்டது. இதய நோய் கண்டு பேஸ் மேக்கரும் பொருத்தப்பட்டது. ஆனால் அன்னை தமது உடல்நிலை பற்றி என்றுமே கவலை கொண்டதில்லை.



'பாரத் ரத்னா' விருது பெறுகிறார்

''எனது உடல்நிலை முக்கியமல்ல; அறப் பணிகள் தொடரவேண்டும்'' என்பார்.

1994ஆம் ஆண்டு அவர் தமது பொறுப்புகளை மற்றவரிடம் ஒப்படைக்க விரும்பினார். ஆனால் 126 நாடுகளின் 4400 கன்னிகா பெண்களும், சகோதரர்களும் கொண்ட குழு அவரையே 'ஸுப்பீரியர் ஜெனரல்' பதவியை தொடரப் பணித்தது. அண்மையில் சகோதரி நிர்மலா அவரது வாரிசாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பதவியேற்ற நிர்மலா ''நான் என்னை தலைவராகவே எண்ணவில்லை. தொடர்ந்து சிஷ்யராக பணியாற்றுவேன். அன்னைதான் என்றைக்கும் அன்னை. நாங்கள் அவரின் குழந்தைகள்'' என்றார்.

—செம்பூரான்

# தென்றல்

மங்கை வழங்கிய 'அழகுச் சிறப்பிதழ்' சிறப்பின் சிகரம்! பதிவான படைப்புகள் அத்தனையும் தேர்ந்த சுகந்தப் புதையல்! மொத்தத்தில் படித்து, பாதுகாக்கப்பட வேண்டிய கருத்துப் பெட்டகம்! பாராட்டுகிறேன்.

*'மங்கை'யின்*
*வாய்மையும் வெல்லும் - அகத்*
*தூய்மையும் வெல்லும்! - நம்*
*நெஞ்சத்தை கவர்ந்த 'மங்கை'*
*நீள் புவியில் நிலைத்து வாழ்க!*

***—கவிஞர் இடிமுரசார், சென்னை - 14.***

அழகுச் சிறப்பிதழில் தமிழ்ப் பெரியார் திரு.வி.க.வின் 'முருகு அல்லது அழகு' பற்றியும் அதில் அவர் அள்ளித் தெளித்திருந்த அழகுச் சொல்லோவியங்களையும் கூட எடுத்துக் காட்டியிருக்கலாமே!

மகளிர் மன்றம் தலைப்பில் மகளிருக்கான பாடத்தை அகிலா கிருஷ்ணனும், 'குழி பறிப்போம்' தலைப்பிலும் கருணை காட்ட முடியும் என்பதை கவிஞர் வேழவேந்தனும், இளங்கதிரின் துடிப்பை டி.எஸ். பாலுவும் கவிதைகளாக்கியதை இம்மாதத் 'தூறல்'களாக்கியது சிறப்பு.

***—கவிஞர் ஐயாறு வாசுதேவன், சென்னை - 4.***

அம்பாள் சிறப்பிதழை உணர்வு பூர்வமாகப் படித்தோம்; பக்தி பரவசத்தில் திளைத்தோம். கூடவே பகவான் ஸ்ரீ பாபாவின் அற்புதங்கள் நெஞ்சை நெகிழ வைத்தன.

***—பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணன் புதூர்.***

ஏப்ரல் மாத அம்பாள் சிறப்பிதழ் அருமை. அட்டைப் படத்தில் அம்மனின் தோற்றம் பக்திப் பரவசத்தில் பிரமிக்க வைத்தது...

***—சு. பொன்னிலா சேகர், பெங்களூர்***

அழகுச் சிறப்பிதழாக அமைந்து அசத்திய மே மாத மங்கை இதழின் தகவல்கள் சூப்பரோ சூப்பர்! இதழின் உள்ளே அழகின் சிறப்புகளை, அழகைப் பேணும் வரிகளையும் வெளியிட்டு அழகைப் பற்றி அற்புதமான கோணங்களில் அலசி ஆராய்ந்து, அட்டைப் படத்தையும் அசத்தலாக அளித்திருந்த விதத்தினால் - 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்ற பொன்(பழ)மொழியை என் உள்ளம் நினைவில் நிறுத்தியது!

***—சி. வைகுண்டநாதன், சென்னை - 17.***

அழகுச் சிறப்பிதழில் பக்கத்துக்குப் பக்கம் அழகு மிளிர்ந்தது. ஏராளமான அழகுக் குறிப்புகள், அழகுக் கட்டுரைகள் பயனுள்ளவையாயும் சிறப்பாகவும் இருந்தன. 'அழகுக்கு அழகு சேர்க்கும் உவமைகள்' மிக மிக அழகு. மொத்தத்தில் மே மாத மங்கை அழகு பொக்கிஷம்.

***—ஜி.ஏ. வேணா, சென்னை - 15.***

திரு ரமணி எழுதிய 'அழகு தெய்வம்' 'திருச்சீரலைவாய் முருகன்' ஆன்மீகக் கட்டுரையும் வண்ணப் படமும் என் போன்ற ஆன்மீகப் பிரியர்கட்கு சத்தூட்டம் மிகக் டானிக் ஆக விளங்கி வருவதால் மென்மேலும் வண்ணப் படத்தை (வாரி) வழங்க முயல வேண்டும்! செய்வீர்களா?

***—தமிழ்த் தென்றல், சென்னை - 12.***

மங்கையரின் அழகுக்கு மணி மகுடமாக விளங்கிய அழகு சிறப்பிதழை அளித்த மங்கையை மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

***மலர் மதிவாணன், சென்னை-12.***

ஏப்ரல் இதழ் அட்டைப் படமே தெய்வீக சக்தியைப் போற்றும் வண்ணம் அருமையாக இருந்தது. அங்கங்கே உள்ள கோயில்களைப் பற்றியும், அதில் உறையும் அம்பாள் தெய்வங்களைப் பற்றியும் நாங்கள் சென்று பார்க்காமலேயே தெரிந்து கொள்ளும்படி இருந்தது. வாசகர்களுக்கு பெரும் பாக்கியம். தங்கள் ஆன்மீக சேவைக்கு என் மனமார்ந்த நன்றி.

***—அஜாதா, புதுடெல்லி - 23.***

அம்பாள் சிறப்பிதழில் தெய்வீக மணம் கமழும் வண்ணம் பக்திரசம் சொட்ட கட்டுரைகளை படித்த போது மனதில், ஜகன்மாதாவை நினைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற உணர்வு பொங்கியது.

***—இரணியல் 'கலை', குமரிமாவட்டம்.***

கவிதைப் பகுதி கலையாக உள்ளது. 'தூறல்' மனம் நனைந்தது. வரம் வாங்கிய வார்த்தைகளின் வார்ப்பாக வலம் வரும் கவிதைகள் உள்ளம் தொடுகின்றன. வாடாத வாழ்த்துகள்.

***—என். மனோன்மணி சிவலிங்கம், கோவை - 11.***


**வியக்கத்தக்க ஆயுர்வேத சிகிச்சையினால் அதிக பலன் அடைதல்**



அன்பார்ந்த சகோதரிகளே

எங்களுடைய உண்மையான உழைப்பும், தொண்டும் மற்றும் இந்தத் துறையில் உண்மையான சிரத்தையையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். பல உள்ளூர் மற்றும் வெளியூர் நோயாளிகளால் நான் கௌரவிக்கப்பட்டுள்ளேன். எங்களுடைய சிகிச்சை சுத்தமான ஆயுர்வேத முறையினால் ஆனது. இம்முறையில் பலவித மூலிகைகள், தாதுக்கள் மற்றும் பலதரப்பட்ட பஸ்பங்களால் ஆனது. இவைகளை எங்கள் நோயாளிகளுக்கு அளிப்பதன் மூலம், அவர்கள் நல்ல பலனை அடைகிறார்கள். நாள்பட்ட வியாதிகளும் எங்கள் சிகிச்சை மூலம் பூரண குணமடைகிறது. உலகத்தில் எல்லா பாகங்களிலிருந்தும் எங்கள் சிகிச்சை முறையை கேள்விபட்டு நோயாளிகள் பல கடிதங்கள் எழுதுவது அதிகமாகி குவிந்த வண்ணம் உள்ளன.

Yours Well Wisher
JWALA PRASAD VAIDYA

## வெள்ளை தழும்புகள்

**முதல் கட்ட பரிட்சார்த்தமான சிகிச்சைக்கு இலவச மருந்து**

இந்த வெள்ளைத் தழும்புகளுக்கு சிகிச்சையே இல்லை என்பது மக்களுடைய ஏகோபித்த ஒத்த கருத்து. இது முற்றிலும் தவறு. எங்களுடைய சிகிச்சையை ஆரம்பித்த 24 மணி நேரத்திலேயே வெள்ளைத் தழும்புகள் படிப்படியாக நிறம் மாறுவதை கண்கூடாகப் பார்க்கலாம். சிகிச்சை எடுத்த சில நாட்களில் வெள்ளைத் தழும்பு முற்றிலும் மாறி தோல் பழைய நிலைக்கு வருவது திண்ணம். பரிட்சார்த்தமாக செய்ய எங்கள் முதல் சிகிச்சைக்கு மருந்து இலவசமாக அளிக்கப்படும். ஆண் பெண் இருபாலருக்கும் உள்ள வியாதிகள்.

## மூல வியாதி அறுவை சிகிச்சை அவசியமில்லை

இம்மூல வியாதி எங்கள் சிகிச்சையை ஆரம்பித்த உடனேயே நல்ல பலனை அளிக்கும். உள் மூலம், வெளி மூலம், ரத்தப்போக்கு இவைகள் முற்றிலும் படிப்படியாக குணமாகும். உங்கள் வியாதிக்கு விவரமாக எழுதவும்.

**சிகிச்சைக்கு விலை ரூ.172/- முதல் ரூ.455/- வரை, தபால் செலவு தனி.**

## குடல் வியாதி (Gastric)

உங்களுக்கு, குடல் மற்றும் வயிறு சம்பந்தமாக வியாதிகள் இருந்தால் எங்களை அணுகுங்கள். நாங்கள் மலச்சிக்கல், வயிற்றுப் புண், பசியின்மை, ஈரல் உபாதை மற்றும் குடல் சம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் சிகிச்சை அளிக்கிறோம். உங்கள் உபாதைகளை எங்களுக்கு தெளிவாக எழுதுங்கள். நாங்கள் தக்க சிகிச்சை அளிக்கிறோம். எங்களுடைய சிகிச்சையினால், பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் பலனடைந்துள்ளார்கள். நீங்களும் ஏன் இருக்கக்கூடாது. உடனே எங்களுக்கு எழுதுங்கள்.

## லூகோரியா (Leucorrhoea)

பெண்கள் வியாதி, வெட்டை சூடு, மாதவிடாய் கோளாறு இவைகள் ஆயுர்வேத வைத்திய முறையினாலதான் தீர்க்க முடியும். ஒருமுறை பரிட்சை செய்து பாருங்கள். உங்கள் வியாதி வியக்கத்தக்க அளவில் குணமாகும். பழைய ஆரோக்கியமும், அழகும் பொலிவுடன் பெறுவீர்கள்.

## தலைமுடி சம்பந்தமான சிக்கல்கள்

**தலைமுடி உதிர்தல், தலைநரை, தலை வழுக்கை**

இந்த வியாதிகள் வருவதற்கு மூல காரணம் உங்கள் தேக அசௌகரியமே. இதற்கு எங்களை அணுகி "Disease Test Paper for Hair Problems" என்ற சுற்றிக்கையை பெறுங்கள். அதில் கண்டுள்ளபடி நடவடிக்கை எடுங்கள். சிகிச்சையும் தொடரவும். எங்கள் ஆலோசனை இலவசம்.

**Sri Jwala Prasad Vaidya (Regd.)**
**54, KATRI SARAI - 805 105 (GAYA)**

# இசைத் தொண்டு

"புனிதமும் தெய்வீகமும் பொருந்தி கடவுளையே நிகர்த்திருப்பதாகும் இசைக் கலை. நமது இதயத்தைக் கடவுள் பால் உயர்த்தவும், கடவுள் படைத்த படைப்புகளின் எழிலிலும், புகழிலும் ஓரளவையாவது நாம் உணரவும் தான் இயேசுநாதர் நமக்கு இசையினை வழங்கியுள்ளார்" என்றார் **சார்லஸ்** கிங்ஸ்லி என்னும் அறிஞர்.

அந்த அறிஞரின் மொழிக்கு ஏற்ப, இசையையே தம் வாழ்வாகக் கொண்டு பணியாற்றி வருபவர் **அருட்தந்தை பி.டி. செல்லத்துரை** அவர்கள். பரபரப்பாக எந்நேரமும் இயங்கிக் கொண்டிருக்கும் பாரிமுனையில்தான், காலை முதல் மாலை வரை தெய்வீக இசையை இளைய நெஞ்சங்களில் அரங்கேற்றும் அமைதிப் பணி யையும் ஆற்றிக் கொண்டிருக்கிறது **தமிழிசைக் கல்லூரி**. (இயங்கும் இடம்: இராஜா அண்ணாமலை மன்றம்.) இந்தக் கல்லூரியில் முதல்வ ராக இருப்பவர் அருட்தந்தை செல்லத்துரை. இவரைப் பற்றிச் சில வரிகள்...



**டாக்டர் ஏ.சி. முத்தையா**

கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த இவர் 1953–ஆம் ஆண்டு இயேசு சபையில் சேர்ந்தார். எம்.ஏ., பி.எட்., பட்டங்கள் பெற்ற இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1971-இல் இந்திய இசையில் பட்டயம் பெற்றார். பின்னர், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் பயின்று 1976-இல் 'சங்கீத வித்துவான்' பட்டயம் பெற்றார். இத்தாலியன் பல்கலைக் கழகம் 1987-இல் இவருக்கு டி.லிட்., பட்டம் வழங்கியது.

இசைக்கருவூலங்களாகத் திகழும், 'கர்னாடக இசையில் ராகங்கள்', 'தென்னகை இசையியல்' ஆகிய இசை நூல்களைப் படைத்துள்ள இவர் 'The Splendour of South Indian Music', என்னும் ஆங்கில நூல் ஒன்றையும் படைத்துள்ளார். 'கீதாலயத்தேனருவி', 'கீதாலய கீர்த்தனைகள்' (பகுதி 1.2) ஆகிய ஒலி நாடாக்களையும் வெளியிட்டுப் பெருமை பெற்றுள்ளார். (1995) தமிழக அரசு 'கலைமாமணி' விருது வழங்கி இவரைக் கவுரவித்தது.



**திரு. பி.டி. செல்லத்துரை**

கடந்த 25 ஆண்டுகளாக, இவர் கிறித்தவ மாணவர்களுக்காக 'மே' மாதத்தில் கோடை இசைப் பள்ளி நடத்தி இசைக் கொடை கொடுத்து, நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குக் கலப்பற்ற கர்னாடக இசையில் பயிற்சியளித்து, தமிழ் நாட்டிலுள்ள ஆலயங்களிலும், கிறித்தவ நிறுவனங்களிலும், கர்னாடக இசை என்னும் செவ்விய தமிழிசை முழங்க அரும்பாடுபட்டு வரும் இவர் "தெய்வீகத் தமிழிசை தேசமெங்கும் ஒலித்திட வேண்டும்" என்பதையே இலட்சியமாகக் கொண்டு உள்ளார். தம் இலட்சியம் நிறைவேற, தமிழிசைக் கல்லூரி முதல்வர் பொறுப்பு நல்லதொரு வாய்ப்பு என்றும் மகிழ்வுடன் கூறுகிறார்.



தமிழிசைச் சங்கத்தின் சார்பில் இயங்கும் தமிழிசைக் கல்லூரி பற்றிச் சங்கத்தின் உதவிச்செயலாளர் **எம். இராமையா** அவர்களைக் கேட்ட போது அவர் கூறினார்...

"தமிழிசையை வளர்த்து மிக உச்ச நிலையில் வைக்க வேண்டும்" என்னும் தணியாத ஆர்வத்தால் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் தொடங்கப்பட்டதே தமிழிசைக் கல்லூரி. முதலில் மாலைக் கல்லூரியாகத்தான் 1943-இல் அது தொடங்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பகல் நேரக் கல்லூரியும் தொடங்கப் பெற்று சிறப்பாக இயங்கி வருகிறது. அதற்குக் காரணம் டாக்டர் எம்.ஏ. சிதம்பரம் அவர்களும், டாக்டர் ஏ.சி. முத்தையா அவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சிகள். மேலும் தமிழிசைச் சங்கத் தலைவர் டாக்டர் பு.ரா. கோகுலகிருஷ்ணன் அவர்களின் வழிகாட்டலும், மற்றுமுள்ள பெரியோர்களின் துணையும் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக உள்ளன.

பகல் கல்லூரியில் குரலிசை, தேவாரம், நாகசுரம், தவில், பரத நாட்டியம் ஆகியவை கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இவற்றில் சேரக் கல்வித் தகுதி, எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பதின்மூன்று முதல் பதினெட்டு வயதுவரை ஆண், பெண் எவரும் சேரலாம். கட்டணமாக ஆண்டுக்கு ரூ. 150/- மட்டுமே கட்டச் சொல்கிறோம். மாலைக் கல்லூரியில் சேர்ந்திட ரூ. 100/- மட்டுமே. இதில் குரலிசை, தேவாரம், தவிர வயலின், மிருதங்கம், வீணை ஆகியவை கற்றுக் கொடுக்கப்படுகின்றன. நாகசுரம், தவில் மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை உண்டு. தவிர, அவருக்கு ஆண்டு தோறும் ரூ. 1,500/- உதவித் தொகை வழங்குகிறோம். மாலைக் கல்லூரியைப் பொறுத்த அளவில் வயது வரம்பு கிடையாது. நேரமும் மாலை 5.15 முதல் 7.15 மணி வரைதான். இதனால், இருபது வயதிலிருந்து அறுபது வயது வரை பல பிரிவினரும் உற்சாகத்துடன் இசை கற்றுக் கொள்ளுகிறார்கள். வெளிநாட்டவரும் ஆர்வத்துடன் கற்க வருகிறார்கள். 'இசைப் பேரறிஞர்' டாக்டர் சீகாழி கோவிந்தராஜன் அவர்கள், இந்தக் கல்லூரியில் பயின்றவர்தான் என்றால், அதற்கு மேல் என்ன சொல்ல...!

ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதத்தில் மாணவர்களைச் சேர்க்கிறோம். விரிவான விளக்கங்களுக்கு:

***முகவரி:*** *தமிழிசைக் கல்லூரி, இராஜா அண்ணாமலை மன்றம், சென்னை - 600 108. (தொலைபேசி எண் 5341958)*

**—குடந்தை பாலு**

# திரைத் தமிழ்க் கவிஞர்களில் பெண்கள் அபூர்வமானது ஏன்...?

**உவமைக் கவிஞர் சுரதா**

''1934இல் ஒரு பெண்மணி, திரைப் படத்திற்கு கதை, வசனம், பாடல், நடிப்பு, இயக்கம் என்று சாதனை படைத்தார். அவர் பெயர் டி.பி. ராஜலெட்சுமி.

அதற்கு அடுத்து 1939ல் மீனாட்சி என்பவர், ஒரு படத்தில் பாடல் எழுதினார். பாடகி கே.பி. சுந்தரம்பாளும் பாடல் எழுதியுள்ளார். பின் ரோசனா பேகம் என்பவர் 'குங்குமப் பொட்டின் மங்களம்' என்ற ஒரு அற்புதமான பாடலை எழுதினார். தற்போது 'ஓம் சரவண பவ' என்ற படத்திற்கு கதை, வசனம் எழுதியதோடு அந்தப் படத்தில் ஐந்து பாடல்களையும் எழுதியிருக்கிறார்,அரசு மணிமேகலை.

நிறைய பெண்கள் நன்றாகவே சிந்திக்கிறார்கள். கவிதைகள் எழுதுகிறார்கள். தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும் தமிழ் மொழி



தெரியாத ஒரு நடிகைக்காக வெளி நாட்டிற்கு பறப்பதும், பஸ் ஸ்டான்டு, பீச், கல்லூரி, கடை வீதி என்று அலைந்து புதுமுகத்தைத் தேடுவது போல் யாரும் கவிஞர்களைத் தேடி அலைவது இல்லை என்பதுதான் உண்மை.

எத்தனையோ பெண் கவிஞர்கள் கவியரங்குகளில் தினமும் தோன்றுகிறார்கள். அப்படி கவியரங்கம் நடக்கும் இடங்களுக்கு இசையமைப்பாளர்களும், இயக்குநரும், தயாரிப்பாளரும் செல்ல வேண்டும். அங்கே கவிஞர்கள் பேசுவதில் சிறந்த வரிகளை எடுத்துக் கொள்ளலாம். அதற்காக அவர்களுக்கு ஒரு தொகையினையும் கொடுக்கலாம்.

மேலும் ஒருவரே ஒரு படத்திற்குரிய பாடல்களை எழுத வேண்டியது இல்லை. ஏன்? ஒருவரே ஒரு பாடலை எழுத வேண்டும் என்பதும் இல்லை. ஒரு பெண்ணிற்கு பல்லவி நன்றாக எழுத வரும், வரலாம். வேறு ஒரு பெண்ணிற்கு சரணம் சரளமாக வரலாம். அப்படி வருவதை எல்லாம் வாங்கி இணைத்துக் கொள்ளலாம். இது நடைமுறையில் சாத்தியமான ஒன்றுதான்.

நான் சொல்வது ஒன்றும் புதியதும் இல்லை. 'வெண்பா இரட்டையர்' என்று இருவர் இருந்து, முதல் அடி இரண்டை ஒருவரும், இறுதி இரண்டடியை மற்றொருவரும் இதே முறையில்தான் பாடியிருக்கிறார்கள்.

அவ்வளவு ஏன்? 'அபலை அஞ்சுகம்' என்று ஒரு படம். அதில் ஒரு பாடல்.

*''வெண்ணிலா குடை பிடிக்க*
*வெள்ளி மீன் தலையசைக்க*
*விழிவாசல் வழிவந்து*
*இதயம் பேசுது...''*

என்ற பாடல் இன்னும் தொடரும். இந்த பல்லவியை மட்டுமே நான் எழுதினேன்.

சரணங்களை உடுமலை நாராயண கவி எழுதினார்.

இந்தப் பாடல் சரியாக அமையவில்லையா? இல்லை மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லையா?

வீட்டிற்குத் தேவையான பொருள்களை ஒரே கடையிலேயா வாங்குகிறோம்?

அரிசி ஓர் இடம், பழம் ஓர் இடம், காய் ஓரிடம், மேஜை ஓர் இடம், வானொலிப் பெட்டி ஓரிடம் இப்படித்தானே வாங்குகிறோம். இதே நிலையில் பாடல்களையும் இணைக்கலாமே!

இப்படி கூட்டு முயற்சியில் ஈடுபடும் போது, நல்ல பாடல்கள் மக்களுக்குக் கிடைத்து விடுமே!

மேலும் பெண்கள் கூச்ச சுபாவம் கொண்டவர்கள். அவர்கள் கூட்டத்தில் அமர்ந்து எழுதத் தயங்குவார்கள். அதனால் அவர்களிடம் முதலில் பாடல் படத்தில் இடம் பெறும் இடத்தையும், சூழ்நிலையையும் விளக்கிக் கூறி எழுதச் சொல்லலாம்.

பலரை பல்லவி எழுதச் சொல்லி, தேர்வு முறையில் கூட தேர்ந்து எடுக்கலாம்.

அந்த காலத்திலிருந்தே அணுகுமுறை சரியாக இருந்திருந்தால் இன்று பல பெண் கவிஞர்கள் திரைப்படத்தில் தோன்றி இருப்பார்கள் என்பது தான் உண்மை!

**கவிஞர் சந்திரா ராஜசேகர்**

சினிமா பாடல்கள் என்பது மனிதனைப் பெரிதும் கவர்ந்து, அவர்கள் மனதைத் தொடும் ஓர் உன்னதம். பல சினிமா பாடலகள் மக்கள் மனதில் நல்ல மாற்றத்தையும், சமுதாய மாற்றத்தையும் உருவாக்கியிருக்கின்றது.

வாழ்க்கையின் அர்த்தத்தை உணர்த்திய தத்துவப் பாடல்கள் ஏராளம். வாழ்வியலின் சகல உணர்வுகளையும் சினிமாப் பாடல்கள் சித்தரித்திருக்கிறது.

இதில் பெண்மை பல்வேறு வகைகளில் படைக்கப் பெற்றிருக்கிறது.

காலப்போக்கில் வர்ணனைகள் எல்லை மீறி ஆபாசமாக மாறி விட்டிருப்பதுதான் இப்போதைய வருத்தம்.

இந்தச் சூழ்நிலையில், பெண்கள் பாட்டெழுத வருவது சற்று கடினமான ஒன்றே. எனக்கு ஏற்பட்ட அனுபவம்... இப்படித்தான்...



'நீலா - மாலா' தொடர், 'சவால் காரன்', 'வீட்டுக்கு ஒரு பராசக்தி' மற்றும் சில மொழி மாற்றுப் படங்களுக்கு பாடல்கள் எழுதிய எனக்கு, ஒரு புகழ் பெற்ற இயக்குநரின் நேரடி தமிழ்ப் படத்திற்கு பாடல் எழுதும் வாய்ப்பு வந்தது.

கல்லூரி மாணவன் தன்னோடு படிக்கும் மாணவியைக் கேலி செய்து பாடுவதாக காட்சி... முதலில் எழுதினேன். 'பாடல் ரொம்ப நன்றாக இருக்கிறது. ஆனால், இன்னும் கொஞ்சம் கிளுகிளுப்பாக, கிண்டல் செய்யலாமே' என்றார்கள். திரும்ப எழுதிக் கொடுத்தேன். 'கொஞ்சம் ஆங்கில வார்த்தைகளைப் போட்டு எழுதினால்... இன்னும் நன்றாக இருக்கும்' என்றார்கள்.

அதுபோல் கொஞ்சம் ஆங்கிலம் கலந்து எழுதிக் கொடுத்தேன்.

ஒரு சில பாடல்களை காண்பித்து அதுபோல், இதுபோல் இருந்தால் நன்றாக இருக்கும் என்றார்கள். அது என்னால் முடியாது என்று வந்துவிட்டேன்.

கிண்டலும் அழகுதான். ஆனால் அதற்கொரு எல்லையுண்டு. ஒரு பெண்ணாக, தாயாக இருந்து கொண்டு, சக தோழியை தோலுரித்துப் பார்க்க என்னால் முடியவில்லை.

நல்ல காதல் பற்றியும், தத்துவப் பாடல்களையும் ஒரு பெண்ணால் எழுத முடியும்.

ராஜம் - இதழில் தலையங்கத்தில் நான் எழுதிய சில வரிகளை சற்றே மாற்றி, ஒரு பள்ளியின் பாடலாகப் பாடினார்கள். அழகாக இருந்தது. ஆனால், பொதுவாக சினிமா உலகம் ஆண்கள் உலகம். பல ஆண்கள் சுற்றி அமர்ந்து - மெட்டுக்கு இப்படி இப்படி வரிகள் இருக்க வேண்டுமென்று சொல்லி பல மணி நேரம்... அமர்ந்து எழுதும் போது சற்றே சங்கடம்தான்.

இப்படிச் சில சிரமங்கள்... பெண் என்பதால் சந்திக்க நேர்கிறது... இதனால்தான் பெண்கள் சினிமாவிற்கு பாடல் எழுத முன் வருவது இல்லை.''

*பேட்டி* **—பாபநாசம் குறள்பித்தன்**

# கணவரால் பெற்ற பெருமை

## திருமதி சங்கீதா அசோக்குமார்

"எம்.பி.பி.எஸ். படித்து எம்.எஸ் பட்டம் பெற்று 20 ஆண்டுகளுக்கு மேலாக மருத்துவ சேவை செய்து வரும் என் கணவர் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஆபரேஷன்களை வெற்றிகரமாக செய்து தொடர்ந்து அறுவை சிகிச்சைகளை செய்து வருபவர். நரிக்குறவர்களுக்கும் ஏழைகளுக்கும் இலவச மருத்துவ சேவை செய்து வருகிறார்.

டாக்டராக இருந்தாலும் தமிழ் மீது தீராத பற்றுக் கொண்டவர் என் கணவர்.

மன்னையில் இலக்கிய வட்டம் ஒன்றை ஆரம்பித்து கலைவாணி சபா தலைவராக தமிழ் அறிஞர்கள் பேச்சாளர்கள் பலரை மன்னைக்கு வரவழைத்து இலக்கிய சொற்பொழிவு ஆற்ற வைத்து வருகிறார்.

பல பட்டிமன்றங்களில் உரையாற்றியும் நடுவராக இருந்தும் வருகிறார். சமீபத்தில் பாண்டிச்சேரி இலக்கிய கழகத்தில் 'என் பார்வையில் கம்பன், காளிதாசன், கண்ணதாசன்' என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றி 'இன்சொல் வேந்தர்' என்ற சிறப்பு பட்டம் பெற்றார். நாடக குழு ஒன்று அமைத்து மன்னையிலும், சுற்றி உள்ள கிராமங்களிலும் இலவசமாக புராண நாடகங்கள் நடத்தி வருகிறார். திருச்சி வானொலி நிலைய நாடக நடிகர் ஆகவும் இருக்கிறார்.

பதின்மூன்று வருடங்களாக லயன்ஸ் கிளப்பில் இருந்து பல்வேறு பதவிகளை வகித்து மக்கள்சேவை மூலம் உயர்ந்து இன்று பதினாறு லயன்ஸ் கிளப்புகளின் பொறுப்பில், லயன்ஸ் கிளப் 324ஏ2 ரீஜனல் சேர்மனாக தொண்டாற்றி வருகிறார். மண்டல மகாநாட்டினை சிறப்பாக நடத்தி பெயர் பெற்றார்.

மன்னார்குடியில் நடந்த இந்தபெரிய மகாநாட்டில்திரைப்பட இயக்குநர் விசு அவர்கள் பங்கு பெற்று என் கணவரின் கலை மற்றும் பொது சேவைகளை பெரிதும் வாழ்த்திப் பேசினார். லயன்ஸ்மூலமாக கண் ஒளி திட்டங்களை நன்கு செயல்படுத்தி உள்ளார்.

தனிப்பட்ட முறையில் ஏழை... எளிய பள்ளி மாணவர்களுக்கு ஆண்டு தோறும் நோட்டு புஸ்தகங்கள், யூனிபார்ம் அளித்து வருகிறார். சி.ஏ.கே டிரஸ்ட் துவங்கி உதவும் திட்டமும் உண்டு.

*''மதி என்ற அனாதைக் குழந்தையை ஆஸ்பத்திரியில் பார்த்து அவனை 'வளர்ப்பு மகன்' ஆக்கி, எங்கள் குழந்தைகள் தீபக், ஆர்த்தி போல வளர்த்து, படிக்க வைத்து என்ஜினியர் ஆக்கி பிசினஸ் துவங்கி வைத்து எனது உறவினர்பெண்ணையே மதிக்கு திருமணமும் செய்து வைத்தோம். என் கணவர் பொதுத் தொண்டிற்கு முழு ஒத்துழைப்பு தந்து வருகிறேன்.''*







சங்கீதா கூறி முடித்ததும் தன் மனைவியின் சேவைகள் பற்றி டாக்டர் அசோக் குமார் சொன்னார்.

*''எனது சேவைகளின் வெற்றிக்கு மூல காரணமே என் மனைவி சங்கீதாதான். அவளும் மிக சிறந்த சமூக சேவகியாக திகழ்கிறாள். 'மன்னை மங்கையர் மன்றம்' தலைவியாக, லயன்ஸ்கிளப் தலைவியாக பல சமூக சேவைகளை செய்து இருக்கிறாள், பார்வையற்ற கல்லூரி மாணவருக்கு உதவி புரிந்துள்ளாள். பெண்கள் உயர்விற்காகவும், உழைத்து வருகிறாள்.''*



MJE-062 F exc B hv#85

# வெந்தயக் கீரையில் விதவிதமான உணவுகள்



வயிற்று நோய்கள் உடல் சூடு, நீரிழிவு போன்ற பல வியாதிகளுக்குக் கண் கண்ட மருந்தாக திகழும், வெந்தயக் கீரையை வைத்து பல விதமான உணவுகளைத் தயாரிக்கலாம்.

## வெந்தயக் கீரை புலாவ்

***தேவையானவை:***

வெந்தயக்கீரை - 3 கிண்ணம்
மெல்லிய அரிசி - 1/2 கிலோ
கடுகு - 1/4 ஸ்பூன்
தனியா - 1/2 ஸ்பூன்
சீரகம் - 1/2 ஸ்பூன்
பச்சை மிளகாய் - 3
தேங்காய்ப் பால் - 1 கரண்டி
நெய் - 1 கரண்டி
ருசிக்குத் தேவையான உப்பு

***தயாரிக்கும் முறை:***

அரிசியைக் கழுவி சுமார் 20 நிமிடம் ஊற வைக்கவும். கீரையை வாணலியில் போட்டு உலர வைக்கவும். எண்ணை தண்ணீர் எதுவும் போடாமல் மிக மெல்லிய சூட்டில் வாணலியில் போட்டு கரகரப்பாக செய்து எடுக்கவும்.

கீரையை முதல் நாளே ஆய்ந்து சுத்தமாக கழுவி ஈரம் உலரும்படி துணி மீது பரவலாக போட்டு எடுத்து வைக்கவேண்டும்.


கடுகு, தனியா, சீரகம் மூன்றையும் வறுத்து தூள் செய்து வைக்கவும்.

20 நிமிடம் ஊறும் அரிசியின் அளவில் இரண்டு பங்கு தண்ணீர் கொதிக்க வைக்கவும். அரிசியை வடித்து போட்டு உப்பு, மஞ்சள் தூள் போட்டு கிளறி மூடி வைக்கவும். தேங்காய்ப் பால் ஊற்றவும்.

நெய்யில் பச்சை மிளகாயை பொரித்து நெய்யுடன் போடவும். தூள் செய்து வைத்துள்ள மசாலா போட்டு மூடி வைக்கவும்.

அரிசி வெந்ததும் கரகரப்பாக செய்து வைத்த வெந்தயக் கீரையை கைகளிலேயே தூளாக்கி சூடான சாதத்தின் மீது உதிர்த்து ஒரே ஒரு முறை கிளறி மூடி வைக்கவும். சுமார் 5 நிமிடங்கள் கழித்து ஆறு பேருக்கு பரிமாறலாம்.





## வெந்தயக் கீரை பக்கோடா

***தேவையானவை:***

வெந்தயக் கீரை - 1 1/2 கிண்ணம்
கடலை மாவு - 1 கிண்ணம்
அரிசி மாவு - 1 1/2 டேபிள் ஸ்பூன்
மிளகாய்த் தூள் - 1/2 ஸ்பூன்
புளித்த தயிர் - 1 கரண்டி
உப்பு ருசிக்கு
நிலக்கடலை பருப்பு - 3 ஸ்பூன்

***தயாரிக்கும் முறை:***

இரண்டு மாவுடனும் உப்பு, நிலக்கடலையை ஒன்றிரண்டாக உடைத்து போட்டு மிளகாய்த் தூள், தயிர் கலந்து (விரல்களால்) வைக்கவும். வெந்தயக் கீரையையும் சேர்த்து கைக்கு ஒட்டாமல் பிசறி வைக்கவும். மிகவும் உதிர்ந்தால் கொஞ்சமாக நீர் தெளித்து கொள்ளவும்.

அழுத்தி உருட்டாமல் பக்கோடா தயாரிப்பது போலவே கொஞ்சம் கொஞ்சம் மாவை சூடான எண்ணையிலிட்டு கரகரப்பாக பொரித்தெடுக்கவும்.

(கீரையை நறுக்கிப் போட்டு அல்லது அழுத்தமாக பிசைவதால் சாறு வெளியேறி கசப்பு வந்துவிடும்.)

## வெந்தயக் கீரை தட்டை

***தேவையானவை:***

வெந்தயக் கீரை - 1 கிண்ணம்
உருளைக் கிழங்கு - 2
பொட்டுக் கடலை மாவு - 1 1/2 ஸ்பூன்
அரிசி மாவு - 1 கரண்டி
நெய் - 1 ஸ்பூன்
மிளகாய்த் தூள் - 1 ஸ்பூன்
உப்பு - ருசிக்கு
எள்ளு - 1 ஸ்பூன்
பொரிக்கத் தேவையான எண்ணை.

***தயாரிக்கும் முறை:***

உருளைக் கிழங்கை வேக வைத்து துருவிக் கொள்ளவும். கீரையைத் தவிர மற்ற சாமான்களை உருளைக் கிழங்கு துருவலுடன் சேர்த்து கலக்கவும்.

கீரையை கடைசியில் சேர்த்து சிறு உருண்டைகளாக உருட்டி ப்ளாஸ்டிக் பேப்பரில் தட்டி சூடான எண்ணையில் போட்டு பொரித்தெடுக்கவும்.

## வெந்தயக் கீரை தக்காளி கோஃப்தா

**தேவையானவை:**

| | | |
|---|---|---|
| வெந்தயக் கீரை | - | 2 கிண்ணம் |
| பழுத்த தக்காளி | - | 1/2 கிலோ |
| பனீர் | - | 1/2 கிண்ணம் |
| (சோம்பு | - | 1/2 ஸ்பூன் |
| பட்டை | - | 1 துண்டு |
| பூண்டு | - | 3பல் |
| இஞ்சி | - | 1/2 அங்குலம் |
| மிளகாய் | - | 4 |
| வெங்காயம் | - | 1 |

எல்லாவற்றையும் சேர்த்து அரைக்கவும்.


உப்பு ருசிக்கு

டால்டா அல்லது நெய் - 1 கரண்டி

**தயாரிக்கும் முறை:**

தக்காளியை அரைத்து கெட்டியான சாறாக எடுத்து வைக்கவும். அரைத்த மசாலாவை நெய்யில் பொன்னிறமாக வதக்கிக் கொள்ளவும். அத்துடன் பனீரை குழைவாக்கி சேர்க்கவும். வெந்தயக் கீரையை மசாலா பனீர் கலவையில் கிளறி ஈரமில்லாமல் கலந்து வைக்கவும். இக்கலவையை ஆற வைத்து சிறு சிறு வடைகளாகத் தட்டி வைக்கவும்.

தக்காளிச் சாறை ஃப்ரையிங் பானில் ஒரு



ஸ்பூன் நெய் சேர்த்து கொதிக்க விடவும். 1 கிணணம் தண்ணீர் ஊற்றி மீண்டும் கொதி வந்ததும் தட்டி வைத்த கோஃப்தாக்களை போட்டு வேக வைக்கவும்.

குறிப்பு தட்டிய கோஃப்தாக்களை ப்ரெட் தூளில நன்றாக பிரட்டி எடுத்து எண்ணெயில் பொரிதது தக்காளிச் சாறில் போட்டும் தயாரிக்கலாம

## வெந்தயக் கீரை டிஸ்க் ரோல்ஸ்

**தேவையானவை:**

| | | |
|---|---|---|
| வெநதயக் கீரை | - | 2 கிண்ணம் |
| உருளைக்கிழங்கு | - | 2 |
| வெண்ணை | - | 1 ஸ்பூன் |
| மைதா மாவு | - | 150 கிராம் |
| கோதுமை மாவு | - | 50 கிராம் |
| ரவை | - | 50 கிராம் |
| சீரகம் | - | 1 ஸ்பூன் |
| பெருங்காயம் | - | சிறிதளவு |
| பச்சை மிளகாய் | - | 3 |

உப்பு ருசிக்கு

நிறத்துக்கு மஞ்சள் தூள் - 1/2 ஸ்பூன்

பொரிக்கத் தேவையான எண்ணை.

**தயாரிக்கும் முறை:**

உருளைக்கிழங்கை வேக வைத்து உரித்து



மசித்து வைக்கவும். சீரகம், பெருங்காயம், பச்சை மிளகாய், உப்பு இவற்றை அரைக்கவும். இத்துடன் மசித்த உருளைக்கிழங்கையும், வெந்தயக் கீரையையும் கலந்து வைக்கவும்.

ரவை, மைதா மாவு, கோதுமை மாவு, சிறிது உப்பு, மஞ்சள் சேர்த்து மிருதுவாக கலக்கவும். வெண்ணை நீர் இரண்டையும் போட்டு பிசையவும். கையில் ஒட்டாமலும் மிருதுவாக இருக்கவும் நன்றாக அடித்து பிசைய வேண்டும்.

இதை நான்கு பிரிவாக பிரித்துக் கொள்ளவும். ஒவ்வொரு பிரிவையும் அப்பளமிட்டு எண்ணை தடவி வைக்கவும். உருளைக்கிழங்கு கலவையை அப்பளத்தின் மீது பரவலாக சமமாக பரப்பவும். இதை பாய் போல சுருட்டவும்.

இதை அரை அங்குல பருமனான (டிஸ்க்) வில்லைகளாக துண்டுகளாக்கவும். சூடான எண்ணையில் போட்டு சிவக்க பொரித்து எடுக்கவும் சுவை மிகுந்த இது ஒருவாரமானாலும் கூட கெடாது

## வெந்தயக் கீரை பிஸ்கட்

**தேவையானவை:**

| | | |
|---|---|---|
| வெந்தியக் கீரை | - | 2 கிண்ணம் |
| மைதா | - | 3 கிண்ணம் |

(இரண்டு முறை சலிக்கவும்)

| | | |
|---|---|---|
| பச்சை மிளகாய் | - | 5 |
| உப்பு | - | 1 1/2 ஸ்பூன் |
| சீரகம் | - | 2 ஸ்பூன் |
| பெருங்காயம் | - | 1/4 ஸ்பூன் |
| வெண்ணை | - | 100 கிராம் |
| சோடா பை கார்ப் | - | 1/2 டீஸ்பூன் |
| பால் | - | சிறிதளவு |

**தயாரிக்கும் முறை:**

வெண்ணை, உப்பு, சோடா பை கார்ப் மூன்றையும் நுரை வருமாறு குழைக்கவும். பச்சை மிளகாயை அரைத்து போடவும். சீரகத்தை ரவை போல தூளாக்கி போடவும்.


இரண்டு முறை சலித்து வைத்துள்ள மைதா மாவை தூவி விரல்களால் வட்டமாகச் சுழற்றி கலக்கவும். பாலை கொஞ்சம் கொஞ்சமாகத் தெளித்து பிசையவும். வெந்தயக் கீரையை அரிந்து போட்டு மாவில் கலக்கும்படி மிருதுவாக சேர்த்து பிசையவும்.

சுமார் 1 செ.மீ. பருமனான அப்பளமிட்டு பிஸ்கெட் கட்டரில் வெட்டி சுமார் 30 நிமிடம் பேக் செய்யவும். கமகமவென மணம் வந்ததும் எடுக்கவும்.

## வெந்தயக் கீரை பராட்டா

**தேவையானவை:**

| | | |
|---|---|---|
| வெந்தயக் கீரை | - | 3 கிண்ணம் |
| கோதுமை மாவு | - | 1 கிண்ணம் |



| | | |
|---|---|---|
| கடலை மாவு | - | 1/2 கிண்ணம் |
| மைதா மாவு | - | 1/2 கிண்ணம் |
| மிளகாய்த் தூள் | - | 1 ஸ்பூன் |
| உப்பு ருசிக்கு | | |
| பெருங்காயம் | - | 1 ஸ்பூன் |
| ஓமம் | - | 1 ஸ்பூன் |
| எண்ணை | - | 1/2 கரண்டி |

**தயாரிக்கும் முறை:**

எல்லாவற்றையும் சேர்த்து பிசைந்து சுமார் 15 நிமிடம் ஊற வைக்கவும். மாவைத் தொட்டு அப்பளமிட்டு தோசைக் கல்லில் போட்டு வேக வைக்கவும். பரிமாறும் போது தக்காளி ஸாஸ், தயிர்ப்பச்சடி இரண்டுடனும் பரிமாறவும்.

—பிரேமா ராவ், பெங்களூர்-85.

குறுந் தொடர்கதை

# ஏழு ஸ்வரங்களுக்குள்...

அம்மா அப்பாவின் நினைவு அப்படியே குன்ற வைத்தது.

''என்ன சாரு, பாடலையா?''

''ம்... பாடறேன். என்னமோ நினைவு''

சொன்னதுடன் நில்லாமல், மீண்டும் பழைய நினைவுக்கே மனசு குரங்கு தாவும் கிளையாக வளைந்து ஆடியது. அப்பாதான் வந்தார் மீண்டும்.

''சாரும்மா''

''என்னப்பா?''

''சொல்றேன்... இப்படி உட்கார்''

நாகம்மா, தன்னறையில் இருந்தாலும் கவனம் கூடத்தில் அப்பாவும், மகளும் பேசுவதிலேயே இருந்தது. சாரு அப்பாவின் முகத்தையே பாத்தாள். மீண்டும் கேட்டால் அப்பாவுக்குப் பிடிக்காது. அப்பா சற்று நேரம் விட்டத்தையும் நிலத்தையும் மாறி மாறி வெறித்தார்.

சாருவும் ஜன்னல் வெளியைத் தொட்டுக் கொண்டிருக்கும் ரோஜா மொட்டுக்களையே பார்த்தாள். இதில் நாளைக்கு எத்தனை மொட்டுக்கள் மலரும்...

''ஒண்ணு, ரெண்டு... மூணு''

''சாரு, உனக்கு ஒரு அம்மாவை கொண்டுவரலாம்னு இருக்கேன்''

குப்பென்று நெஞ்சில் ஒரு அடைப்பு. சுதந்திரமாக அவள் நடந்த இடத்தில் கட்டுப்பாடு செய்ய ஒருத்தியை அப்பா கொண்டு வரப் போகிறாரா? யார் சொன்னாலும் அப்பா கேட்க மாட்டார்.

''என்னம்மா பதில் சொல்லலே?''

''எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியல்ல அப்பா... நீங்க எது பண்ணினாலும் சரியாத்தான் இருக்கும்.''

''சரி... அந்த அம்மா யார்னு கேட்கல்லையே?''

''யாருப்பா?''

''நம்ம வீட்ல குடி இருக்கிற நாகா டீச்சர்தான்''

அடி வயிற்றில் பந்தாகச் சுருண்ட பயம், சர்க்கரையின் கரைசலாகக் கரைகிறது.

''எனக்கு ரொம்ப சந்தோஷம்ப்பா''

அடுத்து வந்த வாரத்தில் ஒரு நன்னாளில், சுவாமி மலையில் வைத்து ஒரு தாலியைக் கட்டி நாகாவை வீட்டிற்கு அழைத்து வந்தார். சாரு கல்யாணத்திற்குப் போகவில்லை. அப்பா திருபுவனம் பட்டுப் புடவை வாங்கிக் கொடுத்திருந்தார்.

''வாங்க டீச்சர்'' ஆரத்தி எடுத்தவள் நாக்கை கடித்துக் கொண்டாள்.

''நான் இனிமே உனக்கு அம்மா. டீச்சர் இல்ல'' இலேசான கடுமை கலந்த சொல்லைக் கேட்டு திடுக்கிட்டாள்.

''ஸாரிம்மா''

''உள்ளே வா. வெளியில நிற்கக் கூடாது''

அனிச்சம் பூ முகர்ந்து பார்த்தால் வாடும். கன்னிப் பெண்ணின் வதனம் சொற்கேட்டு வாடும்பொழுது அனிச்சத்தை விட மென்மையாக இருக்கிறது. சாரு அப்பாவின் முகத்தை ஏறிட்டாள்.

''அதுக்குள்ளாற மகளை வளர்க்கற பொறுப்பை ஏத்துக்கிட்டியாக்கும்?''

''பின்னே? நாலு பேர் கேட்பாங்களே... சொந்த மகளா இருந்தா இப்படி விடுவாளான்னு அதுக்கு நான் இடம் தரக்கூடாது பாருங்க இபப உரிமை வந்திருச்சே?''

அப்பா மகிழ்ந்து போனார்.

**—லட்சுமி ராஜரத்னம்**



புது மணமகனான அப்பா மாறித்தான் போனார். இப்பொழுதெல்லாம் நான்கு மணிக்கு அதிகாலையில் எழுப்புவதில்லை. இவளுக்கு பழக்க தோஷம் எழுந்து முகம் கழுவி முதல் நாள் என்ன பாடினாள் என்று நினைவுபடுத்தி...

ஸாவேரி வர்ணம் அதிகாலை ஓசோன் காற்றாக பரிமளிக்க... அடுத்தது கல்யாணி ராகம் ஆலாபனை வடிவம் பெறும் பொழுது...

நாகம்மா வந்து நிற்பாள்.

''சாரு''

''என்னம்மா?''

''இப்ப பாட்டுக்கு என்ன அவசரம்? அப்பா அசந்து தூங்கறார் பார். இன்னொருத்தன் வீட்டுக்குப் போய் சாவேரியும், காவேரியையுமா பாடிட்டு நிக்கப் போறே? பெண்ணாப் பிறந்தவளுக்கு வீட்டு வேலை செய்யத் தெரியணும். போ... வாசல் தெளிச்சு கோலம் போடு. காப்பி டிகாஷன் போடு''

மனசு சுவலைக் குழந்தையாய் கும்பிப் போகும். மனசுக்குள் நளினி

காந்தி மலர்ந்து துள்ளும். கிணற்றடியில் தண்ணீர் சேந்தும் பொழுது பறவைகளின் ஒலியில் அவள் பூபாளத்திற்கு சுருதி சேர்த்தாள்.

''பார்த்தேளா? உங்க பொண்ணு கலந்த காப்பி. ஏ ஒன்னாக இல்லை?'' என்று நாகா பசம்பும் பொழுது வலி மறந்தது.

ஆறு மாதங்கள். நாகா வேலையை விட்டு விட்டாள். தஞ்சாவூரிலிருந்து பாட்டு வாத்தியார் வந்திருந்தார். வழக்கம் போல் பாடி அனுப்பி வைத்தாள். இரவு சற்று நேரம் புதுப் பாட்டை பாடி முடித்து படுத்துக் கொண்டாள்.

காற்றுக்காக வாசலில் ஈஸிச் சேரில் ரங்கநாதன் சாய்ந்து கிடந்தார். வெற்றிலை மடித்துக் கொடுத்தாள் நாகா.

''நான் ஒண்ணு சொல்லுவேன் கேட்பேளா?''

''சொல்லு''

காற்று மருதாணி மணத்தைக் கவர்ந்து வந்தது. போதை தரும் மணம்.

''இத்தனை நாளா கவனிக்கல்ல''

''எதை?''

''பாட்டு வாத்தியாரை''

ஆகாயத்தை பார்த்தவள், மனைவி முகத்தையே ஆராய்கிறார்.

''விஷயத்தைச் சொல்லு''

''முகவாயைப் பிடித்து கொஞ்சினார். கையை பிடித்து தாளம் போட வைத்ததை பார்த்துட்டேன். வேற யாராவது பார்த்தா என்ன ஆகும்?''

விருட்டென்னு ஈஸிச்சேரிலிருந்து எழுந்தார். ''கூப்பிடு அந்தக் கழுதையை?''

கையைப் பிடித்துக் கொண்டாள்.

''கோபம் வேண்டாமே. துணி முள்ளு மேல விழுந்து கிடக்கு. எப்படி எடுக்கணும்? அப்படித்தான் இதுவும்''

''இப்ப என்ன செய்யணுங்கறே?''

''வாத்தியாரை நிறுத்திடலாம்''

''நிறுத்திட்டு?''

''கல்யாணம் பண்ணிடலாம்''

''உம்'' உறுமி விட்டு உட்கார்ந்தார்.

இதை சாரு கேட்டுக் கொண்டிருந்தாள் என்பதை, அவர்கள் அறியவில்லை. அவளும் ஏன் பாட்டு வாத்தியார் வரவில்லை என்று கேட்கவில்லை. மனசு மட்டும் கனத்தது. இப்படி பல மாதங்கள் ஓடின. நாகாவுக்கும் குழந்தை பிறந்தது. இவள்தான் அதைத் தூக்கி வளர்த்தாள்.

அப்பா மெல்ல நாகாவின் கொடுமையை உணரத் தலைபட்டார்.

''சாரு?''

''என்னப்பா?''

''அம்மா எங்கேம்மா?''

விளக்கை ஏற்றி வாசற் பக்க மாடத்தில் வைத்து விட்டு வந்தாள்.

''எங்கம்மா சொர்க்கத்தில் இருக்காப்பா!''

சொல்லால் அடித்து விட்டாள். நாகா தன் அம்மா இல்லை என்ற உண்மையை உணர்த்திவிட்டாள்.

''சரி... நாகா எங்கே?''

''கோவிலுக்கு போனா.''

''நான் தப்பு பண்ணிட்டேம்மா''

அப்பாவை மௌனமாகவே பார்த்தாள்.

''என்ன தப்புனு கேட்க மாட்டாயா?''

''என்னப்பா சொல்றீங்க? நான் சின்னக் குழந்தையா? என்ன தப்புனு எனக்குத் தெரியாதா? நிவர்த்திக்க முடியாத அந்தத் தப்பைப் பற்றி பேசி என்னப்பா பலன்?''

அன்றிரவு படுத்தவர்தான் எழவில்லை. டாக்டர் ஹார்ட் அட்டாக் என்றார்.

''ஐயோ... என் வாழ்க்கையில் மண்ணை அள்ளிப் போட்டுட்டாரே'' என்று கதறினாள் நாகா.

சாருதான் இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

காரியங்கள் முடிந்து நினைவு படுக்கை வந்த பொழுதுதான் தெரிந்தது

> தூக்கம் வராமல் அவதிப்படுபவர்கள் செவ்வாழைப் பழத்தை தின்று வர நித்திரா தேவி வந்து அணைத்துக் கொள்வாள். இது பக்க விளைவு இல்லா எளிய மருத்துவம்.
>
> —ராதிகா அழகப்பன்

நாகா அத்தனை சொத்துக்களையும் தன் பெயருக்கு எழுதி வாங்கிக் கொண்டிருக்கிறாள் என்று. தான் அனாதையாக நடுத் தெருவில் நிற்கிறோம் என்றும் புரிந்தது.

''அம்மா, எனக்கு இனி நீங்கதான் ஆதரவு. அப்பா இல்லேனு என்னைத் தள்ளிட மாட்டீங்களே!''

நாகா வக்கிரமாகச் சிரித்தாள்.

''ஏன் எனக்குக் குழந்தை குட்டி இல்லையா?''

விக்கித்து விழி நிலை குத்தப் பார்த்தாள் தன் சிற்றன்னையை.

''அடி போடி, பைத்தியக்காரி. நான் ஏற்கனவே ஒருத்தன் கிட்ட ஏமாந்தவ. என் பிள்ளையை ஹாஸ்டல்ல விட்டிருக்கேன். அவனைப் பணக்காரனாக்க உங்கப்பாவை நான் ஏமாத்தினேன்.''

''அப்ப என் கதி என்னம்மா?''

''எங்கேயோ தொலை''

அடுத்து வந்த ஒரு சில மாதங்களில் நாகம்மா ஊரையே ஏமாற்றினாள்.

''பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணணும். இந்த மனுஷர் இப்படி தாயாரையும், பொண்ணையும் நடுத் தெருவில விட்டுட்டுப் போயிட்டாரே,'' என்று ஓலமிட்டபடி - நிலம், நீச்சு, வீடு வாசல் என்று ஒவ்வொன்றாக விற்றாள்.

விற்ற பணத்தை ஒன்றாகச் சுருட்டியபின் சொல்லாமல் கொள்ளாமல் சாரு தூங்கும் நேரத்தில் ஊரை விட்டே போய்ச் சேர்ந்தாள். அவள் ஓடிப் போனாள் என்பதைப் புரிந்து கொள்ளவே சில தினங்கள் ஆயிற்று சாருவுக்கு. வீட்டை வாங்கியவர்கள் நெருக்கினார்கள்.

அம்மாவுடைய நகைகள் என்று அப்பா ஒரு சங்கிலியையும், இரண்டு ஜதை வளையல்களையும் பண்டிகைக்கு அணிய கொடுத்திருந்தார் அப்பா. பண்டிகை முடிந்தபின் அதை அப்பாவிடம் தராமல் அப்படியே தன் பெட்டியில் புடவை மடிப்பில் போட்டு வைத்திருந்தாள். அதனால் அது நாகாம்மாவின் கைகளுக்குப் போகாமல் தப்பியது.

எங்கே போவது? கையில் முக்கியமான சாமான்களுடன் பக்கத்துக் கிராமத்தில் இருக்கும் அம்மாவுக்கு நெருக்கமான பாட்டி ஒருத்தியை பார்க்கப் போனாள்.

''வாடி குழந்தே... என்னென்னமோ கேள்விப்பட்டேனே?'' என்று படுத்த படுக்கையாய் கிடந்த பாட்டி வரவேற்றாள்.

அழுதபடி பாட்டியை சரணடைந்தாள் சாரு.

பாட்டி மிகவும் உடம்பு முடியாமல் கிடந்ததால், முறைப் பேரனான மாணிக்கம் வந்திருந்தான். பாட்டிக்கும் தன் கடைசிப் பயணம் தொடங்கும் முன் தன்னால் ஒரு நல்ல காரியம் ஆகட்டும் என்ற ஆசை.

''சாரு, என் பேரனைக் கல்யாணம் பண்ணிக்கோடி. சாகக் கெடக்கற என்னை நம்பி வந்திருக்கே. உன்னை அனாதையா விட்டா என் நெஞ்சு வேகாதடி.''

இதற்குள்ளாகவே சாரு மாணிக்கத்தை கவர்ந்து விட்டாள். மிகவும் எளிமையாக இவர்கள் திருமணத்தை நடத்தி வைத்த பாட்டி, தன் வேலை முடிந்தது என்று அடுத்த மாதத்திலேயே போய்ச் சேர்ந்தாள்.

மாணிக்கம் அப்படி ஒன்றும் பெரிய வேலையில் இல்லை. சென்னை வந்து ஒண்டிக் குடித்தன வாழ்க்கையில் ஒட்டி, மாணிக்கம் கொண்டு வந்த பணத்தில் குடும்பத்தை நடத்தி, ஒரு குழந்தையையும் பெற்றுக் கொண்டு.

இப்படியே ஓடினால் நிறைவான வாழ்க்கைதான். வெறும் இருமல் என்று அசட்டை பண்ணப் போக... அது காச நோய் என்று தெரிய சாரு நொந்து போய் விட்டாள்.

இந்த நிலையில் சங்கீதம் ஒன்றுதான் அமைதி என்று மாலை வேளைகளில் சங்கீதத்திடம் சரணடைந்தாள்.

(தொடரும்)

# தானத்தில் சிறந்தது

மிகச்சிறந்த தானங்களில் குறிப்பிட வேண்டிய ஒன்றுதான் இந்த 'கண் தானம்'. இதுபற்றிய விவரங்களை சென்னை எழும்பூர் கண் மருத்துவமனையின் '**விழி வங்கி**'யில் கேட்டபோது கிடைத்த சில விவரங்கள்-

ஒருவர் இறந்த ஆறு மணி நேரங்களுக்குள் விழிகள் அவர் உடலில் இருந்து அகற்றப்பட வேண்டும். எனவே இறப்பு நிகழ்ந்தவுடன் அவருடைய நெருங்கிய உறவினர்கள் விழி வங்கியின் தொலைபேசியில் (8553840; 8555281 - ஆகிய எணகளுடன்) தொடர்பு கொண்டு முகவரியைச் சொல்ல வேண்டும். இந்த வசதி 24 மணி நேரமும் உண்டு.

8 வயதானவர்கள் முதல் கண் தானம் செய்யலாம். அதிகபட்ச வயது வரம்பு இல்லை. புரை வளர்ந்தவர்கள், புரையை அறுவை சிகிச்சையின் மூலம் நீக்கியவர்கள் என யார் வேண்டுமானாலும் கண் தானம் செய்ய முடியும். எய்ட்ஸ், முற்றிய நிலையில் உள்ள மஞ்சள் காமாலை நோயுள்ளவர்கள் புற்று நோயுள்ளவர்கள். தவிர மற்றவர்கள் அனைவருமே கண் தானம் செய்யலாம். புற்று நோயால் இறப்பவர்களின் கண்கள் ஆராய்ச்சிகள் செய்ய மட்டுமே பயன்படும்.

பிறவியிலேயே கண்களின் 'கார்னியா' பாதிக்கப்பட்டிருந்தால் பார்வை கிடைப்பது கடினம். இடையில் 'கார்னியா' பாதிக்கப்பட்டவர்கள் இதுபோல தானமாகக் கிடைக்கும் விழிகளைப் பெற்று பார்க்கும் திறன் பெற முடியும். இப்படி விழிகளை தானமாகப் பெற விழைவோர் எழும்பூர் கண் மருத்துவமனையில் புற நோயாளிகளாக வந்து பெயர்களைப் பதிவு செய்து காத்திருக்க வேண்டும். 3, 4 மாதங்களிலேயே கண்கள் தானமாகக் கிடைத்து விடும். 'கண் தானம்' பற்றி அதன் முக்கியத்துவம் பற்றி மக்கள் அனைவரும் உணர்ந்து இறந்தவர்களின் விழிகளை தானமாகத் தர முன்வர வேண்டும். தினமும் ஒரு ஜோடி விழிகள் தானமாக வருவதே கடினம்தான். இந்த நிலை மாற வேண்டும்'' என்கின்றனர் விழி வங்கியைச் சார்ந்தவர்கள்.



கொடும் கோடையில் கால்களில் செருப்பு இல்லாமல் நடப்பது எத்தனை கடினம்? ஆனால் கால்கள் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளங்கைகளையே தரையில் ஊன்றி (சில சமயம் கைகளில் செருப்பு போல எதுவும் மாட்டாமல்) மிகவும் கஷ்டப்பட்டு நகர்வதைப் பார்க்கும்போது நம்மில் பலரும் மனம் வருந்தி அங்கலாய்ப்போம். ஆனால் அதோடு சரி மறந்து விடுவோம் ஒரு நாள் வேதனைதான்! ஆனால் எல்டாம்ஸ் ஆர்தோ செண்டரின் உரிமையாளரான **திருமதி கீதா ராணி** இது போன்ற ஒரு காட்சியை அண்ணா சாலையில் கண்டதுதான் ஊனமுற்றோர்களுக்கான உபகரணங்களை தயாரிக்கும் பணியில் அவரை ஈடுபட வைத்தது. அவரை அவரது அலுவலகத்தில் (**37. போயஸ்ரோடு தேனாம்பேட்டை சென்னை-18**) சந்தித்தோம்.

''இளம்பிள்ளை வாதத்தினால், கால்கள் பாதிக்கப்பட்ட சிறுவர் அண்ணா சாலையை (கடும் கோடையில்) கடக்க முடியாமல் தவித்ததைப் பார்த்ததுதான் என் மனதில் இந்த தொழில் பற்றிய விதை ஊன்றியது. அவனுக்கு சாலையைக் கடக்க உதவிய போதே இது போன்றவர்களுக்கு உதவக்கூடிய உபகரணங்களைத் தயாரிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டேன். இந்தத்துறையில் சிறப்புப் பயிற்சி பெற்று அரசு மருத்துவமனையில் பணிபுரியும் என் கணவர் திரு. சண்முகம் அவர்களுடைய ஆலோசனையும் உதவியும்தான் இதைத் தொடங்க எனக்கு உதவின. மூன்று சக்கர சைக்கிள்கள், மடித்து எடுத்துச் செல்லக் கூடிய சக்கர நாற்காலிகள், இளம்பிள்ளை வாதத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தேவையான காலணிகள், ஊன்று கோல்கள், விபத்தில் கை, கால்கள் போன்றவைகளை இழந்தவர்களுக்கு பயன்படும் செயற்கை கை, கால்கள், இடுப்பு, கழுத்து வலிகளுக்கான பெல்ட்டுகள், உள்ளங்காலில் வளரும் குருத்தெலும்பினால் ஏற்படும் குதிகால் வலி, கால் ஆணி, நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு உணர்ச்சியற்ற பாதங்கள் ஆகியவைகளுக்கான மைக்ரோ செல்லுலார் ரப்பர் காலணிகள், பார்வையற்றோர்க்குத் தேவையான மடித்து வைத்துக் கொள்ளக் கூடிய கைத்தடிகள் மற்றும் படுக்கையில் பயன்படும் பெட்பேன்கள் போன்றவைகளை தயார் செய்கிறோம். மாதம் ரூ 1200க்கு கீழ் வருமானம் உள்ளவர்களுக்கு இது போன்ற உபகரணங்களை மத்திய அரசின் கீழ் இயங்கும் 'அலிம்கோ கான்பூர்' நிறுவனத்துடன் எங்கள் எல்டாம்ஸ் ஆர்தோ செண்டரும் இணைந்து இலவசமாக வழங்குகிறது. வருமானச் சான்றிதழுடன் எங்களைத் தொடர்பு கொள்ள வேண்டும். இந்த சேவையில் எங்கள் பங்கு 25 சதவிகிதம். ஊனமுற்றவர்களுக்கு இவைகளை செய்யும் பயிற்சியை (உதவித் தொகையுடன்) தருகிறோம். மற்றவர்களுக்கு பயிற்சி மட்டும்தான். முன்னுரிமையும், உதவித் தொகையும் ஊனமுற்றோர்களுக்கு மட்டும்தான்'' என்கிறார் கீதாராணி.

பல சமயங்களில் இறப்பு ஏற்பட காரணமாவது அதிகமான இரத்த சேதம்தான். அதுவும் விபத்துக்களின் போது சரியான நேரத்தில் மருத்துவமனையில் சேர்ப்பதும் தேவையான ரத்தவகை கிடைத்து தரப்படுவதும் கூட பல மரணங்களைத் தவிர்க்கிறது. தானமாகப் பெறப்பட்ட ரத்தம் நன்கு பரிசோதனை செய்யப்பட்டு எந்த வித தொற்று நோயும் இல்லாவிட்டால் மட்டுமே அது (இரத்தம் வேண்டும்) நோயாளிக்குத் தரப்பட வேண்டும். இரத்த தானம் பற்றி 'ஜீவன்' ரத்த வங்கியின் இயக்குனர்களான **டாக்டர் சீனிவாசன், டாக்டர் சரண்யா** இருவரையும் கேட்ட போது...

''உயிர் காக்கும் திறன் கொண்டது இரத்தம்; ஆனால் அதுவே ஆரோக்கியமாக இல்லாவிட்டால்?

ஏறக்குறைய 3 வருடங்களுக்கு முன்பு எங்களுடைய 'லிஸ்டர்' லேபாரட்டரியில் இரத்த பரிசோதனை செய்து கொள்ள வந்த ஒரு அழகிய பெண் குழந்தைக்கு, எய்ட்ஸ் நோய் இருப்பது தெரிய வந்து அதிர்ந்து போனோம். இதற்குக் காரணத்தை ஆராய முற்பட்ட போது 'எய்ட்ஸ்' நோய் உடையவரின் ரத்தம் கொடுக்கப்பட்டதுதான் காரணம் எனத் தெரியவந்தது. உயிர் காக்கும் ஆற்றல் கொண்ட இரத்தம் உயிரைக் காக்கக் கூடியதாக மட்டுமே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்தது எங்களது 'ஜீவன்' ரத்தவங்கி. இது லிஸ்டரின் தர்ம ஸ்தாபன டிரஸ்டைச் சார்ந்தது.

இதற்கு 'ஜீவன்' என்னும் பெயரைத் தந்தவர் எங்கள் டிரஸ்ட்டின் உறுப்பினரான ஏவி.எம். சரவணன் அவர்கள். 'ஜீவன்' (உயிர்) தருவது தான் ரத்தம். தானமாகப் பெற்ற ரத்தம் 4 பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. முழு ரத்தம் தேவைப்படுவது சில சமயங்களில் மட்டும் தான். ரத்தம் பகுதிகளாகப் பிரிக்கப்படு முன்பே பலவித தொற்று நோய்கள் உள்ளதா என்பதை அறிய சோதனைகள் செய்யப்படும். ஹெப்படைடஸ் 'பி' வைரஸ் உள்ளதா என்பதை அறிய தனியான பரிசோதனையும் 'ஜீவனில்' உண்டு. பல வருடங்களுக்கு முன்பு இந்த வைரஸ் தாக்கியிருந்தாலும் அதன் பாதிப்பு வாழ்நாள் முழுவதும் இருக்கும். இதை அறிய செய்யப்படும் Anti HBC பரிசோதனை 'ஜீவனில்' மட்டுமே உண்டு.

இந்த சோதனை செய்யாமல் தரப்படும் ரத்தத்தில் இந்த பாதிப்பு இருந்தால் ரத்தம் பெறுவோருக்கு மஞ்சள் காமாலை நோய் வரும் வாய்ப்பு உண்டு. அடுத்து 'எய்ட்ஸ்' இதன் பயங்கரம் இன்று அனைவருக்குமே தெரியும். இந்த ஹெச்ஐவி வைரஸ் தாக்குதலை (16 வாரங்களான பின்பு மட்டுமே கண்டு பிடிக்கக் கூடியதை) ஒரே வாரத்தில் அறியும் வகையும் ஜீவனில் உண்டு.

தானமாகப் பெறப்படும் ஒரு யூனிட் இரத்தம் 4 பகுதிகளாக்கப்பட்டு நான்கு பேருக்குத் தரப்படும் 1. சிவப்பணுக்கள், 2 நிறமற்ற திரவமான பிளாஸ்மா, 3. கிரையோப் ரசிபிடேட், 4. பிளேட் லெட். ரத்த சோகைக்கு (அறுவை சிகிச்சை போன்ற சமயங்களில்) தரப்படுவது சிவப்பணுக்கள். தீ விபத்தில் சிக்கியவர்களுக்குத் தரப்படுவது பிளாஸ்மா மட்டுமே. மலேரியா தாக்குதலுக்கு உள்ளான இளம் சிறுவர்கள், மற்றும் கேன்சர் நோயாளிகளுக்குத் தேவை பிளேட்லெட். இரத்தம் உறைதலில் மாறுதல் உள்ளவர்களுக்கு கிரையோப் ரெஸிபிடேட் மட்டுமே போதும். இப்படி நாம் தரும் ரத்தம் 4 பேருக்குப் பயன்படுத்தப்படுகிறது. அரசு மருத்துவமனைகளில் தீ விபத்து பிரிவில் சேர்க்கப்படும் நோயாளிகளுக்கான 'பிளாஸ்மா'வை ஜீவன் (தானமாகத்) தருகிறது.

ஒருமுறை தரும் ரத்தம் 4 பேருக்குப் பயன்படுத்தப்படுகிறது. 3 மாதங்களுக்கு ஒருமுறை ரத்தம் தரலாம். 18 வயது முதல் 60 வயது வரை (ஆரோக்கியமாகயிருந்தால் அதற்கு மேலும் கூட) ரத்ததானம் செய்யலாம். அப்படி என்றால் நம் ஆயுள் முழுவதும் எத்தனை பேரைக் காப்பாற்ற முடியும் எனக் கணக்குப் போட்டுப் பாருங்கள். கண்கள் போல உடல் உறுப்புகளை தானம் செய்வோர் அதைப் பெற்ற மகிழ்வோரைக் காண முடியாது. ஆனால் இரத்த தானத்தின் போது அந்த நிறைவும் உண்டே! நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நம்மில் பலரும் இரத்த தானம் செய்ய முன் வர வேண்டும்'' என்கிறார்கள்.

முகவரி - ஜீவன் ரத்த வங்கி, எண் 1 ஜகன்னாதன் ரோடு, நுங்கம் பாக்கம் சென்னை - 34 தொலைபேசி - 8231911.

# தாடை, உதடு பிளவுக்குக் காரணம் என்ன?

பளபளப்பான பல்வரிசை, பார்ப்பவர்கள் அனைவரையும்கவரக்கூடியது. பற்களுக்கு தரும் பராமரிப்பைப் பொறுத்தே அவை சுத்தமாகவும், வெண்மையாகவும், உறுதியாகவும் இருந்து வருகின்றன.

'பல் போனால் சொல் போகும்' இதை உணர்ந்தவர்கள் எத்தனை பேர்? நம் உடலின் நுழைவு, வாயிலான வாய்ப்பகுதியில் இந்தப் பற்கள் காவலர்களாக இருந்து செயல்படுகின்றன. உள்ளே செல்லும் பொருள்களை உடலுக்கு ஏற்ற வகையில் சரிப்படுத்தி அனுப்பும் பெரும்பங்கு பற்களுக்கு உண்டு. பற்கள் இருந்தால்தான் முகத்துக்கு அழகு. அழகு இருந்தால் தான் தன்னம்பிக்கை அதிகமாக இருக்கும்.

இன்று ஒரு சிலருக்கு பற்கள் சரிவர வளராது, நீண்டு, துருத்தி, வெளியில் தெரிவதால் அவர்களுடைய அழகு பாதிக்கப்படுகிறது.

அப்படிப்பட்டவர்களுக்கு சென்னையில் உள்ள ராகா மருத்துவமனையில் தலைமை மருத்துவர் **டாக்டர் ஆர். குணசீலன்** M.B.B.S., B.D.S., F.D.S.R.C.S. (England) மூலம் முழு நிவர்த்தி கிடைக்கிறது.

இவர் எம். ஜி. ஆர். பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் பி.பி. ராஜன் அவர்களின் குமாரர்.

**பற்களும், தாடைகளும் சரிவர வளராமல் இருப்பதற்கு என்ன காரணம்? அதற்கு தாங்கள் எப்படி சிகிச்சை அளிக்கிறீர்கள்?**

பெற்றோர்களின் தாடை அமைப்பு, குழந்தைகளுக்கு ஏற்படும். சில பழக்க வழக்கங்களாலும் தாடை முரண்பாடுகள் அதிகமாகின்றன. மூன்று வயது வரை குழந்தைகள் விரலை வாயில் வைத்து சப்புவது இயற்கை. அந்தப் பழக்கம் மூன்று வயதிற்கு மேல் தொடர்ந்தால் மேல் தாடையும், பற்களும் முன்னே துருத்த ஆரம்பிக்கும். குழந்தை பருவத்தில் ஏற்படும் தாடை காயங்களால் கீழ்த் தாடை மிகவும் வளர்ச்சி குன்றி காணப்படும். இவர்களுக்கு அழகு குறைவதோடு மட்டுமில்லாமல் சமூக வாழ்க்கையும் பாதிக்கப்படுகின்றது. இவற்றை நிவர்த்தி செய்வதற்கு நாங்கள் வளரும் பருவத்தில் அதாவது கிட்டத் தட்ட 16 வயது வரை பற்கம்பிகள் கொண்டு சரி செய்கிறோம். இந்த கம்பி ஒவ்வொரு பல்லிலும் பொருத்தப்படுவதால் பற்களும், தாடைகளும், சீராக மாற்றப்படுகின்றன. இந்த சிகிச்சை ஏறத்தாழ ஓர் ஆண்டு நீடிக்கும்.

உடல் வளர்ச்சி முடிந்து விட்டால் (16 வயதுக்கு மேல) சில வகை தாடை பல் முரண்பாடுகள் அறுவை சிகிச்சை மூலம் சரி செய்யப்படும். தாடை எலும்பு முரண்பாடு மிக அதிகமாக உள்ளவர்களுக்கு அறுவை சிகிச்சை மூலம் நிவாரணம் கிடைத்துவிடும்.



**சிகிச்சை முறைகள்**

சிகிச்சைக்கு முன்பு தாடை - பல் அளவுகள் எடுக்கப்பட்டு அவற்றின் மாதிரி செய்து, ஆராய்ந்த பின் நாம் செய்ய நினைத்த ஆபரேஷனை மாதிரியில் செய்து அளவு பார்த்து, அதன் பின் விசேஷ நிழற் படங்கள் எடுக்கப்பட்டு இரத்தப் பரிசோதனையும் செய்து கம்ப்யூட்டர் உதவி கொண்டு ஆராய்ச்சிகள் செய்த பின்புதான் ஆபரேஷன் நடைபெறும். தாடையை புதிய இடத்தில் பொருத்தி அதை கம்பிகள் கொண்டு நன்றாக மற்ற எலும்புடன் இணைத்து விட்டு வீட்டிற்கு அனுப்புவோம். கிட்டத் தட்ட நான்கு வாரங்கள் மிருதுவான உணவு வகைகளை உண்ண வேண்டும். ஆறு வாரங்களுக்கு பின்பு எலும்பு நன்றாக கூடி விடும். வழக்கம் போல் உணவுகளை உண்ணலாம்.

**இந்த சிகிச்சையின் சிறப்பு என்ன?**

சிகிச்சை, வாயின் உட்புறமே செய்யப்படுவதால் முகத்தில் வடுக்கள் தெரிவதில்லை. முகத்தின் சதை நரம்புகளுக்கும் பாதிப்பு ஏற்படுவதில்லை. மேலும் சில நாட்களிலேயே சிகிச்சை முடிந்து விடுவதால் இத்தகைய நபர்களின் படிப்போ, வேலையோ தடைபடாது. இரண்டு அல்லது மூன்று நாட்கள் மருத்துவமனையில் தங்கினால் போதும். நவீன கருவிகள் மூலம் வாயின் உட்புறமே அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

**ஒரு சிலர் வாய் திறக்க முடியாமல் இருந்து வருகிறார்களே அது ஏன்?**

வாயை சரியாக ஒருவர் திறக்க முடியவில்லையென்றால் உணவு அருந்துவது கடினமாகிறது எல்லா உணவு வகைகளையும் கரைத்து தான் உண்ண வேண்டியுள்ளது. மேலும் பறகளையும், ஈறுகளையும் சரியாக சுத்தம் செய்ய முடியாததால், பற்சொத்தை, ஈறு நோய் ஏற்படுகிறது. சிறுவயதிலேயே ஏற்பட்டால் கீழ்த் தாடை வளர்ச்சி குன்றி ஒரு பக்கமாக தாடை வளர்ந்து முகத்தின் அமைப்பே விகாரமாகிறது. இதனால் இவர்களின் தன்னம்பிக்கையும், சமூக வாழ்வும் பாதிக்கப்படுகிறது.

சிறு வயதிலேயே வாய்ப் பூட்டு ஏற்படுவது அநேகமாக தாடையில் அடிபடுவதால்தான். குழந்தைப் பருவத்தில் அடிக்கடி கீழே விழுந்து அடிபடுவது சகஜம். அதுவும் தாடையில் அடிபட்டால், படிப்படியாக வாய்ப்பூட்டை உண்டாக்கும். இதனை சிறுவயதிலேயே சரி செய்ய வேண்டியது அவசியம். சில குழந்தைகளுக்கு காது சீழ் அல்லது எலும்பு சீழ் மூலம் வாய்ப்பூட்டுக்கு பரவி வாய் திறக்க முடியாமல் போவதுமுண்டு. ஒரு சிலருக்கு கால், கை மூட்டு நோய்களோடு வாய்பூட்டு நோயும் ஏற்பட்டு வாய் திறக்காமல் போய் விடுவதுண்டு. இவற்றையெல்லாம் அறுவை சிகிச்சை செய்துதான் குணப்படுத்த முடியும். ஆனால் இன்றைய நவீன உலகில் 3 நாளில் குணப்படுத்தலாம்.

**உதடும் - தாடையும் ஒன்றாக இணைந்து இருக்கும் குழந்தைகளுக்கு எப்படி சிகிச்சை அளிக்கிறீர்கள்?**

உதடு பிளவு - தாடைப்பிளவு என்பது பிறவியிலேயே ஏற்படும் ஒரு குறை. தமிழ்நாடு மட்டுமல்ல, உலகமெங்கும் தென்படும் ஒரு குறைபாடு. கிட்டத்தட்ட ஆயிரத்தில் ஒரு குழந்தை இதனால் பாதிக்கப்படுகிறது. இத்தகைய சிகிச்சைக்கு குழந்தை நல டாக்டர், பிளாஸ்டிக் சர்ஜன், பல் மருத்துவர், பல் தாடை சீரமைப்பு நிபுணர், காது மூக்கு தொண்டை மருத்துவர், பேச்சுப் பயிற்சி நிபுணர் ஆகியோர் கொண்ட குழு தேவைப்படுகிறது. மூன்று மாத குழந்தையாக இருக்கும்போது ஆரம்பமாகும் சிகிச்சை கிட்டத் தட்ட பதினேழு ஆண்டுகள் நீடிக்கும். இத்தகைய சிகிச்சைக்கென ஒருங்கிணைந்த மையம் ஒன்று எங்கள் மருத்துவமனையில் ஹாங்காங் பல்கலைக் கழக தொடர்போடு செயல்பட்டு வருகிறது.

**சிகிச்சை எப்படி செய்யப்படுகிறது?**

1 1/2 வயதில் மேல் தாடை பிளவை ஆபரேஷனால் சரி செய்யப்படுவதால், உணவு புரையேறுவது குறைகிறது.

3 வயதளவில் பேச்சு சரிவர வராவிட்டால் பேச்சுப் பயிற்சியாளரின் உதவியோடு பேச்சுப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இது மிகவும் அவசியம். பேச்சுப் பயிற்சியால் நிறைய பயன் பெறலாம். இந்த வயதில்தான் பேச்சு பயிற்சி சிறந்த பயனைத் தரும்.

6 வயதுக்கு மேல் பல் டாக்டர். பற்சொத்தை தவிர்ப்பது தாடை வளர்ச்சியை கவனிப் பது. போன்ற முக்கிய பணியை மேற் கொள்கிறார். சிலருக்கு தாடை பிளவினால் அடிக்கடி காது வலி, காது குடைச்சல், காது சீழ் போன்றவைகள் ஏற்படும். இதை காது மூக்கு தொண்டை நிபுணர் சரி செய்து விடுவார்.



**சிகிச்சைக்கு முன்**

ஒன்பது வயதுக்கு மேல், மேல்தாடை முன் பற்கள் பல் கம்பிகள் மூலம் சரி செய்யப்படுகிறது. இதில் சிலருக்கு பற்கள் சரியாக முளைக்க எலும்பு சிகிச்சை தேவைப்படுகிறது.

தாடை பிளவு உள்ளவர்களுக்கு, மேல் தாடை வளர்ச்சி சரியாக இருப்பதில்லை. மேல் தாடை வளர்ச்சி குன்றி, கீழ்த் தாடையை விட சிறிதாக காணப்படுகிறது. இதனால் மூக்கு அமைப்பும் பாதிக்கப் படுகிறது. இத்தகைய முரணான மேல் தாடையை பல், தாடை சீரமைப்பு நிபுணர்கள் ஆபரேஷன் மூலம் சரி செய்து விடுகிறார்கள். இவை அனைத் தும் வாயின் உட்புறமே செய்யப்படுவதால் முகத்தில் வடுக்கள் தெரிவதில்லை.

இந்த தாடை சிகிச்சைகளில் தற்போது ஐரோப்பியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் பெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றை கடந்த நான்கு ஆண்டுகளாக இங்கு நாமும் பின்பற்றி வருகிறோம். தாடை ஆபரேஷ னுக்கு பின் சிறிய பிளேட்டுகள் கொண்டு தாடை எலும் பினை சரியாக பொருத்தலாம்.

சில குழந்தைகளுக்கு 16 அல்லது 17 வயதில் மூக்கு அமைப்பு சரியாக அமைய சிகிச்சை தேவைப்படுகிறது.

இவை அனைத்தும் முடிந்தபின் பல் குறைபாடு உள்ள இடங்களில் செயற்கைப் பல் பொருத்துதல், பற்களை அழகு செய்தல் ஆகியவை மேற் கொள்ளப்படுகின்றன.

பிறவியில் தொடங்கும் சிகிச்சை ஏறத்தாழ 17 ஆண்டு கள் தொடர்ந்து நடைபெறுகிறது. உலகமெங்கும் இந்த துறையில் ஏறபடும் சிகிச்சை முன்னேற்றங்களை - ஐரோப்பியா மற்றும் ஹாங்காங் நாட்டு சிகிச்சை வல்லு னர்கள் உதவியுடன் இங்கு கையாளுகிறோம்.

### இத்தகைய தாடை - உதடு பிளவை தடுக்க முடியுமா?

பெண்களின் கர்ப்ப தரிப்பு வயது அதிகமானால் இத்தகைய குறைபாடுகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. உறவினர்களி டையே திருமணம் செய்தாலும் இதற்கு வாய்ப்பு அதிகம். கர்ப்ப காலத்தில் குறிப் பாக கர்ப்பத்தின் முதல் மூன்று மாதங்களில அதிகமாக மருந்துகள் சாப்பிடுவது கூடாது. சத்து குறைந்த உணவுகளையும் உண்ணக் கூடாது. இவைகளால் தான் தாடை பிளவு குறைகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே மேற்கூறியவைகளை தவிர்த்தல் அவசியம்.



**சிகிச்சைக்குப் பின்**


பேட்டி :— **அரசு. கிருத்திகா**

*முகவரி: டாக்டர் ஆர். குணசீலன், ராகாஸ் பல் மருத்துவ கல்லூரி, மற்றும் மருத்துவமனை 116, டாக்டர் ராதா கிருஷ்ணன் சாலை, சென்னை-4. ☎ : 846666, 8522266.*




**Next generation frost-free refrigerators.**

*Presenting Samsung **Multi Air Flow** frost-free refrigerators with:*



• Multi Air Flow Cooling • One-Twist Ice Cube Maker • Large Bottle Shelf with Jumbo Guard • Moisture Controlled Vegetable Basket • Refrigerator and Freezer Locks • Wide Voltage Tolerance (160–260V).

**Multi Air Flow Offered in sizes 320, 380 and 420 litres.**

SAMSUNG

ELECTRONICS

# சமையல் கலை கற்றுத் தரும் கல்லூரி





மதுரை அருப்புக் கோட்டை ரோடு, டி.வி.ஆர். நகர் 'சுப்பலட்சுமி லட்சுமிபதி காலேஜ் ஆப் சயின்ஸ்' மாணவிகள் மூவர் தம் கல்லூரி பற்றி பெருமையாகச் சொன்னவை இங்கே தொகுப்பாக...

**குமாரி உம்மு ஹபீபா:**

''நான் இந்த காலேஜிலே பேக்கரி தொழில் பற்றி படிச்சிட்டு இருக்கேன். வேறு எங்கும் இல்லாத அளவு இங்கே வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன பேக்கரி உபகரணங்களை வைத்து விசேஷ பயிற்சி கொடுக்கறாங்க. ஜன நெருக்கடி... சப்தங்களில் இருந்து விலகி அமைதியான சூழலில் பயிற்சி அளிக்கப்படுவதாலே படிப்பது... மனதில் ஆழமாக பதிந்து விடுகிறது. முக்கியமாக பேக்கரி தொழில் நுட்பம் பற்றி தெளிவாக கற்றுத் தருவதோடு, சுயமாக தொழில் துவங்க வழி முறையும் படிப்பின் முடிவில் வங்கிக் கடன் பெற்று புதிய பேக்கரி துவங்க ஆலோசனைகளும் சொல்றாங்க. காலேஜிலே விதவிதமான பேக்கரி அயிட்டங்களை செய்து பார்ப்பது. அதனை ருசித்து சாப்பிட்டு பார்ப்பது ரொம்ப ஜாலியா இருக்கும். பிளஸ்டூ படிச்சவங்க ஒரு வருட பேக்கரி சர்டிபிகேட் கோர்ஸில் சேரலாம். பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம்., படிச்சவங்க ஒரு வருட பேக்கரி டிப்ளமோ கோர்ஸில் சேரலாம். வயது வரம்பு இல்லை.

**குமாரி மீனலோசினி:**

''எங்கள் கல்லூரி அரசு பதிவு பெற்றது. படிப்பு முடிந்ததும் நிச்சயம் வேலை கிடைக்கிறது. இங்கே B.Sc., Hotel Management & Catering Sciences கோர்ஸ் மூன்று வருடங்கள் படித்தால் நட்சத்திர ஹோட்டலில் நல்ல சம்பளத்தில் கௌரவமான வேலை கிடைக்கிறது. சமையற் கலையை முழுமையாக இங்கே கற்றுக் கொள்வதால் தனிப்பட்ட முறையிலும் பெண்கள் வாழ்க்கையில் பேருதவியாக இருக்கிறது. வெளிநாட்டு ஹோட்டல்களிலும் வேலை வாய்ப்பு தேடி வருகிறது.

இங்கே Post Graduate Diploma in Bakery Science & Management (PGDBS&M), Accommodation Management (PGDAM), Foods Beverage Management (PGDF&BM) போன்ற ஒரு வருட பிஜி டிப்ளமா கோர்ஸ்கள் கற்றுத் தருகிறார்கள். Food Production (CCFP), Bakery & Confectionery (CCBC), Food & Beverage Service (CCFS), House Keeping (CCHK), Laundary & Dry Cleaning (CCLD) போன்ற ஒன்றரை வருட, ஒரு வருட, ஆறுமாத சர்டிபிகேட் கோர்ஸ்களும் இங்கு உள்ளது.

**குமாரி ஜெயா:-**

சைவ மற்றும் அசைவ உணவு வகைகளை தயாரிக்க சொல்லித் தராங்க. சைனீஸ் வுட், காண்டினெண்டல் வுட் என பல வகையான உணவு வகைகளை தரமாக, சுத்தமாக தயாரிக்க பயிற்சி கொடுக்கறாங்க. ஹோட்டலை எப்படி அலங்கரிப்பது என்பதையும் சிறப்பாக சொல்லித் தராங்க. அது நாம் நம் வீட்டை நன்றாக அலங்கரிக்கவும் உதவி செய்யுது. யாருமே சாப்பிட்டுப் பார்த்திராத இன்டர் நேஷனல் உணவு வகைகளை இங்கே கற்று நாம் தயாரித்து வழங்கும் போது சாப்பிடுபவர்கள் பிரமிப்புடன் பாராட்டுகிறார்கள். 'Fast Food' Shop துவங்கி சம்பாதிக்கலாம். பூக்கள் அலங்காரங்கள் செய்வதை இங்கே கற்று பிரபல தனியார் கம்பெனிகள், நட்சத்திர ஹோட்டல்களில் செய்து வருமானம் பெறலாம். கிராமப்புறங்களில் குறைந்த செலவில் சிறிய ஹோட்டல்கள் அமைத்து சம்பாதிக்கலாம். மிக குறைந்த கட்டணத்தில் இங்கே தொழில் கல்வி பெற்று ஒளிமயமான எதிர்காலம் நிச்சயம் பெறலாம்.'' எமது கல்லூரியின் தொலைபேசி எண் - 849219 (எஸ்.டி.டி. 04549)

## டுவின்கிள்

'டுவின்கிள்' முதல் தரமான சோப்பு கலவை. 'கோப்சன் சர்பேட்டனஸ் பிரைவேட் லிமிடெட்' தயாரிப்பான 'டுவின்கிள்' தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திராவில் உள்ள தொழிற்சாலை வட்டாரத்திலும், சென்னை நகரத்தில் உள்ள பெட்ரோல் பங்க் - ஆட்டோமோபின் மற்றும் சர்வீஸ் ஸ்டேஷன் ஆகியவற்றிலும் உபயோகமாகிறது. இதனால் தோலில் எந்தவிதமான தொந்தரவுகளும் ஏற்படாது என்று ஆராய்ச்சி கூறுகிறது.

இந்த சோப்பு கலவை பாத்திரங்களை கழுவ மட்டுமல்லாமல் மோட்டார் வண்டிகளை கழுவுவதற்கு கூட உபயோகப்படுகிறது. சென்னை அருகில் உள்ள மறைமலை நகர் தொழிற்சாலை எஸ்டேட்டில் உற்பத்தி யூனிட் அமைந்துள்ளது.

500 கிராம் டுவின்கிள் பிளாஸ்டிக் கன்டெய்னர் அனைத்து வரிகள் உட்பட சுமார் 30 ரூபாய்க்கு கிடைக்கிறது.

—செய்திக் குறிப்பு

## இதயம் டிலைட்

'டிலைட்' என்ற பெயரில் இதயம் நல்லெண்ணெய் நிறுவனத்தார் அறிமுகப் படுத்தும் இந்தப் புதிய நல்லெண்ணெய் ஏற்றுமதித் தரமான எள்ளில் இருந்து தயாரிக்கப்பட்டு அழகிய 'பெட்' பாட்டில்களில் அடைக்கப்பட்டு, விற்பனைக்கு வந்துள்ளது. தற்போது 500 கிராம் 'பெட்' பாட்டில்களில் 'டிலைட்' நல்லெண்ணெய் கிடைக்கின்றது. புதிய 'டிலைட்' நல்லெண்ணெய் 500 கிராம் விலை ரூ. 37/- இதயம் நல்லெண்ணெயை விட விலை சற்று அதிகம். தரமும் உயர்ந்தது




—செய்திக் குறிப்பு

# 1997 ஜூன் மாத பலன்கள்

## மேஷம்

மாதம் முழுக்க உங்களுக்கு நல்ல பலன்களே நடக்கும். உடல் பாதிப்பு வந்து சரியாகி விடும். குடும்பப் பெண்கள் எதிர்பாராத நன்மைகள் பெறுவர். கணவரின் ஆதரவு பெருகும். சகோதரி திருமணம் நடக்க புகுந்த வீட்டில் உதவி கிடைக்கும். தொழில் அதிபர்கள், வியாபாரிகள் முன்னேற்ற சூழ்நிலை காண்பர். வர்த்தகம் வளம் பெறும். சுய நல சக்திகள் விலகிப் போகும். அலுவலக பணி புரிவோர் சிரம நிலை மாறி நல்ல தகவல் பெறுவர். வீண் பழிகள் அகலும் கலைஞர்கள் எழுத்தாளர்கள் நற்செய்தி பெறுவர். பண வரவு.

## ரிஷபம்

மாதம் முழுக்க சுமாரான பலன்களே. ஆதி பராசக்தி வழிபாடு சிரமங்களை குறைக்கும். குடும்பப் பெண்கள் பொறுமையாக எதிலும் செயல்படுவது நல்லது. இல்லையென்றால் வீண் விவகாரம் தேடி வந்துவிடும். தொழில் அதிபர்கள், வியாபாரிகள் லாபம் பெற கடுமையாக உழைக்க வேண்டி வரும். அலுவலக பணி புரிவோர் வேலை பார்த்தும் நல்ல பெயர் கிடைக்காமல் மன வேதனை அடைவர். கலைஞர்கள். எழுத்தாளர்கள் முயற்சிகளுக்கு ஏற்ற பலன் இராது. எதிலும் நிதானமாக செயல்படுவது சிறந்தது.

## மிதுனம்

அற்புதமான நல்ல பலன்கள். சில இடையூறுகள், உடல் நல பாதிப்புகள் மட்டுமே அவ்வப்போது வந்து போய்விடும், கொடுத்த வாக்கினை காப்பாற்றி விடுவீர்கள். பணவரவு சரளமாக இருக்கும். தெற்கு திசை நல்ல தகவலை தரும். குடும்ப பெண்கள் பட்டுப் புடவை, வைர நெக்லஸ் வாங்கி மகிழ்வர். புதிய மனையும் வாங்குவர். தொழில் அதிபர்கள், வியாபாரிகள் எதிர்பாராத லாபங்கள் அதிகம் அடைவர். வெளிநாட்டு வர்த்தகம் முன்னேற்றம் பெறும். அலுவலக பணி புரிவோர் தடங்கல் நீங்கி பிரமோஷன் பெறுவர்.

## கடகம்

சுமாரான பலன்கள். பேச்சில் நிதானம் வேண்டும். குடும்பப் பெண்கள் குழந்தைகள் எதிர்காலம் நினைத்து வருந்துவர். மாமியாருடன் அனாவசிய மோதல் வரலாம். விட்டுக் கொடுத்து செயல்படுவது நல்லது. தொழில் அதிபர்கள், வியாபாரிகள் லாபத்தில் குறைவு காண்பர். புதிய இடம் வாங்க பிரச்னைகள் வரும். அலுவலக பணி புரிவோர் உடன் பணி புரிபவருக்கு உதவி செய்யப் போய் கெட்ட பெயர் பெறுவர். கலைஞர்கள், எழுத்தாளர்கள் எதிர்பார்க்கும் வெற்றி தாமதமாக கிடைக்கும். பொறுமை மிக அவசியம்.

## சிம்மம்

மாதம் முழுக்க பிரமாதமாக இருக்கும். பண வரவு பல வழிகளில் பத்திரிகை துறையை சார்ந்தவர்கள் பெரும் பயன்கள் அடைவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். உடல் சுகவீனம் ஆன அன்னை நலம் பெறுவார். குடும்பப் பெண்கள் சந்தோஷ சம்பவங்களை சந்திப்பார்கள். தொழில் அதிபர்கள், வியாபாரிகள் பெரும் லாபம் அடைவர். அரசு சலுகை முழுமையாக கிடைக்கும். அலுவலகப் பணி புரிவோர் அதிகாரி பாராட்டு பெறுவர். வாழ்வில் முக்கிய நல்ல திருப்புமுனை நடக்கும். கலைஞர்கள், எழுத்தாளர்கள் மகத்தான வெற்றிகளைக் காண்பர். தீய சக்திகள் அகன்று தலை நிமிரும் தன்னம்பிக்கை மாதம் இது. புது வீடு கட்டத் துவங்குவீர்கள். தேவைப்படும் கடன் கிடைத்து விடும்.

## கன்னி

சூற்று சோதனைகள் நிறைந்திருக்கும். பணப் பிரச்னை அதிகமாகலாம். ஆனால் ஆஞ்சநேயர் அருள் உங்களை காப்பாற்றிவிடும். அடுத்தவர் வாங்கும் கடனுக்கு ஜாயிண்ட் கையெழுத்து போடுவதை தவிர்த்து விடுங்கள். தொழில் அதிபர்கள், வியாபாரிகள் தொய்வு நிலையை காண்பார்கள். தொழிலில் கூட்டாளி தொந்தரவு கவலை உண்டாக்கும். அலுவலக பணிபுரிவோர் வேலைப் பளு அதிகமாகி தவிப்பர். கலைஞர்கள். எழுத்தாளர்கள் முயற்சி சுமாரான பலன் தரும்.

## துலாம்

சிரமங்கள் அதிகமாக இருக்கும். தெய்வ பலமும், தர்ம சிந்தனையும் உங்களை காப்பாற்றிவிடும். குடும்பத்தோடு குல தெய்வ கோவில் வழிபாடு செய்வது நல்லது. சிறு அதிர்ஷ்ட வாய்ப்பு உண்டு. குடும்பப் பெண்கள் அடுத்த வீட்டு பெண்களுடன் சுமூக உறவின்றி மோதல் வலுப்படும். தொழில் அதிபர்கள், வியாபாரிகள் வர்த்தக தடைகள் அதிகம் காண்பர். வரிச்சுமையும் அதிகரிக்கும். அலுவலக பணி புரிவோர் அதிகாரி அதட்டலால் அதிருப்தி அடைவர். கலைஞர்கள், எழுத்தாளர்கள் முன்னேற ஊக்கம் வராது. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும்.

## விருச்சிகம்

மாதம் முழுக்க அற்புதமாக இருக்கும். தொட்டதெல்லாம் பொன்னாகும். நினைத்தது எல்லாம் நிறைவேறும். பணவரவு பல்வேறு வழிகளில் வந்து குவியும். மகன், மகள் உடல் நல பாதிப்பு மட்டும் வந்து சரியாகும். சிறிய பிரச்னைக்காக வீட்டில் தகராறு வரலாம். தொழில் அதிபர்கள், வியாபாரிகள் புதிய முயற்சிகளில் எதிர்பாராத நற்பலன்களை அடைவார்கள். மாணவ, மாணவிகள் அனுகூல பலன்களை காண்பர் அலுவலக பணிபுரிவோர் பிரமோஷன், ஸ்பெஷல் இன்கிரிமெண்ட் பெறுவர். கலைஞர்கள், எழுத்தாளர்கள் நல்ல வாய்ப்புகள் பெற்று வாழ்வில் உயர்வார்கள்.

## தனுசு

சுமாரான பலன்கள் எதிலும் இழுபறி நிலையே நீடிக்கும். வேலை வாங்கித் தருவதாக கூறி பணம் பறிக்கும் பேர்வழிகளிடம் எச்சரிக்கை தேவை. பயணத்தில் சிறு காயங்கள் ஏற்படலாம். குடும்ப பெண்கள் நல்லது செய்யப் போக கெட்ட பெயர் வரலாம். பிறர் விவகாரத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. தொழில் அதிபர்கள், வியாபாரிகள் புதிய முயற்சிகள் செய்யாமல் இருப்பது நல்லது. மாணவ, மாணவிகள் தடைகளை எதிர்நோக்க வேண்டி வரும். அலுவல பணி புரிவோர் வீண்பழிகளை சுமப்பர். அதிகாரி ஆதரவு இராது கலைஞர்கள், எழுத்தாளர்கள் திட்டமிடுவதில் தாமதம் ஆகும். பணவரவு திருப்தியாக இருக்கும். அவ்வப்போது சில நல்ல பலன்களும் நடக்கும்.

## மகரம்

மாதம் முழுக்க மகிழ்ச்சி பொங்க வைத்துவிடும். உறவினர் உதவியால் கடன் தீரும். புதிய பிளாட் வாங்குவீர்கள். குடும்பப் பிரச்னை சுமுகமாக தீர்ந்துவிடும். பணம் பல வழிகளில் வந்து சேரும். குடும்பப் பெண்கள் மனம் திருப்தி அடையும். மாமியார் பாராட்டு கிடைக்கும். தொழில் அதிபர்கள், வியாபாரிகள் திட்டமிட்ட முன்னேற்றம் பெறுவர். வெளிநாட்டு வர்த்தகம் எதிர்பாராத லாபம் தரும். அலுவலகப் பணிபுரிவோர் நற்பெயர் பெறுவர். கலைஞர்கள், எழுத்தாளர்கள் உன்னத புகழ் அடைவார்கள்.

## கும்பம்

பலன்கள் சுமாராக இருக்கும். யாருக்கும் எந்தவித வாக்குறுதியும் தந்து விடாதீர்கள். அறிமுகம் இல்லாத பேர்வழிகளை நம்பி எதையும் செய்து விடாதீர்கள். நாத்தனார் பிரச்னை உண்டாக்குவார். மன அமைதி குறையும். தெய்வ வழிபாடு பலன் தரும். தொழில் அதிபர்கள், வியாபாரிகள் போட்டிகள் அதிகமாகி லாபம் குறையக் காண்பர். பார்ட்னர் தொந்தரவு இருக்கும். அலுவலகப் பணி புரிவோர் அச்சம் அடைவர். வெளி மாநில டிரான்ஸ்பர் பற்றி வருந்துவர். கலைஞர்கள், எழுத்தாளர்கள் எதிர்பார்த்த முன்னேற்றம் இராது. பண வரவு சுமாராக இருக்கும்.

## மீனம்

இம்மாதம் உங்களுக்கு சுமாராக இருக்கும். தலைவலி, பல்வலி, முதுகுவலி பாடாய் படுத்தலாம். இரவில் அதிக நேரம் கண் விழிப்பதை தவிருங்கள். குடும்ப பெண்கள் மகன், மகள் எதிர்காலம் பற்றி கவலை அடைவர். நல்ல தகவல் ஒன்று மாத பிற்பகுதியில் வரும். ஆதிபராசக்தி வழிபாடு சிரமங்களை குறைக்கும். தினசரி விநாயகரை வழிபட்டு செயல்படுவது நல்லது. தொழில் அதிபர்கள், வியாபாரிகள் தொழிலில் தொய்வு நிலை காண்பர். இடம் வாங்குவதில் புதிய பிரச்னை வரும். அலுவலக பணி புரிவோர் உழைப்பிற்கு தகுந்த உயர்வு இன்றி வருந்துவர். கலைஞர்கள் எழுத்தாளர்கள் முன்னேற்றம் இடையூறுகளுடன் இருக்கும்.

- 'ஜோதிட வித்வமணி' **ஆர். பட்டம்மாள்**

தொண்டுச் சிறுகதை

# பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான்!

— வைதேகி தேசிகன்

சுகந்தியைப் பெண் பார்த்துவிட்டு வந்த நாளை மனதுக்குள் அசை போட்டான் சிவராமன்.

கல்லூரியில் பட்டப் படிப்பு படிக்கும் பெண். ''இதுதான் கடைசி வருஷம் சிவராமா. ரொம்ப நல்லா படிக்கற பொண்ணு. படிப்பை நிறுத்த வேண்டாம். நிச்சயம் பண்ணி வச்சுகிட்டு பரீட்சை முடிஞ்சப்புறம் கல்யாணத்தை வச்சுக்கலாம். நல்ல இடம். பொண்ணும் ரொம்ப அழகாயிருக்கா'' சொன்ன அம்மாவுக்கு தலையை மட்டும் ஆட்டி விட்டு தன் அறைக்கு வந்தவன் சுகந்தியின் போட்டோவை எடுத்து பார்த்தான். 'கண்ணைக் கட்டி நிறுத்தும் இந்தப் பேரழகு எனக்குக் கிடைக்க நான் மூன்று மாதமென்ன மூன்று யுகங்கள் கூட காத்திருக்கத் தயார்.'

அன்று நிச்சயம் செய்ய நாள் குறிப்பிட்டிருந்தனர். அழைக்கப்பட்டவர்கள் அனைவருமே வீட்டில் வந்து காத்திருக்க சுகந்தி மட்டும் இன்னும் கல்லூரியிலிருந்து வரவில்லை. ''என்னடி நீ பெண்ணைப் பெத்தவ? இன்னிக்கு நிச்சயதார்த்தம் வச்சிருக்கு. பொண்ணை எப்படி நீ காலேஜ் அனுப்பினே? கொஞ்சம் கூடப் பொறுப்பில்லாமே?'' - சுகந்தியின் தந்தை.

''நான் என்னங்க செய்வேன்? அவதான் ஏதோ டெஸ்ட் இருக்கு. இதோ போயிட்டு12 மணிக்குள்ள வந்துடுவேன்னு சொல்லிட்டுப் போனா. விசேஷம் மாலை 5 மணிக்குதானே எதுக்கு அனாவசிய லீவுன்னு..'' -

''என்ன சார் 5 மணிக்கே நேரம் குறிச்சிருந் தீங்க. மணி 6 ஆகப் போகுது. இன்னும் பெண்ணைக் காணோமே? அவளுக்கு இந்த கல்யாணத்தில் இஷ்டமில்லையா? உங்க வற்புறுத்தலுக்காகத்தான் சம்மதிச்சாளா? - என மாப்பிள்ளையின் மாமா கேட்ட போது அவமானத்தால் சிறுத்துத்தான் போனார் சுகந்தியின் தந்தை.

''சாரி, மன்னிச்சிடுங்க. இன்னிக்கு எதிர் பார்க்காமே ஒரு வேலையை செய்ய வேண்டியதாகிப் போச்சு. அதனாலேதான் இப்படி லேட். ரொம்பவும் சாரி'' என சொல்லிக் கொண்டே தன் தோழிகள் இருவருடன் உள்ளே நுழைந்த சுகந்தி வேகமாக உள்ளே ஓடினாள். அவள் முகம் கழுவி உடை மாற்றி வருவதற்குள் ''சார், நாங்க காலேஜிலிருந்து 12மணிக்கே கிளம்பி வந்துட்டோம். வரும் வழியிலேதான் ஒரு சின்ன பிரச்னை. ஒரு டீன் ஏஜ் பொண்ணு அவ வீட்டையும் ஊரையும் விட்டு மெட்ராஸ் ஓடி வந்திருக்கா. சினிமா மோகம்! இறுதியில் ஏமாற்றப்பட்டு உதவி கேட்டு வந்த அவளை ஆதரவில்லாத பெண்களுக்கு அடைக்கலம் தரும் 'ஹோம்' ஒன்றிலே விட்டுவிட்டு அவளோட ஊருக்கும் அவளைப் பற்றி - அவ ரொம்பவும் பாதுகாப்பாக இருக்கற தகவலை தெரிவிச்சிட்டு வரா. நாங்களும் அவ கூட இருந்து ஹெல்ப் செய்தோம். ரியலி சுகந்தி போல ஒரு பெண்ணைப் பார்க்கறதே ரொம்பவும் கஷ்டம். என்ன அவசரமானாலும், தலையே போற வேலையானாலும் கஷ்டத்திலே இருக்கறவங்க கண்ணிலே பட்டா உதவி செய்யாம போகவே மாட்டாள். அது அவளோட பிறவிக் குணம்'' - தோழிகள் சொல்லிக் கொண்டே போக ''போதும் அவுங்களை ரொம்பவும் போரடிக்காதே'' என்றபடியே அலங்கார தேவதையாக அங்கே வந்து சேர்ந்தாள் சுகந்தி.



திருமணமாகி வந்த பின்புதான் சுகந்தியின் பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. சுகந்தி ஏதாவது 'ராங்க்' எடுப்பாள் என எல்லோரையும் போலவே சிவராமனும் எண்ணியிருந்தான். ஆனால்? அவள் சராசரி மதிப்பெண் பெற்றுத்தான் தேறியிருந்தாள். ''ஏன் சுகந்தி இப்படி?'' - சிவராமன் கேட்க ''நான் பரீட்சைக்கு கிளம்பிப் போன போது ஒரு சின்ன விபத்து. ஒரு பாட்டியை மோட்டார் சைக்கிளில் போன ஒருத்தர் ரொம்ப வேகமா இடிச்சு கீழே தள்ளிட்டு - கொஞ்சம் கூட மனுஷத்தனமே யில்லாமே வேகமாக போயிட்டாரு. நான் அவர் வண்டி நெம்பரை பார்த்து குறிச்சு வச்சுகிட்டேன். ரோட்டிலே அப்போது யாருமேயில்லை. அந்த பக்கமாக வந்த ஒரு ஆட்டோவை பிடிச்சு அதுலே அந்தப் பாட்டியை ஏற்றி ஆஸ்பிடல் கொண்டு போயி - டாக்டர்களை வேண்டி அவங்களை நல்லா கவனிக்கச் சொல்லிட்டு - அதுக்கப்புறம் தான் பரீட்சை ஹாலுக்கு வர முடிஞ்சது. கிட்டத்தட்ட 45 நிமிஷம் லேட். என்னைப் பற்றி காலேஜ்லே நல்லா தெரிஞ்ச தாலே உடனே என்னை பரீட்சை எழுத அனுமதிச்சாங்க. எல்லா விடைகளும் தெரிஞ்சாலும் அவைகளை எழுத நேரமில்லை. பரீட்சையை முடிச்சிட்டு மாலை போறப்போ என்னோட அங்கிளைப் பார்த்து அவர்கிட்டே வண்டி நெம்பரைக் கொடுத்து அதை 'டிரேஸ்' செய்யச் சொன்னேன். போலீசுக்குப் போகாமலேயே அவரைத் தேடிப் பிடிச்சு அவர்கிட்டே இதை நானும், அங்கிளுமா சொல்லி பாட்டி யோட வைத்திய செலவுகளை ஏத்துக்க வைத்ததோடு - பாட்டிக்குக் கொஞ்சம் பணமும் தரச் சொன்னோம். அவரும் தன் செய்கைக்கு வருத்தப்பட்டு தாராளமாக கொடுத்தார். பரீட்சைக்கு நடுவிலே இப்படி நேரம் போயிட்ட தாலே சுமாராத்தான் எழுதினேன். மார்க்கும் சுமார் தான்.

''ஆனால் உன் செய்கை சுமார் இல்லே சுகந்தி. அதுக்காக நம்ம காலேஜிலே உனக்கு ஒரு பாராட்டு விழா ஏற்பாடு பண்ணியிருக்காங்க'' - என்றபடியே வந்தார் சுகந்தியின் பேராசிரியை. ''நான் செய்தது சாதாரண செயல் - அதில் இருந்தது வெறும் மனிதாபிமானம் மட்டும் தான். எதற்காக ஒரு பாராட்டும்? விழாவும்?'' - ரொம்பவும் சாதாரணமாகக் சுகந்தி கேட்ட போது, ரொம்பவும்தான் பெருமைப்பட்டுப் போனான் சிவராமன்.

சாதாரணமாக இருந்த சுகந்தியின் சேவைகள் நாளாக ஆக பரந்து விரிந்தன. 'எந்த வகை அரிய ரத்தமென்றாலும் சுகந்தியின் லிஸ்ட்டைப் புரட்டினால் 5 நிமிடத்தில் அந்த வகை உடையவரின் முகவரி கிடைத்து விடும். முதலில் அவள் சேவைகளைக் கண்டு பெருமைப் பட்ட சிவராமனுக்கு இவை வளருவதைக் கண்ட போது அலுப்பே தட்ட ஆரம்பித்தது. ஓயாமல் ஒலிக்கும் டெலிபோன். அலறிக் கொண்டேயிருக்கும் அழைப்பு மணி. எப்போதும் வீடு தங்காமல் போய்க் கொண்டேயிருக்கும் மனைவி - அவன் அலுப்புக்கு இது தான் காரணம்.

''சுகந்தி இந்த சேவைகளை குறைக்க வழி பாரு. இதனாலே என்ன ஆதாயம். ஓயாமல் ஓடி உடம்பையும் கவனிக்கலே, என்னையும் கவனிக்கலே. வீடும் அவ்வளவுதான்! அம்மா மட்டும் எத்தனை நேரம் இதெல்லாம் கவனிப்பாங்க? நாளைக்கே நமக்கு குழந்தை குட்டின்னு ஆனா? - இப்போதே இவைகளை குறைக்கறது நல்லது'' - சற்றே கண்டிப்பாக அவன் கூற பதிலேதும் பேசவில்லை சுகந்தி.

அடுத்தநாள் சிவராமன் ஆபீசிலிருந்து வரும் போதே சுகந்தி வீட்டில் இல்லை. அம்மா தான் காப்பி கொண்டு வந்து தந்தார். ''என்னமோ சிவா ... எனக்குத் தெரியலை ...புரான்னு அத்தை போயிட்டு சீக்கிரமா வரேன்னு சொல்லிட்டுப் போனா'' என்று சொல்லிவிட்டு

உள்ளே போனார் அவர். அன்று சுகந்தி திரும்பி வரும் போது இரவு 11.30. ''கண்தானம் பத்தி என்னை பேசச் சொல்லி 'லேடீஸ் கிளப்'-லே கூப்பிட்டு இருந்தாங்க. நான் அங்கே போயிட்டு திரும்பி வரும்போதுதான் விபத்துலே அடிப்பட்டு கிடந்த ஒருத்தரை பார்த்தேன். வேகமாக வந்த லாரி மோட்டார் சைக்கிளிலே வந்த அவரை இடிச்சு தள்ளிட்டுப் போயிருக்கு. நல்லா காயம் பட்டு ரத்தம் ஆறா ஓடி கிட்டு இருந்தது. தலையிலே ஹெல்மெட் இருந்ததாலே தலைகாயம் இல்லை. அடிபட்ட சில மணி நேரங்கள் 'கோல்டன் அவர்ஸ்'-னு சொல்வாங்க. இரத்த சேதம் அதிகமாகு முன்னாலே ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயி வைத்தியம் செய்தா உடனடியாகப் பிழைச்சிடுவாங்க. அதான் அவரை நான் வந்த ஆட்டோவிலேயே போட்டு எடுத்துப் போயி ஆஸ்பிடல்லே சேர்த்தோம். அவர் ரத்தம் ரொம்ப 'ரேர் க்ரூப்'. அதற்கும் ஆள் தேடி வரவழைச்சு - ரத்தம் ஏற்றி அவர் வீட்டுக்கு ஆள் அனுப்பி... அதான் இவ்வளவு நேரம்'' - தயங்கியபடியே சொன்னாள் சுகந்தி. பதிலேதும் சொல்லாமல் நகர்ந்தான் சிவராமன்.

மறுநாள் காலை சிவராமன், ''சுகந்தி. இப்படி ஒரு நிமிஷம் வா.'' என அழைத்து ''உன் சேவைகளுக்கு ஒரு எல்லை வச்சுக்கணும். இப்போ அது ரொம்பவும் எல்லை மீறிப் போயி நம்ம குடும்பத்தையே பாதிக்கற நிலமைக்கு வந்தாச்சு. இது இப்படியே தான் தொடரும்னு நீ சொன்னா நாம ரெண்டு பேரும் நண்பர்களாகவே பிரிஞ்சிடுவோம். இதைச் சொல்ல வருத்தமாதான் இருக்கு ஆனாலும் சொல்ல வேண்டிய நிலை. ரொம்ப சாரி. நான் வேணும்னு நீ நெனைச்சால் இந்த சமூக சேவைகளை, உன் தொண்டுகளை கொஞ்ச நாளைக்கு நீ நிறுத்தி வை. இல்லே அதுதான் ரொம்பவும் பெரிசுன்னு நீ நெனைச்சா... சாரி நாம நிரந்தரமாகப் பிரிய வேண்டியதுதான் எதுக்கும் யோசனை பண்ணி வை'' என்றபடியே ஆபீஸ் கிளம்பினான் சிவராமன். மாலை அவன் வந்தவுடன் ''நான் கொஞ்ச நாளைக்கு அம்மா வீட்டிலே போய் இருந்துட்டு வரேன்'' என ஒற்றை வரியில் சொல்லிட்டு அங்கிருந்து பெட்டி யுடன் கிளம்பி விட்டாள். ''சிவராமா இவ ஒண்ணும் ஒத்துவர மாதிரி தோணலை பேசாமே இவளை விவாகரத்து பண்ணறதுதான் மேல்'' - என்ற அம்மாவுக்கு பதில் ஏதும் சொல்லாமல், தலையை மட்டும் ஆட்டியபடியே மௌனமாக இருந்தான் அவன். 2 மாதங்கள் உருண்டோடி விட்டன. அவ்வப்போது சிவராமனுடன் போன் செய்து பேசுவாள் சுகந்தி. அத்துடன் சரி. வேறு எந்த தீர்மானமும் சொல்லவில்லை.

''சிவராமா, இன்னிக்கு சுகந்தி வீட்டுக்குப் போகலாமா? ஏதாவது தீர்மானம் செய்யணும்டா, இப்படியே போய்கிட்டு இருந்தா...?'' 'சரி' என்பது போலத் தலையை ஆட்டினான். ''இதோ பாரு என் தங்கை அதான் உன் சித்தி, இன்னிக்கு டெல்லி கிளம்பறா அவளோட பெண் வீட்டுக்கு. அவளை ரயிலேத்திட்டு வரும்போது அப்படியே சுகந்தி வீட்டுக்கும் போயிட்டு வரலாம்'' என்றார் அம்மா. மதியம் அம்மா சொன்னபடி கிளம்ப ஆட்டோ பிடித்துவரப்போன சிவராமனுக்கு அன்று ஸ்ட்ரைக் எனத் தெரியவந்தது ''அம்மா இன்னிக்கு ஆட்டோ ஸ்ட்ரைக்காம். என்ன செய்வது? பேசாமல் என் ஸ்கூட்டரிலேயே போகலாமா?'' என்று கேட்க. ''ஜாக்கிரதையாகப் பார்த்து ஓட்டு. எனக்கு இதிலே பழக்கமேயில்லை'' என்றபடியே மகனுடன் வண்டியில் ஏறினார் அவர். ''டேய் சிவா. எதிரே லாரி, ஐயோ! பயமாயிருக்குடா. பார்த்து பார்த்து. ஐயோ இதோ எதிரிலே கார் வேகமா வருதுடா'' - இப்படியே பின்னால் உட்கார்ந்து அலறியபடி வந்தவர் அப்படியும் இப்படியும் ஆட வண்டி 'பேலன்ஸ்' போய் 'தடால்' என்று இருவரும் கீழே விழ - வண்டியும் சரிந்தது. ரத்தம் ஆறாக ஓட, இருவரும் நினைவிழந்தனர்.

சுகந்தியின் வீட்டு அழைப்பு மணி ஒலிக்க - வேகமாக வந்து கதவைத் திறந்தாள் சுகந்தி. ''மேடம். ரொம்ப அவசரம். ஒரு தாயும் மகனும் அடிப்பட்டு கிடந்தாங்க. ஆஸ்பிடல்லே கொண்டு போய் சேர்த்தோம். அவுங்க ரத்தம் ரொம்ப அரிதான 'ஓ'நெகடிவ் வகை'' - அவர்கள் சொல்லி முடிக்கு முன்பே தன் கைப்பையில் உள்ள லிஸ்டை எடுத்து உடனடியாக தொடர்பு கொண்டு யாரிடமோ பேசிவிட்டு ''வாங்க போகலாம் ஆஸ்பிடலுக்கு'' எனக் கிளம்பினாள். இரத்த தானம் செய்ய வந்தோர் ரெடியாகக் காத்திருக்க - அவர்களின் ரத்தம் பரிசோதனை செய்யப்பட்டு உடனடியாக வேண்டியவர்களுக்குத் தரப்பட்டது. எல்லாம் முடிந்த பின்பு அடிபட்டவர்கள் யார் எனப் பார்த்த சுகந்திக்கு பெரும் வியப்பு. அவர்கள் அவள் கணவனும் மாமியாரும் தான்.

இரண்டு வார சிகிச்சைகளுக்கு பின்பு அவர்கள் ஓரளவு உடல் நிலை தேறினர். சுகந்தி அவர்களைப் பார்க்க வந்த போது ''சுகந்தி என்னை மன்னிச்சு. உன் சேவையின் அர்த்தம் இப்போதான் எனக்கு புரிஞ்சது. அதுக்காகத்தான் இந்த விபத்தையே ஆண்டவன் எனக்குத் தந்தான்னு நெனைக்கிறேன். உன்னை மாதிரியே இந்த சேவையைச் செய்யறவங்க எங்களைப் பார்த்து இங்கே கொண்டு வந்து சேர்க்காது போனா எங்க கதி [illegible] தொண்டை அடைக்க கண்ணீர் சிந்தினான் சிவராமன் [illegible] அம்மா சுகந்தி நம்ம வீட்டுக்கு எப்போ வரப் போறே [illegible] அவர்களை ஆதரவுடன் பற்றி புன்னகைத்தாள் சுகந்தி [illegible] சிவராமனும் அவன் அம்மாவும்

# திருத் தொண்டு பாடும் திரை இசை வரிகள்

தன்மானம் காப்பதிலே - அன்னை
தந்தையைப் பணிவதிலே
பிறந்த பொன்னாட்டின் நல்ல முன்னேற்றம் காண
பொதுப்பணி புரிபவர் மகிழ்ச்சியிலே
ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான்

—எம்.கே. ஆத்மநாதன்

பொங்காத பெருங்கடல் பொங்கி வந்தது போல்
பொங்குது உள்ளமெல்லாம், அன்பில் முழக்குதடா
போகாத துன்பமெல்லாம் போனதே என்றும்
தீராத சண்டைகளும் தீர்ந்ததடா!

—பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

வானம் நமது தந்தை
பூமி நமது அன்னை
உலகம் நமது வீடு
உயிர்கள் நமது உறவு

—பூவை செங்குட்டுவன்

உச்சி வெய்யிலில் பிச்சை எடுக்கும்
பச்சைக் குழந்தைகள் பாரும்!
ஒரு பிடி சாதம், ஒரு பிடி அரிசி
ஒரு முழக் கந்தை தாரும்!

—கொத்தமங்கலம் சுப்பு

அன்பினில் உலகாளலாம் எந்நாளும்
அமைதியினில் நலங் காணலாம் எல்லோரும்

—குயிலன்

நதியைப் போல நாமும் நடந்து பயன்தர வேண்டும்
கடலைப் போல விரிந்த இதயம் இருந்திட வேண்டும்
வானம் போலப் பிறருக்காக அழுதிட வேண்டும்
வாழும் வாழ்க்கை உலகில் என்றும் விளங்கிட வேண்டும்

—புலமைப்பித்தன்

பூமியில் நேராக வாழ்பவர் எல்லோரும்
சாமிக்கு நிகரில்லையா - பிறர்
தேவையறிந்து கொண்டு வாரிக் கொடுப்பவர்கள்
தெய்வத்தின் பிள்ளையில்லையா?

—கண்ணதாசன்

பல நூல் படித்து நீ அறியும் கல்வி
பொது நலம் நினைத்து நீ வழங்கும் செல்வம்
பிறர் உயர்வினிலே உனக்கிருக்கும் இன்பம்
இவை அனைத்திலுமே இருப்பதுதான் தெய்வம்

—வாலி

தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம் - கல்வி
தெரியாத பேர்களே இல்லாமல் செய்வோம்
கருத்தாகப் பல தொழில் பயிலுவோம் - ஊரில்
கஞ்சிக்கில்லை என்ற சொல்லினைப் போக்குவோம்.

—தஞ்சை ராமையாதாஸ்

குயிலுக்கொரு நிறமிருக்கு - அதன்
குரலுக் கொரு நிறமிருக்கா?
கொண்டாடும் இந்தப் பொன்னான மண்ணில்
வந்தாடும் நிறம் எத்தனை எத்தனை
ஒண்ணான இந்த மனித இனத்தில்
உண்டான குணம் எத்தனை எத்தனை?
அட, கறுப்பும் இல்லே
வெளுப்பும் இல்லே
கண்ணிலேதானே பேதமிருக்கு!

—பொன்னடியான்

பிறருக்காகக் கண்ணீரும் பிறருக்காகச் செந்நீரும்
சிந்தும் மனிதன் எவனோ
அவனே மனிதன் ... மனிதன் ... மனிதன்

—வைரமுத்து

தொகுப்பு: **'வாகைச் செல்வன்'**

# அழகுக்கு அழகு

சென்னை மைலாப்பூர் எண் 6, வெங்கடேச அக்ரஹாரத்தில் 'மகா ப்யூட்டி டிரைனிங் இன்ஸ்டிட்யூட்'' வைத்து அழகு நிலையத்தோடு அழகு பயிற்சியும் அளித்து வரும் திருமதி. மஹாலட்சுமியை சமீபத்தில் சந்தித்துப் பேசினோம்...

பெண்களை அழகுபடுத்துவதுடன் அழகுக் கலையில் ஆர்வமுள்ள பெண்களுக்கு அதில் மிகவும் சிறந்த முறையில் பயிற்சி வகுப்புகள் நடத்தி சான்றிதழும் அளித்து வருகிறோம். எங்கள் மஹா அழகு பயிற்சி நிலையத்தில் நாங்கள் எல்லாவிதமான அழகுப் பயிற்சிகளையும் சமீப தொழில் நுட்ப வசதிகளுடன் வழங்குகிறோம்.

Electrolisis என்றால் முகத்தில் தேவை இல்லாத இடத்தில் இருக்கும் முடியை நிரந்தரமாக நீக்குதல், இதற்காக உபயோகிக்கும் Needleஐ நாங்கள் மற்றவர்களுக்கு உபயோகிப்பது கிடையாது. Electrolisis செய்வதால் எந்த விதமான அடையாளமும் முகத்தில் ஏற்படுவது இல்லை.

Pigment implatation மூலம் புருவத்தில் வெட்டுக் காயம் அடைந்தவர்களுக்கு வெட்டுக்காயம் தெரியாத அளவிற்கு மாற்றி செயற்கை முறையில் நிரந்தரமாக புருவத்தை அடர்த்தியாக மாற்றித் தருகிறோம். முகம் அழகாக இருப்பதற்கு அழகு மச்சமும் வைக்கப்படுகிறது.

மற்றும் பலவிதமான தலையலங்காரங்களும், மணப் பெண் அலங்காரமும் சிறப்பாகக் கற்றுத்தருகிறோம். முகப் பரு நீக்குதல், தலை முடி உதிர்வதை தடுத்தல், தலை முடி இல்லாதவர்களுக்கு முடி நெய்தல். (Hair weaving) ஆகியவை எங்கள் அழகுப் பயிற்சி நிலையத்தின் சிறப்பு அம்சங்கள் ஆகும்.

திருமணப் பெண்ணின் முகத்திற்கும் தோற்றத்திற்கும், தகுந்தவாறு இயற்கையான தோற்றம் அளிக்குமாறு நாங்கள் மேக்கப் செய்கிறோம். நாம் மேக்கப் போடும் போது அளவுக்கு அதிகமாக போடாமல் Natural look இருக்குமாறு போடுவோம். அதே போல் மணமகளுக்கு பலவிதங்களில் புதுமையாக முடி அலங்காரம் செய்கிறோம்.

மூன்று மாதங்களில் எல்லா பயிற்சிகளையும் முடித்துவிடுகிறோம்.



பள்ளிக்கும் பணிக்கும் செல்லும் பெண்களுக்காக சனி, ஞாயிறும் வகுப்புகள் எடுக்கிறோம். பெண்கள் தங்கள் சொந்த காலில் நிற்கும் அளவிற்கு அவர்களை தயார் செய்கிறோம். ஆங்கில இந்தியப் பெண்கள், சீனப் பெண்கள் சிறந்த பயிற்சி அளிக்கிறார்கள். எம்மிடம் பயிற்சி பெற்ற பல பெண்கள் சிங்கப்பூர், மலேசியா, கோயம்புத்தூர், மதுரை மற்றும் இடங்களில் அழகு நிலையங்களை துவங்கியுள்ளார்கள். நாங்கள் பயன்படுத்துபவை எல்லாம் இயற்கை மூலிகைகளை கொண்டு தயாரிக்கப்பட்டவை. எங்களுடைய வாடிக்கையாளர்கள்தான் எங்களுக்கு நல்ல விளம்பரதாரர்கள். அழகு நிலையத்திற்கு செல்வது அழகுக்காக மட்டும் இல்லை. ஆரோக்கியத்திற்காகவும், என்று கூறுகிறார். திருமதி. மஹாலட்சுமி கமலக்கண்ணன்.

---

'புதுவை மாதர் சங்க'த்தின் பொன்விழா கொண்டாட்டங்கள் இனிதே நடைபெற்றன. 50 வருட காலமாக சங்கத்தை சிறப்பாக நடத்திச் செல்பவர் திருமதி. சரஸ்வதி சுப்பையா. சுதந்திரப் போராட்ட வீராங்கனையான அவர் பெண் முன்னேற்றத்திற்காக விடாப்பிடியாக போராடி வருகிறார். மகளிர் நலத்திட்டங்களை செயல்படுத்த அவருடைய ஆர்வமும் முயற்சியும் பெரிதும் துணைபுரிகின்றன.






சென்னை மந்தவெளிப்பாக்கத்தில் 1991ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது 50 அங்கத்தினர்களுடன் செயல்பட்டு வரும் ஸ்ரீசக்தி மாதர் சங்கம்' ... சிவிக் எக்ஸ்னோரா' அமைப்பு ஒன்றை ஏற்பாடு செய்து நகரில் தங்கள் பகுதியையும் அதைச் சார்ந்த இடங்களையும் சுகாதாரமாக வைத்துக் கொள்கிறார்கள். இச்சங்கத்தின் நோக்கம் ஊனமுற்றோருக்கு உதவுவதே. செங்கல்பட்டில் உள்ள ஜீவன் ஞானோதயா பள்ளிக்கு காது கேளாத, வாய் பேச முடியாத குழந்தைகளுக்கு பல்வேறு உதவிகள் புரிந்து வருவதுடன், விஸ்ராந்தியில் உள்ள முதியவர்களுக்கும் தங்களால் இயன்ற அளவு உதவி வருகிறார்கள். மண்டே சாரிட்டி சங்கத் தலைவியான திருமதி சாவித்திரி வைத்தி அவர்களின் ஆலோசனைகளுடன் செயல்பட்டு வரும் இந்த நிறுவனம் அண்மையில் உடல் ஊனமுற்றோர் நல நிதிக்காக கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்து நடத்தியது. சக்தி மாதர் சங்கத்தின் தலைவராக ஹேமா ரங்கராஜன், செயலாளராக ரத்னா ராஜு, பொருளாளர் [illegible] போர் சிறப்புற செய ல்பட்டு மாற்றி வருகின்றனர். [illegible] மாதர் சங்கம் [illegible] மேலும் வளர்ந்து சீரிய முறையில் நற்பணி[illegible] வாழ்த்துவோம்.

—சங்கீதா

223624

# ஆடைகள் உலகம்

இந்தியாவின் மிகப் பெரிய பட்டுஜவுளி மாளிகையாக பேசப்படுவது சரவணா ஸ்டோர். நகைகளுக்கும் பாத்திரங்களுக்கும் முதலிடம் வகிக்கும் சரவணா ஸ்டோர் 85 ஆயிரம் சதுர அடிப் பரப்பளவில் அமைந்துள்ளது. தினமும் 20,000 வாடிக்கையாளர்களைச் சந்திக்கும் இந்த் கடை, மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



பெண்களுக்கு மட்டுமல்லாமல் ஆண்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து ரெடிமேட் பிரிவு, பேண்ட் சர்ட் வகைகளுக்கான தனிப் பிரிவு, ஆடம்பரமான வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கே ஆண்களுக்குத் தேவையான குறிப்பாக ஜீன்ஸ், டீ சர்ட், வேட்டி, சூட் வகைகள், சஃபாரி வகைகள் ரெடிமேட் ஆகவும், துணியாகவும், குறைந்த விலையில் கவர்ச்சிகரமான டிசைன்களில் பலவிதமான கலர்களில் விற்பனை செய்யப்படுகின்றன. கூட்ட நெரிசலில் அகப்பட்டு சிரமப்பட வேண்டிய அவசியமில்லாமல், விசாலமான அறைகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது.

பெண்களுக்கென்று ரெடிமேட் பிளவுஸ், சுடிதார் செட்டுகள் பல ரகங்களில் உள்ளன. அதில் மிக முக்கியமான வகை சுடிதார் சோர்ட் மாடல், ரங்கிலா, பேரவண்ட் சூட் மாடல், பேன்சி டூபீஸ் மிடி, டசர் சில்க் சுடிதார், காஞ்சிப் பட்டு சுடிதார். டெர்ரிவாயில் கொண்டு உருவாக்கப்பட்ட மென்மையான, பஞ்சு போல் அமைந்திருக்கும் டெர்ரிவாயில் சுடிதார் செட், காட்டன் சில்க் சுடிதார், சல்வார் கம்மீஸ், காட்டன் சில்க் கிரேப் கம்மிஸ் என்ற பலவகையான ரகங்களும், எம்ராய்டரி கொண்டு உருவாக்கப்பட்ட சுடிதார்கள் குறைந்த விலை ரூ150விருந்து 300க்குள் கிடைக்கின்றது. காலேஜ் மாணவிகளின் விருப்பத்திற்கேற்ப துப்பட்டா இல்லாத சோர்ட் மாடல் இப்பொழுது அதிகம் விற்பனையாகிறது. இதை கல்லூரி மாணவிகள் அதிகம் விரும்பி அணிகிறார்கள். உயர்தர சுடிதார் வகைகள் ரூ 900லிருந்து 1500 வரை உள்ளது. நடுத்தரமான சுடிதார் செட்டுகள் 250லிருந்து 1,900 வரை உள்ளது. காட்டன் சில்க் கிரேப் வகைகள் 450லிருந்து 650 வரை உள்ளது. சாதாரண சுடிதார் வீட்டில் அணிவதற்கு ஏற்ப ரூபாய் 65லிருந்து இருக்கிறது.



பெண்களுக்கு பல வகையான காட்டன் புடவைகள் ரூ 65லிருந்து விற்பனைக்கு உள்ளது பலதரப்பட்ட டிசைன்களிலும், ரகங்களிலும் இருப்பதை எடுப்பதற்கு குழப்பமே ஏறபடும் வகையில் எண்ணற்ற வகையில் இருப்பது குறிப்பிடத்தககது

பெண்களுக்கென்று பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட காஞ்சிபுரம், பருத்தி புடவைகள், செட்டி நாடு புடவைகள், பெங்கால் காட்டன் புடவைகள், கோயம்புத்தூர் பருத்தி சேலைகள், இத்துடன் பாலி காட்டன் மற்றும் ஹைதராபாத் புடவைகள் இவை ரூபாய் 250லிருந்து 3,000 வரை உள்ளன. ஹாண்ட் பிரிண்ட் புடவைகள் பல வித ரகங்களில் சுமார் 200லிருந்து 350 வரை இருக்கின்றன. இந்த புடவைகளுக்கு மேச்சிங் செய்யும் அளவிற்கு முத்துக்கள், மணிகள் கொண்டு தயாரிக்கப்பட்ட ப்ளவுஸ் துணிகளும் இங்கு கிடைக்கின்றன.

பட்டு ரகங்களில் மிகப் பெரிய வரவேற்பை பெற்றுள்ளது 'அபூர்வா வகைதான்'. பெங்களூரில் தயாராகும் இதன் விலை ரூபாய் 1,500இல் இருந்து ஆரம்பமாகிறது. தேவைப்பட்ட டிசைன்களை இதில் உருவாக்கிக் கொள்ள முடியும் என்பதுடன் கொடுக்கும் விலைக்கு நல்ல பார்வையானதாயிருக்கும். இதில் சரிகை மட்டும் ரசாயன வகையைச் சார்ந்ததாகும். பட்டு நல்ல தரமானதாகும். இரண்டாவது வகை பெங்களூர் பட்டு 550 ரூபாயிலிருந்து கிடைக்கிறது. பார்க்க அப்படியே காஞ்சிபுரம் சேலையின் தோற்றத்தைக் கொண்டுள்ளதாக இருக்கும். இதை பலரும் விரும்பி வாங்குகின்றனர். சில புடவைகள் டிரை வாஸ் செய்யலாம். விலைக்கு தகுந்த மாதிரி நாம் துவைத்துக் கட்டலாம்.

குறிப்பாக அனைத்துப் பட்டு ரக சேலை துணிகளுக்கு காஞ்சிபுரம், தர்மாவரம், ஆரணி, திருபுவனம், மைசூர் சில்க் பட்டு வேட்டி, பட்டுப் பாவாடை ஆகியவற்றிற்கு 10% தள்ளுபடி செய்து கொடுக்கப்படுகிறது.

பெண்களுக்கு நைட்டிகள் ரூபாய் 65லிருந்து கிடைக்கின்றன. மற்றும் உள்ளாடைகள் பலவும் இங்கு கிடைக்கின்றன. மேலும், பிறந்த குழந்தைகளுக்குத் தேவையான துணி வகைகளிலிருந்து பெரியவர்களின் துணிகள் வரை எல்லா விதமான தரங்களிலும் உண்டு.





பாத்திரங்களுக்குப் பெயர் போனது சரவணா ஸ்டோர். 'இல்லை' என்ற வார்த்தைக்கு இடம் இல்லாமல் ஒரு திருமணத்திற்குத் தேவையான அனைத்து ரக பாத்திரங்களும் இங்கு கிடைக்கின்றன. திருமணத்திற்கு வேண்டிய தாம்பூலத்திலிருந்து பெரிய அண்டாக்கள் பித்தளையில் பலரகங்கள். இரும்புச் சாமான்கள் அலுமினிய பாத்திரங்கள், எவர்சில்வர் ஸ்பூன் முதற் கொண்டு பெரிய பாத்திரங்கள், கடிகாரங்கள், குத்து விளக்கு, பாய்லர் வகைகள், கேரியர் வகைகள், அனைத்து ரகங்களிலும் - பிளாஸ்டிக் சாமான்கள் வீட்டிற்கு தேவையான அனைத்து விதமான கூடைகள், டிரே, பக்கெட்டுகள், ஸ்கூல் பேக் மற்றும் டி.வி., பிரிட்ஜ், வாஷிங் மிஷின், மிக்ஸி, கிரைண்டர், அயர்ன் பாக்ஸ், வாட்டர் கூலர் ஹாட் பேக் வகைகள், கேஸ் ஸ்டவ், சூட்கேஸ், பீரோ, கட்டில், ஃபேன் என்று ஒரு பொருள் விட்டுப் போகாமல் அனைத்தும் இங்கு கிடைக்கின்றன.

கல்லூரி கலை நிகழ்ச்சிகள், மற்றும் பள்ளி நிகழ்ச்சிகளுக்குப் பரிசு கொடுக்க எதைத் தேர்ந்தெடுக்கலாம் என்று யோசிப்பவர்களுக்கு, ரூபாய் 150லிருந்து அழகான கேடயம், மற்றும் சால்வைகள், பல தரப்பட்ட பரிசுப் பொருட்கள்... என குவிந்திருக்கின்றன. விலையும் மிகக் குறைவாகவே உள்ளது.

இந்தக் கடையின் உயர்வின் ரகசியம் என்ன என்று வாடிக்கையாளர் சிலரிடம் கேட்டோம்.

**லட்சுமியம்மாள் (வயது 60)**

நான் பல வருடங்களாக இந்தக் கடையில் தான் பாத்திரம், நகை, புடவை என்று வாங்குகிறேன். என்னுடைய மகள் திருமணத்திற்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் இந்த கடை 'ராசி' என்பதால் வாங்கினோம்.

**சுந்தரம் (வயது 55)**

எங்களுக்கு பல வருடங்களாக இந்தக் கடையில் மட்டுமே வாங்கிப் பழக்கம். என் மகனுக்கும், பேரக் குழந்தைகளுக்கும் எந்தப் பொருளானாலும், நகையானாலும் இங்கே வாங்குவதன் காரணம், தரம் மற்றும் செய்கூலி இல்லாமல் கிடைக்கிறது என்பதால். மகள் கடிதம் எழுதி பல மாடல்கள் வரைந்து கொடுத்திருக்கிறார். அதையும் இங்குதான் வாங்கப் போகிறேன். நியாயமான விலை, தரம் நிச்சயமாக கடையின் வளர்ச்சிக்குக் காரணம்...

**கல்லூரி மாணவி வசந்தி (வயது 20)**

நான் பிரஸ்லட், மோதிரம் வாங்க வந்திருக்கிறேன். குறைந்த கிராமில் அழகான விதங்களில் இருப்பது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. மேலும் செய்கூலி இல்லை. கடையின் வளர்ச்சிக்கு பல காரணங்கள் இருக்கும். உண்மை, நேர்மை, இவை இரண்டும் இருந்தால் நிச்சயமாக உயர்வடைய முடியும் என்பதற்கு இந்தக் கடை இமய எடுத்துக் காட்டு.

**இல்லத்தரசி கோமதி வாசுதேவன் (வயது 30)**

நான் மூன்று வருடங்களாக பொருட்கள் வாங்குகிறேன். என்னுடைய தோழிகளுக்கும் இந்த கடையைப் பற்றி கூறி அழைத்து வந்திருக்கிறேன். குறைந்தது 30 சவரன் மற்றவர்கள் வாங்கியிருக்கிறார்கள். டிசைன்ஸ் மிகவும் அழகாக இருக்கிறது. கடையின் வளர்ச்சிக்கு





காரணம் கடின உழைப்பும் வாடிக்கையாளரை வரவேற்கும் பண்பும்தான் என்பது எனது கருத்து.

**மாணிக்கம் (வயது 45)**

கடந்த இரண்டு வருடங்களாக சரவணா ஸ்டோருக்கு வருகிறேன். வீட்டுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் இங்கு கிடைப்பதால் என் குடும்பத்தார் அனைவரும் இங்கு வாங்குவதை விரும்புவர். பண்டிகை நாட்களில் தவறாமல் இங்குதான் ஜவுளி, நகை எடுப்போம். இந்த கடையின் வளர்ச்சிக்கு விளம்பரத்தையும் சொல்லலாம். அதைப் பார்த்துத்தான் வாடிக்கையாளர்கள் வருகிறார்கள். தரம் நிரந்தரமாக இருப்பது முக்கிய காரணம்.

**சரவணா ஸ்டோர் உரிமையாளர் திரு. செல்வரத்தினம்**

என் கடையின் உயர்வுக்கு காரணம் மக்கள் தான். அவர்களுடைய ஒத்துழைப்பு, நம்பிக்கை இவைதான் கடையின் மூலதனம். சாதாரண பாத்திரக் கடையாக இருந்து, இன்று மக்களின் விருப்பத்தின் பெயரில் ஜவுளிக் கடையாகவும் உருவாகி, நகைக் கடையின் உயர்வுக்கும், வழி வகுத்திருக்கிறது. உண்மையாக, நேர்மையாக உழைத்தால் என்றும் பலன் தரும்.

வெறும் பேச்சு என்று இல்லாமல், செயலில் உறுதியாக இருந்து இன்று சென்னை, ரங்கநாதன் தெருவில் தனி மதிப்பையும், மரியாதையும் பெற்றிருக்கிறார் செல்வரத்தினம். அந்த உழைப்புத் தேனீயை வாழ்த்துவோம் உளமார.

*முகவரி: சரவணா ஸ்டோர்ஸ், ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை - 17 போன்: 4347710 ; 434 7711*

—எஸ். பிரமிளா பீரிட்டோ

# சமூக சேவைக்காக 'சாய்ராம்' என்று சொன்னார்

*—திருமதி அருள் மொழி ராமகிருஷ்ணன்.*

வறுமையும் புலமையும் இணைந்தே இருக்கும் என்பார்கள். ஃப்ரீலேன்ஸ் பத்திரிகையாளராக இருக்கும் ஒருவர் - பொருளாதாரத்துடன் நித்தமும் ஒரு யுத்தம் செய்து கொண்டிருந்தாலும், சத்தம் இல்லாமல் தன்னால் முடிந்த சமூக சேவைகளையும் செய்து கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம்... ஆனாலும், எழுதுவதன் மூலம் தமக்கு கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை ஆதரவற்ற பெண்களுக்கு தையல் மிஷின், கிரைண்டர், ஊனமுற்றோர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்கிச் செலவழிக்கும் அந்த பத்திரிகையாளரின் பெயர் எஸ். விஜயன். ராஜ பாளையத்தைச் சேர்ந்த இவரது நிஜப் பெயர் ராமகிருஷ்ணன். அவரைக் கணவராகப் பெற்றவர் திருமதி அருள்மொழி. (இவர் ஓவியர் 'அரஸ்' - இன் சகோதரி) அவரை நேரில் சந்தித்து உரையாடினோம்...

**உங்கள் கணவரின் எழுத்துலக முயற்சி பற்றிச் சொல்லுங்கள்...?**

முதன்முதல் துணுக்கு எழுத்தாளராகத்தான் பத்திரிகை உலகில் அவர் காலடி எடுத்து வைத்தார். திரு. பாரிவள்ளல் அவர்கள்தான் 'சுஜாதா' பத்திரிகையில் முதன்முதலாக அவரை எழுத தூண்டினார். புகைப்படக் கலைஞர் ஆர்.என். நாகராஜராவ் அவர்களைப் பற்றி ஒரு தொடரையும் அந்த இதழில் 17 பகுதிகள் எழுதினார். அப் பொழுதெல்லாம், தொழில்முறை அல்லாத பத்திரிக்கையாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. அதனால், மிகவும் போராடிப் போராடி தான் இவர் தன்னை வெளிப்படுத்த வேண்டியதாக இருந்தது.

'தேவி' ஆசிரியர் இராமச்சந்திர ஆதித்தன், அதன் பொறுப்பாசிரியர் ஜேம்ஸ், 'தினமலர்' ரமேஷ், 'வளர்தொழில்' ஜெயகிருஷ்ணன், 'பாக்கெட் நாவல்' அசோகன், பாவைச் சந்திரன், திருமதி கமலி ஸ்ரீபால்... இவர்கள் எல்லோரும் அவருடைய எழுத்தார்வத்தை நெய் யூற்றி வளர்த்தார்கள்.

**பத்திரிகைகளில் உங்கள் கணவர் எழுதிய தொடர்களில் மிகவும் புகழ் பெற்றவையாக எவற்றைச் சொல்லுவீர்கள்...?**


எம்.ஜி.ஆர். கதை (தேவி), ரஜினி கதை (தேவி), எம்.ஜி.ஆர். நினைவுகள் (தினமலர், வாரமலர்) நீரும் நெருப்பும் (தராசு), சிகரங்களைக் கடந்த சிவாஜி (சினிமா எக்ஸ்பிரஸ்) ஆகிய தொடர்களைச் சொல்லலாம். நேரில் சென்று துப்பறிந்து, சில உண்மைகளை வெளிக் கொண்டு வந்த அவரது சில தொடர் கட்டுரைகள், 'தேவி'யில் வெளி வந்தன... அவை பல தரப்பினராலும் பாராட்டப்பட்டன. போலிச் சாமியார் ஒருவரைப் பற்றிய உண்மையான விவரங்களை, ஒன்பது வாரங்கள் அவர் தொடராக எழுதினார். மறைந்த பிரபல வசனகர்த்தா ஏ.எல். நாராயணன் அவர்கள் கூட அதைப் படித்து விட்டு, 'இதில் நல்ல ஸ்கிரிப்ட் உள்ளதே!'' என்று பாராட்டினாராம்.

பெங்களூரில் ஒரு பள்ளி ஆசிரியை காவல் துறையை சேர்ந்த சிலரால் கற்பழிக்கப்பட்ட கொடூர நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டு நேரில் சென்று துப்பறிந்து, அதைக் கட்டுரையாக தேவியில் எழுதினார். உயிரைப் பணயம் வைத்து எழுதிய அந்தக் கட்டுரையை நாளேடுகள் கூட பிறகு மறு பிரசுரம் செய்தன. பெண்கள் மத்தியில், பரபரப்பை ஏற்படுத்திய ஒரு கட்டுரை என்று அதைச் சொல்லுவேன்...!

**என்றைக்கும் மறக்க முடியாத நிகழ்ச்சியாக அவர் ஏதேனும் உங்களிடம் தெரிவித்துள்ளாரா...?**

'தேவி' தீபாவளி சிறப்பிதழுக்காகக் காஞ்சிப் பெரியவரைச் சந்தித்துப் பேட்டி எடுத்தையும், 'கதிரவன்' தீபாவளிச் சிறப்பிதழுக்காகக் கலைஞர் கனிமொழிச் சந்திப்புக் கட்டுரையும் மறக்க முடியாதவை மட்டுமல்ல... ஆத்ம நிறைவு தந்தவை! என்றும் அவர் அடிக்கடிச் சொல்லுவார்...

அதைப்போல், பத்திரிகைக்காக ஒருமுறை புட்டபர்த்தி சென்று வந்தார். அங்கு கண்ட அமைதியும் ஒழுங்கும் அங்கு நடக்கக் கூடிய சமூக சேவைகளும் அவர் மனத்தை மிகவும் பாதித்தன. அங்கிருந்து திரும்பி இரண்டு மாதங்கள் வரை தொடர்ந்து அவர் 'சாய்ராம், சாய்ராம்' என்றே சொல்லிக் கொண்டிருந்தார். சத்திய சாயி பாபாவின் மெய்சிலிர்க்க வைக்கும் அற்புதங்களையும், அவரது ஆன்மீகக்



கருத்துக் களையும் பார்த்து அவரது பக்தர்களானவர்கள் பலர் இருக்கிறார்கள். எனது கணவரோ பாபாவின் சமூக சேவைகளால் ஈர்க்கப்பட்டு அந்த ஒரே காரணத்துக்காகவே சாய்ராம் என்று சொன்னார்.

**எழுத்து தவிர அவருக்கு வேறு துறைகளில் ஆர்வம் உண்டா...?**

டாகுமெண்ட்ரி படங்கள் தயாரிப்பதில் அவருக்கு அதிக ஆசை... பொள்ளாச்சியில், ஊமைத்துரை பழநிச்சாமி என்பவர் காந்தி அடிகள் உருவம் பதித்த பல்வேறு அஞ்சல் தலைகள் சேகரித்து வைத்திருப்பதை அறிந்து, அவரை நேரில் பார்த்து விவரம் பெற்றார். விளைவு: 'அஞ்சல் தலைகளில் அண்ணல் காந்தி' என்னும் பத்து நிமிடப் படம். அது சென்னை டி.வி.யில் இதுவரை மூன்று முறை ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளது.

**உங்கள் கணவர் எழுதிய நூல்கள் பற்றி?**

எனக்கு மனிதநேயம் இருக்கிறது என்றால், அதற்கு முக்கிய காரணம் எம்.ஜி.ஆரே என்று சொல்லும் அவர், 'சாதனை நாயகன் எம்.ஜி.ஆர்.' என்றும், 'எம்.ஜி.ஆர். கதை' என்றும் எம்.ஜி.ஆர். நினைவுகள் என்றும் மூன்று நூல்களை எழுதியுள்ளார்... இரண்டு நூல்களுக்குமே நல்ல வரவேற்பு! 25 வருடங்களுக்கு முன்பு 'எங்கள் சிவாஜி' என்ற பெயரில் ஒரு பத்திரிகையையும் அவர் வெளி

# அன்னையைப் போல் கருணை குணம் கொண்டவர்

கருணையே உருவான அன்னை தெரசா நடத்தி வந்த சேவை நிலையத்திற்கு, அடுத்த தலைவராக சகோதரி நிர்மலா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நேபாள நாட்டைச் சேர்ந்த இந்து பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர் 1934ல் ராஞ்சியில் பிறந்தவர். தந்தை ஒரு ராணுவ அதிகாரி. சிறு வயதில் தனது மகள் ஆங்கிலத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக 1940ம் ஆண்டு கத்தோலிக்க கூட்டங்களில், பைபிளை படிக்க வேண்டும் என்று மட்டுமே விரும்பினார். ஆனால் தன் மகள் தன்னுடைய 24ம். வயதில் மதம் மாறி, கத்தோலிக்க மதத்தில் சேர்ந்து தன்னுடைய வாழ்க்கையை ஏழை மக்களுக்கு உதவி செய்வதில் அர்ப்பணித்தார்.

இந்தியா ஆங்கிலேயரிடம் இருந்து விடுதலை அடைந்த போது இந்தியா - பாகிஸ்தான் என இரண்டு நாடுகளாகப் பிரிந்தது. இதைத் தொடர்ந்து இந்து - முஸ்லீம் கலவரங்கள் நடந்தன. பல இடங்களில் இனப்படு கொலைகள் நடைபெற்றன. நூற்றுக்கும் மேற்பட்டோர் வெட்டிக் கொல்லப்பட்டனர். பலர் அனாதைகளாயினர். கிழக்கு வங்காளத்திலிருந்து அகதிகளுடன் அவரும் கல்கத்தாவிற்குச் சென்றார்.



அங்கு அவரை இரண்டு கிறிஸ்துவ சகோதரிகள் அன்னை தெரசாவிடம் அழைத்துச் சென்றனர். முதன் முதலில் கருணை வடிவத்தைக் கண்டார். 'அவர் மீது எனக்குள் ஒரு அழுத்தம் ஏற்பட்டது. தன்னுடைய வாழ்க்கையை ஏழைகளுக்கு உதவி செய்வதற்காக அர்ப்பணித்ததையும் அதற்கான பொருளுக்காக மற்றவர்களிடம் யாசிப்பதையும் கண்டு நெகிழ்ந்து போனேன்!' என்று கூறினார்.


சகோதரி நிர்மலா சேவை நிலையத்தில் சேர்ந்த பிறகு 1970ல் லத்தீன் நாடுகளில் தொண்டுப் பணிகளை தொடர்ந்தார். பின்னர் 1979ல் கல்கத்தா திரும்பி, சேவை நிலையத்தில் தொடர்ந்து பணிபுரிந்தார்.

அன்னை தெரசாவின் சபை 1950ம் ஆண்டு தொடங்கப்பட்டது. கடந்த பல ஆண்டுகளாக அன்னை தெரசாவே தலைவராக இருந்து வந்துள்ளார். சில நாட்களாக அன்னை தெரசா நோய்வாய்ப்பட்டதால் அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுத்தே ஆக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. அதன் பின்னரே போப் ஆண்டவரின் ஆலோசனையின் பேரில் 65 வயதான சகோதரி நிர்மலா தலைமைப் பதவிக்கு, ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

"அன்னை தெரசாவைப் போல் சகோதரி நிர்மலா கருணை குணம் கொண்டவர். எங்களுக்கு கருணை குணமுள்ள, நேர்மையான மற்றவர்களை புரிந்து கொள்ளும் பக்குவமுடைய ஒருவர்தான் தேவை" என சேவை நிலையத்தில் உள்ள ஒரு சகோதரி கூறினார்.

"நான் அன்னை தெரசா அல்ல! சகோதரி நிர்மலா. என்னை தயவு செய்து "அன்னை" என அழைக்காதீர்கள். அன்னை தெரசாவின் இடத்தை என்னால் நிரப்ப இயலுமா? என்று எனக்கு பயமாக உள்ளது. இதற்காக கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன். நான் எந்த நோக்கத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டேனோ, அந்த நோக்கத்தை நிச்சயம் நிறைவேற்றுவேன். அதற்காக கடவுளிடம் பிரார்த்தியுங்கள். நான் தலைமைப் பதவியில் இருந்து போகும் முன் இந்த கருணை இல்லத்தின் ஒரு கிளையைச் சீனாவில் தொடங்க வேண்டும் என்ற எனது நோக்கத்தை நிறைவேற்றுவேன்" என்று கூறுகிறார் சகோதரி நிர்மலா.

—தீபா



மதுரை கோர்ட் எதிரிலுள்ள ஜீனியஸ் கல்லூரி முதல்வர் மா. நளின சேகரன் நடத்தும் 'நாகா உடல் ஊனமுற்றோர் பள்ளி'க்கு எஸ். விஜயன் டி.வி. வழங்குகிறார்.

யிட்டுள்ளார். "உங்கள் உழைப்பும், உற்சாகமும் உங்கள் பத்திரிகைத் தலைப்பிலேயே தெரிகின்றது. பாராட்டுக்கள்" என்று நடிகர் திலகம் அவர்களே அன்றைய பொம்மை கேள்வி பதில் பகுதியில் பாராட்டியிருக்கிறார் என்றால், அது எனக்கும் பெருமையாக இருக்கிறது...!

சமீபத்தில் எனது கணவர் எழுதிய 'சாதனை நாயகன் எம்.ஜி.ஆர்' நூல் வெளியீட்டு விழா புரட்சித் தலைவரின் ராமாவரம் தோட்டத்தில் உள்ள காதுகேளாதோர் வாய் பேசாதோர் பள்ளியில் எழுத்தாளர் திரு. நாகை தருமன் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நூலை வெளியிட்டுப் பேசிய திரு. சத்யராஜ் அவர்கள், எனது கணவர் எழுதிய 'எம்.ஜி.ஆர். கதை' என்ற நூல் உலகப் புகழ் பெற்ற 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலுடன் ஒப்பிடத்



ராஜபாளையத்தைச் சேர்ந்த ஏழை நெசவாளர் முத்துசாமியின் மகன் சிவானந்த ஜோதி உதவி கேட்டு எழுதியதன் விளைவாக அந்தக் குடும்பத்திற்கு எஸ். விஜயன் தையல் இயந்திரம் ஒன்று வழங்கினார். அந்த நிகழ்ச்சியில் விஜயனின் பள்ளி ஆசிரியர் ஆர். பொன்னுசாமி, வர்த்தகர்கள் ராஜேந்திரன், ஞானகோபால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தக்கது. என்று பாராட்டியதை என் கணவரின் கடுமையான உழைப்புக்கும் அவரது எழுத்தாற்றலுக்கும் கிடைத்த பரிசாகவே கருதுகிறேன்.

—எழுத்தைக் கைப்பிடித்திருக்கும் வி.எஸ். ராமகிருஷ்ணன், அருள்மொழியைக் கைப்பிடித்த ஆண்டு 1986. இப்போது இவர்களுக்கு ராகவன், கார்த்தி என இரண்டு மகன்கள்.

செல்வி மதிவாணன்

# கல்வித் தொண்டு

**1930**களில் பெண் கல்வி என்பது பெரும் பாவம் என்று கருதப்பட்ட இருண்ட காலம். வங்கத்தில் 'ஈஸ்வர சந்திர வித்யாசாகர், மராட்டியத்தில் கார்வே போன்ற பெருமகன்கள் புறப்பட்ட போது கார்வேயின் தென்னக பயண சந்திப்பின் போது 'இராமசாமி ஐயரும்' தூண்டப்பட்டு அவருக் கிணையாகப் பாடுபட்டார். விளைவு! ''தென்னக கார்வே ஐயர் அவர் களால் திருச்சிராப்பள்ளியில் - காவிரித்தாயால் தாலாட்டப்படும் இப் புண்ணிய பூமியில் பூவின் இதழ்கள் மெல்ல விரிவது போல் பெண் களுக்கு கல்விக் கோவில்கள் பிறந்தன.

1938ல் - சாவித்திரி வித்யாசாலை.
1951ல் - சீதாலெட்சுமி இராமஸ்வாமிக் கல்லூரி.
1973ல் - காமகோடி வித்யாலயா.
1981ல் - சீதாலெட்சுமி இராமஸ்வாமி மாலை நேரக் கல்லூரி.
1981ல் - Institute of Career Courses
- பல்கலை பயிலகம் (Poly-technic)
- ஸ்ரீநிவாசா கணிப்பொறி மையம்.

ஆகமொத்தம் 7. இந்த ஏழடுக்கு வானவில் சூழ்ந்த வர்ண மாளிகை யான வளாகத்தின் நோக்கமே 'மும்முனைக் கல்விதான்'. ''கல்வி, சமயம், பண்பாடு, என்ற மும்மை நோக்கக் கல்வியே வளாகத்தின் வளர் நோக்கம்.

திரு. இராமஸ்வாமி ஐயர் அவர்கள் செஞ்சிலுவை கழகம், விடுவிக் கப்பட்ட கைதிகள் நலம் நாடும் கழகம்... என்றுபல சமூக சேவை அமைப்புகளில் ஆற்றிய பணிகள் ஏராளம். இப் பணிகளைப் பாராட்டி அன்றைய ஆங்கில அரசாங்கம் 1932ல் ராவ் சாகிப் பட்டமும் 1938ல் ராவ் பகதூர் பட்டமும், 1940ல் திவான் பகதூர் பட்டமும் அளித்தது.

பெண் கல்விக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டவருக்கு திரு மகள் அருள் பார்வையும் மெள்ள மெள்ள கிட்டியது. ஆம்! ஐயர் அவர் கள் கிராமம் கிராமமாகச் சென்று எத்தனையோ தடங்கல்கள், கேலிப் பேச்சுகள் எல்லா வற்றையும் தாங்கி கொண்டு தான் ஒரு புகழ் பெற்ற வக்கீல் என்று கர்வம் கொள்ளாமல், கல்விப் பணிக்காக Iam an honourable beggar என்று சிரித்துக் கொண்டே கூறுவார். இருமுறை அண்டை நாடான இலங்கை சென்று பொருள் சேர்த்தார் (கல்விப் பணிக்காக). புகழ் பெற்ற பாடகிகளின் இசைக் கச்சேரி களும் பிரபல நடனமணிகளின் நாட் டிய கச்சேரிகளும் நடத்தியும் நிதி சேர்த்தார். பல கல்விக் கூடங்கள் வளா கத்தில் உருவாகின. இக்கல்விக்கூடம் 'அன்னை அகிலாண்டேஸ்வரி'யின் சொத்து. தாம் ஒரு கருவி மட்டுமே என்று தன்னடக்கத்துடன் கூறுவார் ஐயர். 'சாவித்திரி வித்யாசாலா' பள் ளிக்கு அருகே இங்கு பள்ளிப் படிப்பை முடிக்கும் மாணவிகளுக்கு அதே சூழலில் உயர் கல்வி அளிக்கும் நோக்கத்துடன் ஐயர் அவர்கள் 1951ம் ஆண்டு ஜூன் மாதம் 'சீதா லெட்சுமி இராமஸ்வாமி' கல்லூரியை நிறு வினார். எல்லோரும் ஓய்வெடுக்க நினைக்கும் 55 வயதில் தம் வாழ்வின் பயனுள்ள சிறந்த பணியினைத் தொடங்கினார். 1962ல் இந்திய அரசு இவரின் பெண் கல்வித் தொண்டினைப் பாராட்டி பத்மஸ்ரீ விருதும், 1971ல் 'பத்மபூஷண்' விருது அளித்து கௌரவித்தது.



பத்ம பூஷண் இராமஸ்வாமி ஐயர் ஒரு கர்மவாதி. இலட்சியவாதி. அவரது கல்விப் பயணம் 1976ம் ஆண்டு மார்ச் 28ம் நாள் முடிவடைந் தது. ஆம்! இவர் இக் கல்விக் கோயிலை விட்டு இறைவனிடம் சென்று விட்டார்! தந்தையின் மறைவுக்கு பின் இவ்வளாகத்தின் செயலர் பொறுப்பை திரு. பஞ்சாபகேசன் ஏற்றுக் கொண்டார்.

தெய்வத் திருப் பெயர்களைத் தாங்கிய விடுதிக் கட்டிடங்களை கட்டினார் தந்தை அமரர் திரு ராமஸ்வாமி ஐயர். அவர் மகன் பஞ்சாபி கேசன் தந்தை வழியே 2000 பேர் தங்கி பிரார்த்தனை செய்யும் பிரார்த் தனை மண்டபத்தையும், விநாயகர் கோவிலையும், பத்தினிகளுடன் கூடிய நவக்கிரஹக கோவிலையும் கட்டினார். தினந்தோறும் கூட்டுப் பிரார்த்தனை இங்கு நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

—மைதிலி சேஷாத்ரி

# டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார்

அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த இவர் நம் பாரதத்தையே தாயகமாக எண்ணி தம் வாழ்வின் இன்ப துன்பங்கள் அனைத்தையுமே இந்தியர்களுக்கே அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்தவர்.

1847ம் ஆண்டு பிறந்த அன்னிபெசன்ட், 1867ம் ஆண்டில் மணம் செய்து கொண்டார். கணவருடன் அடிக்கடி மன வேற்றுமை ஏற்பட்ட தால், மன அமைதி பெறச் சிறிது காலம் செவிலியராகப் பணியாற்றினார். பிறகு 'நேஷனல் ரீபார்மர்' என்ற பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். லண்டனில் தொழிலாளர் கூட்டுறவு அமைப்பு ஒன்றினையும் முதன் முதலாகத் தொடங்கி வைத்தார்.

1882ம் ஆண்டு சென்னை அடையாறில், பிரம்ம ஞான சபையின் தலைமை அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டது. 1889ம் ஆண்டு இந்தச் சபையின் இயக்கத்தில் சேர்ந்தார்.



இந்துப் பெண்களைப் போலவே உடையணிந்து இந்து மத வாழ்க் கையை மேற்கொண்டார். ஆன்மீகப் பணியுடன், இந்திய தேச விடுதலைக் காகவும் பாடுபட்டார். இந்தியாவில் உள்ள பல புனித இடங்களுக்குச் சென்று, ஆன்மீகச் சொற்பொழிவு களை நிகழ்த்தினார். வாரணாசியில் பல ஆண்டுகள் இருந்தபோது, அங்கே 'மத்திய இந்துக் கல்லூரி'யைத் தோற்று வித்தார். இதுவே பெனாரஸ் பல்கலைக் கழகமாக இன்று உருவாகி யுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த கர்னல் ஆல்காட் என்பவரே பிரம்ம ஞான சபையை 1875ல் நியூயார்க்கில் தோற்றுவித்தார். அவர் 1910ல் கால மான பிறகு, அதன் தலைவராகப் பொறுப்பேற்றார். ஜாதி ஒழிப்பு, பெண் கல்வி, நாட்டு விடுதலை ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபட்டார் அம்மையார். சமூக சேவையில் மிகுந்த ஈடுபாடு காட்டிய அன்னி பெசன்ட் அம்மையார் தம் எழுச்சி மிக்க சொற்பொழிவுகளை 'இந்தி யாவே விழித்தெழு' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டு, மக்கள் மனங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

அயர்லாந்து பெண்ணான இவர் இந்தியப் பெண்ணாகவே மாறி, பாரதம் தன்னாட்சி பெற வேண்டும் என்பதற்காக 'ஹோம்ரூல்' என்ற பெயரில் ஓர் இயக்கத்தினைத் தொடங்கினார். இதனால் 1917ம் ஆண்டு ஆங்கிலேய அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார். அம்மையார் சிறையிலடைக்கப்பட்டதை அறிந்து மக்கள் ஆர்ப் பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தைக் கண்டு ஆங்கிலேய அரசு உடனே அவரை விடுதலை செய்தது.

1918க்குப் பிறகு அகில இந்திய தேசியக் காங்கிரசின் தலைவி யாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசியல் பணிகளில் தம்மை அர்ப் பணித்தார்.

இந்திய மக்கள் தன்மானத்தோடும், தன்னம்பிக்கையோடும் வாழ வைப்பதே தமது முக்கிய குறிக்கோள், லட்சியம் என்று கூறியவர் அன்னி பெசன்ட் அம்மையார். தமது பாரத மக்களுக்காக நாற்ப தாண்டு காலம் தன் வாழ்க்கையை அர்ப்பணித்து சிறந்த சேவை புரிந்த அம்மையாரின் தொண்டு மறக்க முடியாத ஒன்றாகும் என்பதில் மறுப்பும் உண்டோ..!

—ஆர். மீனாட்சி, திருநெல்வேலி.

# சாதனை மகளிரின் பெற்றோர்கள் பேசுகிறார்கள்



'பரத நாட்டிய நிகழ்ச்சி நடத்த பாரதத்திலிருந்து எங்கள் மலேஷிய மண்ணிற்கு வந்திருக்கும் தங்கள் வரவும், நிகழ்ச்சியும் நல் வெற்றி பெற என் வாழ்த்துக்கள்'' என்று மிக்க உற்சாகத்தோடு பூச்செண்டினை, வந்திறங்கிய பெண்மணியிடம் அந்த மலேஷியக் கலைத் தூதர் நீட்ட, அதற்கு அவர், ''ஆடப் போவது இதோ என் பெண்தான்'' என்று பூச்செண்டினை தன் பின்னே நின்றிருந்த சிறு பெண்ணை முன்னே தள்ளியபடி அவளிடம் கொடுத்ததும். ஒல்லி யான உயரம் குறைந்து காணப்பட்ட அந்த சிறுமியைப் பார்த்து விமான தளத்தில் வரவேற்க வந்திருந்த அந்த அதிகாரி ஏமாற்றத்தை வெளிக் காட்டாது சுதாரித்துக் கொண்டு விழா ஏற்பாடுகளை கவனிக்கச் சென்று விட்டார்.

மறு நாள் ஆடிட்டோரியத்தில் மொய்க்கும் தேனீக்களாய் வி.ஐ.பி.கள் கூட்டம். மனதில் கிளர்ந்த குறுகுறுப்பில் ஏதோ ஒரு மூலையில் விழாவிற்கு ஏற்பாடு செய்த அதிகாரி நின்றிருக்க, குறித்த நேரத்தில் நிகழ்ச்சியும் தொடங்கியது. மேடையேறிய ஒரு சில நிமிடங்களுக்குள்ளே அந்த பெண், தன் ஆட்டத்திறத்தால் பார்வையாளர்களின் கவனத்தை முழுதும் ஈர்த்தாள். 'கலீர் கலீர்' என்று கால்கள் ஜதி பேச, 'பட்' 'பட்' அடவுகள் அட்சர சுத்தமாக விழ, கைகளும், முகமும் பிடித்த அபிநய முத்திரைகளில், தத்ரூபமான உணர்வுகளில் வந்திருந்தவர்கள் அசந்து விட்டனர். நிகழ்ச்சி முடிவில் அரங்கமே அதிர்ந்த கை தட்டலில், அதிகாரி திக்கு முக்காடிப் போனார். மனதில் மகிழ்ந்த மகிழ்ச்சி முகமெல்லாம் வியாபிக்க நன்றி தெரிவிக்க குழந்தையின் அம்மாவிடம் ஓடினார். அன்றிலிருந்து இன்றுவரை - அந்த குழந்தையும் குமாரியாகி முதிர்ந்த கலைஞானத்தோடு நிகழ்ச்சி தரும் இன்றளவும் அவரது நிகழ்ச்சியைத்தான் ஒவ்வொரு வருடமும் ஏற்பாடு செய்து வருகிறார்.

அந்த குழந்தையே - வள்ளி - குமாரி அலர் மேல் வள்ளி. கவித்துவமான பெயரில் ஒளிந்திருக்கும் இந்த கலையரசி இதுவரை 60 தடவைக்கு மேல் உலகக் கலைப்பயணம் மேற்கொண்டு விட்டார். பரத நாட்டியத்தையே மூச்சாக பாவிக்கும் இவர் பெற்ற விருதுகள் - 'சிருங்காரமணி', 'நிருத்திய சூடாமணி', 'பத்மஸ்ரீ' (மிக இளம் வயதில் பெற்றவர் என்கிற பெருமைக்குரியவர்) என்று நிறையவே. அரங்கேற்றம் ஆன 1966லிருந்து இந்த வருடம் வரை அதிகமான நிகழ்ச்சிகள் நடத்தியது பெரும்பாலும் வெளிநாடுகளில்தான்.

அரங்கேற்றதினத்தன்றே 'நாட்டிய கலா பூஷணம்' என்று விருது பெற்றவர் இவர்.

***வள்ளியின் தாயார் திருமதி உமா முத்துக்குமாரஸ்வாமி சொன்னார்***

எங்கள் குடும்பத்தில் யாரும் பரதக் கலையை கற்றதில்லை. வள்ளி பிறந்தவுடன் எங்கள் நம்பிக்கைக்குகந்த ஒருவர், ''இவள் கலையில் மிக உயர்ந்த நிலையை அடைவாள்'' எனக்கூற அதைக் கெட்டியாக பிடித்துக் கொண்ட நான். ஏதோ ஒரு உந்துதலில் வள்ளிக்கு நாட்டிய குருவாக பந்தநல்லூர் சொக்கலிங்கம் பிள்ளை அவர்களைப் பெற வாய்ப்பும் பெற்றேன். காலை, மாலை மட்டுமல்லாமல் வீட்டிலும் நடக்கும் பரத வகுப்பிற்கு நான்தான் முதலில் ஆஜராகி விடுவேன். ஒவ்வொரு அசைவிலும் அடவிலும் வள்ளியின் பிளஸ், மைனஸ்களை, என் மனம் பதித்துக் கொள்ளும் வகுப்பில் வள்ளியுடன் ஆடும் மற்ற மாணவியர்களின் தனிப்பட்ட பாங்கினையும் உன்னிப்பாகக் கவனித்து மனதைக் கவரும் சரியான முறைகளை நினைவில் வைத்துக் கொண்டு, வள்ளியிடம் அவ்வப் போது சொல்லி அவளுக்கென்ற ஒரு பாணியை உருவாக்க முயற்சி எடுத்தேன். மேலும் நிகழ்ச்சியில் பங்கு பெறும் பாடல்களின் முழு அர்த்தத்தையும் முறையாக ஒரு நர்த்தகி அறிந்திருந்தால் தான் அவள் ஆடும் கலையின் வெளிப்பாடு முழுமையுடையதாக இருக்கும். இதில் நான் பிடிவாதக் கொள்கையுடையவள். அதனால் பிரபல கர்நாடக இசை வல்லுநர் திருமதி முக்தாவை ஏற்பாடு செய்தேன். வள்ளியின் விருப்பத்திற்கிணங்கி ஒடிசி நாட்டியத்தை குரு ரமணி ரன்ஜன் ஜேனா என்பவரிடம் முறையாகப் பயில ஆவன செய்தேன்.

**எந்த ஒரு குழந்தையுமே ஒரு கலையை கற்க ஆரம்பிக்கும் போது ஆரம்ப நிலையிலிருந்த ஆர்வம், உற்சாகம், சுறுசுறுப்பு போன்றவை நாளடைவில் குறைவுபட வாய்ப்புகள் உண்டே. அந் நிலையில் நீங்கள் என்ன செய்தீர்கள்?**

இதற்கு 'நான் பதில் சொல்கிறேனே' என ஆர்வத்தோடு இடையில் புகுந்த அலர்மேல் வள்ளி, தாயார் விட்ட இடத்திலிருந்து நூலாய் பிடித்துக் கொண்டு, ''கண்டிப்பு, கண்டிப்பு, கண்டிப்பு. இது தான் என் அம்மா. படிப்பு - பரதம் இரண்டைத் தவிர வேறெதுவேயும் என் கவனம் திரும்பாது கண்டிப்புடன் என் அம்மா பார்த்துக் கொண்டார். என்னுடன் படித்த தோழிகளெல்லாம் சினிமா, எக்ஸ்கர்ஷன், பார்ட்டி என்று உல்லாசமாய் சென்றபோது, என் நடன வகுப்பைக் காட்டி பலமுறை என் அம்மா மறுத்திருக்கிறார். கஷ்டமாகத்தானிருந்தது. அதே தருணத்தில் என் அம்மாவும் மற்ற உயர்தர வர்க்க மனைவிமார்கள் போல் பார்ட்டி, கிளப், ஷாப்பிங் என்று பொழுது போக்கியதில்லை. என் 'நடனம்' ஒன்றுதான் என் அம்மாவிற்குக் குறி. அதையே தெய்வமாக நினைத்தார். மேலும், வெளிநாடு செல்லும் ஒவ்வொரு முறையும் என் நிகழ்ச்சியை பாதிக்கும் எந்த ஒரு விஷயமும் என்னை சந்திக்காதவாறு பார்த்துக் கொள்வதில், என் அம்மா ஒரு தனி ரகம் என்றுதான் சொல்ல வேண்டும். வெளி நாட்டில் இந்திய உணவு வகைகள் சமைத்துப் போட்டு என் ஆர்க்கெஸ்டிராவை உற்சாகப்படுத்துவதிலிருந்து, மேடை ஏற்பாடுகள் வரை அனைத்தையும் என் அம்மாவே கவனித்துக் கொள்வார். இவ்வளவுக்கும் காரணமான என் அம்மா, இதுவரை எந்த ஒரு மேடையிலும் முன்புறம் வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதை நான் பார்த்ததே இல்லை. இந்த தனிப்பட்ட குணம் எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று''

**பெற்றோர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன என்று திருமதி உமாவிடம் கேட்ட போது:-**

''ஏதாவது ஒரு கலையில் தங்கள் குழந்தைகள் பெயர் சொல்லும் அளவிற்கு முன்னேற வேண்டும் என்று நினைக்கும் பெற்றோர்களுக்கு நான் சொல்ல விரும்புவதெல்லாம் இதுதான். அந்தக் கலையைப் பற்றி ஓரளவு தெரிந்து வைத்திருத்தல் மிக அவசியம். தொய்வு ஏற்படும் தருணங்களில் பாராட்டுக்கள் தான் சிறந்த டானிக். புகழ் சொற்களைக் கேட்டு விட்டால், திறனை வளர்த்துக் கொள்ளும் ஆர்வம் இயல்பாகவே குழந்தைகளுக்குப் பெருகிவிடும். தன் குழந்தைதான் நன்றாகப் பாடுகிறாள், ஆடுகிறாள் என்று நினைத்து விடும் சுபாவம் இயற்கைதான். ஆனால் அதையும் மீறி ஒரு Critic கண்ணோட்டத்திலே உங்கள் அபிப்ராயங்கள் கூறப்படும் போது விளைவு நலவதாகத்தான் இருக்கும்.

(தொடரும்)

—சீதா மோகன்

தொண்டுச் சிறுகதை

# அன்பு என்னும் நிழலில்...

—கமலா நடராஜன்

தருமாம்பாள் மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். கண்கள் ஒருமுறை இருண்டு, பின்னர் சற்றே தெளிவடைய, சுற்றிலும் ஒரு தடவை பார்த்தாள். கூடம், தாழ்வாரம் முற்றும் வெறுமையாய் இருந்தன.

எங்கே போய் இருப்பாள் விஜயா? இப்போது உடனடியாக அவள் உதவி தேவை.

சுவர்க் கடிகாரம் மாலை ஐந்து மணி அடித்து ஓய்ந்தது.

தருமாம்பாளுக்குக் கட்டிலை விட்டுத் தானாக எழவோ, நடக்கவோ இயலாத நிலை.

'எத்தனை காலம் என்னை இப்படிச் சோதிக்கப் போகிறாய் ஈஸ்வரி, பேசாமே சீக்கிரம் அழைச்சுக்கோ' - புலம்பியவள் கண்களில் அவசரமாக துளிர்க்கிறது கண்ணீர்.

இப்போது அந்த உபாதை மேலும் மேலும் அதிகமாகி அவளைத் துன்புறுத்த-

சொல்லி வைத்தாற் போல உள்ளே நுழைகிறாள் மருமகள் விஜயா.

''ஏம்மா எழுந்து உட்கார்ந்திருக்கீங்க, என்ன வேணும்?''

தருமு சிறு குழந்தையாய் அவளிடம் கைகளை நீட்ட -

இவள் அவசரத்தை உணர்ந்த விஜயா, கோவில் பிரசாதத் தட்டை மேசை மேல் வைத்துவிட்டு, வேகமாக ஓடிவந்து, தருமாம்பாளைத் தாங்கிப் பிடித்து அழைத்துப் போகிறாள்.

திரும்பவும் அவளைப் படுக்கைக்கு அழைத்து வந்தபோது, மாமியாரின் கன்னங்களில் வழியத் தொடங்கிவிட்டிருந்த கண்ணீரைத் தன் கைகளால் துடைத்தபடி சொன்னாள் -

''தைரியமா இருங்கோ. உங்களுக்கு ஒண்ணுமே இல்லை. டாக்டர்கள் பெரிசு பண்ணாமல் இருந்தும், இப்படிப் படுத்தி வைக்கறதுன்னா, அது கிரகக் கோளாறாய்த்தான் இருக்கணும். தினமும் சனி பகவானுக்கு எண்ணெய் போடறேன். வாரா வாரம் எள்ளுச்சாதம் படைக்கறேன். இப்பவும் குருக்கள் அதைத்தான் சொன்னார். நிச்சயம் சீக்கிரமா குணமாயிடுமாம்'' - சொல்லிக் கொண்டே, இரண்டு மூன்று தலையணைகளை ஒன்றன் மீது ஒன்றாய் அடுக்கி, அவளைச் சாய்ந்தாற்போல் உட்கார வைத்துக் கோவில் பிரசாதத்தை எடுத்து நீட்டுகிறாள்.

தளர்ந்து நடுங்கிப் போன கைகளால் தருமு அதை வாங்கித் தன் நெற்றியில் தீட்டிக் கொண்டபோது, மீண்டும் அவள் கண்களில் கண்ணீர்.

விஜயா ஆதரவாகத் தன் மாமியாரின் முடியைக் கோதிவிட -

தருமுவின் மனசு என்னவோ உள்ளுக்குள் அழுதது.

''அடியே பைத்தியம், சாக பயப்படலைடி நான். அது சீக்கிரம் வரலையேன்னுதான் வருத்தப்படறேன் இப்பவே இது மாதிரி காரியங்களுக்கெல்லாம் உன்னை எதிர் பார்க்கவேண்டி இருக்கறப்போ, இன்னும் பாயும் படுக்கையுமா ஆயிட்டா...?'' - எண்ணங்களின் கனத்தில் சொல்ல வந்த வார்த்தைகள் அழுந்திப் போகிறது.

''ஏதாவது சாப்பிடறேளா?''

தருமு ஒன்றுமே தேவை இல்லை என்பது போலத் தலையை ஆட்டுகிறாள்.

''இப்படியே பண்ணிட்டிருந்தா, உடம்பில் எப்படித் தெம்பிருக்கும். இருங்கோ காம்ப்ளான் கரைச்சுக் கொண்டு வர்றேன்''

அவசரமாய் இயங்கத் தொடங்கிய விஜயாவை தருமு கண் இமைக்காமல் பார்க்கிறாள்.

இந்தக் கனிவு, பொறுமை, அக்கறை எல்லாமே, ஆறு மாதத்திற்கு முன் இவள் படுக்கையில் விழுந்த போது உண்டாகிவிட்டிருந்த அளவில், இன்று வரை எள்ளத்தனையும் குறையாமல், அலுக்காமல் அவளால் எப்படித்தான் தன் மாமியாருக்குத் தொண்டாற்ற முடிகிறதோ!

''விஜயா... விஜயா...!''

தருமுவுக்குத் தன் மருமகளை வாய் நிறையக் கூப்பிடக் கூட முடியாத நிலை.

கடவுளே! அந்தப் பெயர் கூட இவள் மாமியாரின் பெயராகவா அமைய வேண்டும்!

வருந்தியவள் மனசு, உள்ளுக்குள் சிரித்தது.

என்ன மரியாதை வேண்டி இருக்கிறது? மாமியார் சாகும் வரை இவள் மனதில் கூடத் தோன்றாத மரியாதை!

''அடியே விஜயா... ஏய் விஜி'' என்று எத்தனை தடவை எதிர் வீட்டிலிருந்த ஒரு சிறுமியைத் தன் மாமியார் விஜயத்தின் எதிரிலேயே பெயர் சொல்லி அழைத்திருப்பாள் இவள்!

''இந்தக் காலத்துப் பெண்களிடம் அதை எல்லாம் எதிர்பார்க்கக் கூடாதுன்னா. புருஷனையே சிலர் செல்லமாய் பெயர் சொல்லிக் கூப்பிடற காலம் இது. மனசுதான் சுத்தமா இருக்கணும். வார்த்தையில் என்ன இருக்கு?'' தருமுவின் மாமியார் விஜயம் இதற்காக எத்தனை தடவைத் தன் வீட்டுக்காரருக்குச் சமாதானம் சொல்லி இருப்பாள்!

காம்ப்ளானைத் தன் கரத்தினாலேயே தருமுவுக்குப் புகட்டிவிட்ட விஜயா, அவள் வாய் ஓரங்களை முந்தானையால் துடைத்து விடுகிறாள்.



தருமுவின் கண்கள் மீண்டும் விஜயாவையே வெறிக்க, மனதிற்குள் பிரவகித்த எண்ணங்களின் மோதலால், இதயமே உடைந்துவிடும் போல் திணறுகிறது.

''அம்பிகே. தாயே. ஏன் என்னை இப்படிச் சித்திரவதை பண்றே!''

கையும் காலும் வலிப்பு வந்தது போல் நடுங்கக் கண்களை மூடியபடி தலையணையில் சாய்கிறாள் தருமு.

மனதிற்குள் நிழலாக அந்த நாளைய நிகழ்ச்சி.

''விஜயம், இன்னும் இந்த வீட்டில் இவர்களோடு ஒண்ணா இருக்கணும்னா நீ ஆசைப்படறே?''-

கிணற்றடியில் தருமுவின் மாமனார், மாமியாரைத் தனிமையில் சந்தித்தபோது கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அதே சமயம், தற்செயலாகக் கொல்லைப்புற ரேழிக்கு வந்த தருமு, நின்று, நிதானமாக அவர்கள் பேச்சை கவனிக்கிறாள்.

மாமியாரின் பதில் காதில் விழுகிறது

''ஒரே பையன், உயிராக வளர்த்தோம். அவனை விட்டுட்டு என்ன மாப் போறது? எங்கே போறதுங்கறேள்?''

''மனுஷாளுக்கு மானம்தான் பெரிசு விஜயம். பாசமெல்லாம் அப்புறம்தான். மருமகள் மதிக்காத இந்த வீட்டில், மகனுக்காக ஒண்டிண்டிருக்கிறது உனக்கு வேணா சம்மதமா இருக்கலாம். எனக்கு அதில் இஷ்டமில்லை. என் தலையெழுத்தும் இல்லை.''

''இதோ பாருங்கோ எனக்காகத்தான் கொஞ்சம் பொறுங்களேன். சின்னஞ்சிறிசுகள். அனுபவம் போதாது. ஏதோ சமயத்தில் அறியாத்தனமா நம்மை அலட்சியப்படுத்தி இருக்கலாம். அதைப் பெரிசுபடுத்தறது நமக்குத்தான் பெருமை இல்லை.''

மாமனார் சமாதானம் அடையவில்லை. தொடர்ந்து கேட்டார்.

''சரி அதை விடு. அவதான் அப்படி நடக்குறா. உன் பிள்ளையாண்டானுக்கு எங்கே போச்சு புத்தி! உன்னையோ என்னையோ, ஒரு வேளையாவது அவன் சாப்பிட்டீங்களான்னு கேட்டிருக்கானா? அதற்கு மேலும் என்ன வேணும்?''

விஜயம் ஒரு தினுசாகச் சிரித்தாள்.

''ஒண்ணும் வேணாம். நம்ம வீட்டில் நாம் சாப்பிடறதுக்கு என்ன சிபாரிசு வேண்டி இருக்கு. கல்யாணம் ஆகறதுக்கு முன்னே மட்டும், அவனா நம்மைச் சாப்பிட அழைச்சான்? நாமதானே அவனை, வேளா வேளையும் 'சாப்பிட வரலையா' ன்னு கேட்போம். இப்போ மட்டும் எதற்காக அப்படி ஒரு புது மரியாதையை எதிர்பார்க்கணும்?''

பாசம் தன் மனைவியை, எப்படி எல்லாம் மனதின் இயலாமைகளை மூடி மறைத்துப் பேச வைக்கறது. என்று அவர் வியந்தபடி நின்றிருந்த வேளையில்தான்-

தருமு அவசரமாக அவர்கள் முன்னால் போய் அந்தச் சுடு சொற்களை வீசினாள்.

''ஏன் இப்படி அக்கிரமமாய்ப் பேசறேள். இங்கே மூணு வேளைக்கு நாலு வேளையா தவறாமே கொட்டிக்கறது நீங்க தான். அதோடு மட்டுமா? வயசான காலத்தில், மருந்து மாத்திரைன்னு சொல்லி, அவர் சம்பளத்தில் முக்கால்வாசி முழுங்கறதும் நீங்க தான். தலை எழுத்துப் பற்றிப் பேசறாரே உங்காத்துக்காரர், எத்தனையோ வசதியான இடத்தில் பிறந்தும், இங்கே வந்து, மாட்டுக் கொட்டகைச் சாணம் அள்ளறேன் பாருங்கோ அதைத்தான் சொல்லணும் என் தலை எழுத்துன்னு! இங்கே யாரும் உட்கார்ந்துண்டு தின்னலை. அதுக்குன்னேதான் நீங்க ரெண்டு பேர் இருக்கேளே!''

விக்கித்துப் போகிறார்கள் இருவரும்.

நாலு வேளையாம். மருந்து மாத்திரையாம். மாட்டுக் கொட்டகைச் சாணம் அள்ளுகிறாளாம்!

அந்த ஈஸ்வரனுக்குத்தான் எல்லாம் தெரியணும்

எங்கே தொலைஞ்சது

ஈஸ்வரன் அவளை கணவனாயிற்றே! இவள் கூறுவதுதானே அவனுக்கு வேதம்!

தருமு மெல்ல சுய உணர்வு பெற்ற போது.

விஜயா கூடத்திலிருந்த தன் மாமனார் ஈஸ்வரனின் படத்திற்கு மாலை அணிவித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறாள்.

தொடர்ந்து, சுவாமி அலமாரியைத் திறந்து, அங்கிருந்த அபிராமி அந்தாதியை எடுத்துப் படிக்கிறாள்.

'இழைக்கும் வினை வழியே அடுங்காலன் எனை நடுங்க

அழைக்கும் பொழுது வந்து அஞ்சலென்பாய்...

தருமு, இதயத்தில் எழுந்த வேதனைக் குமுறலை அடக்க முடியாமல் திடீரென்று இரும -

அவசரமாக அங்கே ஓடி வந்த விஜயா, சாம்பல் நிரம்பிய பீங்கான் தட்டு ஒன்றை அவள் வாய் அருகே நீட்டி, அந்த எச்சிலையும் கோழையையும் பரிவோடு ஏந்துகிறாள்.

பிரமிப்போடு அவள் முகத்தை ஏறிட்ட தருமுவை மீண்டும் நெருப்பாகச் சுடுகிறது பழைய நினைவுகள்.

''இதோ பாருங்கோ. இந்த வீட்டில் நடக்கற அசிங்கத்தை இதற்கு மேலும் என்னால் சகிச்சிண்டிருக்க முடியாது. சத்திரம் சாவடியில் கூடக் கேள்வி முறை உண்டு. எங்கே பார்த்தாலும் ஈ எறும்புத் தொல்லை. என்னென்னவோ வாடை. பேசாமே உங்க அம்மாவை ஏதேனும் ஒரு தர்ம ஆஸ்பத்திரியில் சேர்த்துடுங்கோ. இல்லை... என்னால் இந்த வீட்டில் ஒரு வேளை சோறு தின்ன முடியாது.''

விஜயத்திற்கு உதவிக் கொண்டிருந்த தருமுவின் மாமனார், தன் மகன் ஈஸ்வரனை பரிதாபமாகப் பார்க்கிறார்.

தருமுவைக் கண்ணில் பாதியாய் ஏற்றுக் கொண்டுவிட்ட ஈஸ்வரனுக்கு, அந்த நிலையிலும் பச்சாதாபம் உண்டாகவில்லை!

மறுநாளே, விஜயம் ஓர் அநாதை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதும்-

சில நாட்களில் இறந்து போனதும்-

மாமனாரின் முடிவு பிறகு என்ன ஆயிற்று என்பதும்-

இன்றுவரை. இவர்கள் அறிந்து அக்கறை காட்டாமல் விட்டுவிட்ட விஷயங்கள்!

''கொஞ்சக் கொடுமை இல்லையடி அம்மா. லோகத்தில். மாமியார்கள்தான் மருமகளைப் படுத்தி வைப்பான்னு கேள்விப்பட்டிருக்கோம் உங்காத்து விவகாரம் தலைகீழ். தருமு என்ன புண்ணியம் பண்ணினாளோ. உன்னைப் போல் ஒருத்தி மருமகளாய் வாய்த்து. இந்தக் கடைசி காலத்தில். இத்தனை அக்கறையாய். இவ்வளவு சகிச்சு அவளை கவனிக்க! கோவில் பிரகாரத்தில் விஜயாவைச் சந்தித்த கௌரிப் பாட்டி, கதை கதையாய்ச் சொல்லிவிட்டுக் கடைசியாகக் கேட்டாள்-

''உன் ஆத்துக்காரன் கடுதாசு போட்டானா?''

''ரெண்டு நாளைக்கு முன்னால் கூட வந்துட்டுத்தான் போனார் பாட்டி''

கிழவி உருகிப் போனாள் - ''பாவம். அவன் வேலை பார்க்கற இடத்திலேயே ஒரு வீடு பார்த்து. நீயும் அவனும் அழகாய்க் குடித்தனம் பண்ணவேண்டிய சிறிசுகள். செத்தாலும் கிராமத்தில்தான் சாவேன். ஆஸ்பத்திரிக்கு வரமாட்டேன்கற தருமுவின் பிடிவாதத்தாலே. அவன் அங்கே சாப்பாட்டிற்குத் திண்டாட. நீ இவளுக்குப் பணிவிடை பண்ணிண்டிருக்கே. ஒரு வழியா இவ கதை முடிஞ்சா நீயும் கையைக் காலை உதறி...''



**எந்த மாதிரி பிளவுஸ் அழகு தரும்?**

குறுகலான கழுத்தை உடைய பெண்கள் 'ப' வடிவமான கழுத்து உள்ள பிளவுசை அணிந்தால் அழகாக இருக்காது. 'வி' கழுத்து பிளவுஸ் அறிந்தால்தான் அழகாக இருக்கும்.

கழுத்து பிளவுஸில் பட்டை அகலமாக இல்லாமல் மெல்லியதாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒடுக்கமான கழுத்தைப் பெற்ற பெண்கள் காதுகளில் ஜிமிக்கி போன்ற நகைகளை அணியக் கூடாது

—ப்ரியாபாலு

விஜயா அவளைச் சட்டென்று இடை மறித்தாள்-

''வேணாம் பாட்டி, தயவு செஞ்சு அப்படிச் சொல்லாதீங்கோ, வயோதிக நிலையில், அதிலும் நோய்வாய்ப்பட்டிருக்கும் ஒருவருக்குத் தொண்டு செய்யறதைப் பெரிய புண்ணியமாய்க் கருதும் நாம், அதையே தன்னோட மாமியார் என்கிறபோது மட்டும் ஏன் விதி விலக்கா நினைக்கணும். என்னைப் பொறுத்தவரை இதை நான் மனப்பூர்வமாகத்தான் செய்யறேன்!''

கிழவி, வாய் அடைத்துப் போகிறாள்.

எந்த நிலை வரக்கூடாது என்று தருமு பயந்து கொண்டிருந்தாளோ, அந்த நிலையை அவள் மிகச் சீக்கிரத்தில் எட்டிவிட்டாள்.

விஜயாவிடம் மட்டும், எந்த மாறுதலும் இல்லை.

மாமியார் படுக்கையோடு விழுந்தும், அதே பொறுமை, பரிவு, சகிப்புத் தன்மை! எந்த சந்தர்ப்பத்திலும், ஒரு முகச் சுளிப்பைக்கூட தருமுவால் அவளிடத்தில் காண முடியவில்லை!

''அம்பிகையே என்னைப் படிப்படியா ஏன் கொல்றே, ஒரே அடியா அழைச்சுக்கோ''- அவள் புலம்பிக் கொண்டுதான் இருக்கிறாள்.

வாரங்கள் மாதங்களாக -

''விஜயா, மூதேவி, அங்கே என்ன பண்றே? எனக்கு மூச்சுத் திணறுதே''

''விஜயா எத்தனை தடவை கூப்பிடறேன், இந்த இடத்தை சுத்தம் பண்ணித் தொலையேன்''

''என்னை கவனிக்கறதை விட்டுட்டு, உனக்கு என்னடி கோவிலும் குளமும் ஊரைச் சுத்தறதுக்கு இது ஒரு சாக்கா?''

எத்தனையோ அதிகாரங்கள், அமர்க்களங்கள்.

அத்தனையிலும் தருமுவுக்குத் தோல்விதான்!

''வேண்டாம்விஜயா, எனக்காக இனி எதுவுமே செய்யாதே. நான் சீக்கிரம் சாகணும். அந்த இடைக் காலத்திற்குள் சில நாட்களாவது ஒரு அநாதையாய் நான் தவிக்கணும். உன்னுடைய இந்த கவனிப்பு, பிரார்த்தனைக்கெல்லாம், நான் கொஞ்சமும் அருகதை இல்லாதவள். உன் அன்பால், நீ என்னை வாழ வைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நிமிடமும், ஒரு யுக நரகமாய், என்னைச் சுட்டெரிக்கிறது. தயவு செய்து என்னை விட்டுவிடு!''

திடுக்கிட்டுத் திரும்பிய விஜயா, அபிராமி அந்தாதியை பூசை அலமாரியிலேயே மூடி வைத்துவிட்டு, மாமியாரின் அருகே வருகிறாள்.

சில நொடிகள் அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த தருமாம்பாள், அவள் கரங்களை இறுகப் பற்றிக்கொண்டு, குரல் நடுங்கக் கெஞ்சுகிறாள்.

''விஜயா! வயசில் பெரியவ நான், உன்னிடம் காலில் விழாத குறை யாகக் கேட்டுக்கறேன். என்னை விட்டுடு. உன்னை என் மருமகளா கவே எண்ணத் தோணலை. அன்பென்னும் நிழலிலேயே என்னைப் பழி தீர்க்க வந்துவிட்ட என் மாமியார்தான் நீ. உன் பெயரே அதைச் சத்தியம் பண்ணுகிறது. கடைசியாகக் கேட்கறேன், என்னை அநாதை யாய் விடு. அனுபவிக்க விடு!''.

தருமுவுக்கு நெஞ்சு திணறலாய்த் துடித்து, ஒவ்வொரு விநாடியும், தன் முடிவு நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பது புரிகிறது!

தொடர்ந்து வெளிப்பட்ட இருமலைச் சமாளிக்க இயலாமல், நெஞ்சைப் பிடித்தபடி தலையணையின் பக்கவாட்டில் புரள -


இமைப் பொழுதில், விஜயா சாம்பல் தட்டோடு அங்கு ஓடி வருகிறாள்.

''அம்பிகே இப்போதாவது அவள் முகத்தில் துளி அருவருப்புத் தோன்றக் கூடாதா?''

கண்கள் பஞ்சடையத் தொடங்கிவிட்ட அந்த நேரத்திலும், தன் ஆவல் முழுவதையும் பார்வையில் தேக்கி விஜயாவின் முகத்தைக் கடைசியாக ஏறிட்ட தருமுவுக்கு -

அப்பொழுதும் தோல்விதான்!

# பட்டுச் சேலைகளை பாதுகாப்பது எப்படி?



பட்டுச் சேலைகளை அதிக விலை கொடுத்து வாங்குகிறோம். அப்படி வாங்கும் சேலைகள் நீண்ட நாள் நீடித்து உழைப்பதையே விரும்புவோம்.

**அவற்றை பாதுகாக்கும் முறைகள் சில:**

பட்டுத் துணிகளை சோப்பு போட்டு துவைக்கக்கூடாது. அதனால் அதன் புதுமை மாறாமல் இருக்கும். பளபளப்பு நீடித்து இருக்கவும் சோப்பு உபயோகிக்காமல் இருக்க வேண்டும்.

சோப்பு போடாமல் துவைப்பது எப்படி?

சோப்புக்காய் என்று ஒரு வகை பொருள் கடைகளில் கிடைக்கும். அதனை வெதுவெதுப்பான நீரில் அரைமணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின் அதை எடுத்து கசக்க வெண்மையான நுரை வரும். அந்த நுரையில் பட்டுத் துணிகளை ஊறவைத்து கசக்கினால் அழுக்குகள் நீங்கிவிடும்.

கடலைமாவை நன்றாக கரைத்து அதில் பட்டுத் துணியை ஊறவைத்து கசக்கினால் அழுக்குகள் போய்விடும்.

பட்டுத் துணிகளில் எண்ணைக் கறை ஆகி விட்டால் கவலை வேண்டாம். சிறு துளி பெட்ரோலை எண்ணை பட்ட இடத்தில் விட்டு துவைத்தால் எண்ணெய்க் கறை மாறி விடும்.

பட்டுகளை ஒரு முறை நனைத்து அலமாரியில் வைத்து விடுதல் நலம். பிளாஸ்டிக் உறைகளில் வைத்தால் அலமாரியின் இரும்புக் கறை படியாமல் இருக்கும்.

பட்டுத் துணிகளுக்கு இஸ்திரி போடும் போது இஸ்திரி பெட்டியை அதிக உஷ்ணத்துடன் இல்லாமல் மிதமான சூட்டில் வைக்க வேண்டும்.

ஜரிகையை உட்புறமாக இருக்குமாறு மடித்து வைக்க வேண்டும். அதனால் அது கறுத்து போகும் பயம் கிடையாது.

வெளியில் கட்டிக்கொண்டு போன பிறகு உடனே மடித்து வைக்கக் கூடாது. இரண்டு மணி நேரமாவது காற்றாட கொடியில் உலர்த்த வேண்டும். நாப்தலின் உருண்டைகளை பட்டுப்புடவைக்குள் வைத்து மடித்தல் நல்லது.

பட்டுத்துணிகளை வெயிலில் உலர்த்தக் கூடாது. நிழலில்தான் உலர்த்த வேண்டும்.

தொகுப்பு: ப்ரியாபாலு

திருமலை என்ற தேவார வைப்புத்தலமாகிய திருமலைராயன் பட்டினம்

# அருள்மிகு வீரமாகாளியம்மன் பூஜை விழா

### திருச்சிற்றம்பலம்

*சங்குந் தம்பதியில் வருமொரு திரளைவிடமயின்ற தாதை போல*
*எங்குந்தம்புகழ் விளங்கப்ப ஃறிரளை விடமயின்றோ னெழில் கூரன்பர்*
*மங்குந் தம்பிறப்பகற்றுந் திருமலைராயன் பதியில் வாழாநின்ற*
*செங்குந்த விநாயகன்றாள் சிந்திப்போம் வினையனைத்துஞ் சிந்திப்போமே*

*சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருநாட்டுத் தொகை.*

*(பண்: இந்தளம்)*

*ஈழ நாட்டு மாந்தோட்டந் தென்னாட்டு ராமேச்சரஞ்*
*சோழ நாட்டுத் துருத்தி நெய்த்தானந் திருமலை*
*ஆழியூரன நாட்டுக்கெல்லாம் அணியாகிய*
*கீழையில் லரனார்க்கிடங் கிள்ளி குடியதே.*

### அருள்மிகு வீர மாகாளியம்மன் விருத்தம்

*விண்டலந்தண்டுறக் கொண்டலைத் தண்டலையை மிண்டியொண் கொண்டகுழலும்*
*வீடலறு நீடுகலை கூடுமதி கோடியுவமிக்கொணாச் சுடர்வதனமுங்*
*கண்டுதுதிவிண்டிடுந் தொண்டருக்கருள முதகடன்மடை திறந்தவிழியுங்*
*கடகரடகுஞ்சரத்தட நெடுமருப்பைக்கடுத்த கனதனகலசமும்*
*அண்டமொடுகண்ட நவகண்டமும் அகண்டமுமளித்த வாலிலையுதரமும்*
*அறைகழற்செறிநறைப் பொழிமலர்த் தாளிணையு மடியரேங்கான வருவாய்*
*அண்டர்புகழ் திருமலைராய னகரம்பலத்தாடுவார் மடமீதில்வா*
*மடலேறுமூ தாளி பிடரேறுவே தாளி யடல் வீர மாகாளியே*

### கந்த புராணம்

*அங்கவேலையி லுமையவள் வெகுளியாலடல் செய்*
*தங்கையாகிய பத்திரகாளியை நல்கச்*
*செங்கையோ ரிரண்டாயிரம்பாதி செம்முகமாய்த்*
*துங்கவீரபத்திரன் றனையடைந்தன டுணையாய்*

கருணையே திருவுருவாகக் கொண்டருளிய பரமபதியாகிய பரமேஸ்வரன் தக்கன் புதல்வியாகிய தாக்ஷாயனியைத் திருமணம் புரிந்தபின்னர். தக்கன் அரன் அருளால் அரும்பெரும் வரங்களைப் பெற்றும், அஞ்ஞானத்தால் அகந்தை கொண்டு ஓர் யாகம் செய்தனன். அந்த யாகத்தில் அவிர்ப்பாகம் முதலில் பரமசிவனுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டிய முறையை விட்டமையாலும், சிவபெருமானை பலவாறு நிந்தித்தமையாலும், அறக்கருணை புரியும் அறக்கடவுளுக்கு அவன் யாகத்தை அழிப்பதும், அவனைத் தண்டிப்பதும் இயல்பாதலால், தமது நெற்றி நேத்திரத்திலிருந்து வீரபத்திரரைத் தோன்றச் செய்தனர். அருகில் இருந்த உமாதேவியாரின் கோபாவேசத்தில் பத்திரகாளியம்மை அவதரித்தனள். பரமேஸ்வரியின் அவதாரமாகிய பத்திரகாளியம்மையார் பக்தர்களுக்கருளும் பான்மையினால் பற்பல தலங்களில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியது போல், எந்நாட்டினுமுயர் பொன்னாடும் இந்நாட்டிற்கு இணையாகாவென சொன்னாட்டும் பொன்னி நன்னாடாகிய இச் சோழவள நாட்டில் மிகச் சிறப்புற்று விளங்கா நின்ற இத்திருமலைராயன் பட்டினத்தில் ஸ்ரீ அபிராமியம்பாள் சமேத ஸ்ரீ இராஜசோளீச்சுரமுடையார் கீழவீதி. ஈசான்ய பாகத்திலுள்ள மடாலயத்தில் எழுந்தருளி பக்தர்கள் வேண்டிய வேண்டியாங்கே இஷ்டசித்திகளை இகத்திலே அருளுகின்றாள்

நமக்கு தெரியாத அற்புதங்கள் எழுத்தில் எழுத இயலாத வண்ணம், ஆச்சரியங்களாக, அதிசயங்களாக, அபூர்வங்களாக நிறைய உள்ளன என்பது இந்த திருமலைராயன்பட்டினத்து ஆயிரங்காளியம்மனை நினைக்கும் போது நமக்குப் புரியத் தொடங்கும்.

இவள் விசித்திரமானவள். ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையே தான் இருக்கும் பேழையிலிருந்து வெளியில் வருவாள். அப்படி வரும் போது ஆயிரம் படி அரிசி சித்திரான்னங்கள் நிவேதனம், எண்ணிக்கை ஆயிரம் கொண்ட பழங்கள். இனிப்பு வகைகள், கார வகைகள் மற்றும் அதிரசம், முறுக்கு, வடைகள், அப்பம், தோசை, இட்லி, அப்பளம், தேங்காய் இவை யாவும் ஆயிரமாயிரமாக வைத்து நடத்தும் நிவேதனத்தைப் பெற்றுக் கொண்டு இரண்டு பகல், இரண்டு இரவுகள் மட்டும் பக்தர்களுக்கு தரிசனம் தந்துவிட்டு பின் தன் பேழையில் அமர்ந்து விடுவாள்.

இத்தகைய இந்த விழா எதிர்வரும் 10-06-97 முதல் 12-06-97 வரை நடைபெற உள்ளது. **இதன்பின் அம்பாளை 2002ல் சித்திரபானு வருடம் வைகாசி மாதம்தான் தரிசனம் செய்ய இயலும்.**

ஒரு காலத்தில் கலிங்கத்தை ஆண்ட அரசன், தன் நாட்டின் மீது படை எடுத்து வந்த அண்டை நாட்டுச்சிற்றரசர்களிடம் அடிக்கடி தோற்றதால் மனம் வெறுத்து ஒரு முனிவனிடம் ஆலோசனை கேட்டான்.

அந்த முனிவர் சத்ரு ஜெயமும், சமாதான பீடமும், சரியான சிம்மாசனமும் கிடைக்க மாகாளி ஒருத்தியால்தான் முடியும், ஏனென்றால் அவள் சத்ருக்களுக்கு பயங்கரி, ஆங்காரி, ரீங்காரி. ஆனால் உபாசிக்கும் பக்தர்களுக்கோ சகல சௌபாக்கியம் அளிக்கும் இராஜ இராஜேஸ்வரி. ஆகவே, நீ அவளை அன்புடன் ஏற்றுத் துதித்து வழிபடுவாயானால் உனக்கு வேண்டியது கிட்டும் என்றார்.

உடனே அரசன் அவரையே குருவாகக் கொண்டு அவர் கட்டளைப்படியே அன்னை இராஜ இராஜேஸ்வரியான மகாகாளியை சிறந்த முறையில் ஸ்தாபித்து, தினமும் ஆயிரம் கனிகள், மலர்கள், இனிப்புகள், ஆயிரம் படி அரிசி வைத்து நிவேதனம் செய்து துதித்து வரத் தொடங்கினான். அன்றிலிருந்து மன்னனுக்கு இருந்து வந்த மனக் கவலை, எதிரிகளால் பயம், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி யாவும் நீங்கின.

அரசனின் அந்திம காலம் நெருங்கியது. நாட்டிலும் பல மன மாற்றங்கள் ஏற்பட்டன. அதன் பேரில் தனக்குபின் அம்பிகையை யார் பய பக்தியுடன் போற்றி துதித்து வழிபாடு நடத்த முடியும் என கவலை கொண்டான். 'பூசைக்கு வைத்து வழிபடும் நிவேதனங்களில் ஆயிரம். ஆயிரம் இருக்க வேண்டுமே' என்பது கவலைக்குக் காரணம்.

ஒரு நாள் இரவில் அம்பிகை அரசன் கனவில் தோன்றி ''கவலைப் படாதே என்னை ஓர் பேழையில் வைத்து கடலில் மிதக்க விட்டு விடு. நான் உன்னைப் போன்று பக்தி செலுத்திக் கொண்டாடும் வேறொருவரிடம் போய்க் கொள்கிறேன்'' என்றாள். (இன்றைக்கும் உண்மையான பக்தி கொண்டு அம்பாளை வேண்டினால் அவளே நம் கனவில் குழந்தையாக, வயது நிறைந்த சுமங்கலியாக தோன்றுகிறாள்)

மன்னனும் அம்பாளின் கட்டளைப்படி பேழை ஒன்று செய்து அம்பிகைக்கு உரிய சகல பொருள்களையும் உள்ளே வைத்து கடலில் மிதக்க விட்டு, தானும் வீடு பேறு எய்தினான்.

பேழையும் திருமலைராயன் பட்டினத்து வங்கக் கடலில் மிதந்து கொண்டிருந்தது. மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மிதக்கும் அந்தப் பேழையை வலை வீசிப் பிடிக்க முயலும் போது அது வெகு தூரம் சென்றது. அதிசயமான இந்த விஷயம் ஊர் மக்களிடம் பரவியது.

இறைவியின் அம்சமென விளங்கிய ஒன்பது சக்திகளுள், முதல்

**குரோம்பேட்டில் நியூ காலனியில் ஸ்ரீ காமகோடி சங்கீத வித்யாலயா ஸ்ரீ வித்யாமாதர் சங்கத்தின் துணையுடன் சேர்ந்து ஸ்ரீ தியாக பிரம்ம ஆராதனை விழா கொண்டாடி வருகின்றது குரோம் பேட்டையிலுள்ள 8 மாதர் சங்க அங்கத்தினர்களும், இவ்விழாவில் கலந்து கொண்டு பஞ்சரத்ன கீர்த்தனைகளைப் பாடி வருகின்றனர். இந்த வருடம் 1997-ல் மார்ச் 16-ம் தேதி திருமதி என். சி. சௌந்தர வல்லி 16வது வருடமாக வந்து பஞ்சரத்னத்தை ஆரம்பித்து சிறப்பாக நடத்திக் கொடுத்தார்.**

சக்தியான மாணிக்க வல்லியின் திருக்குமாரனாய் பிறந்து அன்னை உமையவளின் மைந்தனாக அனைவராலும் கருதப்படும் வீரபாகுவின் வழிவந்தவர்களான செங்குந்தர் மரபில் தோன்றிய முதியவர் கனவில் அம்பாள் வந்து தோன்றி ''நான் மூன்று நாட்களாக கடலில் மிதந்து கொண்டிருக்கிறேன். என்னை உன் இனத்தாருடன் கொண்டு வந்து ஊரில் குடியேற்றி குறைவிலா வாழ்வு பெறுவாயாக'' என்றாள்.

அந்த முதியவரும் தன் இனத்தாருடன் கடலுக்குச் சென்று சகல மரியாதைகளுடன் அப்பேழையை எடுத்து வந்து அருள்மிகு அபிராமி அம்மன் உடனமர் இராஜ சோளீச்சுர முடையார் கீழவீதி ஈசானிய பாகத்தில் உள்ள அம்பலத்தாடுவார் மடத்தினில் கொண்டு வந்து சேர்த்து, கடலென திரண்டிருந்த மக்கள் முன் - குல முதல்வரும், வேத நெறிப்படி பேழையினின்றும் அம்மனை மணியணி பீடத்தில் எழுந்தருளச் செய்தார். அப்போது பேழையில் இருந்த ஓலைச் சுவடியைக் கண்டெடுத்து படித்தார்.

*''அருள்மிகு ஆயிரங் காளி அம்மன்*
*இருளினை நீக்கி இன்பம் அளிப்பவள்*
*அன்னைக்கும் படைக்கும் பொருள்கள் யாவும்*
*எண்ணில் ஆயிரம் ஆதல் வேண்டும்*
*ஆண்டுகள் ஐந்திற் கொருமுறை*
*திண்ணமாய்ப் பூசித்துக் திருவெலாம் பெறுகவே!''*

என்ற வாசகங்களைக் கண்டு அன்றிலிருந்து ஐந்து ஆண்டிற்கு ஒரு முறையே இந்த பூஜை விழாவை நடத்தி வருகின்றனர். எழுபத்தி இரண்டு வயதுள்ள ஒரு பெரியவர் இந்த அம்பாளை தன் வாழ்நாளில் 12 முறைதான் பார்க்க இயலும்.

இத்தனை சிறப்புகள் பெற்ற, பக்தர்கள் வேண்டியதை, வேண்டியபடி நடத்திக் கொடுத்து அருள்பாலிக்கும் இந்த மகாகாளியும், இராஜ இராஜேஸ்வரியுமான அருள்மிகு ஆயிரங்காளியம்மனின் பூஜை விழா. நிகழும் சுபஸ்ரீ ஈஸ்வர வருடம் வைகாசி மாதம் 26ஆம் தேதி 9-6-97 திங்கள் கிழமை முதல் 29ஆம் தேதி 12-6-97 வரை நடக்க இருக்கிறது.

### நிகழ்ச்சி நிரல்

9-6-97 திங்கள் கிழமை பூச நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் இரவு மணி 9.30 மணிக்கு மேல் 10.30க்குள் மகர நல்லோரையில் அம்பாளை பேழையினின்று எழுந்தருளச் செய்தல்.

10-6-97 செவ்வாய் மாலை மணி 6.00க்கு அருள்மிகு அபிராமி அம்மன் ஆலயத்திலிருந்து சகல மங்கள வாத்திய முழக்கங்களுடன் ஆயிரக்கணக்கான பழவர்க்கங்கள் கொண்ட வரிசை தட்டுகளும், அம்பாளுக்கு அணிவிக்க வேண்டிய வஸ்திரங்களும் புறப்பட்டு வீதியுலா வருதல்.

11-6-97 புதன் கிழமை விடியற்காலை மணி 5.00க்கு மேல் 6.00க்குள் ஆயிரக்கணக்கான பழவர்க்கங்கள், இனிப்புகள் கார வகைகளுடன் 1000 படி அரிசி சமைத்த சித்ரான்னங்களுடன் பெரும் பாவாடை போடப் பெற்று தீபாராதனை நடைபெறும்.

12-6-97 வியாழக்கிழமை இரவு 4.15க்கு மேல் 6.00க்குள் (அதாவது வெள்ளிக்கிழமை பகல் புலர்வதற்கு முன்) அம்பாளை பேழையில் ஸ்தாபிக்கப்படும்.

### தரிசனம்

10-6-97 – செவ்வாய்க் கிழமை வரிசை புறப்பாடு

11-6-97 – புதன்கிழமை பகலும் இரவும்

12-6-97 – வியாழக்கிழமை பகலும் இரவும்

இதற்குப்பின் அடுத்த பூஜை விழா சித்ரபானு வருடம் வைகாசி மாதம் வளர் பிறையில் ஆங்கிலம் 2002ஆம் வருடம்தான் நடைபெறும்.

*நட்டமோ, இலாபமோ நம் செய லன்று*
*திட்டம் ஆயிரங்காளிய தாமெனப்*
*பட்டினம் வாழ் பண்புள மக்கள் அனைவருங்*
*கட்டாய மாகவுட் கருத்தினில் கொள்வர்*

*விழா கமிட்டி தலைவர் சோ தட்சணாமூர்த்தி முதலியார் (முன்னாள் புதுவை அமைச்சர்) தொலை பேசி - 04368-33048*

*பொருளாளர் பி என் குமாரவேல் முதலியார், அப்பு முதலியார் தெரு, திருமலைராயன் பட்டினம்.*

இத்திருத்தலம் நாகூருக்கும் காரைக்காலுக்கும் மத்தியில் 5 கிலோ மீட்டரில் உள்ளது. எல்லா ஊர்களில் இருந்தும் பேருந்து வசதி உண்டு.

*கட்டுரை:* ***எம். சண்முகம்***

# தொண்டுள்ளங்கள்




சென்னை தொழில் நகர சுழற் சங்கத்தின் மூலம் கொரட்டூரில் 3-4-97 அன்று நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் அம்பத்தூர் சுற்று வட்டாரத்திலிருந்து வந்து பலர் மருத்துவ ஆலோசனைகளையும், சிகிச்சையும் பெற்றனர். சென்னை தொழில் நகர சுழற் சங்கம் (Rotary Club of Madras industrial city) 19-12-96ல் உருவானது. மக்களைத் தாக்கும் கொடிய நோய்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதே இச்சுழற் சங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதன் கவர்னர் திரு. பிரபாகர். தலைவர் கே.எஸ். வெங்கட சுப்பன், செயலாளர் ரவிராகவன். சமூக செயல் இயக்குனர் கே.கே. சுதீந்திரன், ஜெயச்சந்திரன், ரவிச்சந்திரன் ஆகியோர் பேசும்போது, எதிர்காலத்தில் ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்கிக் காட்டுவதே சுழற் சங்கத்தின் முக்கிய குறிக்கோள் என்றனர்.

இந்த மருத்துவ முகாமிற்கு, பொது மருத்துவமனை, அண்ணாநகர் சாந்தி மருத்துவமனை ஆகியவற்றிலிருந்து ஆறு டாக்டர்கள் வந்திருந்தனர். நோயாளிகளைச் சோதித்துப் பார்க்க தேவையான அனைத்து உபகரணங்களும் கொண்டு வரப்பட்டு, நோயாளிகள் சோதிக்கப்பட்டு மருத்துவ சேவை வழங்கப்பட்டது.

முகாமில், பொருளாளர் தயாளன், தேசிய செயல் இயக்குனர் ரவி சங்கர் மற்றும் செயல் வீரர்களும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். விழாவினை ஜெய பாலாஜி சாணக்யா சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

அமெரிக்க பிட்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 650 மாணவர்கள் கடல் வழிப் பயணமாக உலகம் முழுவதும் சென்று சேவை செய்து வருகிறார்கள். இந்தியாவுக்கு பல குழுக்களாகப் பிரிந்து பல மாநிலங்களுக்குச் சென்று இவர்கள் தொண்டாற்றுகின்றனர். சுற்றுப்புற சுகாதாரம் குறித்து குடிசை வாழ் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக சென்னையில் உள்ள மகரீன்புரத்தில் துப்புரவுப் பணியில் அமெரிக்க பிட்ஸ்பர்க் பல்கலைக் கழக மாணவர்கள் ஈடுபட்டனர்.

சுகால் மற்றும் தமனி அறக்கட்டளை அமைப்பு பல சமூக நல நிறுவனங்களுக்கு காசோலை, மற்றும் ஊனமுற்றவர்களுக்கு உபகரணம் வழங்கும் விழாவை மாண்புமிகு கலைஞர் மு கருணாநிதி அவர்கள் முன்னிலையில் சமீபத்தில் நடத்தியது. இவ்விழாவிற்கு தலைமை தாங்கியவர் மாநில திட்டக் குழு அமைப்பாளர் திரு. எஸ். வெங்கடரமணன். சுமார் 80 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் 281 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.

பல சிறந்த பெண் தொழில் வல்லுநர்களை உருவாக்கி வரும் எஸ்.சி. எஸ் கோத்தாரி அகாடெமி தனது பதினேழாவது ஆண்டு விழாவை சமீபத்தில் சிறப்பாகக் கொண்டாடியது. இளம் பெண்களுக்கும் இல்லத்தரசிகளுக்கும் தொழிற் கல்வியையும், பயிற்சியையும் அளிக்கிறது இந்த நிறுவனம். டாக்டர் (திருமதி) கே. சௌந்தரவல்லி (இந்திரா காந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தின் சென்னை மண்டல இயக்குநர்) அவர்களும், முன்னாள் துணை வேந்தரான திரு. எஸ்.வி. சிட்டிபாபு அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர். தொழிற்பயிற்சிக் கல்லூரியில் சிறந்து விளங்கிய மாணவிகளுக்குத் திருமதி சௌந்தரவல்லி பதக்கங்களையும், பரிசுகளையும் வழங்கினார்.

# சாயிசாகர முத்துக்கள்




என்னை நோக்கி நீ ஒரு அடி எடுத்து வைத்தால் நான் உன் குறை நீக்க பத்து அடிகள் உன்னை நோக்கி விரைவேன்.

★ ● ★

என்னிடம் நெருக்கம் ஏற்படுவது சரீரத்தினால் அல்ல. எனக்குப் பக்கத்தில் இருக்கின்ற ஒருவர் என்னை விட்டு வெகு தூரத்தில் இருக்கலாம். வெகு தூரத்தில் இருக்கும் ஒருவர் எனக்கு மிக நெருக்கமாக இருக்கலாம்.

சத்திய, தர்ம, சாந்தி, பிரேமையைக் கடைப் பிடிப்பவரே எனக்கு நெருக்கமானவர்.

★ ● ★

உண்மையான பக்தி என்பது சுகம், கஷ்டம் இரண்டிலும் ஒரே மனநிலையுடன் இருப்பதே ஆகும். சுகம் வரும் போது இறைவனைப் போற்றுவதும் கஷ்டம் வரும் போது இறைவனை கடிந்து கொள்வதும் சரியல்ல. எப்பேர்ப் பட்ட கஷ்டங்கள் வந்தாலும் வரட்டும் என்று அவற்றை உறுதி கொண்ட உள்ளத்துடன் சந்திக்க வேண்டும். அவை ஓடும் மேகங்கள் போன்றவையே என்று கருத வேண்டும்.

★ ● ★

நாம் என்ன வண்ணக் கண்ணாடி அணிந்து பார்க்கிறோமோ அந்த வண்ணத்தில் தான் அனைத்தும் காணப்படும். நீங்கள் பிரேமை மயமாகி விட்டால் இந்த உலகமும் உங்களுக்கு பிரேமை மயமாகவே காணப்படும். ஆனால் உங்களிடம் வெறுப்பு இருந்தால் உலகமும் வெறுப்பின் உருவமாகத் தோன்றும். நல்லது, கெட்டது இரண்டுமே உங்களின் பிரதிபலிப்புத் தான். ஒவ்வொரு செயலுக்கும் Reaction (எதிர்ச் செயல்), Resound (பிரதிபலிப்பு), Reflection (எதிரொலி) மூன்றும் கட்டாயமாக நிகழும்.

★ ● ★

பாலில் இருக்கும் வெண்ணையை எம்மால் காண முடியவில்லை. அதை தயிராக்கி கடைந்தெடுத்தால்தான் வெண்ணெய் வருகிறது.

வெண்ணையானது பாலின் ஒவ்வொரு அணுவிலும் இருப்பது போல் தெய்வத்துவமானது நமது உடலின் ஒவ்வொரு அணுவிலும் உண்டு. கடைந்தெடுத்த பின்பே இந்த வெண்ணெய் வெளியே வருவதுபோல், அதற்கேற்ற சாதனை செய்தால்தான் தெய்வத்துவமும் காணப்படும். வெண்ணெய் வெளியே எடுக்கப்பட்டாலும் அது மோருடன் சேர்வதில்லை. அதைப் போலவே தெய்வத்துவமும் தேகத்திலிருந்து வெளியே வந்து விட்டால் மீண்டும் அதற்குள் சேராது.

★ ● ★

விலை உயர்ந்த தங்க நகைகளையும்,

*தொடர்ச்சி 84-ஆம் பக்கம்*

**சத்ய சாயி சங்கீதாஞ்சலி**


பகவான் சத்ய சாயி பாபாவின் பெருமைகளை, ஒன்பது மொழிகளில் (தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், இந்தி, கன்னடம், மலையாளம், பெங்காளி, குஜராத்தி, மராத்தி) உள்ளம் உருக... பக்தி வெள்ளம் பெருக பாடுகின்றார் எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள்.

இந்த இசை நாடாவில் ஒலிக்கும் Sairama Chiluka என்ற பாடல் பகவான் பாபா அவர்கள் இயற்றி இசையமைத்தது. வயலின்: ஆர்.கே. ஸ்ரீராம் குமார்; மிருதங்கம்: கே.வி. பிரசாத்; ஒலிப்பதிவு பொறியாளர்: டி.எஸ். கிருஷ்ணமூர்த்தி; பாபா பாதம் அட்டைப்படம்: ஏ. சிவானந்த்.

சாயி அன்னையின் 71வது பிறந்த நாள் அன்று (நவ., 23, 1996) புட்டபர்த்தியில் வெளியிடப்பட்ட இந்த அருமையான இசை நாடாவை தயாரித்த தன் மூலம் எச் எம் வி. நிறுவனத்தினர் போற்றுதற்குரிய புனிதப்பணியை செய்திருக்கின்றனர்.

எம்.எஸ்.ஸின் தெய்வீக குரலில் பக்திப் பரவசம் பூக்க வைக்கும் இந்த இசை நாடாவின் சிறப்புகளைப் பாராட்ட வார்த்தைகள் போதாது.





சமூகத் தொண்டின் சந்நிதியே



# சென்னையில் சாயி ஆர்ர்ரா

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க சென்னைக்கு 10.4.97 அன்று வருகை புரிந்தார்.

அன்றைய தினம் சுவாமி தங்குமிடமான பக்ஸ்ரோடு, சென்னை 28ல் உள்ள **'சுந்தரம்'** விழாக் கோலம் பூண்டிருந்தது. காலை சுமார் 10.45 மணியளவில் பகவான் பாபா சுந்தரத்திற்கு வந்து சேர்ந்தார். விடியற்காலை 5 மணியிலிருந்தே பக்தர்கள் அவரை வரவேற்கவும், தரிசனத்திற்காகவும் கூட ஆரம்பித்தனர். 8 மணியளவிலேயே லட்சக் கணக்கான மக்கள் கூடி விட்டனர். கடும் வெய்யிலையும் பசியையும் பொருட்படுத்தாமல் சுவாமியின் தரிசனத்திற்காக காத்திருந்தனர். சுந்தரத்திற்கு வெளியிலும் சாமியானா போடப்பட்டு அங்கேயும் லட்சக்கணக்கானவர் குழுமியிருந்தனர். சுந்தரம் இருக்கும் தெருவின் ஆரம்பத்திலேயே சுவாமியை வரவேற்க பெரிய அலங்கார வளைவு வைக்கப்பட்டிருந்தது.

கடும் வெய்யிலிலும், வெளியே சாலை ஓரமாக போடப்பட்டிருந்த சாமியானா கீழும் அமர்ந்திருந்த பக்தர்களைப் பார்த்தார். கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் வழியிலேயே இறங்கி வெளியில் அமர்ந்திருந்த பக்தர்களுக்கு தரிசனம் தந்து அருள் புரிந்தார். அதன் பிறகு சுந்தரத்தின் நுழைவாயில் வழியே உள்ளே வந்தார்.

பெண்களும், ஆண்களும் வேதம் ஓத, நாதஸ்வர இசை முழங்க, பக்தர்கள் வெண் சாமரம் வீச, பூர்ண கும்பத்துடன் சகல மரியாதையுடன் பகவான் சத்ய சாயி சுந்தரத்திற்குள் வந்தார். சுவாமியின் முகம் மலர்ந்து சந்திர பிம்பமாக இருந்தது. லட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்ததால் எல்லோரும் பார்க்கும் வகையில் தொலைக்காட்சி பெட்டியும் வைக்கப்பட்டு இருந்தது.

சுந்தரத்தின் உள்ளே உள்ள பாகனை மண்டபம் (ஹால்) புதுப்பிக்கப்பட்டிருந்தது. அதை பகவான் பாபா தன் புனித கரங்களால் திறந்து வைத்து அதை புனிதப்படுத்தினார். ஹாலில் அமர்ந்திருந்த பக்தர்களுக்கும் தரிசனம் தந்து அருளாசி வழங்கினார். பிறகு அருகே உள்ள ஷீரடி பாபா மந்திருக்கு சென்று அபிஷேகத்தை பார்வையிட்டார். அங்கிருந்து பக்தர்கள் அனைவருக்கும் ஆசி வழங்கினார். சில பக்தர்களிடம் கடிதங்களைப் பெற்றுக் கொண்டார். சிலருக்கு பாத நமஸ்காரம் செய்ய அனுமதித்தார். பல பக்தர்கள் சுவாமியின் தேஜோ மயமான முகத்தைக் கண்டு உருகி கண்ணீர் சிந்தினர். சுவாமியின் பார்வையில் தெரிந்த அன்பினால் கரைந்து உருகி கண்ணீர் பூத்தனர்.

*அன்பால் அழுதும் அலறியும் ஆள்வானை*

*என்புருகி உள்ளே நினை*


என்று ஔவை கூறியது போல பகவானைப் பார்த்து பக்தி மேலிட்டு பலர் கண்களில் நீர் ஆறு போல பெருகியது.

பிறகு பகவான் மாடியில் உள்ள தாமரை வடிவமாக அமைக்கப்பட்ட பலகனியில் நின்று அனைவருக்கும் தமது இரு திருக்கரமலர்களால் ஆசி வழங்கினார்.

அன்று மாலை 5 மணிக்கு பஜனையும், சுவாமியின் தரிசனமும் இருந்தது. கிரகங்களுக்கெல்லாம் அதிபதியான நமது பகவான் வெய்யிலில் நடப்பதையும், அவரது பக்தர்கள் வெய்யிலில் தவிப்பதையும் பார்த்த சூரிய பகவான் சிறிது சிறிதாக தன் உக்கிரத்தைக் குறைத்துக் கொண்டான். மாலை தரிசனத்திற்காக மதியம் 12 மணியிலிருந்தே மக்கள் கூட ஆரம்பித்தனர். வெளி நாட்டவர்களும் வந்திருந்தனர். சுமார் 5 மணியளவில் பஜனைப் பாடல்கள் பாட ஆரம்பித்த போது சுவாமி புன்னகை முகத்துடன் சந்திரனைப் போல வலம் வந்தார். அனைவரும் வைத்த கண் வாங்காமல் சுவாமியை பார்த்துக் கொண்டிருந்தனர். எங்கும் நிசப்தம்.

அத்தனை ஒழுக்கம், கட்டுப்பாடு சத்திய சாயி பக்தர்களிடம்.

பிறகு சுவாமி அவருக்காக பிரத்தியேகமாக அலங்கரிக்கப்பட்டிருந்த சாந்தி வேதிகா மண்டபத்



தில் நின்று பக்த கோடிகளுக்காக ஒரு மணி நேரம் அருளுரை வழங்கினார். அருளுரையை முடித்தவுடன் கற்பூர ஆரத்தி எடுக்கப்பட்டது. பகவான் பாபா அனைவருக்கும் ஆசி வழங்கி விட்டு உள்ளே சென்றார். பக்தர்கள் பிரசாதம் பெற்றுக் கொண்டு சென்றனர்.

சுந்தரத்திற்கு அருகே உள்ள கிரீன்வேஸ் ரோட்டில் பக்தர்களுக்காக சத்ய சாயி சேவா ஸ்தாபனத்தினரால் உணவு விடுதி வைக்கப்பட்டிருந்தது. மலிவு விலையில் எல்லாம் விற்பனை செய்யப்பட்டது. சத்ய சாயி சேவா ஸ்தாபனத்தைச் சேர்ந்த சேவாதள்கள் பல்வேறு பணிகளை செவ்வனே செய்து வந்தனர். **சேவை செய்வதன் மூலமே என்னிடம் நெருங்க முடியும்** என்ற பாபாவின் வாக்குக்கு ஏற்ப ஆண், பெண் சேவாதள்கள் கருமமே கண்ணாக அத்தனை ஜனத்திரளையும் ஒழுங்குபடுத்தினர். வாகனங்கள் அழகாக ஒதுக்குப் புறமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அடுத்த நாள் விடியற்காலை சுவாமியின் விஸ்வரூப தரிசனத்தை காண இரவு 1 மணியிலிருந்தே பக்தர்கள் கூட ஆரம்பித்தனர். பெண்களும் ஆண்களும் சேர்ந்து ஓம்காரம், சுப்ரபாதம் சொல்லி விட்டு பிறகு தனித்தனி குழுவாக நகர சங்கீர்த்தனம் சென்று திரும்பினர். சுப்ரபாதத்தைக் கேட்ட நமது திருமால் பகவான் சத்ய சாயி காலை 6 மணியளவில் தாமரை வடிவ பலகனியில் தாமரை மலர் போல் தரிசனம் அளித்தார். பக்தர்கள் பக்திப் பரவசத்தில் மெய் சிலிர்த்தனர். 8 மணியளவில் பஜனை ஆரம்பித்தது. சத்ய சாயி பக்தர்கள் அருகில் வந்து அருள் புரிந்தார். அன்று மாலை 5 மணிக்கு பஜனை நடந்தது. சுவாமி ஒரு மணி நேரம் அருளுரை வழங்கினார்.

மறுநாள் காலை (12-4-97) கொட்டும் மழை. இடியைப் பொருட்படுத்தாமல் பக்தர்கள் சுவாமியின் விஸ்வரூப தரிசனத்தைக் கண்டனர். சுமார் 8 மணியளவில் தரிசனம் கொடுத்து விட்டு பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா பெங்களூரில் வொயிட் பீல்டில் உள்ள தமது பிருந்தாவனத்திற்கு திரும்பினார். ஜெய் சாய்ராம்!

படங்கள்: கே.ஜி. ஜோசப்

*(மங்கை வாசகர்கள் வாழ்வில் சாயி அன்னை நிகழ்த்திய அற்புதங்கள் 84-85 பக்கங்களில்)*

# ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அற்புதங்கள்

—திருமதி சாந்தி ராமமூர்த்தி

*உங்கள் உள்ளத்து வேதனைகளை ஆற்றிக் கொள்ள சேவை செய்யுங்கள்!*

*சேவை செய்ய வேண்டியது, நீங்கள் சார்ந்த குழுவின் கட்டளை என்பதாலோ*

*அன்றி*

*உயர்ந்த இடங்களில் நீங்கள் செய்யும் சேவை மதிக்கப்படுகிறது என்பதாலோ*

*அன்றி*

*சேவை செய்வது என்பது செல்வத்தால் சிறந்தவர்களின் கடமை என்பதாலோ*

*சேவை செய்யாமல் எனக்கு மன அமைதி கிடைக்கவில்லை என்ற காரணத்தால் செய்யுங்கள். சேவை பெற்றவர்களிடம், அன்பான இரக்கத்தைத் தூண்டும் உள்ளத்து உணர்வாக கிளர்ந்து எழட்டும்!*

**—பாபா**

## சாயி பக்தர்களின் சமூகத் தொண்டு

பகவான் பாபா அவர்கள் தமது அடிக்கல்லை சென்னையில் தான் ஆன்மீக மறுமலர்ச்சிக்காக நட்டார்கள். 3.2.1949 அன்று கிண்டி திருக்கோவில் புனிதமாக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. பக்தர்கள் குழு சுவாமியின் ஆன்மீக அறிவிப்புகளை தமிழகத்தின் நான்கு மூலைகளுக்கும் எடுத்துச் சென்றார்கள். பக்தர்கள் தங்களை பஜனை பாடல் பாடுவதிலும், ஸ்த்ஸங்க காரியங்களிலும், சேவைப் பணிகளிலும் நன்கு ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

''கருணை நிரம்பிய கண்களோடு பார்க்கக் கற்றுக் கொண்டால் சேவை செய்வதற்கான வாய்ப்புகள் கண்ணுக்குப் புலப்படும்'' என்று பாபா அவர்கள் சொல்வார்கள். அதற்கேற்ப, தமிழகத்தில் வாழும் பாபா பக்தர்களுக்கு மிக சேவை செய்யும் வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

சென்னையில் 1967ம் ஆண்டு ஏப்ரல் 20 முதல் 24ம் தேதி வரை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனங்களின் நிர்வாகிகள் முதல் அகில இந்திய மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பகவானின் நேரடி வழி காட்டுதல்களோடு ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனங்களின் சாசன விதிகள், நடைமுறை சட்ட திட்டங்கள் போன்றவை தீட்டப்பட்டு அமுலாக்கம் செய்யப்பட்டது. ஸமிதிகளின் சேவைப்பணிகளில் உதவுவதற்கும் அவற்றை நெறிமுறைப்படுத்தவும், ''சேவா தளம்'' என்ற பிரிவு துவக்கப் பெற்றது. இதுவே பல்வேறு துறைகளில் புதிதாக சாய் இயக்கம் பரவி சேவைப் பணிகளை ஒழுங்காகவும், முறையாகவும் செய்வதறகு ஏதுவாக அமைந்தது.

அதிகார பூர்வமான முதல் ஸமிதி 1967ம் ஆண்டு சென்னையில் அமைக்கப்பட்டது. அதன் நிர்வாக உறுப்பினர்களை பகவானே பக்தர்களில் பலரை சேவாதளத் தொண்டர்களாக நேரடியாக தேர்வு செய்து, தமது தெய்வீக கரங்களால் ஸ்கார்ப் மற்றும் பேட்ஜுகள் தந்து ஆசீர்வதித்து முதன் முதலாக 'சேவா தளப் பிரிவு' துவக்கப்பட்ட பெருமையையும் சென்னைக்கே அளித்தார்.

நிறுவனத்தின் சட்ட திட்டங்கள் கடுமையாக்கப்பட்டன. பணம் வசூலித்தல், மற்றும் பட்டு வாடா தவிர்க்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. உறுப்பினர் சந்தா வசூலிக்க கூடாது என்பதும் அடங்கும். ''உங்கள் கடமைகளை உங்களால் முடிந்த வரையில் சிறப்பாக செய் யுங்கள். உங்களின் எந்த ஒரு நல்ல காரியத் துக்கும் பணக் குறையால் இடையூறு வராது'' என அடிக்கடி அறிவுறுத்தி ஆசி கூறுவார்கள்.

1968ம் ஆண்டு 2வது அகில இந்திய மாநாடும், முதல் அகில உலக மாநாடும், மும்பையில் நடைபெற்றது. அப்போது பாபா 'மகிளா விபாக்' என்ற மகளிர் பிரிவை அமைத்தார். 3வது, 4வது மாநாடுகள் பிரசாந்தி நிலையத்தில் நடைபெற்றன. 5வது அகில இந்திய மாநாடு 1971ம் ஆண்டு சென்னையில் நடைபெற்றது. அப்போது 'பால விகாஸ்' திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

சுவாமிகள், ஒவ்வொரு குழந்தையும் ஒரு மலரைப் போன்றவர்கள். அவர்களுடைய திறமைகள் மலர்ந்து மணம் வீச வேண்டும் என்பதற்காகவே இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. 'விகாசம்' என்பது மலரானது. மலர்ந்து மணம் வீசுகின்ற நிலையைக் குறிக்கின்றது. எனவே ஒவ்வொரு குழந்தையும் முதலில் நல்ல உணவுப் பழக்கங்கள் மற்றும் தேகப் பயிற்சிகள் மூலம் 'தேக விகாஸம்' அடைய வேண்டும். இதன் மூலம் ''மனோவிகாஸம்'' பெற்று பரந்த நோக்கம் கொண்டவர்களாக விளங்க வேண்டும். புத்திக் கூர்மையை சரியான பாதையில் செலுத்தும் புத்தி விகாஸம் பெற வேண்டும். இந்த விரிவு அடைவதன் மூலம் 'பாவ விகாஸம்' எனப்படும் நல்ல தன்மைகள், நற்செயல்கள் நிரம்பிய நிலை பெற்றிட வேண்டும். இவற்றிற்கெல்லாம் இறுதியாக ஆத்ம நிலையை உணரப் பெறும் 'ஆத்ம விகாஸம்' அடையப்பட வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளார்கள் சுவாமி.

தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் சேவாதள தொண்டர்களே குருவாக மாறி பல குழந்தைகளை பயிற்றுவித்துள்ளனர். அவர்களே பெரும்பாலான குழந்தைகளுக்கு அவர்களுடைய படிப்பிற்கு உதவியாக வகுப்புகள் நடத்தி உள்ளனர். சிலருக்கு வேலையும் வாங்கி தரப்பட்டுள்ளது. இதன் மூலம் பலன் பெற்ற பல்வேறு குழந்தைகளே நிறுவனத்தில் குருமார்களாக உரிமையுடன் இணைந்திருக்கிறார்கள்.

பார்வையற்ற மாணவர்களுக்கு அவர்களுக்கு தேவையான எல்லாப்



ஆபட்ஸ்பரியில் 'பாலவிகாஸ்' குழந்தைகளுக்கு பாபா ஆசி வழங்குகிறார்

பாடங்களிலும் 'பிரெய்ல்' புத்தகங்கள் இல்லை. எனவே இந்த சேவை அவர்களுக்கு மிக மிக முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. தொண்டர்கள் வழக்கமான பள்ளி மற்றும் கல்லூரிப் பாட புத்தகங்களை படித்துக் காட்டுவார்கள். பார்வையற்ற மாணவர்கள் அவற்றைக் கேட்டு கேட்டு தங்கள் பிரெய்லி முறையில் குறிப்பு எடுத்துக் கொள்வர். கடந்த பதினைந்து ஆண்டுகளாக இந்த சேவைப் பணி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. பல்லாயிரக்கணக்கான பார்வையற்ற மாணவர்கள் இதனால் பயன் பெற்றுள்ளனர். இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பகவானின், ''சத்யம், சிவம், சுந்தரம்'' என்ற புத்தகத்தை 'பிரெய்லி' மொழியில் மொழி பெயர்த்து உருவாக்கி உள்ளார்கள்.

முதன் முதலாக துவக்கப்பட்ட பணிகளில் ஏழை எளியவர்களுக்கு உணவு வழங்குதலும் ஒன்றாகும். ஏழை எளியவர்களுக்கு உணவு அளிப்பது என்பதை விட எப்படி வழங்கப்படுகிறது என்பதுதான் முக்கியம். ஒவ்வொரு வீட்டுப் பெண்டிரும்தாம் சமைக்கிற அரிசியில் இருந்து ஒரு கைப்பிடி அரிசி எடுத்து சேமித்து வைக்கிறார்கள். பின்னர் இவ்வாறு சேமிக்கப்படும் அரிசியெல்லாம் ஒன்றாக சேர்த்து அவ்வப்போது உணவு அளிக்கும் சேவை செய்யப்படுகிறது. இது ஒவ்வொருவருக்கும் தியாக மனப்பான்மையையும், ஏழை எளியவரைச் தேடிச் சென்று உதவும் பாங்கையும் அளிக்கிறது. பகவான் இதனை 'நாராயண சேவை' என்று பெயரிட்டு உள்ளார்.

முதன் முதலாக செய்யப்பட்ட பணிகளில் மிக முக்கியமான ஒன்று 'பள்ளிக் குழந்தைகள் உடல் நல சோதனை' ஆகும். பொருளாதாரத்தில் நலிந்த ஏழை மக்கள் படிக்கும் மாநகராட்சிப் பள்ளிக்கு ஸமிதியைச் சார்ந்த மருத்துவர்கள் சென்று பரிசோதனை செய்வார்கள். இதன் மூலம் பல்வேறு நோய்கள் முதல் நிலைகளிலேயே அறியப்பட்டு அவைகள் களையப்பட்டன. கண் பரிசோதனை செய்யப்பட்டு தேவைப்பட்டவர்களுக்கு இலவசமாக கண்ணாடிகள் வழங்கப்பட்டன. பிற்பாடு இந்த சேவைப்பணியானது, அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் உடல் ஊனமுற்றோர் விடுதிகள் போன்ற இடங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டது.

1979ம் ஆண்டு சென்னையில் ஆபட்ஸ்பரியில் முதன் முதலாக 20 தம்பதிகளுக்கு இலவசத் திருமணம் செய்து வைக்கப்பட்டது. போத்தனூர், திருப்பூர், மேட்டுப் பாளையம், கோயம்புத்தூர் போன்ற இடங்களிலும் இலவசத் திருமணங்கள் நடத்தப்பட்டன. பகவான் பாபாவின் 70வது பிறந்த தின விழாவை ஒட்டி 1995 ஜனவரி மாதம் 70 இலவச திருமணங்கள் 'சுந்தரம்' திருக்கோயிலில் செய்து வைக்கப்பட்டன. மணமக்களுக்கான புதுத் துணிகள், தங்கத் தாலி, பாத்திரங்கள் மற்றும் சீர் வரிசைகள் ஒவ்வொரு மணமக்களுக்கும் வழங்கப்பட்டன. ஒரு வாரம் சென்ற பிறகு அத்தனை புது தம்பதியரும் பிரசாந்தி நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களுக்கு சுவாமி பாத நமஸ்காரம் தந்து அருளியதோடு தம் தெய்வீக திருக்கரங்களாலேயே புது வேட்டியும், சேலையையும் கொடுத்து ஆசீர்வதித்தார்கள். ஒரு சில ஸமிதியினர் தமது ஆண்டு விழாவின் போது இலவச உப நயனங்கள் செய்து வைத்துள்ளனர்.

பக்தர்கள் பஜனை பாடிக் கொண்டே ஊதுவத்தி தயாரிப்பில் ஈடுபடுகிறார்கள். அந்த ஊதுவத்திகள் பஜனை நேரங்களில் சகாய விலையில் பக்தர்களுக்கு விற்கப்படுகின்றன. இவற்றின் மூலம் வரும் வருமானம் மருத்துவப் பணிகளுக்கு செலவிடப்படுகின்றது. இது தமிழகம் எங்கும் பல்வேறு இடங்களில் செயல்பட்டு வருகின்றது. ஒருமுறை சுவாமி சென்னைக்கு வந்த போது கற்பூரவில்லை தயாரிக்கும் பகுதி ஒன்றை துவங்கி வைத்து ஆசீர்வாதம் செய்தார்.

நோய் வாய்ப்பட்டதாலும், விபத்துக்களினாலும் தங்களின் கால்களின் வலுவினை இழந்து தவிப்பவர்களுக்கு இலவசமாக ஊன்று கோல்கள் வழங்கப்படுகின்றன. 'ஊன்று கோல்' என்று அழைப்பதில் இருக்கும் ஏளன மனப்பான்மையை போக்குவதற்காக அவைகள் 'ஸாய் தாங்கிகள்' என்று பெயரிடப்பட்டுள்ளன. மேலும் கண் பார்வை இழந்தவர்களுக்கு மணியுடன் இணைந்த நடைக் குச்சிகள், காது கேளாதவர்களுக்கு செவித்திறன் ஊக்குவிக்கும் கருவிகள், மற்றும் போலியோ, பக்கவாதம் மற்றும் கால்கள் எடுக்கப்பட்டவர்களுக்கு கைகளால் செலுத்தும் மூன்று சக்கர சைக்கிள்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

சாலைகள் அமைக்கும் பணியானது, பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வரும் நேரங்களில் ஒரு கூட்டு சமூக சேவைப் பணியாக ஒரே நாளில் செய்து முடிக்கப்படுகிறது. போத்தனூருக்கு அருகே உள்ள தநுகண்டபுரம் என்ற கிராமத்தில் இறந்தவர்களை இடு காட்டுக்கு எடுத்துச் செல்ல உதவியாக ரெயில்வே பாலத்திற்கு அடியே ஒரு சாலை அமைக்கப்பட்டுள்ளது. சென்னை - வேளாங் நகர், திருப்பூர், இராஜ பாளையம் மற்றும் நாகர்கோயில் போன்ற இடங்களில் இணைப்பு சாலைகள் போடப்பட்டுள்ளன. சென்னை மயிலாப்பூரில் புதர்களையும், கழிவுப் பொருட்களையும் நிறுவனத்தைச் சார்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட



ஆபட்ஸ்பரியில் கண் பரிசோதனை முகாம்

தொண்டர்கள் நீக்கி சுத்தம் செய்து திருப்பணி செய்தார்கள். அவர்களுக்கு ரப்பர் கையுறைகள் கூட வழங்கப்பட்டன.

அவ்வப்போது தத்து எடுக்கப்பட்டுள்ள கிராமங்கள், குடிசை வாழ் பகுதிகள் போன்ற இடங்களில் அந்தந்த இடங்களில் வசிப்பவர்களின் ஒத்துழைப் போடும், உதவியோடும் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிறுவனத்தால் முதன் முதலில் தத்தெடுக்கப்பட்ட 'சாய் நகர்' குடிசைப் பகுதியில் வாழ்பவர்கள் பெரும்பாலும் சலவைத் தொழில் செய்பவர்கள். துணிகளை வெளுக்கும் இடம் சேறும் சகதியுமாக இருந்தது. அந்த இடம் முழுமையாக சுத்தம் செய்யப்பட்டு நல்ல சிமெண்ட் தளம் அமைத்து அதன் மேல் துணி துவைக்கும் கல்கள் வரிசை மற்றும் துணிகள் உலர்த்தும் பகுதி போன்றவை அமைத்துத் தரப்பட்டது.

நிறுவன மகளிர் உறுப்பினர்கள் அடிக்கடி அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் போன்ற இடங்களுக்குச் சென்று அவர்களுக்கு வித விதமான உணவு மற்றும் தின்பண்டங்கள் செய்து கொள்ள உதவுவது, நல்ல கதைகள் சொல்வது, பாலவிகாஸ் குழந்தைகள் நடிக்க குறு நாடகங்கள் நடத்துவது போன்ற பணிகள் செய்து அவர்கள் சந்தோஷமான மன நிலையைப் பெற உதவுகிறார்கள்.

பல தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் கால்நடை நல வாழ்விற்கான முகாம்கள் நடத்தப்பட்டு அவற்றிற்கு நோய்த் தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. சமீபத்தில் மத்திய பகுதியைச் சார்ந்த பூலங்குடி கிராமத்திலும், உளுந்தூர் பேட்டையிலும் நடைபெற்ற முகாம்களில் சுமார் 1500க்கும் மேற்பட்ட கால்நடைகள் பயன் பெற்றுள்ளன.

நிறுவனத்தைச் சார்ந்த தொண்டர்கள் ஸ்ரீரங்கம் கோவில் திருவிழா, நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவில், சின்னமலை தேவாலயம் மற்றும் பல கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களின் போது கூட்ட நெரிசலை ஒழுங்குபடுத்தும் பணியை மேற்கொண்டும் நீர் மோர் அளிக்கும் பந்தல்களையும் நிறுவியும் தொண்டாற்றி வருகிறார்கள்.

மாணவர் சமூகத்தின் நலனுக்காக சென்னையில் மேற்படிப்பு மற்றும் தொழில் முனைவு திட்ட வழி காட்டுதல் மற்றும் ஆலோசனைகள் தரும் கண்காட்சி ஒன்று சென்னையில் நடத்தப்பட்டது.

மருத்துவ சேவைகளிலேயே கண் சிகிச்சை முகாம்கள் முதலிடம் வகிக்கின்றது. கடந்த இருபது ஆண்டுகளில் சுமார் 1 1/2 இலட்சம் கண் நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டு சுமார் 20,000 நபர்களுக்கு கண் புரை நீங்க அறுவை சிகிச்சை செய்யப்பட்டு உள்ளது.

ஒருமுறை, மனிதப் பண்புகள் வளர் கல்வி பற்றிய கருத்தரங்கு ஒன்று சென்னையில் நடைபெற்ற போது பங்கு கொண்டு தலைமை உரையாற்றிய பகவான் அவர்கள் - கல்வியானது முழுவதும் இலவசமாகவும், அறவே அரசியல் கலப்படம் இன்றியும் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். இதைத் தொடர்ந்து தன் வாக்கை நிலை நாட்டும் வண்ணமாக ஆரம்பப் பள்ளிக் கல்வி முதல், உயர் மட்டக் கல்வி வரை அனைத்தும் இலவசமாக வழங்கிடும் ஸ்ரீ சத்ய சாய் உயர் கல்வி நிறுவனங்கள் எனப்படும் பல்கலைக் கழகத்தை தோற்றுவித்து அருளினார்கள்.

இப்படி வழங்கப்படுகின்ற அன்பு நிறைந்த சேவையால், சேவையைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு மட்டும் அல்லாமல், இந்தச் சேவையை செய்கின்றவர்களுக்கும், தெய்வீகப் பாதையில் நடக்கும் திறனும், பகவான் பாபா அவர்களின் தெய்வீக அருளும் மேன் மேலும் அளவின்றி கிடைக்கின்றது.

(அற்புதங்கள் தொடரும்)

படங்கள் உதவி: எஸ். விஜயன்

*அன்பார்ந்த சாயி அடியார்களே,*

இந்தத் தலைமுறையினரைச் சேர்ந்த நாம் பெரும் பாக்கியசாலிகள். மனித உடலிலே ஒரு தெய்வம், அவதாரம்எடுத்து வாழும் காலத்திலே, நாமும்வாழக்கூடிய அரிய வாய்ப்பைப்பெற்றிருக்கிறோம்.

பகவான் தமது 21 ஆவது வயதில் அவரது தமையன் சேஷ ராஜுவுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:

*''எனக்கு ஒரு வேலை இருக்கிறது; மனித குலம் முழுவதையும் பேணுவதும் அவர்களது வாழ்க்கை முழுவதும் ஆனந்தம் நிறைந்து காணுமாறு நிச்சயப்படுத்துவதுமே. எனக்கு ஒரு பிரதிக்ஞை உண்டு, நேர் பாதையில் இருந்து விலகிச் செல்லும் எல்லோரையும் மீளவும் நல்வழிக்கு இட்டுச் செல்வதும், பாதுகாப்பதுமே. என்னிடம் பற்றுக் கொண்டவர்களை நான் ஒரு போதும் கைவிட மாட்டேன்.''*

ஆம், பகவான் எம்மை ஒரு போதும் கைவிட மாட்டார். அவரிடம் பற்றுக் கொள்வதற்குச் சிறந்த வழி, அவர் போதனைகளின்படி வாழ்க்கை நடத்துவதே ஆகும்; ஏனெனில் அவை அமுத வாக்குகள், அருள் மொழிகள், கடவுளின் கனிவுக் குரல்கள்; பகவானின் அன்பையும் அருளையும் நிரம்பப் பெற்ற அமரர் ஸ்ரீ கஸ்தூரி கூறுவார்:

'பாபாவின் உரையாடல் ஒவ்வொன்றும் எமது கண்களைத்


திறப்பன; வாழ்க்கையில் ஒழுங்கு காட்டுவன;

நினைவூட்டுவன; ஞாபக சக்தியைக் கூர்மை

யாக்குவன வாழ்க்கையைக் காப்பாற்றுவன' என்று.

தமது நான்காவது வயதிலே புட்டபர்த்தியின் பெரியவர்களால் குருவாகவும், பத்து வயதிலே பரம ஞானியாகவும் அனைவராலும் போற்றப் பட்ட பாபா, தமது 14ஆவது வயதிலே (1940இல்)





*''நான் சத்தியத்தைப் போதிக்க வந்த சத்திய போதகர் என்றும்; மனித குலத்திற்கு எங்கும் ஆத்மீக ஆனந்தம் அளிக்கவே மனிதனாக அவதரித்தேன்''* என்றும் கூறியுள்ளார்.

சாயி அடியார்களே!

தனிப்பட்ட முறையிலும், சாய் அமைப்பின் வழி முறைகளில் இயங்கும் வேளையிலும், நாம் பகவானுடன் பலவாறு பக்தி கொண்டுள்ளோம். நாமஸ்மரணம், தியானம், வீடுகளில் வழிபாடு, கூட்டு பஜனை, நகர சங்கீர்த்தனம், நாராயண சேவை இப்படியாகப்பல வழிகளில் பகவானைத் தொழுகின்றோம். தனிமையிலும் சரி, குடும்பத்தினருடன் அல்லது அடியார்களுடனும் சரி, சில நிமிடங்கள் பகவானின் அறிவுரைகளை ஆழ்ந்து அனுபவிப்பது இந்த வழிபாடுகளில் தலை சிறந்தது என்பது பெரியோர்களின் கருத்தாகும். அப்படி அநுபவிப்பதன் மூலம் பாபாவின் புனித அவதாரத்துடன் எமது வாழ்வையும் பிணைத்துச் **சாய் வாழ்வு** என்ற தூய்மையான வாழ்வை வாழ முடியும்.

மனித வாழ்வு பற்றிப் பகவான் பின்வருமாறு கூறுகிறார்:

*'பரிணாம வளர்ச்சியில், சந்தேகமின்றி மனித உயிர்தான் அதி உயர்ந்தது ஆகும். இந்த வாழ்விற்கு அர்த்தம் தருவதற்கு தூய்மையான புனிதமான ஆத்மீக சாதனை அவசியமாகும். இத்தகைய வாழ்விற்கு ஒழுக்கம் மிகவும் முக்கியமாகும். ஒழுக்கம் வாழ்விற்கு அழியாத் தன்மை தருகிறது. அது மரணமான பின்பும் நிலைத்து நிற்பது. சிலர் கூறுகின்றார்கள் கல்வி அறிவு தான் சக்தி தருவது என்று; இது சரியல்ல. ஒழுக்கமே ஒருவருக்கு சக்தி தருவது.*

நல்ல ஒழுக்கம் இல்லாவிடில் அறிவைக் கூடப் பெற முடியாது. ஆகவே ஒருவர் துன்மார்க்கத்தின் அடையாளமே இல்லாத குற்றமற்ற ஒழுக்கத்தைப் பேண வேண்டும்'

புத்தரும், யேசுவும், சங்கராச்சாரியாரும், விவேகானந்தரும், கடவுளின் அடியார்களான பல முனிவர்களும், துறவிகளும் இப்போதும் மனிதனால் பொன்னெனப் போற்றப்படுகிறார்கள் என்று பாபா உதாரணம் காட்டுகிறார்.

*''அவர்களின் ஒழுக்கம் தான் அவர்களின் போற்று*
*தற்குரிய குணம். அதனால்தான் அவர்களை*
*மறக்க முடியாது''* என்று பாபா கூறுகிறார்.

நல்ல செயல்களைச் செய்வது நல்ல வாழ்வு வாழ்வது. இவை பற்றிப் பகவான் கூறுவது பின்வருமாறு:

*'பலர் நல்ல செயல்களைச் செய்வதன் மூலம் நல்ல*
*வாழ்வு வாழ எண்ணுகிறார்கள்; ஆனால் அப்படி*
*நான் எண்ணவில்லை. நல்ல செயல்கள் மூலம்*
*நல்லவர்களாக வர முடியாது. நீங்கள் நல்லவர்களாக*
*இருந்தால் தான் உங்கள் செயலும் பேச்சும்*
*நல்லவையாக இருக்க முடியும். ஆகவே, முதலில்*
*நல்லவர்களாக இருக்க முயலுங்கள்'*

இந்த மாசு இல்லாத ஒழுக்க வாழ்விற்கு அன்பு, பொறுமை, இரக்கம், உறுதியான மனம், தர்ம சிந்தனை ஆகியன அடிப்படையாவன. இவற்றை நாம் போற்ற வேண்டும். பகவான் பாபாவின் போதனைகள் அன்பின் அடிப்படையில், சத்தியம், தர்மம் ஆகிய குண இயல்புகளுடன் சாந்தி அடையும் வாழ்வைக் காட்டுவனவாக அமையும். அவற்றைத் தெரிந்திருப்பது, ஆழ்ந்து அநுபவிப்பது, அவ்வழிச் சாதனையில் ஈடுபடுவது சாய் வாழ்விற்கு அவசியமாகிறது.

–ஜெய் சாய் ராம்

**(பேராசிரியர் 'வைத்திய கலாநிதி' நந்தி அவர்கள் யாழ்ப்பாணம் நல்லூர் சத்திய சாயி பஜனை நிலையத்தில் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி)**

# ஜோதிட ஆலோசனை



**ஆர்.கே. திலக், சிறுமுகை.**

*சொந்தத் தொழில் செய்பவர்/கூட்டுத் தொழில் செய்பவர் இவர்களை ஜாதகரீதியாக எப்படி வகை காண்பது?*

ஒருவரது ஜாதகத்தில், லத்னாதிபதி வலிமை பெற்று, 5-ஆமிடம் எனும் புத்தி ஸ்தானம், 9-ஆமிடம் எனும் பாக்கியஸ்தானம் 10-ஆமிடம் எனும் ஜீவன ஸ்தானம் நல்ல கிரக அமைப்பு, பார்வை இவைகளைப் பெற்றும், லக்னாதிபதியும், 10-ஆமிட அதிபதியும் இணைந்து காணப் படும், மேலும் 10-வீட்டு அதிபதி, 1-4-7-10 (கேந்திரம்) 1-5-9 (திரி கோணம்) போன்றவற்றில் அமர்ந்தோ, அல்லது 11ம்மிடம் எனும் லாபஸ்தானத்தில் அமர்ந்தால் சொந்தத் தொழில் செய்து அபரிமிதமான செல்வம் சேர்ப்பவர் என்று அறியலாம். லக்னாதிபதியை விட, 7-ம் வீட்டு அதிபதி வலுப்பெற்று, ஜீவனஸ்தானம், ஜீவனஸ்தானாதிபதியைப் பார்வை செய்தால் கூட்டுத் தொழில் சிறக்கும். லக்னாதிபதியுடன், 7-ம் வீட்டு அதிபதி ஒன்று கூடி ஜீவனம் எனும் 10-ம் வீட்டில் அமர்ந்து, சுபருடைய பார்வை பெற்றால் கூட்டுத் தொழில் சிறப்படையும், 11-ஆமிட அதிபதியும் சாதகமாக அமைந்துவிட்டால் ''சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல்'' யோகம் அடைவர்.

**ஈ. தாமரை, செம்பட்டு.**

*கடன் தொல்லை, எதிரிகள் தொல்லை, நோய் நொடி கவலை, போன்றவற்றை ஜாதகரீதியாக அறிந்து கொள்வது எப்படி?*

ஒருவர் ஜாதகத்தில், ருண-ரோக-சத்ரு ஸ்தானம் எனும் 6-ம் வீட்டை வைத்தே இவற்றை அறிந்து கொள்வர், ஜாதகத்தில் லக்னாதிபதி வலுத்திருக்க வேண்டும். ஆனால் 6-ம் வீட்டு அதிபதி வலுத்திருக்கக் கூடாது. ராகு, கேது எனும் சர்ப்பகிரகங்கள் 4-5-6 எனும் இடங்களில் அமர்ந்து காணப்பட்டால், இருதய சம்பந்தமான வியாதி, வயிறு சம்பந்தப்பட்ட வியாதி போன்றவை ஏற்பட்டு வாழ்நாளெல்லாம் மருத் துவ செலவு செய்ய வேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்படு வார்கள்.

**எம். கருணாகரன், ஈரோடு.**

*7-ம் பாவாதிபதி 12-ல் மறைவுபெற்று, 7-ல் சனி+செவ் சேர்க்கை ஒரு ஆண் ஜாதகத்தில் இருந்தால், களத்திர தோஷமா?*

நிச்சயமாக களத்திர தோஷமே. குரு பார்வையில்லை என்றால், சில வேளைகளில் திருமணமும் நடக்க சந்தர்ப்பமில்லை. மேற்கூறியபடி அமைப்பு ஆணுக்கு ஆயினும் சரி, பெண்ணுக்கு ஆனாலும் சரி, சத்களத் திரம் அமைய வாய்ப்பில்லை. முன்கோபியாகவும், குணமற்றவளா கவும், சோம்பலுடையவளாகவும், சுயசிந்தனை அற்றவளான பெண்ணோ, ஆணோதான் களத்திரமாக அமைய வாய்ப்பு உள்ளது.

**எஸ். ஜெயகுமார், வாணியம்பாடி.**

*ஒருவருக்கு வெளிநாடு செல்லும் யோகம் எப்போது ஏற்படும்?*

ஒருவருடைய ஜாதகத்தில், சந்திரன் 1-4-7-10 (அல்) 1-5-9 எனும் திரிகோணத்திலோ அமைய வேண்டும். லக்னாதிபதிக்கும், சந்திரனுக் கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் ராகு சுபரின் பார்வை பெற்று சர ராசியில் அமர்ந்திருக்க வேண்டும். சுக்கிரன் ஆட்சி, உச்சம் பெற்று சுபர் பார்வை பெற வேண்டும். மேலும் சந்திர தசை/ சந்திர புக்திகளில் வெளிநாடு செல்லும் யோகம் அதிகமாக ஏற்படும்.

**ஜீ. லோகேஸ்வரி, சென்னை - 40.**

*லக்னம் - கன்னி; ராசி - மேஷம் 4-ல் சனி, 5-ல் ராகு, 8-ல் சந்திரன், 9-ல் செவ், 11-ல் குரு+கேது, 12-ல் சுக்+சூரி+புதன் இந்த ஜாதகத்தை யுடைய குழந்தை, தந்தையை இழந்தது ஏன்?*

நிச்சயமாக இந்த குழந்தை தந்தையற்ற குழந்தையே. பிதாகாரகன் சூரியன் விரையத்தில் (12ல்), பிதுர்ஸ்தானாதிபதியும் 12-ல் மறைவு, பிதுர்ஸ்தானாதிபதியை, திருதிய/ அஷ்டமாதிபதி செவ்வாய் பார்வை. மேலும் பிதுர் ஸ்தானத்தில் அஷ்டமாதிபதி, சூரியன், செவ்வாய் பரஸ் பர பார்வை, கர்மஸ்தானத்தை புத்திரஸ்தானபதிபதி சனி பார்வை. கரும காரியம் செய்யக் கூடிய அமைப்புடைய ஜாதகம் ஆகும். இவ் வகையான காரணங்களினாலே, குழந்தை சிறுவயதிலேயே தன் தந்தையை இழக்க நேரிட்டது

**வி. தாரிணி, கோவை.**

*கன்னி - லக்கினம், ரிஷப - ராசி, 2-ல் புத, லக்கினத்தில் - சூரி + செவ் + சுக் 3-ல் ராகு, 6-ல் குரு, 9-ல் சந் + கேது, 10-ல் சனி என்னுடைய இந்த ஜாதகத்தில் காதல் திருமணம் நிறைவேற வாய்ப்புள்ளதா?*

உங்கள் காதல் திருமணம் நிறைவேற நூற்றுக்கு நூறு வாய்ப்பு உள்ளது. களத்திர ஸ்தானாதிபதி மறைந்துவிட்டார். களத்திர ஸ்தானத்தை சனி பார்வை செய்வதால், உங்களது பிராமண குலத்தில் அல்லாது வேறு குல ஆடவனே வாழ்க்கைத் துணையாக அமைவார். களத்திர ஸ்தானத்தை விரையாதிபதி, அஷ்டமாதிபதி, சனி இவர்கள் பார்வை செய்வது உத்தமமான பலனில்லை. முருகப் பெருமானையும், அம்பாளையும் முறையாக செவ்வாய், வெள்ளிகிழமைகளில் கந்தசஷ்டி கவசம், ஸ்ரீரங்கநாயகி பஞ்சரத்ன மாலை படித்து வருவது உத்தமம்.

**கே. வாசுதேவன், மதுரை.**

*சிம்ம லக்கின ஜாதகியுடைய் ஜாதகத்தில் லக்னத்தில் செவ்+சுக் சேர்க்கை தீய பலனை உருவாக்குமா? மேலும் லக்கினத்துக்கு 5-ல் சனி அமர்ந்து 11-ஆமிடத்தில் உள்ள சூரியனை பரஸ்பர பார்வை செய்வது கணவரிடமிருந்து ஜாதகியை பிரித்து விடுமா?*

பொதுவாகவே சிம்ம லக்கினத்திற்கு செவ்வாய் யோககாரகன் 4-9க்குடையவர் சுக்கிரன் 3-10 க்குடையவர். எனவே 9-10க்குடைய செவ் + சுக் சேர்க்கை தர்மகர்மாதிபதி யோகத்தை ஏற்படுத்தும் கெடுதலை செய்யாது. ஆனால் கடகம்/ சிம்மம் இந்த இரு லக்கின ஜாதகர்/ ஜாதகி யின் இல்வாழ்க்கை சோதனைக்குட்பட்டதே! ஏனெனில் களத்திரபாவம் சனியின் வீடாக அமைவதே! மேலும் 5-ல் உள்ள சனி, 3-ம் பார்வையாக களஸ்திர ஸ்தானம் எனும் 7-மிடத்தை பார்வை செய்வது, லாபஸ்தானம் எனும் 11-மிடத்தை பார்ப்பது, 2-மிடம் எனும் தனஸ்தானத்தைப் பார்வை செய்வது விசேஷமல்ல. கெடுபலனை ஏற்படுத்தி மன நிம்மதி யைக் குலைத்து இல்லற ஒற்றுமையை பாதிக்கும்.

**மாசிலாமணி, புதுவண்ணை.**

*தலைசிறந்த அரசியல்வாதியாக பிரகாசிக்க ஜாதக ரீதியாக என்னென்ன கிரக அமைப்புகள் தேவை?*

சூரியன் ஆத்மகாரகன். அரசு கிரகம். ஒரு ஜாதகத்தில் சூரியன் நீச மடைய கூடாது. ஒரு அரசியல்வாதி துணிவுடன் செயல்பட செவ்வாய் உச்சம் பெற்று இருக்க வேண்டும். மக்களின் தொடர்பைப் பெற சனி ஆட்சி, உச்சமாக இருக்க வேண்டும். மேலும் புத்திசாலித்தனத்துடன் கூடிய பேச்சிற்கு புதன் பலம் பெற்றுத் திகழவேண்டும். பொது மக்களிடையே கவர்ச்சியைப் பெறுவதற்கு சுக்கிரபலம் வேண்டும். மேலாக லக்னாதிபதி வலிமைபெற்று 5-9-10-ம் வீட்டதிபதிகள் மறையாமல், ஒன்றுக்கொன்று சிறப்புடன் அமைந்து இருப்பது, பிரசித்தி பெற்ற அரசியல்வாதியாகத் திகழ முடியும்.

**எம். செல்வி கணேஷ், உடுமலைப் பேட்டை.**

*ஒரு ஜாதகத்தில் லக்னத்திலிருந்து 8-ம் வீட்டில் சனி கிரக அமைப்பைப் பற்றி விளக்கவும்...*

ஒரு ஜாதகத்தில் எட்டாமிடம் என்பது ஆண்களுக்கு ஆயுள் ஸ்தான மாகவும், பெண்களுக்கு மாங்கல்ய ஸ்தானமாகவும் எடுத்தாளப்படு கிறது. பொதுவாக ''காரகோ பாவநாஸ்தி'' எனும் வாக்கு சனிக்கு மட்டும் அடிபடுகிறது. ஏனெனில் 8-ம் பாவத்தில் சனி ஆயுள்காரகன் உள்ளதால் நீண்ட ஆயுள். ஆனால் 8-ஆமிட சனி, தனது விசேஷ பார்வையாகிய 4-7-8 எனும் இவைகளால், 11-ஆமிடம் எனும் லாப ஸ்தானத்தையும், 2-ஆமிடம் எனும் தனஸ்தானத்தையும், 5-ஆமிடம் எனும் புத்திரர், பூர்வபுண்ய ஸ்தானத்தையும் பார்ப்பதால், ஜாதகரது தொழில், லாபம், புத்திரபேறு இவற்றில் அனுகூலமற்ற நிலைகளையே ஏற்படுத்தும். எனவே 8-ல் சனி உத்தமமான அமைப்பில்லை.

**டி.எஸ். பகத்சிங், மதுரை.**

*திரை உலகில் தாரகையாகத் திகழ ஒருவருடைய ஜாதகத்தில் அடிப்படையாக கிரகநிலை எப்படி அமையவேண்டும்?*

லக்னாதிபதி வலிமை பெற்றுத் திகழவேண்டும். கலைக்குரிய கிரக மர்கிய சுக்கிரன் உச்சம் பெற்று, தொழில் ஸ்தானத்தைப் பார்வை செய்ய வேண்டும். அல்லது தொழில் ஸ்தானத்தில் அமரவேண்டும். (அல்) தொழில் ஸ்தான அதிபதியை பார்வை செய்வதும் உத்தமமான பலனைத் தரும். நவாம்சத்தில் சுக்ரன் வர்க்கோத்தம் பெற்று, உச்சம் பெறுவதும் ஜாதகருக்கு ரசிகர்களிடையே கவர்ச்சி ஏற்படுத்தி நடிகை/நடிகர் என்ற அடிப்படை அந்தஸ்தையும் வழங்குகிறது. மேலும் சனி - புதன் போன்ற கிரகங்கள் 1-5-9 ஆகிய வீடுகளில் அமர்வது, மேலும் பெயர் வாங்கக் கூடிய வலிமையை ஏற்படுத்தும்.

*ஜோதிடர் திருமதி ஈ.ரமணி எம்.ஏ., என் 63. எம்.டி.எச் ரோடு, வில்லிவாக்கம், சென்னை - 49. தொலைபேசி :6265924.*

***தொகுப்பு: பாபநாசம் குறள் பித்தன்***

# அக்காவை சரஸ்வதியாக நினைத்தார்கள்



சமீபத்தில் மியூசிக் அகாடமி மினி ஹாலில் சங்கீத கலாநிதி டாக்டர் எம்.எல். வசந்த குமாரி 'ஆர்ட்ஸ் அண்ட் கல்ச்சுரல் போரம் எக்ஸ்பொஷிசன் ஆன் எம்.எல்.வி' என்ற நிகழ்ச்சியை ஆக்கபூர்வமாக நடத்தியது.

நிகழ்ச்சியில் இடம் பெற்றவர்கள்: டாக்டர் எம்.எல்.வியின் பிரதான சிஷ்யைகள் டி.எம். பிரபாவதி, சாருமதி ராமச்சந்திரன், மற்றும் எம்.எல்.வியிடம் சில காலம் இசை பயின்ற வரும், ஜி.என்.பியின் பிரதான சீடருமான திருச்சூர் ராமச்சந்திரன்

எம்.எல்.வியின் இசை ஞானத்தைப் பற்றிப் பேசும் போதெல்லாம் தேவையான இடங்களில் அவரது இசை நாடாக்களையும் ஒலிக்க விட்டது நிகழ்ச்சிக்கு மேலும் மெருகு சேர்த்தது.

**பிரபாவதி:** அக்கா, கல்யாண வசந்தத்தில், கநுல தாகநி என்ற கீர்த்தனையை, எல்லோரும் பாடுவதைப் போல் இல்லாமல் அதாவது, அனுபல்லவியில் சகரிகாமதநிச பிரயோகத்துடன் பாடுவது வழக்கம். மியூசிக் அகாடெமி கச்சேரியில் கூட அவர் இப்படிப் பாடினார்.

**சாரு:** அக்காவிற்கு எந்த இடத்திலும் நல்ல பாடாந்திரம் இருந்தாலும் அதை கற்றுக் கொண்டு, மேலும் மெருகூட்டி புதிது போல் அதைப் பாடி புகழைத் தட்டிச் செல்வார்.

**பிரபாவதி:** ஒரு சின்னக் குழந்தையிடம் இருந்து வந்த கீர்த்தனையாக இருந்தாலும், அதை உடனே போய் கற்றுக் கொண்டு பாடுவார்.

**சாருமதி:** ரிஷபப்பிரியா ராக ஆலாபனையை அக்கா மிகவும் விஸ்தாரமாகப் பாடுவார். நிறைய ராகங்களை இப்படிப் பாடுவது அவர் வழக்கம். (ஆடியோ: ரிஷபப் பிரியா ராக ஆலாபனை)

**பிரபாவதி:** வாய்ஸ் கல்ச்சர் - பேஸ் நன்றாக பேசினால்தான் தாரஸ்தாயி ,பேசும் என்பார். எந்த பெரிய அபூர்வ ராகத்தையும் மணிக்கணக்காகப் பாடும் திறமை அக்காவிற்கு உண்டு. அதே போல், அதற்கு எந்தவித ஒத்திகையும் பார்த்ததில்லை. ஏன் சிந்திக்கக் கூட மாட்டார். எனக்கு பயமாகக் கூட இருக்கும், வியப்பாகவும் இருக்கும், மியூசிக் அகாடெமியில் ஒருமுறை நட பைரவி பல்லவி பாட இருந்ததைக் கூட பிற்பகலில் சாப்பிட்ட பின். அவர் ஓய்வெடுத்துக் கொண்ட குறைந்த நேர அவகாசத்தில் நினைத்துப் பார்த்தார்.

**ராமச்சந்திரன்:** ரெகார்டிங் சமயத்தில் கூட ஒத்திகை செய்து பாடவில்லை அவர். குருவந்தனா கேசட்டிற்காக, முதன் முதலில், சிவசக்தி ராகத்தைக் கூட ரெகார்டிங் செய்த போது, ரிஹர்சல் எதுவும் இல்லாமல் அங்கேயே பாடினார். அப்படி ஒரு ராக ஆலாபனையை இனி எப்போதுமே கேட்க முடியாது. அவ்வளவு அருமையாக அன்று பாடினார்.

**சாருமதி:** அதுதான் எம்.எல்.வி அக்காவின் மனோதர்மம். கச்சேரிக்கு தயார் செய்து பாடுவதால் என்ன பிரயோஜனம்?

எவ்வளவு சின்ன ராகமாக இருந்தாலும் கேள்வி ஞானத்தால் அதை விஸ்தாரமாகப் பாட அவரால் முடிந்தது

(ஆடியோ: மோகன ராக ஆலாபனை).

**பிரபாவதி:** மகாராஜபுரம் விஸ்வ நாதய்யர் பாடுவது போன்று பாடிய மோகன ஆலாபனை இது. அவருடைய பாட்டு அக்காவிற்கு மிகவும் பிடிக்கும். இது மாத்திரம் இல்லாமல் அக்கா வீட்டிற்கு பெரிய வித்வான்கள் அனைவருமே வருவார்கள். ஜி.என். சார், மகாராஜபுரம் விஸ்வ நாதய்யர், ஆலத்தூர் சகோதரர்கள் - இப்படி எல்லோருமே வருவார்கள். ஜி.என். சாரைக் கூட அண்ணா என்றுதான் கூப்பிடுவார். அவரிடம் ''அண்ணா தோடி பாடுங்களேன் இவர்கள் எல்லோரும் கேட்கட்டுமே'' என்று ஒரு தடவை கூறினார். ஜி.என்.சார் ஷட்ஜமத்தில் இருந்து பஞ்சமம் வரை 20 நிமிடங்கள் அன்று பாடினார்.

**ராமச்சந்திரன்:** அப்போதெல்லாம் பெரிய வித்வான்கள் எல்லோரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டு, சங்கீத விஷயங்களைப் பேசுவார்கள். இப்போது நிலைமையே வேறு.

**பிரபாவதி:** அக்காவிடம் நான் சேர்ந்தபோது, நல்ல பீக் பீரியட் அவருக்கு, அக்காவுடைய அப்பா, ஐயாசாமி அய்யரை நான் பெரிய ஐயா என்றும், அக்காவின் கணவர் கிருஷ்ண மூர்த்தியை சின்ன ஐயா என்றும் கூப்பிடுவேன். அப்போது நான் 'ராஜேஸ்வரி' அபிராமபுரம் சாந்தா எல்லோருமே போவோம். ஒரு ராகத்தை எடுத்துக் கொண்டு அதை நான்கு ஸ்வரங்களுக்கு இடையே நிரவி பாடச் சொல்வார் பெரிய ஐயா, (பாடிக் காட்டினார் பிரபாவதி)

அப்போ, அங்கு அக்கா வருவார், அக்காவும் அவரை ஐயா என்றே கூப்பிடுவார். ஐயா நினைப்பது போல், நான் பாடவில்லை நீங்களாவது பாடுங்கள் என்பார் அக்கா.

**சாருமதி:** அதே போன்று அக்காவை அவர் பாடச் சொல்லும் லிஸ்ட் படி அக்கா பாடவில்லை. ஏன் என்றால் அவர் சொல்வதைக் கேட்டால், தன் மனோதர்மத்தை உபயோகித்து பாட முடியாது. இது தர்மசங்கடமானது.

**பிரபாவதி:** அக்கா, பெரியவர்களுக்கு நிறைய மரியாதை கொடுப்பார். பெங்களூரில் ஒரு கச்சேரியில், ஷண்முகப்ரியா ராகத்தை மிக விஸ்தாரமாக, நிறைய நேரம் பாடினார். அப்போது ஐயாகிட்ட வந்து,போதும் நிறுத்து - மேல போ - என்று மெதுவாக சொல்லி விட்டுப் போய்விட்டார். அக்காவும், குருஸ்தானத்திற்கு மரியாதை கொடுத்து, உடனே பாட்டை எடுத்தார்.

**சாருமதி:** வாதி, சம்வாதி ஸ்வர பொருத்தங்களை அமைத்து பாடுவார். மந்த்ரத்தில் இருந்து ஷட்ஜமம் வரை ஈஸியாக பாட முடியும் அவருக்கு. சர்வலகு ஸ்வரம் - ஒரு ஆவர்தம் - அரை ஆவர்தம் - அய்யங்கார் டைப்பில் போடுவார்.

**ராமச்சந்திரன்:** ஜி.என். சார் டைப்பில் ராக ஆலாபனையைப் பாடுவார். அதுவும் ஆலாபனையை நான்கு ஸ்டேஜில் பாடுவார். இப்போ யாருமே அப்படிப் பாடுவதில்லை. ரொம்ப சிரமம் அது. ஒரு முறை வெங்கடகிரி பாலஸில் கச்சேரி. அதில் வெங்கடகிரி ராஜா ரேவதியில் ராகம் - தானம் - பல்லவி பாடச் சொன்னார். உடனே, அதை விஸ்தாரமாகப் பாடி பல்லவி பாடினார்.

(ஆடியோ - மோகன ராகம் - ஸ்வரப்ரஸ்தாரம்)

(ஒரே வரியில் மேல் ஷட்ஜமம் - கீழ் பஞ்சமம் வரை - சுகமான பாட்டு)







**சாருமதி:** கச்சேரியில் பாடும்போது, கையை ஆட்டிக்கொண்டோ முகத்தைக் கோணலாக வைத்துக் கொண்டோ பாடக் கூடாது, அக்காவிற்கு ஈஸியாகப் பாடணும். கரெக்ட் ஸ்ருதியில் பாட வேண்டும். தொண்டையில் கரகரப்பு வரக்கூடாது. எனக்கு வர வில்லை பார்; அது மாதிரி தொண்டையை வைத்துக் கொள்ள வேண்டும் என்பார்.

**பிரபாவதி:** என்னிடம் உள்ள குற்றங்குறைகளை நீங்கள் டெவலெப் செய்யாமல் பாட வேண்டும் என்பார் அக்கா. ஐஸ்கிரீம், சாக்லேட் இவற்றை விரும்பி சாப்பிடுவார். எனக்கு பயமாக இருக்கும். ஆனால் அவர் ஐஸ்கிரீம் சாப்பிட்டுவிட்டு ரெகார்டிங் போவார். அங்கு போய் பிரமாதமாகப் பாடிவிடுவார். எனக்கு பிரமிப்பாக இருக்கும்.

**சாருமதி:** எனக்கு கூட அலர்ஜி உண்டு. அக்கா, என்னைப் பார்க்கும் போது எல்லாம் அலர்ஜிக்காரி என்று கூப்பிடுவார்.

**பிரபாவதி:** கோயமுத்தூரில் ஒரு கச்சேரியின் போது அக்காவிற்கு சரியான தொண்டைக் கட்டு. இவர் எப்படிப் பாடப் போகிறார் என்று கூட நினைத்தேன். அவரால் சரியாகப் பேசக்கூட முடியவில்லை. ஆனால், கச்சேரிக்கு உட்கார்ந்தவுடன் அதற்கு தகுந்தபடி, மத்யம சுருதியில்பாடி கச்சேரியை சமாளித்து, பாராட்டும் பெற்றார். இதெல்லாம் அவருக்கு உள்ள தனித்திறமைகள். அக்காவை சரஸ்வதி என்று நினைத்து, ரசிகர்கள் பெங்களூரில் கச்சேரி முடிந்தவுடன் காலைத் தொட்டு வணங்குவதை, கண்கூடாகப் பார்த்திருக்கிறேன்.

**சாருமதி:** சுப்புடு சார், அக்காவை வீராங்கனை என்று குறிப்பிட்டார். தோடி, கல்யாணி, பைரவி, கரஹரப்ரியா போன்ற ராகங்களை மிகவும் அருமையாகப் பாடுவார். பல்லவி பாடுவதற்கு, முடிகொண்டான் வெங்கட்ராம அய்யர், ஆலத்தூர் சகோதரர்களிடம் பயிற்சி பெற்றார். நாலு களை பல்லவி பாடும்போது கையினால் தாளம் போட்டுக் கொண்டு பாடாமல் சாகித்யத்தை வைத்துக் கொண்டு மனதிலேயே கற்பனை செய்து கொண்டு பல்லவியைப் பாடுவாராம். நிரவலையும் பிரமாதமாகப் பாடுவார். தானம் பாடவும் முடிகொண்டானிடம் நல்ல ட்ரெயினிங்க அவருக்கு. (ஆடியோ: தானம்)

**ராமச்சந்திரன்:** எந்த ராகத்தையும், ஒவ்வொரு முறையும் பாடும்போதும் வித்தியாசமாகப் பாடுவார் தோடியைக் கூட ஜி என். சார் பாடுவது போல் புதிது புதிதாகப் பாடுவார்.

(ஆடியோ: கல்யாணி - பல்லவி)

**சாருமதி:** பல்லவியை எல்லோரும் பாடும் அதே ராகங்களில் பாடாமல் ஹம்சத்வனி, நடபைரவி, கமனஸ்ரம, ரேவதி, சுபந்துவராளி, சேகர சந்திரிகா போன்ற ராகங்களில் மிக அருமையாகப் பாடுவது, அக்காவின் வழக்கம்.

**பிரபாவதி:** தன் கச்சேரிக்கு பெரிய பக்க வாத்தியம்தான் வேண்டுமென்று சொல்லாமல் சாதாரணமாக வாசிப்பவர்களை வைத்துக் கொண்டே பிரமாதமாகப் பாடி விடுவார். எந்தவித பந்தாவும் காட்ட மாட்டார். சக வித்வான்களிடமும் மரியாதை. யாரையுமே குறைத்து எடை போட மாட்டார். கச்சேரியில் சில சமயங்களில் அக்காவிற்கு மறதி ஏற்படும். அப்போது என்னைத் திரும்பிப் பார்ப்பார். ஒரே நடுக்கமாக இருக்கும். அந்த பயத்திலேயே சப்த நாடியும் ஒடுங்கி விடும். எனக்கும் மறந்து விடும். ஆனால் கச்சேரி முடிந்த வுடன், அதைப்பற்றி பேசாமல் மறந்து விடுவார்.

**சாருமதி:** அக்காவுடன் கச்சேரியில் பாடும் போது எனக்கு, தனியாக, நிரவல், ஸ்வரம் பாட சான்ஸ் கொடுப்பார். நானும் ஓரளவு பயப்படாமல் பாடுவதால் அப்படி சான்ஸ் கிடைக்கும். அதனால் எனக்கு நல்ல ரெகக்னிஷன் - பாராட்டு கிடைத்தது. என்னைப் பற்றி பலருககுத் தெரிய இது உதவியது.

**பிரபாவதி:** தாசர் கிருதிகளை முதலில் அக்காவுடைய அம்மா, அதன் பின் இருவருமே பிரபலப்படுத்தக் காரணமாக இருந்தார்கள். ஆனால், கச்சேரியில், முழுக்கு முழுக்க புரந்தரதாசர் கிருதிகளையே பாடினாலும் போர் அடிக்காமல், மிகவும் நன்றாகப் பாடுவார். அக்காவிற்கு தெலுங்கு மிக நன்றாகத் தெரியும். கன்னடம் அவ்வளவு தெரியாவிட்டாலும் உச்சரிப்பைக் கற்றுக் கொண்டு சரியாகப் பாடி விடுவார், உகபோகாவை, அருமையான உச்சரிப்புடன் பாடுவார்.

**சாருமதி:** தாசர் பதங்கள் சிலவற்றிற்கு அக்காவே ராகங்களைப் போட்டு பாடியுள்ளார். சிவரஞ்சனியில் மெட்டு போட்டு, அக்கா மிகவும் உருக்கமாகப் பாடும் பதம் இது. (ஆடியோ: மௌனல்லி: சிவரஞ்சனி)

**சாருமதி:** கன ராகத்திற்கு ஒரு மாதிரியாகவும், லைட் ராகத்திற்கு ஒரு மாதிரியாகவும், அதற்குத்தகுந்த வாய்ஸ் மாடுலேஷன் கொடுத்துப் பாடுவார். ஒரே மாதிரி பாடாமல், வித்தியாசமாக மாடுலேஷன் செய்து பாடுவார். 'பாவ' பூர்வமாக பாடும்போது எப்படி ரசிக்க முடிகின்றது, அப்படி எமோஷன்ஸ் கொடுத்துப் பாட வேண்டும் என்பார்.

**ராமச்சந்திரன்:** ஜி. என். சார் கூட 'Bhava is not acting' என்று அடிக்கடி சொல்வது வழக்கம்.

**பிரபாவதி:** அக்கா அப்படி இமோஷனலாகப் பாடும் போது, அவர் கையில் ரோமங்கள் சிலிர்த்து நிற்கும். தொண்டை ஓரத்தில் பந்து போன்று நரம்பு புடைக்கும். இதை கச்சேரியில், அவருடன் உட்கார்ந்த போது அடிக்கடி பார்த்திருக்கிறேன். அவ்வளவு involvement உடன் பாடுவார்.

**சாருமதி:** அக்கா, இந்துஸ்தானி மியூசிக் கூட கற்றுக் கொண்டார் இல்லையா?

**பிரபாவதி:** ஆமாம். அக்கா வீட்டிற்கு வட இந்தியக் கலைஞர்கள் நிறைய பேர் வருவார்கள். மாணிக் வர்மா, லக்ஷ்மி சங்கர், படே குலாம் அலிகான் இப்படி நிறைய ஆர்டிஸ்ட் வருவார்கள். படே குலாம் அலிகான் சகோதரர் பர்கத் அலிகான் பஜன் பாட்டு கேசட்டை என்னைப் போய் வாங்கி வரச் சொல்லுவார். அதிலிருந்தும் கற்றுக் கொண்டார். கேல்கரிடம் இந்துஸ்தானி சங்கீதம் கற்றுக் கொண்டார். (ஆடியோ - துளசிதாசர் பஜன்)

(இந்துஸ்தானி ஸ்டைலில் மிகப் பிரமாதமான வாய்ஸ் மாடுலேஷனுடன் அருமையாக இருந்தது இது)

**சாருமதி:** அக்கவிற்கு, நல்ல பாட்டாக எங்கு கேட்டாலும் உடனே வாங்கி விடுவார். என் சகோதரியிடம் அப்படி ஒரு முறை வாங்கிப் பாடி அது பெரிய ஹிட் ஆகிவிட்டது.

**பிரபாவதி:** அக்காவைப் பற்றிப் பேச வேண்டுமானால் ஒரு மாதம் ஒரு வருடம் கூடப் போதாது. அவ்வளவு நல்ல விஷயங்கள் உள்ளன. இவ்வளவு நேரம் பொறுமையாகக் கேட்ட இந்த ரசிகர்களை மறக்க முடியாது.

**சாருமதி:** இப்படி ஒரு நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த எம் எல்.வி போரம் - ரசிகர்களாகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி.



# வசுமதி நாகய்யா

பெண்கள் முன்னேற்றத்திற்காக அரும்பாடு படும் ஒரு பெண்மணி வசுமதி நாகய்யா. திருமணம் ஆகாத ஏழைப் பெண்களுக்கு, தன் செலவிலேயே தாலி மற்றும் சீதனப் பொருட்களை வாங்கித் தருகிறார். வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பல பெண்களுக்குத் தன்னால் முடிந்த வேலை வாய்ப்பு, சுய தொழில் செய்ய அரசுக் கடன் உதவிகளை ஏற்பாடு செய்து தருகிறார். பல டாக்டர்களை அணுகிச் செலவு இல்லாமல், பல பெண்களுக்கு இலவசமாகக் கண் ஆபரேஷன் செய்ய உதவுகிறார். உணவு, உடை, இருப்பிடம் இல்லாதவர்களுக்கு உயர்ந்த உள்ளங்களிடமிருந்து நன்கொடை வாங்கித் தருகிறார். பெற்றோர்களிடம் சொல்லிக் கொள்ளாமல், காதல் வயப்பட்டு வெளியூரிலிருந்து வந்து உள்ளூரில் ஏமாந்து நிற்கும் பெண்களுக்குத் தகுந்த பாதுகாப்புடன் அவர்கள் பெற்றோர் வீட்டிற்குத் தன் செலவிலேயே அனுப்பி வைக்கிறார். ஆதரவு இல்லாத பல பெண்களைப் பாதுகாப்பான விடுதிகளில் சேர்க்கிறார். எய்டஸ் நோயின் அபாயகரத்தைப் படிப்பறிவு இல்லாத பெண்கள் உணர்ந்திட, குடிசைப் பகுதிகளுக்குச் சென்று படங்களின் மூலம் விளக்கி, எச்சரிக்கைப்படுத்தியும் வருகிறார். பெண் சிசுக் கொலையை வன்மையாகக் கண்டிக்கும் இவர், கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை ஸ்கேன் மூலம் தெரிந்து கொள்ள அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்துகிறார்.

என் கணவர் நாகய்யா, என் மனதைப் புரிந்து கொண்டு என் சேவைக்குப் பக்கபலமாக இருக்கிறார் என்பதைச் சொல்லியே ஆக வேண்டும். இதனால், முழு நேரத்தையும் சமூக சேவைக்கு அர்ப்பணிக்க முடிகிறது என்று பெருமையாகக் கூறுகிறார்.

***எந்த மாதிரி சலுகைகளைப் பெண்களுக்கு அரசாங்கம் அளிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?***

சுய தொழில் செய்வதற்கு நிறைய கடன் வசதி செய்து தரவேண்டும். வேலைக்குப் போகும் பெண்களுக்காக இருக்கும் பல விடுதிகள், இன்று போதிய பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றன. அவற்றை நல்ல முறையில் பராமரித்திட உடனடியாக நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும். பெற்றோர்களை இழந்த பெண்களுக்கும், கணவனால் சித்திரவதைக்கு ஆளாக்கப்படும் பெண்களுக்கும் தனியாக விடுதிகள் நிறுவப்பட வேண்டும். மேலும், பெண்களே அவற்றை நிர்வகிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களைக் கடுமையாக தண்டித்து, அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள, வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும். மகளிர் காவல் நிலையம் பல இடங்களில் உருவாக்கப்பட வேண்டும்.

***பெண்களுக்கு நீங்கள் கூற விரும்பும் அறிவுரைகள்?***

என்னுடைய சமூக சேவையைப் பாராட்டி, இந்திராகாந்தி விருது அளிக்கப்பட்டது. நான் சிறிதும் எதிர் பார்க்காமல் எனக்குக் கிடைத்த விருது இது. இந்த நாட்டில், ஒவ்வொரு பெண்ணும் ஏதாவது ஒரு வகையில் சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டும். தன் வீடு, குடும்பம், பிள்ளைகள் என்று ஒரு வட்டத்திற்குள் இல்லாமல் சிறிது வெளியில் வந்து சமூகத்தைத் திருத்த வேண்டும்.

அறியாப் பருவத்தில், தவறு செய்யும் பெண்களைத் தீண்டத் தகாதவர்களாய் ஒதுக்காமல், ஆறுதலாக இருந்து அவர்களை நேர்வழிப்படுத்த வேண்டும். பெண்களே பெண்களுக்கு எதிரிகளாக இல்லாமல் சகோதரித்தனத்துடன் உறவாட வேண்டும்.

—ஒரு மகள், ஒரு மகன் என இரு குழந்தைகளுக்குத் தாயான வசுமதி நாகய்யாவிற்குத் தன் குடும்பத்தைவிட, மற்ற குடும்பங்கள் நன்றாக இருக்க வேண்டும் என்னும் உணர்வுதான் அதிகமாக இருக்கிறது. இப்படி ஒவ்வொரு பெண்ணுக்கும் பொதுநல உணர்வு வந்துவிட்டால், உலகம் மிகவும் உச்ச நிலைக்கு வந்துவிடும் அல்லவா...!

**—எஸ். பிரமிளா பிரிட்டோ.**

# மேன்மைக்கு மேடை அமைக்கும் தொண்டு

*தொண்டு உள்ளம் கொண்டோர்*
*தோண்டு மணற்கேணி யாவார்*
*அண்ணலுக் கிணையாய் அவரை*
*அனைவரும் போற்றித் துதிப்பர்.*


*இன்னல் பெற்று வாடுவோரை*
*இனிய தொண்டால் நிறைசெய்து*
*கன்னல் மொழியைப் பேசியே*
*கனிவைத் தருவார் பண்பாளர்.*

*தொண்டின் பலனை பெறுவோரின்*
*தோன்றும் மலர்ந்த முகத்தினை*
*கண்டு களித்த கடமையோர்*
*கடல் போல் இன்பம் அடைவாரே.*

*தன்னலங் கருதாச் செயல்களே*
*தரணி போற்றும் தொண்டாகும்*
*வன்மம் கொண்ட நெஞ்சாரின்*
*வழியை மாற்றலும் தொண்டாகும்.*

*எல்லா நலங்கள் இருந்தாலும்*
*எழிலாம் தொண்டுள்ளம் இல்லாதோர்*
*பொல்லா மனிதர் ஆவாரே*
*புவியோர் அவரை இகழ்வாரே.*

*இல்லா ஏழையே ஆனாலும்*
*இனிய தொண்டில் சிறந்தோர்கள்*
*எல்லாம் பெற்றவர்க் கிணையாக*
*ஏற்றம் பெறுவர் புவிமேலே.*



*கல்லா மாந்தர்க்குக் கல்வியைக்*
*கற்றுத் தருதலும் தொண்டாகும்*
*பொல்லாப் பசிப்பிணி போக்கவே*
*பொதுவழி காண்பதும் தொண்டாகும்.*


*பெற்றோர் ஆசான் பெரியோரைப்*
*பேணிக் காத்தல் தொண்டாகும்*
*சுற்றார் போற்றும் கடமையினைக்*
*கருதிச் செய்தலும் தொண்டாகும்.*

*வயதான பெரியோர் கண்ணிலார்க்(கு)*
*வழித்துணை யாவதும் தொண்டாகும்*
*தயவான நெஞ்சம் கொண்டு*
*தந்து உதவுவதும் தொண்டாகும்.*

*எளியோர் வாழ்வின் ஏற்றத்தில்*
*எண்ணம் செலுத்த முனைந்தே*
*மெலியோர் உயர்வின் மேன்மைக்கு*
*மேடை அமைத்தலும் தொண்டாகும்.*

**—புலவர் கோ. அருணானன்**

# மகான்கள் ஆசியுடன் மலரும் பணி



அன்றாடம் பலர் படும் இன்னல்கள் ஏராளம். வீணான குழப்பங்கள், பயங்கள் தாளமுடியாத பல வித நோய்கள் - இப்படி பலவும் ஒரு முடிவேயின்றி சிலரைத் தொடர்ந்து வருகின்றன. இவைகளிலிருந்து விடுதலை பெற்று வாழ வழி வகைகளைச் சொல்கிறார் ஸ்ரீ வித்யா உபாசகர் ஸ்வாமிஜி முருக பூஷணம் அவர்கள். அவரை அவரது இல்லத்தில் (எண். 4, அனுமந்தா ரோடு, பாலாஜி நகர், ராயப்பேட்டை, சென்னை - 14) சந்தித்தோம். இனி, ஸ்வாமிஜி சொல்வதைக் கேட்போமா?

''நம்மைத் தொடரும் பல விதமான கஷ்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு காரணம் நிச்சயம் இருக்கும். நம் நட்சத்திரங்களின் அடிப்படையிலே கூட வைத்து இதை ஆராயலாம். சிலருக்கு திருஷ்டியினாலும் இது போன்ற துன்பங்கள் தொடரும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு தீராத நோய்கள் - எத்தனை விதமான சோதனைகள் செய்த போதும் என்ன நோய் என்று புரியாது; ஆனால் நோயின் தீவிரம் மட்டும் குறையாது. சிலருக்கு நல்ல வருமானம் இருக்கும் ஆனால் வரும் வருமானத்துக்குமேலேயே செலவு கட்டுக்கடங்காமல் இருக்கும். வேறு சிலருக்கு வேலைகள் முடிந்து வருமானம் வர வேண்டிய நேரத்தில் அப்படியே தடைபட்டு வருமானம் வராது போய்விடும். வேலை கிடைப்பதிலும் இப்படி பல வித தடைகள். நல்ல திறமையும், கல்வித் தகுதியும் இருக்கும். ஆனால் வேலை மட்டும் அமையாது. கல்யாணம் கூடி வரும் போலத் தோன்றி அப்படி தடைபட்டு நிற்கும். குழந்தைகள் பலருக்கும் உள்ள ஒரே துன்பம் அவர்கள் நன்கு படிப்பார்கள் பரீட்சைக்கும் தயார் செய்வார்கள். ஆனால் பரீட்சையில் போய் உட்கார்ந்தவுடன் அத்தனையுமே மறந்து போய் விடும். தேர்வில் அவர்கள் பெறும் மதிப்பெண்கள் - எல்லோர் முன்னாலும் அவர்களைத் தலை குனிய வைக்கும். இந்த பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு தரவல்லவை முறையானபடி தயார் செய்யப்பட்டு - பூஜையில் வைக்கப்பட்ட யந்திரங்கள். அனைத்து தெய்வங்களையும் தன்னுள் அடக்கியது பூரண ஸ்ரீ சக்கர ஸ்ரீ மஹாமேரு (பஞ்ச லோகத்தினால் ஆனது). 5 x 5 செ.மீ, 6 1/2 x 6 1/2 செ.மீ, 7 x 7 செ.மீ, 10 x 10 செ.மீ, 18 x 18 செ.மீ ஆகிய அளவுகளில் உள்ளன. ஸ்ரீ மஹா மேரு என்பது ஸ்ரீ சக்கரத்தின் கனபரிமாண வடிவம்: ஸ்ரீ மஹா மேரு உள்ள இடத்தில் ஐஸ்வரியம் நிலைக்கும். இதை வீட்டில் வைத்து முறையானபடி அம்பாள் பூஜை செய்து வர நலன்கள் பல பெறலாம்.

எடுக்கும் காரியங்கள் அனைத்துமே தடங்கலாகி சிரமப்படுவோர்களுக்கு நல்லபலன் தரவல்லது ஸ்ரீ மஹா கணபதி யந்திரம். அம்பாளின் மறு வடிவமான ஸ்ரீ சக்ரம் எப்போதும் வீட்டிலிருக்க வேண்டிய ஒன்று. அனைத்து தெய்வங்களுமே இதில் அடக்கம். ஸ்ரீ லக்ஷ்மி கடாக்ஷம் என்பதைச் சொல்லும் போதே மனதில் ஒரு நிறைவு மகிழ்ச்சி வரும். லக்ஷ்மி கடாக்ஷம் அமைய கொடுத்து வைக்க வேண்டும் என்பார்கள். 300 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து திருமகளின் அருள் தரவல்ல இந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மி மஹா யந்திரம் தங்கத்தால் பிளேட்டிங் செய்யப்பட்டு, தங்க பிரேமும் போடப்பட்டது. எத்தனையோ பேருக்கு வியாபாரத்தில் விருத்தி இல்லையே என்ற குறை எதிரிகளின் பொறாமை, பண வரவு தடை படுதல் போன்ற தொல்லைகள் உண்டு. இவைகளை நீக்கிட சர்வ ஜன மனதனாகர்ஷணம், ஸ்ரீ சாம்ராஜ்ய லக்ஷ்மி ஸ்ரீ மஹா சுதர்ஸனம் - தங்க பிரேமிட்ட யந்திரங்கள் 2 அளவுகளில் உண்டு.

வீட்டில் பில்லி, சூனியம், ஏவல் மற்றும் நவக்கிரஹ தோஷங்கள் நீக்கி லக்ஷ்மி கடாக்ஷம் தரவல்லதுதான் சூலினி, சரபேஸ்வரர்ப்ரதிஸ்கரா (மூன்று தங்க பிளேடிங் மற்றும் தங்க பிரேமிட்ட) யந்திரங்கள். இந்த யந்திரங்கள் இரண்டு வித அளவுகளில் உண்டு.

ஓயாமல் அலையும் மனதை ஒரு நிலைப்படுத்த சுபயோக பாக்கியங்கள் தருவதுடன் எடுக்கும் காரியங்கள் அனைத்திலுமே வெற்றியைத் தரவல்லது ரசமணி தாது விருத்தியும் ஏற்படுத்தக் கூடியது. ஆணோ / பெண்ணோ பலருக்கும் பல வருடங்கள் காரணமே ஏதும் இல்லாமல் திருமணம் தடைபட்டுக் கொண்டே போகும். இதற்கு நல்ல பலன் தரக் கூடியது விவாக காமாட்சி யந்திரம். கண் திருஷ்டியினால் வரும் கோளாறுகள் ஏராளம். 'திருஷ்டியா எனக்கு நம்பிக்கை இல்லை' எனப் பொதுவாக சொல்பவர்கள் கூட தாங்களே ஏதாவது துன்பம் அனுபவிக்கும் போது 'ஐயோ! யார் கண் பட்டதோ' என்பார்கள். திருஷ்டி நீக்கி எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும் திறன் கொண்டதுதான் அதர்ஸன டாலர். ஒருபுறம் ஸ்ரீ சக்கரமும் மறுபுறம் ஸ்ரீ காமாட்சி அம்மனையும் கொண்ட டாலர் அம்பாளின் அருள் தரக்கூடியது. நல்ல பொருள் வரவும் தரக்கூடியது. தீர்க்க சுமங்கலியாக இருக்கும் அருள் தந்து சகல செளபாக்கியங்களையும் தரவல்ல செளபாம்பிகை டாலர் பெண்களுக்கு அதிர்ஷ்டத்தையும் - கணவருக்கு நீண்ட ஆயுளையும் தரும்.

எத்தனை படித்தும் தங்களின் திறமை முழுமையாக வெளிப்படாது வருந்தும் குழந்தைகளுக்கு சரஸ்வதி டாலர் நல்ல பலன் தரும். இது போன்று டாலர் உருவில் அமைந்துள்ள விவாகப் பிராப்தி டாலர் திருமணம் தடையின்றி நடை பெற உதவும்.

இன்றைய வேகமான உலகத்தில் எதிர்பாராமல் எத்தனையோ விபத்துக்கள். சாதாரண விபத்துக்கள் முதல் பெருந் துன்பம் தரும் விபத்துக்கள் வரை. இவைகளிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள உதவுவதுதான் தத்தாத்ரேயர் யந்திரம். இந்த யந்திரம் திருஷ்டி, துர் தேவதைகளினால் வரும் தொல்லைகள் அனைத்தையுமே நீக்கி செளபாக்கியங்களும் தரும் திறன் கொண்டது.

சில குழந்தைகளுக்கு பிறந்தது முதல் ஏதாவது நோய் படுத்திக் கொண்டேயிருக்கும். ஒன்று மாற்றி ஒன்றாகப் படுத்தும் இவை ஏற்படக் காரணம் பாலாரிஷ்டம் என்பார்கள். இந்த பாலாரிஷ்டமும் நோய் நொடிகளும் நீங்கி குழந்தை நீண்ட ஆயுளுடன் வளர பாலாரிஷ்ட டாலர் - இப்படி எல்லா விதமான துன்பங்களுக்கும் பலன் தரவல்ல யந்திரங்கள் உண்டு'' என்கிறார் ஸ்ரீ வித்யா உபாசகர் ஸ்வாமிஜி ஸ்ரீ முருக பூஷணம் அவர்கள் பல மகான்களின் ஆசி பெற்று ஸ்வாமிஜி ஸ்ரீ முருக பூஷணம் அவர்களால் உருவாக்கப்படும் இந்த தெய்வீக சாதனங்கள் என்றுமே பலன் தர வல்லவை.

வரும் ஜூன் மாதம் 18, 19ம் தேதிகளில் ஸ்வாமிஜி ஸ்ரீ முருக பூஷணம் அவர்களின் சதாபிஷேக - கனகாபிஷேக விழா சென்னை தி. நகர் ஹிந்தி பிரசார சபாவில் நடைபெற உள்ளது.



# மருத்துவம் ஒரு புனிதமான தொண்டு

—டாக்டர் டி. ராமமூர்த்தி

*மருத்துவத்தை இன்றும் ஒரு தொண்டாக நினைத்து மிகவும் குறைந்த கட்டணத்தையே கன்சல்டிங்காக வாங்கிக்கொண்டு (காரில் வந்தாலும் கன்சல்டேஷன் கூடுவதில்லை) - பெரும்பாலும் ஏழைகள் என்றால் இலவசமாகவே கூட மருத்துவ ஆலோசனையும் சிகிச்சையும் அளித்து வரும் டாக்டர் டி. ராமமூர்த்தி (பொது மருத்துவர்) அவர்களை அசோக்நகரில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம்.*

நான் அரசுப் பணியில் 20 ஆண்டுகள் பணியாற்றிய பின்பு ஓய்வு பெற்று இன்று இதை ஒரு தொண் டாகவே தொடருகிறேன்.

என்னிடம் வரும் நோயாளிகள் பற்றிய விவரங்கள் அவர்களுக்கு நான் எழுதித் தரும் மருந்துகள் போன்றவைகளை விவரமாக நோட்டு புத்தகத்தில் குறித்து வைப்பது என் வழக்கம். 13 ஆண்டுளாக என்னிடம் தொடர்ந்து வரும் நோயாளிகள் ரெக்கார்ட் என்னிடம் எப்போதும் தயார் நிலையில் உண்டு.

பாதுகாப்பான மருந்துகள் என்று எதுவும் கிடையாது பாதுகாப்பான மருத்துவர்கள்தான் உண்டு (There are only safe doctors and not safe medicines). முதலில் இதை நோயாளிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

என்னிடம் வரும் நோயாளிகளுக்கு நோய் பற்றிய விவரங்களை மிகவும் விளக்கமாக (முடிந்த அளவு புகைப் படங்களுடன்) தெளிவாக விளக்குகிறேன். 80 சதவிகித நோய்களுக்கு இப்படிச் சொல்கிறேன். அதிகமாக விளக்க முடியாத 20% நோய்களைப் பற்றி ஓரளவு சொல்கிறேன்.

நரம்பியல் நிபுணர் டாக்டர் பி. ராமமூர்த்தி அவர்களிடம் படித்தவன் நான். இது நான் மிகவும் பெருமையாகக் கருதும் விஷயம்.

நோய்களின் அறிகுறிகள் மருத்துவரின் விரல் நுனியில் இருக்க வேண்டும். அவசர சிகிச்சை தர வேண்டிய நோயாளி உடனடியாக கவனிக்கப்பட வேண்டும் - இந்த நிலையில் எதையாவது சந்தேகப்பட்டு புத்தகங்களைப் புரட்டக் கூடாது! என்பார் என் பேராசிரியர்.

அவர் அடிக்கடி சொல்லும் இன்னொன்று. ''நோய்க்கான பரிசோதனைகள் எல்லாமே நம் வேலையாட்கள் போல. ஆனால் மூளைதான் நம் எஜமானன் என இருக்க வேண்டும். ஆனால் இதுவே தலை கீழாகி விட்டால் பரிசோதனைகள் எஜமானனாகவும் - நம் மூளை அதன் கீழ் பணி செய்யும் வேலைக்காரர் போல ஆகும்'' என்பார்.

''இந்தத் தொழிலில் நோயாளிகள் நமக்கு நன்றி (Gratitude) சொல்ல வேண்டும் என்று எதிர்பார்ககக்கூடாது. நாம் நம் தொழிலை ஒழுங்காகச் செய்ய வேண்டும். நன்றியை எதிர்பார்ப்பவர்தான் அது கிடைக்கா விட்டால் ஏமாற்றமடைவார்''. - இது பேராசிரியர் சொல்லும் மற்றுமோர் வேதவாக்கு.

தற்போது சொல்ல வேண்டிய முக்கிய விஷயங்களில் முக்கியமானது மருந்துக் கடைகளில் பணிபுரிவோரில் பலருக்கு போதுமான கல்வித் தகுதியிருப்பதில்லை. மருத்துவர் ஒன்று எழுத அவர்கள் ஒன்று தர என எத்தனையோ விபரீதங்கள் நிகழ்கின்றன.

என் நோயாளி ஒருவருக்கு நான் 'டயமால்' என்னும் மாத்திரை குடல் வாயுத் தொல்லைக்கு எழுத - மருந்து கடையில் அதற்கு பதில் 'டயனில்' நீரிழிவு வியாதிக்கான மாத்திரையைத் தந்து - அவரும் கவனியாமல் அதை உண்டு, நிலைமை மோசமாகி. ஒரு பெரிய மருத்துவமனையில் சேர்ந்து சில ஆயிரங்கள் செலவழிக்க வேண்டி வந்தது.

மனதுக்கு வேதனை தரும் விஷயம் தேவையில்லாத பல பரிசோதனைகள். நோயாளிகள் அனாவசியமாக பணத்தை இழக்கிறார்கள்.

எப்போதாவது சில நோயாளிகளை 'சிறப்பு மருத்துவரின் கருத்து கேட்டு அனுப்பினால்' - அவர்கள் தேவையில்லாத பல சோதனைகளைச் செய்யச் சொல்லி - அந்த குறிப்பிட்ட மருத்துவமனையில் உள்ள அத்தனை சிறப்பு மருத்துவத்துறைகள் அனைத்துக்கும் அந்த நோயாளியை அனுப்பி 4, 5 நாட்கள் அலையவிட்டு - சில ஆயிரங்கள் செலவு வைத்து... இது போன்றவைகளை நினைக்கும் போது நெஞ்சு கனத்து தான் போகிறது.

மருத்துவம் இன்று ஒரு வியாபாரமாக - மருத்துவப் பட்டங்கள் மருத்துவ வாணிபத்தின் மூலதனமான நிலையை காணும் போது உள்ள படியே சொன்னால் மனம் நோகிறது.

இதே போலத்தான் அவசியமில்லாத பல அறுவைச் சிகிச்சைகள்.

முன்பெல்லாம் மிகவும் அவசியமென்றால் மட்டுமே டான்சில்சை அகற்றுவார்கள். இப்போது அப்படியில்லை. ஆனால் இன்று வயிற்றில் அறுவை என்றாலே முதலில் அகற்றப்படுவது 'அப்பெண்டிக்ஸ்'தான். இது போல எத்தனையோ அனாவசியமான அறுவைச் சிகிச்சைகள் என்பதும் வேதனையான ஒரு விஷயம்.

டான்சில்ஸ் அதிக பட்சம் பேருக்கு மருந்திலேயே கரைந்துவிடும். இந்த நிலையில் ஏன் இதற்கு அவசியமில்லாமல் ஒரு அறுவை சிகிச்சை.

ஒரு டாக்டருக்கே உடல் நிலை சரியில்லை என்றாலும் தானே வைத்தியம் செய்து கொள்ளாமல் திறமையான ஒரு மருத்துவரைத்தான் நாட வேண்டும். மருத்துவரிடம் செல்லுமுன்பு நம்பிக்கைக்குகந்த மருத்துவரா என்பதை எண்ணிப் பார்த்துதான் தேர்வு செய்ய வேண்டும் இதை ஆங்கிலம் அல்லது அலோபதி மருத்துவ தந்தை எனப்படும் HIPPOCRETES சொல்லி உள்ளார்.

இரத்த காயங்கள் படும் போது முன்பெல்லாம் 'ஏடிரஸ்' போடுவார்கள். ஆனால் இன்று 'டிடி'தான். இந்த 'டிடி' 10 நாட்கள் உடம்பில் ஊறிய பின்புதான் பலன் தரும். ஒரே ஒரு 'டிடி'யுடன் நிறுத்துவது தவறு. குதிரை ஜன்னி வராமல் தடுக்கும் இந்த ஊசியின் முழுப் பலனும் கிடைக்க வேண்டுமென்றால். முதன் இன்ஜக்ஷன் போட்ட அடுத்த மாதம் அதே தேதியில் 2வது ஊசியும் அதற்கு 6 மாதம் ஆனபின்பு அதே தேதியில் 3வதும் போட்டுக் கொண்டால் அதன் பலன் 5 ஆண்டு வரையிருக்கும் இதை இப்பொழுது பல மருத்துவர்கள் நோயாளிகளுக்கு விபரமாக சொல்லுவதில்லை.

நோயாளிகள் தங்களின் நோய் பற்றி முழுமையாக அறிய வேண்டியது அவசியம். மார்பில் ஏற்படும் தசைகளின் வலியைப் பலர் இதயவலி எனத் தவறாக எண்ணுவதுண்டு. இதயவலி பெரும்பாலும் மார்பின் நடுவில் தொடங்கி இடது கை வழியாக தொடரும். வீண் கற்பனைகள் வேதனை தரும்.

பயன்கள் மிகுந்த மூலிகை மருந்துகள் விலையேற்றம் பெறுவது அரசு போடும் வரிகளினால்தான். அரசு இவைகளுக்கு முழுமையான வரி விலக்கு அளித்து - உதவிகளும் செய்தால் இவைகளின் விலை நிச்சயம் குறையும். அன்னிய நாட்டில் மருத்துவர்கள் பலரும் இன்று இந்த மருந்துகள் பற்றி ஆர்வத்தோடு அறிய இங்கு வருகின்றனர். நாம் இவைகளை மறக்கலாமா? 4ம் நூற்றாண்டிலேயே சிறந்து விளங்கிய சிருஷ்தா, சரா போன்ற மருத்துவர்கள் பலர் உண்டு.

வைட்டமின் குறைகளால் வரும் நோய் ஒருபுறம் என்றால் தேவையில்லாமல் இவைகளை அதிகமாக உண்பதால் வரும் கோளாறுகள்தான் மிக அதிகம்.

தேவையில்லாத ஒரு வைட்டமினை உண்பதால் வேறு வைட்டமின் குறைபாடு உடலில் ஏற்பட்டு - அதன் பாதிப்புகள் தொடரும். இதை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும்.

இது கோடை காலம் அதிகமாக குளிர்பானங்களை குடிப்பதை தவிர்த்து - இளநீர் அருந்துவது உடலுக்கு நல்லது'' என்கிறார் டாக்டர் ராமமூர்த்தி.

*முகவரி: டாக்டர் டி. ராமமூர்த்தி எம்.பி.பி.எஸ்., மெடிக்கல் சூப்ரின்டென்ட் (ஓய்வு), (செங்கல்பட்டு கல்பாக்கம், அட்டமிக் எனர்ஜி ஹாஸ்பிடல்), 37 ஏ. முதலாவது அவெனியூ, அசோக்நகர், சென்னை - 83. தொலைபேசி: 4891896*

# நம்பிக்கை ஜெயிக்கும்

*பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்த கிராமத்து பெண்மணி, கணவன், பெண், பிள்ளையை இழந்து துயரத்தில் மூழ்கினாலும் நம்பிக்கையை இழந்து விடாமல் 'அழகுக் கலை' பயின்று, இராமநாதபுரத்தில் பியூட்டி பார்லர், துவங்கிய முதல் பெண்மணி என்ற பெருமையை பெற்ற திருமதி ஜானகியை சமீபத்தில் சந்தித்தோம்...*



"என் பெற்றோர் விவசாயிகள். இராமேஸ்வரம் அருகில் உள்ள 'கடுக்கா வளைசை' என்ற கிராமத்தில் பத்தாம் வகுப்பு வரை படித்தேன்.

ஐந்து கிலோ மீட்டர் நடந்தே பள்ளிக் கூடம் சென்று வீடு திரும்புவேன். சின்ன வயது முதலே எதிர் நீச்சலே எனக்கு வாழ்க்கையாக இருந்தது.

மரக்கடை வைத்திருந்த திரு. சந்திரசேகர் அவர்களை திருமணம் செய்தேன். 'செந்தில் ராணி, முருகதாஸ், மோகன்தாஸ் என்ற மூன்று குழந்தைகள்.

இளம் வயதிலேயே செந்தில்ராணியும், முருகதாசும் அகால மரணம் அடைந்து எனக்கு பேரிடி தந்தார்கள்.

என் கணவரும் சிறு நீரக கோளாறு காரணமாக காலமாக நான் தனி மரமானேன்.

சோகம்தான் என் வாழ்க்கையின் சொத்தா என்று நொந்து போனேன். ஆனாலும் என் கடைசி மகன் மோகன்தாசுக்காக வாழ்க்கையை சவாலாக நினைத்து போராடி வாழ முடிவு செய்தேன்.


மதுரையில் என் உறவினர் வீட்டில் தங்கிய போது 'ஷராபின்ஸ் பியூட்டி பார்லர்' அதிபர் திருமதி ரகீமா எனக்கு ஆறுதல் கூறி அழகுக் கலை பயின்று பியூட்டி பார்லர் துவங்க யோசனை கூறினார்.

அழகு சிகிச்சை முறைகளை முறைப்படி முழுமையாக கற்று சான்றிதழும் பெற்று, பியூட்டி பார்லரே இல்லாத இராமநாதபுரத்தில் இந்த மோனிஜா பெண்கள் அழகு சிகிச்சை நிலையத்தை 10-03-97 அன்று துவங்கி பெண்கள் ஆதரவுடன் நடத்தி வருகிறேன்.

பிரிவுகளை மறக்கவும், பிள்ளையின் எதிர்காலத்திற்காகவும் நான் துவங்கி உள்ள இந்த பியூட்டி பார்லரில் அழகு சிகிச்சை பெற விஐபி வீட்டுப் பெண்கள் முதல் சாதாரண வீட்டுப் பெண்கள் வரை வருகிறார்கள்.

என்னை விட்டுப் பிரிந்த என் பெண்ணின் நினைவில் நான் எல்லா பெண்களிடமும் குடும்ப பாசத்துடன் பழகுகிறேன். வீட்டுச் சூழ்நிலையில் பார்லர் இருப்பதால் பெண்கள் தயங்காமல் வருகிறார்கள்.

கொண்டை அலங்காரம், மணப்பெண் அலங்காரம், முக அழகு சிகிச்சைகள், ப்ளீச்சிங், பேஸியல், முகப்பரு நீக்கம், கல்வானிக் பேஸியல், தலை பொடுகு நீக்கம், தலைமுடி உதிர்வதைத் தடுத்தல், பெடிக்யூர், மெனிக்யூர், சிகை அலங்காரம், மெகந்தி, ஹென்னா ட்ரீட்மெண்ட், பெர்மிங், முடியை சுருளாக்குதல் போன்ற பல வித அழகு சிகிச்சைகளை செய்து வருகிறேன்''





என்றார் திருமதி ஜானகி. முகவரி: மோனிகா பியூட்டி பார்லர் எண்: 19/27, ராஜ ராமநாத சேதுபதி நகர், லேத்தமஸ் பங்களா ரோடு, தாசின் காம்ப்ளக்ஸ், இராமநாதபுரம் தொலைபேசி: 22779 (எஸ்.டி.டி. 04567)

தன்னம்பிக்கையை அஸ்திவாரமாகவும் முயற்சியை மூலதனமாகவும் கொண்டு முன்னேறிய திருமதி ஜானகியை வாழ்த்தி விடைபெற்றோம்.

போட்டோ: அன்புச் செல்வன்

# தொழில் துறைகளில்



ஜெனிபர்


சமீபத்தில் கோவை மேட்டுப்பாளையத்தில் ஊட்டி மெயின் ரோட்டில், பொது மக்கள் குடும்பத்துடன் பொழுது போக்க துவங்கப்பட்டு இருக்கும், ஆசியாவிலேயே நம்பர் ஒன் 'வாட்டர் தீம் பார்க்' ஆக திகழும் 'பிளாக் தண்டர்' சுற்றுலா மையத்தை நிர்வகிக்கும் இளம் பெண் தொழில் அதிபர் குமாரி ஜெனிபரை சந்தித்து பேசினோம்...

*இத்தனை இளம் வயதில் படிக்கும் போதே இவ்வளவு பெரிய பொறுப்பை எப்படி ஏற்றுக் கொண்டீர்கள்?*

''சிறிய வயதிலேயே பெரிய பொறுப்புகளை ஏற்றால்தானே நடுத்தர வயதில் மகத்தான சாதனைகளை செய்து முடிக்க முடியும். என் தந்தையும், இந்த பிளாக் தண்டரின் மானேஜிங் டைரக்டரும் ஆன திரு. ஜோசப் லூயிஸ் அவர்களுக்கும், என் சித்தப்பாவும் இதன் டைரக்டருமான திரு. ஜோசப் வின்செண்ட் அவர்களும் என்னை ஊக்குவித்து செயல்பட வைக்கிறார்கள்.''


*இந்த 'பிளாக் தண்டர்' சிறப்பு அம்சங்கள் என்ன?*

''பல கோடி ரூபாய் செலவில் பல ஏக்கர் நிலப் பரப்பில் அமெரிக்க ஆர்க்கிடெக்ட் திரு. ரிச்சர்ட் மற்றும் நமது தமிழக ஆர்க்கிடெக்ட் திரு. ரமணன் ஆகியோர் சிங்கப்பூர், யூரோப்பா பார்க், அமெரிக்க டிஸ்னி லேண்ட் போல் மேல்நாட்டு பிக்னிக் ஸ்பாட்டுகளுக்கு இணையாக இந்த பிளாக் தண்டரை பிரமாதமாக உருவாக்கி தந்துள்ளார்கள். இங்கே விதவிதமான, த்ரிலிங்கான, பரபரப்பான மகிழ்ச்சி பொங்க வைக்கும் தண்ணீர் சறுக்கு விளையாட்டுகள் உள்ளது. குழந்தைகள் விளையாட்டுகளும் ஏராளமான இருக்கிறது.



மரங்களும், மலைகளும் சூழ்ந்த ரம்மியமான குளுகுளு சூழ்நிலையில் ஒரு கிலோ மீட்டர் சுற்றளவு ஆறு இங்கு உள்ள ஆற்றில் படகில் குடும்பத்துடன் சவாரி செய்து மகிழலாம்.

செயற்கை கடல் அலைகள் உள்ள பெரிய நீர் தொட்டியில் குளித்தால் கடலில் குளிப்பது போன்ற குதூகலம்.




இங்கு வருகை தருபவர்களுக்கு தேவைப்படும் உதவிகளை செய்ய முன்னூறு உதவியாளர்கள் இங்கே பணி புரிகிறார்கள்.

இங்குள்ள அறுபது அடி உயர கோபுரத்தில் ஏறி நின்று இயற்கை காட்சிகளை கண்டு பரவசிக்கலாம். தண்ணீர் அடிக்கடி சுத்திகரிக்கப்பட்டு சுத்தம், சுகாதாரம் நன்கு பராமரிக்கப்படுகிறது. குறைவான நுழைவு கட்டணம் தவிர விளையாட்டுகளுக்கு தனியாக கட்டணம் கிடையாது. அனைத்து உணவு வசதிகள், மற்றும் வாகன நிறுத்த வசதிகள் உண்டு. காலை பத்து மணி முதல் இரவு ஏழு மணி வரை குடும்பத்துடன் இங்கே சந்தோஷமாக பொழுதை போக்கலாம். இரவை பகலாக்கும் மின் வசதிகள்.



*உங்கள் எதிர்கால திட்டம்...*

''படிப்பை முடித்து 'பிளாக் தண்டர்' புகழ் உலகம் அறிய உழைக்க திட்டமிட்டு இருக்கிறேன்.

விசிட்டர்கள் மூன்று நாட்கள் தங்கி மகிழ அறுபத்தி ஆறு காட்டேஜ் வசதி.

'செயற்கை ஏரி' அமைக்கப்பட்டு அதில் 'மிதக்கும் ரெஸ்டாரண்ட்' அமைத்து படகு சவாரி செய்து அங்கு சென்று சாப்பிடும் வசதி.

பிளாக் தண்டரை வான வீதியில் சுற்றிப் பார்க்க 'ஸ்கை கார்' (Rope Car) வசதி.

வீடியோ கேம்ஸ் விளையாட்டு வசதி... இப்படியாக...

பிளாக் தண்டரின் சிறப்பை மேலும் வளப்படுத்த திட்டமிட்டு செயல்பட்டு வருகிறோம்.''

# பெண்கள்



## ராதா

*மதுரை திருநகரில் ஸ்ரீனிவாஸ் கேபிள்ஸ் பிரைவேட் லிமிடெட் நடத்தி வரும் பெண் தொழில் அதிபர் திருமதி ராதாவை சந்தித்து பேசினோம்...*

''எம்.காம்., பட்டதாரியான நான் ஆல் இந்தியா மேனேஜ்மெண்ட் ஆப் அஸோசியேஷனில் ஒரு வருட பெண் தொழில் அதிபர் படிப்பு படித்து பட்டம் பெற்றுள்ளேன். ராஜீவ் காந்தி பவுண்டேஷன் டிரஸ்ட்டில் இருந்து உதவி பெற்று தென்னிந்தியாவிலேயே முதல் பட்டம் பெற்றேன். இது எனக்கு நிறைந்த பெருமையைத் தந்தது.

''நான் பிறந்தது... வளர்ந்தது... படித்தது எல்லாம் சென்னையில்தான்.

சிறந்த பெண் தொழில் அதிபர் ஆக வேண்டும் என்ற லட்சியம் சிறு வயது முதலே எனக்கு உண்டு. என் தந்தையும் என்னை ஊக்குவித்து எனது தாய் வழி மாமா திரு. கோகுல் கடாம்பி நடத்தி வந்த கேபிள் பேக்ட்டரியில் நான் தொழில் பயிற்சி பெற அனுப்பி வைத்தார். கேபிள் தொழிற்சாலையில் கேபிள் தயாரிப்பு, மார்கெட்டிங், விற்பனை, நிர்வாகம் அனைத்திலும் சிறப்பான பயிற்சியை பெற்றேன்.

1986ல் டிரையினிங் யூனிட் ஆக துவங்கி 1990ல் பிரைவேட் லிமிடெட் கம்பெனியாக இங்கே மாற்றி 'கேபிள் தயாரிப்பு யூனிட்' ஆக்கி செயல்பட்டு வருகிறோம்.


எனக்கு பயிற்சி அளித்த பின் மாமா திரு. கோகுல் கடாம்பி நான் துவங்கிய இந்த நிறுவனத்தில் என்னுடன் இருந்து நிறுவன வளர்ச்சிக்கு பெரிதும் உதவி வருகிறார்.

எங்கள் நிறுவனத்தில் பணிபுரிந்த திரு. ராதாகிருஷ்ணன் அவர்களை சமீபத்தில் திருமணம் செய்து கொண்டேன். என் கணவர், மாமாவின் பரிபூரண ஒத்துழைப்புடன் இந்த கேபிள் தயாரிப்பு நிறுவனத்தை நடத்தி வருகிறேன்.

1993ஆம் ஆண்டில் மதுரை அருகே உள்ள கப்பலூரில் கேபிள் தயாரிப்பு தொழிற் சாலை தயாரிப்புகள் துவங்கி டிவிஎஸ் நிறுவனத்திற்கு மட்டுமே சப்ளை செய்து வருகிறோம். எங்கள் நிறுவன வளர்ச்சியில் டிவிஎஸ் நிறுவனத்திற்கு பெரும் பங்கு உண்டு. அந்த நன்றியை என்றும் மறவோம்.''

''ஆட்டோ மொபைல் எலக்ட்ரிகல் கேபிள், ஹவுஸ் வயரிங் கேபிள் தயாரித்து வழங்கி வருகிறோம். தற்போது கம்ப்யூட்டர் கேபிள் தயாரித்து வருகிறோம்.''

''1985ஆம் ஆண்டில் சிறு தொழில் அதிபர்களில் சிறப்பாக செயல்பட்டு வருபவர்களை தேர்வு செய்து தமிழக அரசு விருது வழங்கி கௌரவித்தது. அப்போது மதுரையில் என்னை தேர்வு



செய்து விருது வழங்கினார்கள். ஐடியல் ஹோம் எக்ஸிபிஷனில் கமிட்டி மெம்பராக நன்கு உழைத்து செயல் புரிந்தமைக்காகவும் விருது பெற்றேன்.

***உங்கள் நிறுவன சாதனை என்ன?***

''ஒரு நாளைக்கு எங்கள் மிஷின் ப்ரொடக்ஷன் பதினாறாயிரம் மீட்டர். எட்டு மணி நேரத்தில் இந்த காப்பர் வயர் தயாரிக்கிறோம். எனது நேரடி மேற்பார்வை யிலே தயாரிப்பு முதல் விற்பனை வரை நடக்கிறது. எலக்ட்ரீஷன்ஸ், மெக்கானிக்குளை நேரடியாக சந்தித்து எங்கள் வயர்களினால் என்ன பிரச்னை என்று கேட்டறிந்து உடனுக்குடன் அதனை சரி செய்தும் விடுகிறோம்.




***உங்கள் எதிர்கால லட்சியம்...***

''தன்னம்பிக்கையும், துணிவும் எனக்கு வெற்றியைத் தேடி தந்தது. அதுபோல பல பெண்கள் முன் வந்து என்னைப்போல் பெண் தொழில் அதிபர் ஆக உதவி செய்வதே எனது லட்சியம். தற்போது மடீசியா மூலம் பெண் தொழில் அதிபர் பயிற்சி அளித்து வருகிறேன். எனது நிறுவனம் மேலும் உயர உழைப்பதும் எனது எதிர்கால லட்சியமே''

*முகவரி: திருமதி ராதா, ஸ்ரீனிவாஸ் கேபிள்ஸ் பிரைவேட் லிமிடெட், சி - 124, காமராஜ் தெரு, திருநகர், மதுரை - 625 006.*

*தொலைபேசி - 883287*



"அவள் சாரதா. சரஸ்வதியின் அவதாரம். உலக மக்களுக்கு ஞானத்தை வழங்குவதற்காகவே பிறந்தவள். அவள் என்ன சாதாரணமானவளா? அவள் என் சக்தி'' என்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரால் உலகத்தவர் முன் அறிமுகப்படுத்தப்பட்டவர் அன்னை சாரதாதேவி''.

''நமது நாடு இவ்வளவு பலமிழந்து அனைவருக்கும் அடிமைப்பட்டு தாழ்வடைந்திருப்பதற்குக் காரணம்தான் என்ன? சக்தி இங்கே அவமதிக்கப்படுவதுதான் இதற்குக் காரணம். அன்னை சாரதா, இந்த மகாசக்தியை மீண்டும் தட்டி எழுப்புவதற்காகவே வந்திருக்கிறார்'' என்று சுவாமி. விவேகானந்தர் குறிப்பிடுகிறார்.

''அன்னை சாரதை ஸ்ரீராமகிருஷ்ணரின் பெண்களின் இலட்சியம் பற்றிய கடைசி வார்த்தை'' இவை ஐரோப்பிய பெண் சிரோன் மணி சகோதரி நிவேதிதையின் வார்த்தை கள்.

இந்தியத் திருநாட்டின் ஒப்பற்ற ஆன்மீக ஞானச்சுடராக விளங்கிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் துணைவியாரே சாரதா மணி தேவியார். ''அவள் மட்டும் எனது கருத்தில் சிறிது மாறுபட்டிருந்தாலும் கூட எனது பக்தியும், ஞானமும் பறந்து போயிருக்கும்.'' என்று தன் மனைவியைப் பற்றிக் குறிப்பிடுகிறார் பரமஹம்சர்.

ஐந்தாவது வயதில் திருமணமாகி, ஒரு நாள் கூட இல்லறம் நடத்தாத தனது மனைவியிடம், அவருடைய பத்தொன்பதாம் வயதில் இராமகிருஷ்ணர் சொன்னார்: இறை பக்தியில் மூழ்கியிருக்கும் நாம் நல்ல நண்பர்களாக இருப்போம், இல்லற வாழ்வு நமக்கு வேண்டாம். இறைவனின் தரிசனத்திற்காக இவ்வுலகில் மற்ற சுகங்களையெல்லாம் மறந்து. ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபட்டால் வாழ்க்கையில் எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகிறது என்பதை உலகிற்கு எடுத்துரைப்போம்'' என்றார்.

## மற்ற உயிர்களை மகிழ்விப்பதன் மூலம் உனது இலட்சியம் நிறைவேறுகிறது

**—அன்னை சாரதா தேவி**

குருதேவர், அன்னையார் ஆகிய இருவரின் தெய்வீக அன்பைப் பற்றிப் பேசுகையில் கௌரிமா எனும் குருதேவரின் சிஷ்யை ''அன்னையாரும் குருதேவரும் ஐம்பது கஜ தூரத்தில்தான் வாழ்ந்தார்கள் என்றாலும். ஒருவரை ஒருவர் பல நாள் பார்க்கக் கூட மாட்டார்கள். ஆனாலும் இருவருக்கு மிடையே ஆழமான அன்பும் பரிவும் இருந்தன'' என்கிறார்.

தமது தியானத்தாலும் தவத்தாலும் சக்தி யூட்டப்பட்ட உயர்ந்த மந்திரங்களை, குரு தேவர் அன்னையாருக்குப் போதித்து அவற்றை மக்களுக்கு உபதேசிக்கும் முறைகளையும் கற்பித்தார். பிற்காலத்தில் அன்னை யார் தாம் தீட்சையளிக்கும் வழி முறைகளைப் பற்றிப் பேசிய போது ''இந்த மந்திரங்கள் அனைத்தையும் நான் குருதேவரிடமிருந்து பெற்றேன். இவற்றின் மூலம் ஒருவர் நிச்சயமாக தெய்வீக நிலையை அடைவது உறுதி'' என்று கூறியுள்ளார்.

ஒருமுறை குருதேவரின் முன்னிலையிலேயே இருதயன் என்பவன் அன்னையாரை மரியாதைக் குறைவாகப் பேசினான். அன்னையார் அதைப் பொறுத்துக் கொண்டு பதில் பேசாமல் சென்று விட்டார். இருதயனின் நலனில் அக்கறை கொண்ட குருதேவர், ''நீ என்னை

எவ்வளவோ நிந்தனை செய்கிறாய்! கேவலமாகப் பேசுகிறாய்! ஆனால், அவளிடம் மட்டும் விளையாடாதே. எனக்குள்ளே இருக்கும் சக்தி சீறிக் கொண்டு படம் எடுத்தபடி வந்தாலும் ஒரு வேளை நீ பிழைத்துக் கொள்வாய். ஆனால், அவளிடம் இருக்கும் அந்த சக்தி சீறி எழுந்தால் பிரம்மா, விஷ்ணு, சிவன் யார் வந்தாலும் உன்னைக் காப்பாற்ற முடியாது'' என்று எச்சரித்தார்.

குருதேவரும் தம்மாலும் அன்னையார் மனம் எந்த விதத்திலும் புண்பட்டு விடாதபடி மிகவும் எச்சரிக்கையாக இருந்தார். அன்னையார் குடும்ப விஷயத்திலும் மற்றவற்றிலும் தமது விருப்பம் இது தான் என்பதை உறுதியாகச் சொல்லிவிட்டால், அவருடைய விருப்பத்தை அழிக்கவோ அதற்கு மாறாக நடக்கவோ கூட அவர் முயல மாட்டார்.

''பஞ்ச தபஸ்'' என்பது கொழுந்து விட்டெரியும் ஐந்து நெருப்புகளுக் கிடையே அமர்ந்து செய்யும் தவமாகும். இத்தகைய தவம் செய்பவர் தம்மைச் சுற்றிலும் நான்கு திசைகளில் முக்கோண வடிவில் ஏழடி இடை வெளிகளுக்கு இடையே, நான்கு பெரும் தீயை மூட்டுவார்கள். கொதிக்கிற வெயில் காலத்தில் நண்பகல் நேரத்தில் அந்த நெருப்புகளின் நடுவில் அமர்ந்து, வானத்திலிருந்து தலைக்கு மேலே காய்கிற சூரியனை ஒரு அக்னியாகக் கொண்டு ஜபமும் தியானமும் செய்வார்கள். தவங்களிலேயே மிகவும் கடுமையான இத் தவத்தை அன்னை சாரதாதேவியார் 7 நாட்கள் தொடர்ந்து செய்தார் எனில், அன்னையாரது தவ வலிமையை என்னென்பது? அன்னையார் ஒரு வகையான ஆவி கொடுத்த துன்பத்தை நீக்கிக் கொள்வதற்காகவே இந்தத் தவத்தைச் செய்ததாகத் தெரிகிறது.





அன்னையாரின் வாழ்க்கையில் இந்தக் காலம் தான் உலக மக்கள் அனைவருக்கும் தீவிரமாக ஆன்மீகப் பயிற்சியைத் தந்த காலமாகும்.

இந்தக் காலத்தில்தான் அன்னையாரின் ஆன்மீக வளர்ச்சி அதன் உச்ச நிலையை அடைந்தது. உலக மக்களிடம் ஆன்மீக விழிப்பை ஏற்படுத்துகிற குருதேவரின் பணியைத் தொடர்ந்து செய்வதற்கான தகுதியை அவர் இந்தக் காலத்தில்தான் பெற்றார்.

அன்னையார் பல முறைகள் தியானத்தில் மூழ்கி இருக்கும் போது புற உலகை மறந்து சமாதி நிலையில் மூழ்கியிருப்பதை அவரது சீடர்கள் பலர் கண்டிருக்கிறார்கள். முக்கிய சீடரான யோகின்மா தனது தியானத்தை முடித்துக் கொண்ட

# அன்னை சாரதா தேவியின் அருள் மொழிகள்

- யாரிடமும் குற்றம் குறை காணாதீர்கள். அது மட்டுமன்று; உங் களுக்கு ஏதாவது கஷ்டம் நேர்ந்தாலோ, மன அமைதி கிட்டா விட்டாலோ ''நமக்கு ஒரு அம்மா - தாய் இருக்கிறாள்'' என்று மட்டும் உள்ளூர நம்புங்கள்.
- ஈசுவரனது அருளைக் கிருபையைப் பெற எந்தவிதத்திலும் தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ளாதவர்களுக்கு அவன் அருள் எப்ப டிக் கிட்டும்?
- இந்த யுகத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவதரித்து இறைவனை அடையும் பரந்த மார்க்கத்தைக் காட்டிச் சென்றிருக்கிறார் முறைப்படி அதைக் கடைப்பிடித்து வந்தால் கடவுள் சாட்சாத்காரம் நிச்சயமாகக் கிடைக்கும்.
- அஞ்சேல்! இறைவன் உன்னைப் பாதுகாத்துக் கொண்டே இருக்கிறான். அவனுக்குரிய பணிகளைச் செய். தினந்தோறும் சிறிது வேலை செய்தாலும், அது மனத்தி லிருந்து வீணான நினைவுகளை நீக்கிவிடும்.
- ஒரு பொருள் மிக அற்பமாயிருந்த போதிலும் ஒருவன் அதை இகழ்ந்து பேசலாகாது. நீங்கள் ஒரு பொருளை மதித்தால் அதுவும் உங்களை மதிக்கும். ஓர் அற்பகாரியத்தையும் ஒருவன் மிக்க மரியாதையுடன் செய்ய வேண்டும்.
- முதன் முதலில் நீ உண்ணும் எதையும் இறைவனுக்கு சமர்ப்பணம் செய். சமர்ப்பிக்கப்படாத உணவை ஒருவன் உண்ணக் கூடாது. உன் உணவு எப்படியோ அப்படியே உன் இரத்தமும். தூய்மையான உணவின் மூலம் நீ தூய இரத்தத்தையும் தூய மனத்தையும் பலத்தையும் பெறுகிறாய். தூய மனம் பிரேம பக்தியை உண்டாக்குகிறது.
- இறைவனின் விருப்பத்தாலேயே எல்லாம் நடைபெறுகின்றன என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனாலும் மனிதன் வேலை செய்தே ஆக வேண்டும். ஏனெனில் மனிதனின் செயல்கள் மூலமே இறைவனின் விருப்பம் வெளியாகிறது.
- உடன் வாழும் உயிர்களில் ஏதாவது ஒன்றுக்காவது உன்னால் மனமகிழ்ச்சியைக் கொடுக்க முடியுமானால் உன் வாழ்க்கையின் இலட்சியம் நிறைவேறிவிட்டது.
- ஒருவன் வார்த்தையாலும் பிறரைத் துன்புறுத்தக் கூடாது. தேவையில்லாமல் ஒருவன் உண்மையாயினும் பிறரை வருத்தும் மொழிகள் கூறக்கூடாது. கடுமொழிகள் பேசுவதால் ஒருவனது மன நிலையே கொடுமையாக மாறுகிறது. நாவை அடக்கும் சக்தி இல்லாது போனால் அவன் தனது மன நுண்மையை இழக்கிறான்.
- உனக்கு மன அமைதி வேண்டுமானால் பிறர் குற்றம் காணாதே. மாறாக உனது குறைகளையே பார். உலகம் முழுவதையுமே உனக்குச் சொந்தமாக்கிக் கொள். இவ்வுலகில் யாருமே உனக்கு அந்நியரல்ல. உலகம் உனதே.

தும், தம்மருகே அமர்ந்திருந்த அன்னையாரைப் பார்த்தார். அவர் உடல் உணர்வே இல்லாமல், மூச்சும் கூட நின்று போனதைப் போல மரக்கட்டையாகக் கிடப்பதையும் ஆழ்ந்த தியானத்தில் மூழ்கிப் போய் இருப்பதையும் பார்த்தார். அந்நிலையிலிருந்து அன்னையார் திரும்பவும் உலக நினைவு பெறுவதற்கு நீண்ட நேரமாகியது. அப்படிக் கொஞ்சம் நினைவு திரும்பியதும் ''ஓ... யோகின்... என் கைகள் எங்கே? கால்கள் எங்கே?'' எனத் திரும்பத்திரும்ப கேட்க ஆரம்பித்தார். பிறகு சிறிது சிறிதாக அன்னையாருக்கு உடல் உணர்வு முழுவதும் திரும்பியது. அன்னையின் இந்த அனுபவம் பலரால் ஆன்மீக வாழ்வின் மிக மிக உயர்ந்ததாகக் குறிப்பிடப்படும் **'நிர்விகல்ப சமாதி நிலை'**யாகும்.

இந்த நேரத்தில் மற்றொரு அற்புதமான காட்சியையும் அன்னையார் கண்டார். அந்தக் காட்சி அவர் மனதில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியதோடு, பிற்காலத்தில் நம் நாட்டில் மட்டுமின்றி உலக நாடுகள் பலவற்றிற்கும் ஆன்மீக முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக அமைந்தது எனலாம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் கங்கை நீரில் இறங்குவதையும் அவரது உடல் முழுவதும் அந்தப் புனித நீரில் தண்ணீரோடு தண்ணீராகக் கரைந்து மறைந்து போய் விடுவதையும் அவர் கண்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் நரேந்திரர் அந்தத் தண்ணீரைக் கையில் வாரி ''ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பெருமை உண்டாவதாக'' என்று சொல்லியபடி கணக்கில்லாத மனிதர்கள் மீது தெளிப்பதையும் கண்டார். இந்தக் காட்சி அவருக்கு மிகமிகத் தெளிவாகத் தெரிந்தது.

குருதேவரின் உடல் மறைவிற்குப் பிறகு தாம் இந்த உலகில் வாழ வேண்டிய அவசியம் இல்லை என்று நினைத்துக் கொண்டிருந்தவருக்கு இந்தக் காட்சி அவர் வாழ்ந்தே ஆக வேண்டும் என்றும், அதற்கு ஒரு நோக்கமும் அவசியமும் உள்ளது என்றும் வலியுறுத்தியது. மேலும் குரு தேவர் கங்கை நீரோடு கரைந்து, அதை விவேகானந்தர் மக்கள் மேல் தெளிக்கும் காட்சி, பிற்காலத்தில் குருதேவரின் கொள்கைகளை சுவாமி விவேகானந்தர் மிகப் பெரிய அமைப்பின் மூலம், உலகமெங்கும் பரப்பப் போகிற காரியத்தின் காட்சியாக அன்று அன்னையின் கண்களுக்குப் புலப்பட்டிருக்கிறது.

ஒருபுறம் தட்சிணேஸ்வரத்து நகரத்தில் குருதேவருக்கும் சீடர்களுக்கும் தொண்டு செய்து, கணவனின் சேவையில் கண்ணும் கருத்துமாக இருந்த இலட்சிய மனைவி, மறுபுறம் ஆன்மீக ஞானத்தை அள்ளி அள்ளிக் கொடுத்த இலட்சிய குரு, மேலும் மிகப் பெரிய இயக்கமான ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கத்தின் ''சுப்ரீம் கோர்ட்'' என்று மகாஞானிகளாலேயே அழைக்கப்பட்ட தலைவி, எல்லாவற்றிற்கும் மேலாக தன் எல்லையற்ற தாய்மை அன்பால் அண்ட சராசரங்களையும் அரவணைக்கும் தெய்வீகத்தாய்... இப்படி வாழ்க்கைப் பெருங் கடலைக் கடப்பவர்களுக்குக் கலங்கரை விளக்கமாக அமைந்தவர் அன்னை சாரதா தேவி. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருக்குப் பிறகு ஞானத்தை பக்தர்களுக்கு போதிக்கும் தொண்டினை 34 ஆண்டுகள் செம்மையாகச் செய்த அன்னை 1920ம் வருடம் பூத உடல் நீத்துப் புகழுடல் பெற்றார்.

''எனக்கு உண்மையான பொறுப்பு மிகுந்த ஒரே ஒரு தாயைக் கொடு. செம்மையான ஒரு இனத்தையே உருவாக்கிக் காட்டுகிறேன்'' என்றார் மாவீரன் நெப்போலியன். எல்லையற்ற கருணைக் கடலாம் அந்தப் பரம்பொருள் நமக்களித்த பொறுப்பு மிக்க தாயான அன்னை சாரதா தேவியின் வழி நின்று, செம்மையான சமுதாயம் உருவாக நம்மால் இயன்றவரை பாடுபடுவோம்.

**—கீதா தெய்வசிகாமணி**

SHARAVANA


Estd. in 1967, Sharavana is a pioneer and specialist in the manufacture of
**5, 7½, 10 & 15 ltrs Commercial Grinders**
with gear boxes for Hotels, Hostels & Canteens.


MODELS AVAILABLE :
Regular, Tilting & Table Top Grinders

● Exporters since 1980 ● High quality finish with Tapper & Double Ball Bearing System with AUE Motor
● Long lasting & durable

* **Available in different colours with stainless steel body finish and with sun glass finish.**

Mfrs.:
SHARAVANA ENGG. TRADERS
Krishnasamy Mudaliar Road, R.S. Puram,
Coimbatore - 641 002 Ph : 455117, 435118 Resi : 431119





TRADE ENQUIRIES SOLICITED

# ஸ்ரீ ஜயேந்திரர் பதில்கள்



***மனோன்மணி ரவி, சென்னை - 41.***

*காளிகாம்பாளுக்கு எலுமிச்சை பழத்தை மாலை கட்டிப் போட்டு வழிபடலாமா? வழி படலாம் எனில் குறிப்பாக எந்தெந்தக் கிழமைகளில் போடுவது சிறந்தது?*

அம்பாளுக்கு எலுமிச்சம் பழ மாலையை போடலாம். இதற்கு செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகள் சிறந்தது.

***பாலாம்பிகை, சுந்தர்மடம் (இலங்கை)***

*கோயில்களுக்கு சென்ற பின்பு பிரகாரத்தைச் சுற்றி வந்த பின்பு சுவாமியை வணங்க வேண்டுமா? அல்லது சுவாமியை வணங்கிய பின்பு பிரகாரத்தைச் சுற்ற வேண்டுமா?*

மூலஸ்தானத்தை வழிபட்ட பின்பு பிரகாரத்தை வலம் வருதல் வேண்டும்.

***ஜெயந்தி, மதுரை - 10.***

*எங்கள் பூஜை அறையில் பழைய சுவாமிப் படங்களுக்குப் பதிலாக வெள்ளியில் செய்த சுவாமிப் படங்களை வைக்கப் போகிறோம். புதுப் படங்களை வைத்த பிறகு பழைய படங்களை என்ன செய்வது?*

பழைய படங்களை சமுத்திரத்தில் போட்டு விடலாம்.

*ஏகாதசி விரதம் இருக்கும் தினத்தில் சுவாமிக்கு நிவேதனம் செய்யலாமா?*

ஏகாதசியன்று சுவாமிக்கு அவசியம் நிவேதனம் செய்ய வேண்டும்.

***கே. மகேஸ்வரி, இராஜபாளையம்.***

*ஒரு பெண் சுமங்கலியாக வாழ சொல்ல வேண்டிய சுலோகம் என்ன?*

சௌந்தர்ய லஹரியில் 69வது சுலோகத்தை (ஜலரேகா...) சொல்லவும்.

***சாந்தி பரந்தாமன், ஈரோடு.***

*மதியம் உணவு அருந்திய பின்பு லலிதா சஹஸ்ர நாமம், சௌந்தர்ய லகரி பாராயணம் செய்யலாமா?*

உணவு அருந்திய பின் பாராயணம் செய்யக் கூடாது.

***ஷீலா திவாகரன், புதுவை.***

*பஞ்ச பூதங்களில் நாம் நெருப்பை மட்டும் வணங்குவதற்கு என்ன காரணம்?*

இயற்கையாகவே அனைத்தையும் பொசுக்கி விடுவது நெருப்பின் குணம். அந்த நெருப்பை நாம் நமஸ்கரிக்கும் போது நமது பாபங்களையும் அது பொசுக்கி விடுகின்றது.

***கமலா குருபரன், காரைக்கால்.***

*என் பிள்ளைகளுக்கு நல்ல ஞாபகசக்தி பெருக எந்த ஸ்லோகத்தைச் சொல்ல வேண்டும்?*

சரஸ்வதி ஸ்லோகம்.

***விமலா சண்முகம், மட்டக்களப்பு.***

*விரத நாட்களில் அதிகாலையில் எழுந்ததும் குளித்து விட வேண்டுமா? அல்லது சுவாமிக்கு நைவேத்தியம் செய்யும் போது குளித்தால் போதுமானதா?*

விரத நாட்களில் அதிகாலையிலேயே ஸ்நானம் செய்து விட வேண்டும்.

***சி.ஆர். பாஸ்கர், செஞ்சி.***

*என்னிடம் இருக்கும் எருக்கம் பிள்ளையாருக்கு நாள்தோறும் அபிஷேகப் பூஜை செய்ய விரும்புகிறேன். கூடாது என்கிறார்கள் சிலர். உங்கள் பதில் என்ன?*

எருக்கம் பிள்ளையாருக்கு தண்ணீர் ஊற்றி அபிஷேகம் செய்யக் கூடாது. பூ மாத்திரம் போட்டால் போதுமானது.

***பி.சி. ரங்கநாதன், நங்கநல்லூர்.***

*பஞ்சகவ்யம் என்றால் என்ன? எந்த சமயங்களில் அதை சாப்பிட வேண்டும்?*

*பசுவின் பால், தயிர், நெய், மூத்திரம், சாணம், ஆகிய ஐந்து வகைப் பொருட்களைக் கொண்டதே பஞ்சகவ்யம் எனப்படும்.*

பஞ்ச கவ்யத்தை திருமணம், சிராத்தம் போன்ற விசேஷ நாட்களில் உட்கொண்டால் சரீர சுத்தி கிட்டும்.

***கலாசுந்தர், ஸ்ரீரங்கம்.***

*விநாயகர் வயிற்றில் பாம்பு சுற்றிய படத்தை இல்லத்தில் வைத்து வழிபடலாமா?*

வழிபடலாம்.

*நாம் வடக்கே தலை வைத்துப் படுக்கக் கூடாது என்கிறார்களே என்ன காரணம்?*

வடக்கே தலை வைத்துப் படுத்தால் எழுந்திருக்கும் போது தெற்கு திசை பார்த்து எழுந்திருக்க வேண்டும். தெற்கு எமனைக் குறிக்கும் திசை ஆகும்.

*விநாயகர் சந்நிதியில் அடிப் பிரதட்சணம் செய்வது நல்லதா?*

நல்லது

***உமா மகேஸ்வரி, கொழும்பு.***

*எந்த வயதிலும் ஸ்ரீ ராம ஜெயம் எழுதலாமா?*

தீட்டு நாட்கள் தவிர்த்து, எந்த நாட்களிலும் யார் வேண்டுமானாலும் ஸ்ரீ ராம ஜெயம் எழுதலாம்.

***பி. மாலா, ஒசூர்.***

*காலையில் எழுந்ததும் பல் விளக்கி முகம் அலம்பி நெற்றிக்கு இட்ட பின்பு எந்தப் பக்கம் பார்த்து நமஸ்காரம் செய்ய வேண்டும்?*

காலையில் கிழக்கு முகமாக நமஸ்காரம் செய்தல் நன்று.

***லதா பார்த்திபன், புதுக்கோட்டை.***

*சஞ்சீவி மலையை தூக்கிச் செல்வது போன்ற ஆஞ்சநேயர் சிலையை வீட்டில் வைத்துக் கும்பிடலாமா?*

ஆஞ்சநேயர் சிலை வைத்துக் கொள்ளலாம். தப்பல்ல.

***கே. லட்சுமி, சென்னை - 5.***

*பிள்ளையாருக்கு உடைத்த சிதறு தேங்காயை உடைத்தவர்*

*எடுக்கலாமா?*

விநாயகருக்கு உடைத்த தேங்காயை உடைத்தவர் எடுக்காமல் மற்றவருக்கு விடுவதுதான் நல்லது.

*பற்கள் இல்லாத காரணத்தால் ஸ்ரீ விஷ்ணு சகஸ்ர நாம ஸ்தோத்திரங்களை சரியாக உச்சரிக்க முடியவில்லை மனதுக்குள்ளேயே ஜபிக்கலாமா? பலன் உண்டா?*

மானசீகமாக ஜபம் செய்வது தோத்திரம் சொல்வது தவறல்ல.

***ஏ.கவிதா, திருநல்வேலி.***

*சுமங்கலிப் பெண்கள் தலைக்கு குளிக்காமல் ஆலயத்துக்கு செல்லலாமா?*

செல்லலாம்.

### புத்தக வெளியீட்டு விழா

திருமதி சாந்தி ராமமூர்த்தி அவர்கள் தொகுத்து எழுதிய, **'பகவான் சத்திய சாய்பாபாவின் அருள் மொழிகள்'** என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழா 28.4.97 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. முன்னாள் தமிழக ஆளுநரின் ஆலோசகரும், முன்னாள் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலருமான டாக்டர். ஏ. பத்மநாபன் அவர்கள் தலைமை வகித்தார். தமிழ் நாடு சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் முதல் பிரதியை வெளியிட திரு. நல்லி குப்புசாமி செட்டியார் பெற்றுக் கொண்டார். மாண்புமிகு நீதியரசர் கே.எஸ். பக்தவத்சலம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பகவான் பாபாவின் சமூகத் தொண்டையும், பூம்புகார் பதிப்பகத்தின் 378வது வெளியீடான இப் புத்தகத்தின் சிறப்பையும் பலரும் பாராட்டிப் பேசினார்கள்.

***கே. விஜயா, திருவனந்தபுரம்.***

*எனது பெண் பிள்ளைகள் வீட்டில் ஒற்றுமை இல்லாமல் சதா முரண்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் தமக்குள் ஒற்றுமையாக இருக்க எந்த கடவுளை தொழ வேண்டும்?*

அம்பாளை பிரார்த்தியுங்கள்.

*ஸ்ரீராம ஜெயத்தை ஒரு நாளைக்கு எத்தனை முறை எழுத வேண்டும்?*

108 முதல் முடிந்தவரை எழுதலாம்.

*பசுவுக்கு பெரியவர்கள் மட்டும்தான் அகத்திக்கீரை கொடுக்க வேண்டுமா? எல்லா வயதினரும் கொடுக்கலாமா?*

எல்லா வயதினரும் கொடுக்கலாம். எல்லா தெய்வத்தினையும் கும்பிட்ட பலன் கிடைக்கும்.

***சி.மஞ்சுளா, சேலம்.***

*சொந்த வீட்டிலே கருவேப்பிலை மரம் வளர்க்கலாமா?*

வளர்க்கலாம்.

*வீட்டு காம்பவுண்டுக்குள் வெள்ளை எருக்கஞ்செடி இருக்கலாமா?*

இருக்கலாம்.

ஸ்ரீ ஜயேந்திரர் பதில்கள் பகுதிக்கு கேள்விகளை எழுதி அனுப்ப விரும்பும் வாசகர்கள் தமது சந்தேகங்களை ஒரு தபால் அட்டையில் சுருக்கமாக எழுதி **ஸ்ரீ ஜயேந்திரர் பதில்கள், மங்கை, சந்தமாமா கட்டிடம், வடபழனி, சென்னை - 26** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

# மந்தொவாணி அன்பாலயம்



இத்தாலியிலிருந்து இந்தியாவிற்கு வந்து இன்னலுற்ற ஏழை மக்களின் துயர் போக்க பல்வேறு சமூகப் பணிகள் மூலம் பிராட்வே, வியாசர்பாடி மற்றும் மாதவரம் பகுதிகளில் 1944-1967 வரை தன்னிகரற்ற தொண்டுகள் ஆற்றி மறைந்தவர் ''தந்தை மந்தொவாணி அடிகளார்''. அவரது பெயரில் 'மந்தொவாணி சமூக சேவை மன்றம்' நிறுவி பல சமூக சேவைப் பணிகளை 1974 முதல் தொடர்ந்து செய்து வருகிறார் எம்.ஏ. ஜோசப், எ.பி. அந்தோணி மற்றும் டி.ஆர். ராஜு ஆகியோர். இவர்களது சேவைப் பணிகளில் முக்கியமாக குறிப்பிட வேண்டியது ஆதரவற்ற முதியோர் சேவைப் பணிகளாகும். மந்தொவாணி அன்பாலயம் முதியோர் அன்பு இல்லத்தில் திரு. ஜோசப் அவர்களை பார்க்கச் சென்றோம்.

*'மந்தொவாணி சமூக சேவை மன்ற' குடிசையை முதியோர் அன்பு இல்லமாக 1991ல் ஆரம்பித்தோம். இந்த அன்பு இல்லத்தை மறைந்த திரு. ஆர். டர்சிசியுஸ் தமது சேவை கரங்களால் ஆசீர்வதித்து ஆரம்பித்து வைத்தார். குடிசையில் ஆரம்பிக்கப்பட்ட முதியோர் இல்லம், பல தொண்டுள்ளம் கொண்டவர்களால் 'சிமெண்ட் ஷீட்' கட்டிடமாக பதினேழு முதியோர்களுடன் திகழ்கிறது. இங்குள்ள முதியோர்களுக்கு காலை தேனீர், சிற்றுண்டி பகல் உணவு மற்றும் மாலை தேனீரும், இரவு உணவும் வழங்குகிறோம். டாக்டர். கே. காளிமுத்து மற்றும் டாக்டர் கே. கல்யாண சுந்தரம் ஆகியோர் எமது முதியோருக்கு இலவசமாக சிகிச்சை அளித்து உதவி வருகிறார்கள். எங்களது கட்டிடம் உயர உதவியவர்கள் - Helpage India சிபாரிசுடன் திரு. புருசோத்தமன், கலைச் செல்வி கருணாலயா, ரோட்டரி கிளப் ஆப் டெம்பிள் சிட்டி டிரஸ்ட் மற்றும் எக்ஸ்னோரா வுமென்ஸ் கில்டு மற்றும் உள்ளூர் நண்பர்கள். சிவில் சப்ளைஸ் CRS நண்பர்களின் உதவியால் அரிசி, கோதுமை சர்க்கரை மற்றும் RYA FOOD BANK மூலம் அரிசி கிடைக்கிறது. அன்றாட உணவு வகை செலவுகளை ஈடு செய்ய பலர் முன் வருகின்றனர்''* என்றார்.

*''ஆண்டிற்கு மூன்று முறை இங்குள்ளவர்களுக்கு புத்தாடைகள் வழங்குகிறோம். ஒரு நபருக்கு குறைந்தபட்சம் ரூ. 600/- மாத செலவாகிறது. 17 பேர்களின் மொத்த செலவு ரூ. 10,000/-க்கு மேல் ஆகிறது. கொடை வளம் கொண்டவர்கள் எங்களது இல்லத்திற்கு, அவர்களின் பிறந்த நாள், திருமண நாள் மற்றும் அவர்களின் உறவினர்களின் இறந்த நாளின் போது ரூ. 500/- செலுத்தி இவர்களை மகிழ்விக்கலாம்.*

*தற்போதைய இடம் போதுமானதாக இல்லாததால், எங்கள் இல்லத்தில் சேர விரும்பும் முதியோர்கள் நிறைய போர்களை சேர்த்துக் கொள்ள முடியவில்லை. அரசோ, பொதுத் தொண்டு நிறுவனமோ பெரிய அளவில் நிலம் கொடுத்து உதவினால் எங்களது சேவையை இன்னும் விரிவுபடுத்த முடியும்.*

*திரு. ராஜு சொன்னார் : ''எங்கள் இல்லத்திற்கு வந்து சிறிது நேரம் எங்கள் முதியோர்களிடம் நேரம் செலவழித்தால் அவர்கள்மேலும் மகிழ்வார்கள். தங்களால் முடிந்த பொருளுதவி, நன்கொடையாகவோ வழங்கலாம். எங்களுக்கு கடிதம் எழுதினால், நாங்களே நேரில் வந்து பொருட்களை பெற்றுக் கொள்வோம்.''*

*முகவரி : MASS அறக்கட்டளை, மந்தொவாணி அன்பாலயம் 50எ, காளமேகம் தெரு, விவேகானந்தர் நகர், கொடுங்கையூர் போஸ்ட், சென்னை - 600118*

—உமா.

# நவக்கிரகங்களும் நல்ல மனமும்

—காஞ்சி ரங்கமணி

சில மனிதர்கள் ஆரம்ப முதல் இறுதி வரை கொடியவராகவே வாழ்ந்து மடிகிறார்கள். சிலர் ஆரம்பத்தில் கொடூரமான உள்ளம் உடையவர்களாக இருந்து பின் கருணை உள்ளவர்களாக மாறி சமுதாயத்துக்கு பல நன்மை செய்கிறார்கள். சிலர் பிறரை துன்பப்படுத்தி பார்ப்பதிலேயே இன்பம் காணுபவராக இறுதி வரை வாழ்கிறார்கள்.

சிலர் மற்றவரை மகிழ்விப்பதற்காகவே தன் வாழ்வை தியாகம் செய்யும் தொண்டு வாழ்க்கையாக 'அன்னை தெரசா' போல் வாழ்கிறார்கள்! சிலர் ஆலயப்பணியையே ஆண்டவன் இட்ட திருப்பணியாக செய்து முடிக்கிறார்கள். இவர்களின் வாழ்வில் இத்தகைய குணாதிசயம் கிரகங்கள் ஜாதகத்தில் இருக்கும் இடத்தை பொருத்து ஏற்படுகிறது என்பதை உதாரணங்களுடன் நிரூபிக்க முடியும்.

ஹிட்லரின் ஜாதகத்தை ஆராய்ந்தோமானால் அவருக்கு செவ்வாய் கொடுமையான இடத்தில் இருந்ததால் சதாசர்வ காலமும் போர், போர் என்று அலைந்து இரண்டாம் உலகப் போரைத் துவக்கி நாட்டிற்கு பலமான அழிவை தேடித் தந்தார்.

அனுஷ நட்சத்திரத்தில் அவதரித்த காஞ்சி மகா பெரியவர் 'சந்திர சேகர சரஸ்வதி' அவர்கள் ஜாதகத்தை ஆராய்ந்தால் 6ல் ராகு 12ல் கேது என்ற நிலை புரியும். 6ல் ராகு 12ல் ஞான மேட்சகார அருள் கேது இருந்ததால் இதுதான் அவர்களுக்கு கடைசி பிறவி. வாழ்க்கை துவக்கம் முதல் இறுதி வரை அசைக்க முடியாத பக்தி கொண்டு பல அற்புதத்தை செய்வார்கள். பல ஆலய திருப்பணிகளை அற்புதமாக செய்வார்கள். அன்பும், அகிம்சையும் இவர்களுக்கு இரு கண்கள். தேச சேவை, தெய்வீக சேவை, எளிமை, இனிய வாக்கு போன்ற அபூர்வமான அற்புத குணங்கள் இவரை வந்தடைந்து இவரை 'ஜகத் குருவாக்கி' 7 வயதிலேயே துறவறம் பூண வைத்து மகாபுருஷராக்கி காட்டியது.

இனி 63 நாயன் மார்களில் ஒருவரான மூர்க்க நாயனார் ஜாதகத்தை கவனிப்போம். திருவேற்காட்டில் பிறந்த இவருக்கு 6ல் கேது 12ல் ராகு எனவே வாழ்வில் 36வது வயது வரை ராகுவின் சாரம் நடந்த போது கொடுமைக்காரனாக வாழ்ந்து பல அநியாயங்களை செய்தார். இரக்கம் என்பதே இம்மி அளவும் இல்லாத அரக்கனாக வாழ்ந்தார்!

37ம் வயதில் கேதுவின் சாரம் துவங்கியதும் சிவபெருமானே சித்தர் ரூபத்தில் வந்து இவரை அடக்கி, ஆட்கொண்டு மிகுந்த துணிவு உடையவராகவும், பக்தி உடையவராகவும் மாற்றினார்.

இதே போல் ஜாதக அமைப்பை கொண்ட அசோக சக்கரவர்த்தி போர் வெறி கொண்டு அலைந்தார். அளவற்ற உயிர் பலி கொண்ட இவரை 'அன்னை பராசக்தி', வயதான மூதாட்டி உருவில் வந்து, போரின் கொடுமைகளை எடுத்து இயம்பி இவர் மனம் மாற்றினார். அன்று முதல் போர் செய்வதே இல்லை என சபதம் செய்து பாரத தேசத்தில் மரம் நடுதல், குளம் வெட்டுதல், சத்திரம் கட்டுதல் போன்ற கருணை மிக்க செயல்களை செய்து சரித்திரத்தில் தனியிடம் பெற்று அனைத்து மதத்தினரையும் சமமாக நடத்தி அன்றே சர்வதேச சமத்துவத்தை நிலை நாட்டினார்.



இதே போல் கிரக அமைப்பு கொண்ட 'ராஜ ராஜ சோழனும்' ஆரம்ப காலத்தில் போரின் வெற்றியையே பெரிய சாதனையாக நினைத்தார். ஆனால் கேதுவின் சாரம் வந்த போது சதய நட்சத்திரத்தில் பிறந்த இவர் தஞ்சை பெரிய கோயில் கட்டி தெய்வீகத்துக்கும், சிற்பக் கலைக்கும் அழியா நினைவுச் சின்னம் எழுப்பி உலக அரங்கில் அற்புத மனிதராய் திகழ்கிறார்.

இதே போல் ஜாதக அமைப்பு கொண்ட கவியரசு கண்ணதாசன் அவர்கள் ராகு சாரம் நடந்த போது நாத்திகராய் திகழ்ந்தார். கடவுள் மறுப்பு கொள்கைகளை பற்றி மிக தீவிரமாய் எழுதியும், பேசியும் வந்தார். கேதுவின் சாரம் நடை பெற்ற போது கண்ணனின் புகழ் பாடும் அற்புத பாடல்களையும், தத்துவ பாடல்களையும் எழுதினார். முடிவில் 'அர்த்தமுள்ள இந்து மதம்' என்ற அரிய நூலை எழுதி பாமரருக்கும் இந்து மதத்தின் தத்துவங்களை புரிய வைத்து சிறந்த ஆன்மீக சேவை செய்தார் என்பது கண் கூடான உண்மை.

இணையில்லா கொடை வள்ளலாக வாழ்ந்த கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனின் கொடைத்தன்மை நாடறிந்தது. பாக்கிய ஸ்தானத்தில் சந்திரன், பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சுக்ரன் லக்னத்தில் புதன். அமைந்ததால் சிறந்த சொல் ஆற்றல், சிரிக்க வைத்து சிந்திக்க வைக்கும் திறன்மிக சிறப்பாக இருந்தது இவரிடம். பாக்கிய ஸ்தானத்தில் இருந்த சந்திரன் பராசக்தியின் வடிவம். எனவே சிறந்த தாயுள்ளம் கொண்டு அண்டி வந்த அத்தனை நாடக கலைஞர்களையும் ஆதரித்தார். தனது சிரம திசையில் கூட ஈகை, இரக்கம், இரண்டையும் கைவிடாமல் நாடக கலைஞர்களை ஆதரித்தார்.

இனி ரேவதி நட்சத்திரத்தில் பிறந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஜாதகத்தில் பல சிறப்புகள் இருந்தாலும், பூர்வ புண்ணிய ஸ்தானம் மிக சிறப்பாக இருந்தது. அதனால்தான் ஒரு சாதாரண நாடக நடிகராக வாழ்க்கையை துவக்கி மிகுந்த துன்பத்தை இளமையில் அனுபவித்து, முடிவில் தமிழக முதல்வராகி மக்களின் பேராதரவை பெற்று உலக சாதனைகள் பல புரிந்தார். ஜாதகம் எழுதும் போதே பதவி பூர்வ புண்ணியரும் லிக்யதே ஜென்ம பத்திரிகை என பூர்வ புண்ணியத்தை மிகவும் சிறப்பித்து எழுதுகிறார்கள். இவரது கருணை உள்ளத்துக்கு பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருந்த சுக்ரன் பெருவாரியாக உதவி புரிந்தான். எனவேதான் கருணையோடு சத்துணவு போட்ட சரித்திர நாயகனாக திகழ்ந்தார். இவரது ஜாதகத்தில் சனி பகவானும் சிறப்பான இடத்தில் இருந்தார். சனி பகவானுக்கு 'வெகு ஜனப் பிரியன்' என்ற பட்டப் பெயரும் உண்டு. அதனால்தான் 'மக்களின் செல்வாக்கை' இவர் பெற்றார்.

உடலில் சனி பகவானுக்கு உரிய பகுதி முழங்காலுக்கு கீழ். பொன் மனச் செம்மல் அவர்களின் கால் உடைந்த போது அவரது வாழ்வே அஸ்தமிதது விட்டது என பலரும் கூறினர். ஆனால் நான் மட்டும், வில் எந்த அளவுக்கு வளைகிறதோ அந்த அளவுக்கு அம்பு பாயும்'' என்பது போல் சனி பகவான் எந்த அளவுக்கு கொடுமைகளை தருகிறாரோ அந்த அளவுக்கு பெருத்த நன்மை களை செய்வார் என்று திடமாக கூறினேன். கால் உடைந்த பின் தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாபெரும் உலக சாதனைகள் செய்தார்.

64வது நாயன்மாரான திருமுருக கிருபானந்த வாரியாரின் ஜாதகத்தில் ராகு கேதுக்கள் சிறப்பாக இருந்ததால்தான் ஆலய திருப்பணிகள் பல செய்து அழியா புகழ் பெற்றார். புதனின் சாரத்தால் இவர் போல் சொற்பொழிவு செய்ய எவரும் இல்லை என பேர் பெற்றார்.

ராகு கேதுக்கள் சாரம் சிறப்பாக அமையப் பெற்ற சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் எதிர்காலத்தில் சிறந்த ஆன்மீக வாதியாக வந்து தெய்வீகத்துக்கு சிறந்த தொண்டாற்றி அழியா புகழ் பெறப் போவது உறுதி!

63ஆம் பக்கத் தொடர்ச்சி

ரத்தினங்களையும் குறைந்த விலையுள்ள இரும்புப் பெட்டியில்தான் பூட்டி வைக்கிறோம். அவற்றை தங்கத்தில் செய்த பெட்டியில் வைத்தால் அதையும் சேர்த்து கொள்ளையடித்து விடுவார்கள். அதைப் போல 'தெய்வம்' என்ற விலை மதிப்பில்லாத ரத்தினம் இந்த உடல் என்ற இரும்புப் பெட்டகத்தில் வைக்கப் பட்டுள்ளது. எங்கும் நிறைந்திருக்கும் பரம் பொருளின் பிரதிபலிப்பான ஆத்மா உள்ளே உள்ளது. இது தற்காலிகமான வாசஸ்தலமே. ஆகையால் உடலை ஓரளவுக்கு பக்குவமாய் பாதுகாக்க வேண்டியதுதான். உடல்தான் முக்கியம் என்று நாட்டமெல்லாம் உடலை வளர்ப்பதிலேயே வைத்து ஆத்மாவை மறந்து விடுவது தவறு ஆகும்.

★ ● ★

மேகங்கள் இருக்கும் போது சூரியனை நம்மால் பார்கக முடிவதில்லை. அவை விலகியதும் பார்க்க முடிகிறது. அது போலவே அகங்காரம், அபிமானம் ஆகிய மேகங்கள் விலகி விட்டால் ஆன் மாவைக் காணலாம். எங்கே தெய்வத்தைத் தேடி அலைகிறீர்கள்? அது உங்களிடமே உள்ளது.

★ ● ★

உங்கள் கையில் உள்ள விளக்கு பாதையைக் காட்டுகிறதே யன்றி உங்களைக் காட்டுவதில்லை. அந்த விளக்கை உங்களை நோக்கித் திருப்பினால் அப்போது உங்களை நீங்கள் பார்க்க முடியும். அதே போல் உங்கள் பார்வையை உட்புறம் செலுத்தினால் உங்கள் உள்ளே உள்ள அழிவற்ற பேரானந்த ஸ்வரூபமான ஆன்மாவைப் பார்க்கலாம்.

★ ● ★

வாக்கு தூய்மை உள்ளதாக இருந்தால் மனிதனும் தூய்மையானவனாக விளங்குவான். எந்த காலத்திலும் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் மனிதனானவன் தனது நாவை அடக்கி வைதது நல்லதையே பேச வேண்டும்.

★ ● ★

மனிதனின் கவலைகளுக்கும் துன்பங்களுக்கும் அடிப்படையான காரணம் ஆசை. இந்த ஆசையைக் குறைப்பதால் மட்டுமே அவன் மன நிறைவு பெற முடியும்.

★ ● ★

அன்புக்கு வெகுமதி அன்புதான். அன்புக்கு ஈடு அன்புதான். அன்பைப் பெறுவது அன்பினால் மட்டுமே சாத்தியமாகும். இந்த அன்பை விவரிக்க மொழி தேவையில்லை. புனிதமான தெய்வீக அன்புக்கு சமானமானது எதுவுமே இல்லை.

அமிர்தம் ஒன்றுதான் எல்லாவற்றையும் விட அதிக இனிப்பானது என்று சாத்திரங்கள் வர்ணிக்கின்றன. அதுவே 'தெய்வீக இனிப்பு' என்றும் கூறுகின்றன. ஆனால் இந்த அன்பின் இனிப்பு அமிர்தத்தையே இனிப்பற்றதாக்கும் அளவுக்கு அதிமதுரமானது. மனதினாலும் வாக்கினாலும் இதை விவரிக்க இயலாது. இது தெய்வநாமம் என்ற தருவில் பழக்கும் பழம் ஆகும்.

★ ● ★

புல்லில் இருந்து பாரிஜாதம் வரையிலும், சிற்றெறும்ட முதல் யானை வரையிலும், பாமரர் முதல் பரமஹம்சர் வரையிலும், யாவுமே பரதத்துவம் என்னும் இறைத் தன்மையை உடையவை

இதைக் கருத்தில் கொண்டே 'சர்வம் கல்வி தம் பிரம்மா', 'சர்வம் விஷ்ணுமயம் ஜகத்', 'ஈசாவாஸ்யம் இதம சர்வம்' என்றபடி பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற இறைத்தத்துவமே உலகெங்கும் வியாபித்துள்ளது என்று உபநிஷத்துக்கள் போதிக்கின்றன.

பாரத மக்கள்... கல், மண், மலை, மரம் போன்ற எல்லாவற்றையும் வழிபடுகின்றனர் என்று சில அந்நிய நாட்டினர் பரிகசிக்கின்றனர். இறைத்தன்மை என்பது எங்கும் நிறைந்தது. எல்லாப் பொருளகளிலும் உள்ளது என்ற விசாலமான கருத்தையே பாரத மககள் கடைப் பிடிக்கிறார்கள்.

ஒற்றுமையில் வேற்றுமையைப் பார்ப்பது பொதுவாக மனிதர்கள் சுபாவம். ஆனால் பாரத மக்கள் வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பதையே கொள்கையாகக் கொண்டவர்கள்.

*தொகுப்பு:* **எஸ். சாயி சுதாகர்**

# தேசத் தொண்டு - புகைப்படக் கண்காட்சி

நமது 50வது சுதந்திர தின பொன் விழாவை முன்னிட்டு அண்மையில் சென்னை 'கிரீம்ஸ் சாலையில்', லலித் கலா நிலயத்தில் அருமையான புகைப்படக் கண்காட்சி. மிகப் பழமையான சுமார் 130, அபூர்வ புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தன.

நமது சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள், வீரப் பெண்மணிகள், இளைஞர்கள், மற்றும் பல தலைவர்களின் அபூர்வ சந்திப்புகள்... இப்படி 1900லிருந்து 1947 வரை எடுக்கப்பட்ட பல புகைப்படங்களைப் பொறுப்பாக சேகரித்து, 'பெரிது படுத்தி' முக்கிய குறிப்புகளுடன், மிக நேர்த்தியாக தொகுத்து வைத்திருந்தார்கள். இந்த புகைப்படக் கண்காட்சியை பொறுப்பேற்று நடத்தியவர் திருமதி சி.கே. கரியாலி, ஐ.ஏ.எஸ். அவர்கள். (Commissioner of Tamil Nadu Archives & Historical Research).



கண்காட்சியில்... அண்ணா - இந்திரா காந்தி சந்திப்பு, பெரியாருடன் - ம.பொ.சி, எம்.ஜி.ஆர் - ராஜீவ்காந்தியுடன் கை கோர்த்தபடி!, மாண்புமிகு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியின் உற்சாக சிரிப்பு... இவையெல்லாம் அபூர்வ தருணங்களில் 'கிளிக்' செய்யப்பட்டவை!

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கு பெற்ற வீரப் பெண்மணிகளின் புகைப் படங்கள் சிலிர்க்க வைத்தன. டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார், இளைய இந்திரா காந்தி - விஜயலக்ஷ்மி பண்டிட், திருமதிகள் ராதாபாய் சுப்பராயன், யசோதரா தாசப்பா, குட்டி அம்மாள், ருக்மிணி லக்ஷ்மிபதி... இது போல் பல வீரப் பெண் மணிகளுடன், Home Rule Momentல் பங்கு பெற்ற பெண்மணிகளின் புகைப்படங்களும் இடம் பெற்றிருந்தன. இந்தப் புகைப்பட கண்காட்சி பலரது பாராட்டைப் பெற்றதற்கு காரணம், திருமதி கரியாலி அவர்களின் திறமை, ஆர்வமும் மட்டுமல்ல, பல துறைகளில். பல மாவட்டங்களில் பணியாற்றிய இவரது அனுபவமும் உழைப்பும் என்றால், அது மிகையல்ல! ஆவண காப்பகத்தைப் பற்றி பல உபயோகமான விவரங்களையும் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டோம்.

"நமது சுதந்திர தின 50வது பொன் விழாவை முன்னிட்டு, ஆரம்பிக்கப்பட்டது இந்த புகைப்படக் கண்காட்சி. பொது மக்களுக்கு கிட்டாத பல அபூர்வ புகைப்படங்களை சேகரிப்பதே எங்கள் நோக்கம். முக்கியமாக இன்றைய இளைய தலைமுறை கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளம்! நமது தலைவர்களின் தியாகம், எளிமை, பொறுமை, தீர்க்க தரிசனம் எல்லாமே நமக்கு வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. இதில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளில் 2லிருந்து 5 மணிவரை பள்ளிகள், மற்றும் கல்வி நிறுவனங்களிலிருந்து மாணவ, மாணவிகள் எங்கள் அலுவலகத்திற்கு வந்தால், அவர்கள் பலன் பெறும் வகையில் ஆவணங்களைப் பற்றி குறிப்புகள், விவரங்கள் எல்லாம் விளக்கப்படும் என்றார் திருமதி சி.கே. கரியாலி.

**—லட்சுமி ஸ்ரீநிவாஸ்**

# வாசகர் வாழ்வில்...

ஸ்வாமி சத்ய சாயிபாபாவைப் பற்றி நான் நிறையப் படித்திருக்கிறேன். அவரைப் பார்க்க ஆசைப்பட்டேன். பாருங்கள், 'தரிசிக்க' என்று வராமல் 'பார்க்க' என்றே வருகிறது. அப்போது மனசு அந்த அளவுக்குப் பக்குவம் அடையவில்லை!

பொதுவாகவே புத்தகம் படிப்பதை ஒரு வெறியாகவே வளர்த்துக் கொண்டிருந்த எனக்கு, முந்தின நாள் திரு.வி.க., மற்றும் மொர்ஸன் புத்தகங்களை படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இருவருமே பொதுவாக, ஒவ்வொரு மனித மூளையிலும் அண்ட சராசரங்களும் அடங்கியுள்ளன என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

இந்தக் கருத்தை மனத்தில் அசைபோட்டுக் கொண்டே, மறு நாள் சென்னை ஆபட்ஸ்பரிக்கு வருகை தந்திருந்த ஸ்வாமியைப் பார்க்கப் போனேன். அன்றைய உரையில், ஸ்வாமி, ''மனித மூளையின் ஆற்றல் அளப்பரியது. ஒவ்வொரு மனித மூளையும் அண்ட சராசர சக்திகள் அனைத்தையும் உள்ளடக்கியது.'' என்று குறிப்பிட்டபோது நான் திகைத்தேன். முந்தின நாள் நான் படித்ததை, என் மனசுக்குள் இருந்த கருத்தை எப்படி அவரால் சொல்ல முடிந்தது? பிரமிப்பால் உறைந்து போன நான் மெல்ல மெல்ல அவர் பக்கமாக ஈர்க்கப் படுவதை உணர்ந்தேன். பிறகு சேவாதள உறுப்பினரும் ஆனேன்.



என் மகனுடைய திருமணத்தை ஸ்வாமிகள் படத்தை முன் வைத்து தான் நடத்தினேன். **அப்போது எடுக்கப்பட்ட வீடியோ படத்தில் தாலி கட்டும் நேரத்தில் சுவாமியின் படத்திலிருந்து ஓர் ஒளி புறப்பட்டு தம்பதிகளை ஆசீர்வதிக்கும் காட்சியை இன்றும் காணலாம்.**

என் மகன் அப்பாவாகி, மருமகள் குழந்தையுடன் வீட்டிற்கு வந்தாள். அவளுக்கு திடீரென்று உடல் நலக்குறைவு ஏற்பட்டது. மிகவும் ஆபத்தான கட்டத்தில் இருந்த அவளை மருத்துவ மனையில் எல்லா சிறப்பு மருத்துவர்களும் சோதித்துப் பார்த்தார்கள். அமெரிக்க தொழில் நுட்பத்திற்கு இணையான அனைத்து மருத்துவ சிகிச்சைகள் செய்தும் உடல் நலம் தேறவில்லை.

மனம் உருகி ஸ்வாமிக்குக் கடிதம் எழுதினேன். ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள 'சுந்திர'த்திற்குச் சென்று பஜனையில் கலந்து கொண்டேன். பாடும் போது உள்ளம் நெகிழ்ந்து கண்களில் நீர் பெருக, 'என் மகளைப் போன்ற மருமகளைக் காப்பற்றுங்கள் ஸ்வாமி'' என்று நெஞ்சுருகி வேண்டிக் கொண்டேன். பஜனை முடிந்ததும் அனைவருக்கும் விபூதி பிரசாதம் கொடுத்தார்கள். ஏ... ஆச்சரியம்! என் கையில் விழுந்தது, குங்குமப்பிரசாதம். எனக்கு மட்டும் தனியாக. என் மன வேதனையைப் புரிந்து கொண்ட அர்த்தமாக. என் பிரார்த்தனைக்கு பதில்!

மருத்துவமனையில் என் மருமகள் பிழைத்துக் கொண்டாள். ஸ்வாமியின் பிரசாதத்தை அவள் நெற்றியில் இட்டேன். இன்றளவும் ஆரோக்கியமாக இருக்கும் அவள் எனக்கு இரண்டாவது பேரனையும் பெற்றுத் தந்து விட்டாள்.

புட்டபர்த்தியில் கடந்த ஆண்டு மே மாத சேவைக்காகப் போயிருந்தேன். இரண்டு நாட்களுக்கு கடுமையான இருதய வலி ஏற்பட்டது. உடனே அங்கேயே ஸ்வாமி நிறுவியுள்ள சூப்பர் ஸ்பெஷாலிடி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டேன். பதினைந்து நிமிடங்களில் இ.ஸி.ஜி., எக்கோ கார்டியோ கிராஃப் என்று, முக்கியமான சோதனைகள் உடனுக்குடன் மேற் கொள்ளப்பட்டன. ஓரிரு நாட்களிலேயே நான் மீண்டும் சேவையை மேற் கொள்ளும் நலனும் பேறும் பெற்றேன்.

ஸ்வாமி, இந்த காலத்தில், இந்த உலகத்தில் அவதாரம் எடுத்து வந்திருப்பது நாமெல்லாம் செய்திருக்கும் பெரும் பாக்கியம்.

*அனுபவம்: **லயன் கே. துரைசாமி** பேட்டி: **பிரபுசங்கர்***

எனது கணவர் 1990ம் ஆண்டு இலங்கையில் நடந்த இனப் பிரச்னையால் காணாமல் போய் விட்டார். நான் வசிக்கும் மட் டக்களப்பிலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள கல் முனை எனும் இடத்தில் உள்ள வைத்திய சாலையில் லிகிதர் ஆக கடமைபுரிந்த கால கட்டத்தில் அவர் காணாமல் போனார். அங்கு அவருடன் வேலை பார்க்கும் ஒரு பெண் லிகிதர் என் கணவர் மேல் மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தவர். அவர் ஓர் சிங்களப் பெண்மணி. அவரின் கணவர் தமிழர். இருவரும் தீவிர சாயி பக்தர்கள். வியாழன் தோறும் சாயி பஜனை அவர்கள் வீட்டில் நடக்கும். எனக்கு ஒருநாள் அழைப்பு விடுத்திருந்தார்கள். அவர்களின் வீட்டைச் சுற்றிக் காட்டி வருகையில் அவர்களின் பூஜை அறையினுள் என்னை அழைத்துச் சென்றனர். அங்கு சில தெய்வப் படங்களுடன் பகவானின் பெரிய அளவிலான படங்களும் இருந்தன. அதனை விட பெரிய அளவிலான இரு பாதங்கள் (பகவானின்) வைத்து பூஜித்து வருகின்றனர்.

ஒரு அழகான கதிரை (நாற்காலி) ஒன்றை வைத்து அதன் மேல் பட்டு விரித்து மலர்கள் தூவி தீபம் காட்டுகிறார்கள். பகவான் அங்கு அந்த கதிரையில் இருக்கிறார் என்ற ரீதியில் இவையனைத்தும் செய்கின்றனர். இவற்றையெல்லாம் பார்க்கும் போது எனக்கு மெய் சிலிர்த்தது. (நானும் சாயி பக்தைதான் ஆனால் இப்படித் தீவிரமில்லை)

அன்று மாலை பகவானின் சில படங்களை அப்பெண்ணின் கணவர் பிரேம் பண்ணி கொண்டு வந்தார். அடுத்த நாள் பஜனைக்காக. இத்தனைக்கும் அவர்கள் வீடு நிறைய பகவானின் படங்கள்தான். அடுத்த நாள் பஜனைக்குத் தேவையான பூஜை வேலைகளைச் செய்த பின் எனக்கு இரவுச் சாப்பாட்டைத் தந்து நான் தூங்குவதற்காக ஓர் அறையை யும் ஒதுக்கினர். அங்கும் கட்டிலின் கால் மாட்டுப்பக்கம் பகவானின் படம். நானும் பிரயாணக் களைப்பில் தூங்கச் செல்ல எத்தனித்த வேளை கால் பகுதியில் பகவானின் படம் இருப்பதால் கீழே ஒரு பாயை விரித்து என் தலைப்பகுதி பகவானை நோக்கி வரும் படி படுத்து நன்றாக அயர்ந்து விட்டேன்.

சரியாக நடு இரவிற்குப் பின் நான் ஓர் கனாக் கண்டேன்:- ''பகவானின் படம் சுவரிலிருந்து எனது கால் மாட்டில் கீழே விழுந்து கிடந்தது. நான் உடனே எழுந்து அடடா பகவானின் படம். எனது கால் மாட்டில் விழுந்து உள்ளதே என வேதனைப்பட்டு பயபக்தியுடன் என் இரு கைகளையும் நீட்டி அப்படத்தை எடுக்க முனைந்தேன். என்ன ஆச்சரியம் அப்படம் சிவனும் - சக்தியுமாக மாறியது. இவ்விஷயத்தை வீட்டாரிடம் கூற கனவிலேயே சப்தமிட்டு என் அறைக் கதவின் திரைச் சீலையை விலக்க எத்தனித்த போது திரைச் சீலைக்கு கீழே பகவானின் இரு பாதங்களையும் கண்டேன். நான் உடனேயே அதனை தொட்டு வணங்க வேண்டுமென்ற நினைவில்லாமல் அதிர்ச்சியில் சப்தமிட்டு திரும்பவும் கத்தினேன். வீட்டுக்காரர் எழுந்து ஓடிவந்து என்னை எழுப்பினர். நானும் திடுக்கிட்டு விழித்து நான் கண்ட கனவை விளக்கினேன். அப்பொழுது சரியாக 1 மணி 20 நிமிடம் (நடு இரவு) கணவன் - மனைவி இருவருமே இப்படியொரு தெய்வீகக் கனவை நான்

கண்டதையிட்டு பரவசப்பட்டனர். என்னை அவர்கள் அறையில் வந்து தூங்கும்படி கூற, நானும்பாயைச்சுருட்டி சென்று அவர்களின் அறையில் தூங்கினேன். கண்ணை மூடினேன் சிறிய ஒளிப்பிழம்பு ஒன்று என் கண் வழியாக வெளியேறி பெரிய உருவமாக பாபா அவர்கள் காட்சி யளித்தார்கள்.

அதிகாலை 3 மணியளவில் அப்பெண்மணி எழுந்து பூஜையறை வேலைகளைக் கவனித்தார். எங்கும் சாம்பிராணி மணம்தான். எனக் கும் நித்திரை இல்லாதபடியால் நானும் எழுந்து குளித்து விட்டு அவர்களுடன் பூஜையில் பங்கு கொண்டேன். இறைவனை வணங்கிய பொழுதும் எனக்கு கனவில் வந்த அந்த சிவ - சக்தி படம் அவ்வறை யில் உள்ளதா என கூர்ந்து பார்த்தேன். என் விழிகள் ஓரிடத்தில் நிலைத் தது. ஆம்! நான் கனவில் கண்ட அப்படம் அப்பூஜை அறையில் இருந்தது. பூஜை முடிந்த பின் நான் அப் பெண்ணிடம் ''அப்படத்தைத் தான் நான் கனவில் கண்டேன்'' என்றேன். ''இப்படம் உங்கள் கண வர் வைத்து வணங்கியது. நான் ஒருநாள் கேட்டேன் எனக்கு தந்து விட்டார்'' என்றார் அவர். ''நான் எங்கும் வியாபித்துள்ளேன். எளிய வர்க்கு என் அருள் உண்டு'' என்று பகவான் அருளியது போன்றிருந்தது நிகழ்வுகள்.

நான் கணவனை இழந்தாலும் பகவானின் அருளால் என் பிள்ளை களுடன் கஷ்டமில்லாமல் வாழ்கின்றேன். எனக்கு அது பகவான் கொடுத்த கொடை. மனத் தைரியம். அமைதி, சாந்தி இவையெல்லாம் பகவான் பாபா கொடுத்தது. கடந்த காலத்தை எண்ணும் போது என் கஷ்ட நிலைமையில் பகவானின் படத்தை சுவரில் பசை போட்டு ஒட்டித்தான் வணங்கினேன். ஒரு பிரேம் போட அந்நாளில் என்னிடம் பண வசதி இருக்கவில்லை. ஆனால் தற்போது ஓரளவு வசதியுடன் கஷ்டமில்லாமல் என் குழந்தைகளுடன் வாழ்கின்றேன்.

**—திருமதி ஆனந்தி பொன்னம்பலம்,**
**மட்டக்களப்பு, இலங்கை.**

என் கணவருக்கு கடவுள் மேல் பக்தியுண்டு. ஸ்ரீபகவான் சத்ய சாயி பாபா அவர்களின் மகிமை. அற்புதங்களைப் பற்றி நம்பிக்கை யில்லை. ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், ரமணரிஷி, சீரடி சாயி பாபா போன்ற மகான்களை போலில்லை என்பார்.

''இவர் மேல் அதிகாரிக்கு பாபா அவர்களின் மேல் அசைக்க முடி யாத நம்பிக்கையிருந்ததால், புட்டபர்த்தி, ஒயிற் பீல்டு சென்ற போது, என் கணவரை மிகவும் வற்புறுத்தி அழைத்து சென்றார். பகவான் கழுத் தில் போட்ட பூ மாலையை அவர் கையில், அருகில் நின்று பெறும் பாக்யம் கிடைத்தது. என்னிடம் விவரம் சொல்லி பூ மாலையை தந்த போது, நம்பிக்கையே இல்லாத இவருக்கு எப்படி இந்த பாக்யம் கிடைக்கிறதென நினைத்து பூ மாலைக்கு பூஜை செய்தேன்.

''எனக்கு உடல் நலம் கெட்டு குணமான பின் ஒரு வெள்ளிக்கிழமை காலை சந்யாசி போன்ற பெரியவர் வந்து, என் முகத்தைப் பார்த்து, நீ உடல் நலக் குறைவால் கஷ்டப்பட்டு கடவுள் அருளால் குணமானாய். இன்றிலிருந்து பூஜை அறையில் அற்புதமான கடவுளின் சக்தியை காண்பாயென சொன்னார். நான் உள்ளே வந்து மரியாதை செய்ய ஏற்பாடு செய்து, வெளியே வந்து பார்ப்பதற்குள் சென்று விட்டார். மிகவும் வருத்தப்பட்டேன்.

''மாலை விளக்கேற்றுகையில் பூஜையறையிலிருந்து பாபா படத்திலும் மற்றும் எல்லா கடவுளின் படங்களிலும் முத்து, முத்தாய் விபூதியிருப்பதை கண்டு அதிசயப்பட்டேன். கணவரிடம் சொன்ன போது, குழந்தைகள் தூவியிருப்பார்களென சொல்லி விட்டார். **எப் படித் தூவினாலும் முத்து கோர்த்தது போல் வர முடியாது** என்றேன். மறுநாள் சனியன்று ஸ்ரீ வெங்கடாஜலபதி சாமியின் நடு பாகத்தில் (நெஞ்சு பகுதி) செந்தூரமிருப்பதைப் பார்த்து பெரியவர் சொன்ன அற்புத சக்தி இது தானோ? என'' வியந்தேன். அந்த நிறத்தில் என்னிடம் குங்குமமில்லை. அதனால் குழந்தைகளின் வேலையிருக்காது என நன்றாக தெரியும். இது போல் தினமும் எல்லா படங்களிலிருந்தும் விபூதி வர, குழந்தைகளுக்கு உடல் நலம் கெட்டால் நெற்றியில் இடுவது, நல்ல காரியங்களை ஆரம்பிக்கும் போது விபூதியை வைத்து நல்லபடி முடிப்பது போன்றதை செய்தேன். நம்பியவர்களுக்கு மட்டும் விவரம் சொல்லி விபூதியைத் தர அதன் மகிமை அறிந்தார்கள்.

''ஒருநாள் கணவர் வெளியில் சென்று வேலைகளை முடித்து வீடு திரும்பும் போது, திடீரென நினைவு தவறி வழி மறந்து எப்படியோ சாலை விபத்திற்கு ஆளாகாமல் கடவுள் அருளால் வீடு திரும்பினார். படுத்த சிறிது நேரத்திற்கெல்லாம் கை, கால் எல்லாம் இழுக்க ஆரம் பித்து கட்டிலிலிருந்து விழுந்து விட, நாங்கள் போட்ட கூச்சலில் ஜனங்கள் கூடி வந்து விட்டார்கள். டாக்டர் வருவதற்குள் சரியான நிலைக்கு வந்தார். டாக்டர் வந்து ஹார்ட் அட்டாக் நர்ஸிங் ஹோமிற்கு அழைத்து போகச் சொன்னார். மறுபடியும் நினைவு தவறி என்ன செய்கிறோமென தெரியாமல் செய்ய ஆரம்பித்தார். நான் சாமி படங் களில் தோன்றிய அற்புத விபூதியை உடல் பூராவும் தடவி, நர்ஸிங் ஹோம் கூட்டி சென்றேன். டாக்டர் பரிசோதித்து விட்டு ஒன்றுமே தொந் தரவு இல்லை என சொல்லி அனுப்பி விட்டார். நல்ல நினைவிற்கு, அன்று வந்தவர் இன்று வரை எந்த வியாதியும் இல்லாமல் நல்ல உடல் நலமுடனிருக்கிறார். அன்றிலிருந்து அவர் பூர்ணமாக பாபாவை நம்ப ஆரம்பித்தார்.

**—திருமதி லலிதா நாராயணசாமி, பெங்களூர்.**

அண்ணா நகரில் உள்ள திருமங்கலத்தில் பாபா மந்திர் (பாபா இலவச மருத்துவமனை) ஒன்றுள்ளது. இங்கு ஆண்களும், பெண்களும் கூடி வாரத்தில் 2, 3 நாட்கள் கூட்டு பஜனை செய்வர். ஞாயிறு தோறும் ஏழைகளுக்கு மருத்துவ வசதி, மருந்துகளை இலவசமாக வழங்குகின்றனர். நான் எனக்கு நேரம் கிடைக்கும் போது கூட்டு பஜனையில் கலந்து கொள்வேன். கடைசியில் ஒரு ஓரமாக உட்கார்ந்து விட்டு அரை மணி நேரம் அல்லது முக்கால் மணி நேரம் இருந்து விட்டு போவேன்.

ஒருநாள், அப்படி பஜனையில் உட்கார்ந்த போது, பஜனை முடியும் நேரம் ஆகி விட்டது. ஒவ்வொருவராக வெளியேறினர். அங்கிருந்த ஒரு பெண்மணியிடம் நான் கூட சங்கத்தில் சேர ஆசைப்படுகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்த போது **பாபாவின் படத்திலிருந்த மலர்ச்சரம் கீழே விழுந்தது**. இதனை மற்றொருவர் எனக்குச் சுட்டிக் காட்டினார். பாபாவை எப்போதுதான் காணப் போகிறோமோ என்று நினைத்துக் கொண்டே வீட்டிற்கு வந்த போது, பாபாவின் திரு உருவத்தை டி.வி.யில் காட்டினார்கள்.

என்னை நோக்கி நீ ஓரடி எடுத்து வைத்தால், நான் உன்னை நோக்கி ஒன்பது அடிகள் வைத்து ஓடோடி வருவேன்' என்ற தாரக மந்திரம் என்னை மெய் சிலிர்க்க வைக்கிறது.

**—திருமதி கௌரி ராமச்சந்திரன், சென்னை-40.**



*வாசகர்களே!*


*உங்கள் ஊரில் உள்ள மகிமை வாய்ந்த பிள்ளையார் கோயில்கள் பற்றி மங்கை விநாயகர் சதுர்த்தி சிறப்பிதழுக் காக நீங்கள் கட்டுரைகள் எழுதி அனுப்பலாம். (தகுந்த புகைப் படங்களுடன்) உங்கள் படைப்புகள் மங்கையை வந்தடைய வேண்டிய கடைசி தேதி 20-6-97*

*முகவரி: **விநாயகர் சதுர்த்தி சிறப்பிதழ், மங்கை, சந்தமாமா கட்டிடம், வடபழனி, சென்னை-26***



223126

# திருமதி கலாவதி ஸ்டீபன்



சமீபத்தில் ஏ.ஜி.எஸ் சோஷியல் அகாடமி விருது, தென்னிந்திய நுகர்வோர் பாதுகாப்புக்கழக விருது, நகர பண்பாட்டுக் கழக விருது ஆகிய விருதுகளைப் பெற்று கல்விப் பணிக்குப் பெருமை சேர்க்கிறது மதுரை டால்பின் பப்ளிக் பள்ளி. இப் பள்ளியின் அதிபர் திருமதி கலாவதி ஸ்டீபன் அவர்களை சந்தித்த போது அவர் சொன்னார்.




எங்கள் டால்பின் பள்ளி தாளாளர் திரு. ஏ.ஆர். ராமனாதன் அவர்களின் கடும் உழைப்பும், உயர்தரமான கல்வி வழங்க வேண்டும் என்ற லட்சியமும்தான் நாங்கள் மூன்று விருதுகளை தொடர்ந்து பெற மூல காரணமாகும்.

1987ஆம் ஆண்டில் 85 மாணவர்கள், 10 ஆசிரியர்களுடன் துவங்கப்பட்ட எங்கள் டால்பின் பள்ளி பத்தே ஆண்டுகளில் வித்தியாசமான கல்வி வழங்கும் செயல்பாடுகளால் இன்று 1500 மாணவ, மாணவிகளும், 110 ஆசிரியர்களும் கொண்ட நல்ல பள்ளியாக உயர்ந்துள்ளது. இப்போது ப்ரி கே.ஜி முதல் ப்ளஸ்டூ வரை உள்ளது. கல்வியுடன் நல்ல கலைகளும் விளையாட்டுப் பயிற்சிகளும் அளிக்கிறோம். மாணவ, மாணவிகளின் தனித் திறமைகளை கண்டறிந்து அதில் அவர்கள் புகழ் பெற உதவுகிறோம்.

'செஸ்' விளையாட்டு அறிவுபூர்வமானது. மதுரையில் முதன் முதலாக மாணவர்களுக்கு செஸ் விளையாட கற்றுத் தந்து மாநில அளவில் செஸ் போட்டிகளில் டால்பின் பள்ளி மாணவர்கள் பங்கு பெற்று வெற்றி பெற்றார்கள். அதனால் ஸ்காலர்ஷிப்பும் கிடைக்கப் பெற்றனர். பரதநாட்டியத்தை சிறந்த முறையில் கற்றுத் தந்து எங்கள்



மாணவர்களை போட்டிகளில் பரிசுகள் பெற வைத்தோம்.

எல்லா பள்ளிகளிலும் மாணவ, மாணவிகளுக்குத்தான் போட்டிகள் வைப்பார்கள். ஆனால் டால்பின் பள்ளி சற்று வித்தியாசமாக பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 'துரோணாச்சாரியார் சந்திப்பு' என்ற தலைப்பில் பல்வேறு போட்டிகளை வைத்து, பரிசுகளை வழங்கி ஊக்குவித்து வருகிறது. ஆசிரியர் தினத்தில் இந்தப் போட்டி நடத்தப் பட்டு வருகிறது.

***டால்ஃபின் பள்ளியின் சிறப்பு அம்சங்கள் என்ன?***

எங்கள் பள்ளி மாணவிகள், மாணவர்கள் டீச்சர்களை 'ஆன்டி' என்றுதான் அழைக்க வைக்கிறோம். இதனால் மாணவர் ஆசிரியர் பாசம், அன்பு பலம் அடைகிறது.

குழந்தையை முதலில் எங்கள் பள்ளியில் சேர்க்கும் போது



பெற்றோர் தினமும் அரை மணி நேரம் குழந்தையுடன் இருக்க அனுமதிக்கப்படுகிறார்கள். இதனால் குழந்தைக்கு பள்ளியும், வீடும் ஒன்றுதான் என்ற உணர்வு உண்டாகி விடுகிறது.

நாங்கள் கல்வியை திணிப்பதில்லை. மாணவர் மனதில் படிப்பை இயல்பாக பதிய வைக்கிறோம். ஆங்கிலத்தில் பேச, எழுத மிக சிறந்த பயிற்சி கொடுக்கிறோம். தமிழுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறோம்.

# கருணையுள்ள நெஞ்சினிலே

### பகவான் ஸ்ரீகிருஷ்ணர்

பிறரை வெறுக்காமல் யாவரிடமும் அன்பு செலுத்துவோர், கடவுளுக்கு மிக நெருங்கியவர் ஆகிறார்!

கோபமின்மை, பிறருக்கு நல்லது செய்ய ஆசை கொள்ளுதல், வஞ்சங்கள், கபடு இன்மை, ஆத்மாவிடம் மனதை லயிக்கச் செய்து மற்றவற்றில் சிந்தையற்றிருத்தல் யாவும் மனத்தால் செய்யும் தவம்.

கடமையைச் செய்து கொண்டே ஆத்மஞானத்தையும், ஞானமிருந்தும் கடமையை எவர் செய்கிறாரோ அவர் பக்திமான். யார் பலனை வெறுத்து, ஞானமான தீயினால் கர்மத்தை எரித்து, ஞானத்துடன் கடமையைச் செய்கிறாரோ அவர் பண்டிதர்.

தனக்கு நன்மை செய்தாலும் அல்லது துன்பம் செய்தாலும் எந்த உயிரிடத்தும் பாரபட்சமில்லாமல் எல்லோரிடமும் பரிபூரண அன்பு வைத்து எல்லாம் ஒரே ஆத்மா என்றெண்ணி அவற்றின் துயரைத் தனதென மதித்து விருப்புவெறுப்பற்ற சிரத்தையை என்பால் வைத்துள்ளவரே என் பக்தன் ஆவார்.

யார் எல்லா ஜீவ்ராசிகளிடத்தும் நீங்காத அன்பு செலுத்தி அவற்றின் சுக துக்கங்களைத் தனதென்று எண்ணுகிறாரோ அவரே பரம சிரேஷ்டரரென்று எண்ணப்படுகிறார்.

உங்கள் எதிரிகளைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்புறுத்துகின்றவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.

மனுஷர் காண வேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாத படிக்கு எச்சரிக்கையாய் இருங்கள், உன் வலது கை செய்வதை, உன் இடது கை அறியாதிருக்கக் கடவது.

### வள்ளலார்

நடந்து நடந்து காலும் சோர்ந்தது, கேட்டு கேட்டு வாயும் சோர்ந்தது, நினைத்து நினைத்து மனமும் சோர்ந்தது, இனி இந்தப் பாவி வயிற்றுக்கு என் செய்வோம் என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரம் கொடுத்து, கண்ணீரை மாற்றுவதே ஜீவகாருண்யம்.

யாரிடத்தில் தயவு அதிகப்பட்டிருக்கின்றதோ அவரிடத்தில் கடவுள் இருக்கிறார்! அந்தத் தயை இல்லாதவர்களிடம் கடவுள் இருந்தும் இல்லாமையாய் இருக்கிறார் ! வட்டியைப் பெருக்கிப் பெருக்கி ஏழை எளியவர்களின் மனையைக் கவர்தல் கூடாது, வஞ்சனைகளை நிரப்பி வைத்துக் கொள்ளும் ஒரு பெட்டகமாக நெஞ்சத்தை வைத்துக் கொள்ளக் கூடாது. பெரியோர் மனம் வெறுப்படையும்படி நடத்தல் கூடாது.

சோற்றுச் சுகத்திலே அழுந்திச் சோம்பிக் கிடப்பதும், இரப்பவர்க்கு உமி கூட ஈயாத குணமும், ஈந்தவன் போல நாணமின்றி நடிக்கும் தன்மையும் இறை நெறியில் உங்களைச் செலுத்த மாட்டா!

மக்கள் பசியுடன் வருந்தினால் அது இறைவன் பசியுடன் இருப்பதற்கு நிகர் ஆகும்!

ஒருவன் பிரார்த்தனை செய்வதில் அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல; இந்த உலகம் எல்லாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் அதில் ஒருவனுக்கு வேண்டியவை எல்லாம் அடங்கி விடுகின்றன!

வேற்றுமை பாராட்டாது, பிற உயிர்களைத் தன் உயிர் போல் நேசித்துச் சமமான உரிமையை வழங்கி, உவப்புடன் இருக்கும் மனிதனின் இதயமானது எல்லாம் வல்ல இறைவன் உவந்து வாழும் கோயிலாக அமையும்!

உடையவர் உண்ணுகிறார்கள், வறியோர் வெம்பசியில் நொந்து வாடுகிறார்கள். இதை நினைக்கும் போது, எனது உள்ளமும் உடலும் எரிகின்றன. என்னால் உணவு உட்கொள்ள இயலவில்லை. இறைவா! அருள்புரிந்து இக்குறை இல்லாமல் தவிர்த்து விடு

பல நாள் சந்ததி இல்லாமல் பல பல விரதங்களைச் செய்து வருகின்ற சம்சாரிகள் தங்கள் தரத்துக்குத் தக்கபடி பசித்த ஏழைகளது பசியை ஆற்றுவிப்பதை விரதமாக அனுசரிப்பார்களானால், அந்தச் சீவகாருண்ய அனுசரிப்பு, நல்ல அறிவுள்ள சந்ததியை நிச்சயம் உண்டு பண்ணும் என்பது உண்மை.

கருணை உள்ளத்தோடு சன்மார்க்க நெறியில் நடப்போர் புண்ணிய சீலர் ஆவர்! அவர்கள் கூறும் திருவார்த்தைகள் வேதாக மங்களுக்கு நிகரானவை ஆகும்.

### கௌதம புத்தர்

அன்பு எனும் பிடியுள் மலையை அடக்கிக் கொள்ள முடியும். அன்பு என்னும் குடத்துக்குள் கடல் முழுவதும் நிறைந்து விடும். அன்பு என்னும் அணுக்குள் பேரொளியைக் காண இயலும்.

உலகம் உய்யப் பணி புரிவதே, இறைவனை அறிவதற்கு உரிய வழியாகும்.

அறவழியில் நடப்பவனுக்கு இந்த உலகிலும் ஆனந்தம், மறு உலகிலும் ஆனந்தம்.

அறத்தை மேற் கொள்பவன் தெளிந்த சிந்தனையுடன் சுகமாய் வாழ்கிறான். சான்றோர் அறிவுறுத்திய அறவழியில் அவன் எப்போதும் ஆனந்தம் அனுபவித்துக் கொண்டிருக்கிறான்!

நற்காரியம் செய்வதில் தாமதித்தால் மனமானது தீய வழியில் திளைக்கத் தொடங்கிவிடும்!

### கிருபானந்த வாரியார்

கண்ணுக்கு அணிகலன், கண்ணோட்டம் (தாட்சண்யம்), காதுக்கு அணிகலம் நல்ல கேள்வி, வாக்குக்கு அணிகலம் சத்தியம், கரத்திற்கு அணிகலம் தான தருமம், மனத்திற்கு அணிகலம் தியானம்!

குடும்பம் ஒரு தருவைப் போன்றது. அதற்கு வேர் மனைவி; அடிமரம் கணவன், கிளைகள் மக்கள்; குலைகள் அன்பு; மலர்கள் கருணை; பழங்கள் தருமம்! பலவித பறவைகட்கும், மனிதர்கட்கும் நிழல் தந்து மரம் உறைவிடமாக உதவுவது போல், இல்லறத்தான் எப்போதும் பிறருக்கு உதவியாக இருக்க வேண்டும். மனத்தாலும் வாக்காலும், உடம்பினாலும் பிறர்க்கு நன்மை செய்ய வேண்டும்.

பிறருக்கு தீங்கு செய்யாமல் இருந்தால் மட்டும் போதாது. நன்மையும் செய்ய வேண்டும். வேம்பு, எட்டி, வேல், முதலிய மரங்கள் மருந்துக்கும் விறகுக்கும் பயன்படுகின்றன. எப்போதும் முடிந்த அளவில் பிறருக்கு உபகாரம் செய். மனவாக்குக் காயங்களால் இயன்றவகைகளில் உதவி செய்.

உங்களது செல்வம் அழியாமல் இருக்க நீங்கள் மூன்று காரியங்களைச் செய்யாமல் இருக்க வேண்டும்.

1. ஏழைகள் கண்களிலிருந்து நீர் வராமல் நடந்து கொள்ள வேண்டும்.

2. பிறருடைய பொருள் உங்களுக்கு வரவேண்டுமென்று கனவிலும் கருதாது இருக்க வேண்டும்.

3. நியாயம் அல்லாத வழியில் பொருளைச் சேர்க்கக் கூடாது.





# கோயில் கொள்கிறான்

**குன்றக்குடி அடிகளார்**

இந்த உலகம், பேசும் மொழி, பின்பற்றும் சமயம் யாவும் மனித குலம் அன்பிலே திளைத்து இன்புற்று வாழவே.

பிறரை வாழ்விப்பது எமது கடமை - இந்தக் கருத்தை வளர்ப்பது சமயத்தின் அடித்தளமான நோக்கம்.

இந்த உலகத்தைப் போற்ற வேண்டும். இவ்வுலக உயிர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும். அது ஒரு சிறந்த வழிபாடு.

பண்பட்ட சமய ஒழுக்கம் உடையவள் மறந்தும் கூட மற்றவர்களிடம் பகையோ காழ்ப்புணர்வோ கொள்ள மாட்டான். உயிர்களிடத்து அன்பு காட்டுவதுதான் உயர்ந்த சமய ஒழுக்கம்.

தொண்டின் வாயிலாக மனிதனைப் பற்றி உலகிற்கு அழைத்துச் செல்வது மிகவும் எளிது. எனவே சமய வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதது தொண்டு நெறி.

நாம் ஒவ்வொருவரும் அன்றாடம் செய்யும் பிரார்த்தனையில் மனித குலத்தில் இன்பமும் அன்பும் பெருகி அவ்வழி சமுதாயம் இனிது வாழ வேண்டும் என்ற நினைப்பைக் கலக்க வேண்டும்.

பிறரை வாழ்வித்து வாழவும், பிறரை மகிழ்வித்து மகிழவும் கற்றுக் கொள்ள வேண்டும்.

**சுவாமி விவேகானந்தர்**

இந்த உலகில் ஒருவரால் ஒரே ஒரு நாளைக்காவது ஒரே ஒருவருடைய இதயத்திற்குச் சிறிது இன்பமும் மகிழ்ச்சியும் அளிக்க முடியுமானால் அந்த ஒன்றே ஒன்று மட்டும்தான் உண்மையாகும்.

நம்மிடமுள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி, மற்றவர்களின் தெய்வீக இயல்பு வெளிப்படும்படி அவர்களுக்கு உதவி செய்வதுதான்.

நோயாளிகளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யுங்கள். பசியால் வாடுபவர்களுக்கு உணவு கொடுங்கள். அறியாமையில் உள்ளவர்களுக்கு முடிந்த அளவிற்குக் கல்வியறிவைப் புகட்டுங்கள். இதனால் நிச்சயமாக உங்களுக்கு அமைதியும், ஆறுதலும் கிடைக்கும்.

**ஸ்ரீ அரவிந்தர்**

எக்காலத்திலும் தியாகம் புரிவீர்கள். தியாகம் என்பது உலக உயிர்களுக்காகவும் கடவுளுக்காகவுமே.

சான்றாண்மையும், வள்ளல் தன்மையுமே ஆன்மா உறையும் விரிந்த விண்ணுலகம் ஆகும். இவையின்றேல் இருட்டறையில் நெளிந்து ஊரும் புழுவையொக்கும் எமது ஆன்மா.

பிறர் நலம் பேணுதல், கடமை, இல்லறம், நாட்டுப்பற்று உலக உயிர்களிடம் அன்பு ஆகிய இவை ஆன்மாவின் கருவிகளாக அமைய வேண்டும்.

**காஞ்சிப் பெரியவர் சங்கராச்சாரியார்**

மனசு பகவானின் இடம். அதைக் குப்பைத் தொட்டியாக்கி இருக்கிறோம். இதைச் சுத்தப்படுத்தி மெழுகி பகவானை அங்கே அமர வைத்து நாமும் அமைதியாக அமர்ந்து விட வேண்டும். வாயால் பகவான் நாமத்தைச் சொல்லிப் புண்ணியம் செய்ய வேண்டும். பணத்தைக் கொண்டு பகவானுக்காகவும், ஏழைகளுக்காகவும் பல விதங்களில் தருமம் செய்து புண்ணியம் சேர்க்க வேண்டும்.





தனக்கென்று எவ்வளவு குறைவாகச் செலவழிக்க முடியுமோ அப்படி எளிமையாக வாழ்ந்து, மிச்சம் பிடித்து அதைத் தர்மத்துக்கு செலவழிப்பதுதான் தனக்கு மிஞ்சிய தர்மம்.

நாம் வாழ வேண்டும்; மற்றவரையும் வாழ விடவும் வேண்டும். பசியோடு இருப்பவர் எதிரில், ஏப்பம் வரும் வகையில் தானே எல்லாவற்றையும் சாப்பிட்டு விடுவது நியாயம் ஆகாது. அதில் சிறு பகுதியையாவது அவருக்கு அளிக்கின்ற மனப்பாங்கு இருக்க வேண்டும்.

அனைத்து உயிரினத்திற்கும் நன்மையை விரும்புக. இது உனது வாழ்வை வளமூட்டி உன்னை மகிழ்ச்சியும் அமைதியும் உடையவனாகச் செய்யும். எவ்வளவு தூரம் ஆசைகளைக் குறைக்க முடியுமோ, அவ்வளவிற்கு அவற்றைக் குறை. கால நேரங்களுக்கு ஏற்றவாறு உன்னைப் பொருத்திக் கொள். உன்னிடம் இருப்பவற்றைப் பிறருடன் பங்கிட்டுக் கொள். எப்போதும் தொண்டு செய்யத் தயாராக இரு. அதற்குரிய சந்தர்ப்பம் ஒன்றையும் தவற விடாதே.

**ஔவையார்**

லோபிகள் தம்மை வருத்திப் பறிப்பவர்களுக்குப் பொருள் கொடுப்பாரே அல்லாமல், பெற்றோர் உறவினர் முதலியோர்க்குக் கொடுத்து உதவ மாட்டார்கள்.

கருணையில்தான் ஒரு மதத்தின் ஆணிவேரே அடங்கி இருக்கிறது.

**சுவாமி சின்மயானந்தா**

நான், என்ற எண்ணம் உங்கள் வாழ்க்கையின் மையமாக இருக்க இருக்க, உங்கள் சுயநலம் வளர்கிறது. மற்ற எல்லோரையும் விட்டு உங்களைப் பிரிக்கின்றது. வருடம் ஆக ஆக, தனிமைத் துன்பம் உங்களைச் சூழ்ந்து கொள்கிறது. அதற்கு வேறு யாரும் பொறுப்பல்ல, உங்களைத் தவிர! தன்னல வெறியில், உங்களைச் சுற்றிச் சுவர்களை எழுப்பிக் கொண்டீர்கள். நட்பு, இரக்கம், இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளுதல்... இவற்றைக் கவனமுடன் பயிரிடுங்கள். பிறகு நீங்கள் எப்போதும் தனி ஆளாக இருக்க மாட்டீர்கள்.

**சாயி பாபா**

பணிவுடன் பிறர்க்குப் பணிகள் செய்திடுக. பகவான் உமக்கு நற்கதி அருள்வான்.

அகந்தையை அறவே நீக்கிக் கொள்ளுக. அடக்கத்தோடு இருந்திடப் பழகுக, முகத்தில் புன்னகை பூத்திடப் பழகுக, மனத்தில் சேவைப் பண்பினைக் கொள்ளுக.

நீங்கள் முக்கியமாக இரண்டு செய்கைகளை மறந்து விட வேண்டும். ஒன்று, நீங்கள் பிறருக்குச் செய்த உதவி, மற்றொன்று, பிறர் உங்களுக்குச் செய்த தீங்கு.

**குரு நானக்**

பொறுமையிலும் உயர்ந்த தவம் இல்லை.

திருப்தியிலும் உயர்ந்த இன்பம் இல்லை.

ஆசையினும் பெரிய தீமை இல்லை.

மன்னித்தலினும் ஆற்றல் மிக்க ஆயுதம் இல்லை

கருணையினும் பெரிய அறமில்லை!!

*நன்றி:* **பேரறிவாளர்களின் பொன்மொழிகள்**

*(தொகுப்பாசிரியர்:* ***கவிஞர் எஸ். இரகுநாதன்)***
***மணிமேகலைப் பிரசுரம்***

# மக்கள் சேவையே மகேசன் சேவை



மதுரையில் 12 வருடமாக இயங்கி வரும் ஜீனியஸ் சமூக சேவை அமைப்பின் ஸ்தாபகர் திரு. மா. நளினசேகரன் அவர்களை தொண்டுச் சிறப்பிதழுக்காக சந்தித்தோம்.

பலவித சமூக சேவை செய்வதற்கு ஜீனியஸ் சமூக சேவை அமைப்பின் மூலம், நான்கு சேவை மையங்களை வைத்து நடத்துவதாகக் குறிப்பிட்டார் அவர். ஏழை எளிய பெண்களின் குழந்தைகளை பராமரிப்பதற்காக 'அம்மா' குழந்தைகள் காப்பகம், உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு கல்வி, உறைவிடம், உடை, உணவு, அளிப்பதற்கு 'நாசர்' உடல் ஊனமுற்றோர் பள்ளி, முதியவர்களைப் பராமரிக்க ''ஆத்மா அமைதி'' முதியோர் இல்லம், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்றோர்களுக்கு உறைவிடம் கொடுத்து தொழில் பயிற்சி அளிப்பதற்கு 'மன சாந்தி' பெண்கள் மறுவாழ்வு இல்லம் ஆகியவை, இந்த நான்கு சேவை மையங்களாகும். தற்பொழுது மன வளர்ச்சி குன்றியவர்களை பராமரிக்க 'பிரம்மம்' என்கிற இல்லத்தையும் ஆரம்பித்து இருக்கிறார்.

இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறுவதற்கு நளின சேகரன் ஒரு தொழில் கல்லூரியை நடத்துகிறார். இங்கே டெலிபோன், டெலக்ஸ் ஆபரேடர் பயிற்சி மற்றும் ரேடியோ, டி.வி., குளிர் சாதன மெக்கானிசம், ஸ்கீரின் பிரிண்டிங், எலக்ட்ரீஷியன் போன்ற சுய தொழில் கல்வி பயிற்சி அளித்து வேலை வாய்ப்பு, சுயதொழில் வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கிறார். இந்த பயிற்சி நிலையத்தில் கிடைக்கும் வருமானத்தை உடல் ஊனமுற்றோர் பள்ளி நடத்துவதற்கும் மற்றும் பல சமூக சேவைகளைச் செய்வதற்கும் பயன்படுத்துகிறார். உடல் ஊனமுற்றோர் பள்ளியில் பயிலும் குழந்தைகளின் தேவைகளை நிரப்புவதற்கும் மற்ற சமூக சேவை செய்வதற்கும் சமூகத்தில் உள்ள வசதி படைத்தவர்களும். தொண்டு நிறுவனங்களும் முன் வந்து அவர்கள் விரும்பும் உதவிகளை நிதியாகவோ மற்ற பொருட்களாகவோ நன்கொடையாக கொடுத்து உதவி இவருடைய சேவை நன்கு வளர ஊக்குவிக்கின்றனர். இவ்வாறு உதவியவர்களில் ரோட்டரி கிளப்பின் அங்கமான இன்னர் வீல் கிளப், இந்திய மாதர் சங்கம் (AIWC) மாதங்கி மாதர் சங்கம், சௌஜன்யா மாதர் சங்கம், ரவுண்ட் டேபிள், மதுரை லேடீஸ் சர்கிள் மற்றும் பல அமைப்புகள் அடங்கும். பாரத ஸ்டேட் வங்கி உடல் ஊனமுற்றோர் குழந்தைகளுக்கு உணவு அளிப்பதற்கு வேண்டிய ஒரு மாத பொருட்களை கொடுத்து உதவி இருக்கிறது. குழந்தைகளின் நலனுக்காக இந்தியன் ஓவர் சீஸ் பாங்க் ஒரு ஆட்டோ வாங்குவதற்கு கடன் உதவி அளித்துள்ளது. நன்கொடையாளர்கள் தங்கள் பிறந்த நாள், திருமண நாள் போன்ற தினங்களிலும் மற்றும் பண்டிகை தினங்களிலும் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு தங்கள் உதவியை தாமாகவே முன் வந்து அளிக்கிறார்கள்.

இந்த சேவைகளுக்கு மாநில மத்திய அரசுகளிடமிருந்து இதுவரை இந்த ஸ்தாபனம் உதவி பெறவில்லை. உடல் ஊனமுற்றோர் பள்ளி மற்றும் முதியோர் இல்லத்தை விரிவுபடுத்த அரசு உதவி இருந்தால் சாதகமாக இருக்கும். மத்திய, மாநில அரசு இளைஞர்களின் சுய வேலை வாய்ப்புக்காகவும், பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் தீட்டும் திட்டங்களை நிறைவேற்றிவருகிறோம். உதாரணமாக கிராமப்புறங்களில் 8ம் வகுப்பு வரை படித்து பிறகு கல்வியை தொடராமல் உள்ளவர்களுக்கு 10ம் வகுப்பு வரை படித்து அரசு தேர்வு எழுதுவதற்கான இந்த திட்டத்தில் நூற்றுக் கணக்கான கிராமப்புற பெண்கள் பயன் அடைந்து வருகிறார்கள். டிரைசம், தாட்கோ, நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தில் எட்டாம் வகுப்பு வரை படித்த இளைஞர்களுக்கு ரேடியோ, டிவி, குளிர் சாதன மெக்கானிசம் மற்றும் மின்னியல் துறைகளில் இலவச பயிற்சிகளை கொடுத்து வருகிறோம். சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பரவை கிராமத்தில் நான்கு பெண்களுக்கு பால் பண்ணை அமைப்பதற்கு வேண்டிய அரசு உதவியை பெற்று கொடுத்திருக்கிறோம்.




எங்கள் ஜீனியஸ் சமூக சேவை ஸ்தாபனம் கிராமப்புறங்களில் விழிப்புணர்வு முகாம், இலவச கண் மற்றும் மருத்துவ முகாம்களை நடத்தி இருக்கிறது. முதியோர் கல்வித் திட்டத்தையும் நிறைவேற்றி இருக்கிறது. தற்பொழுது 'இந்தியா லிட்டரசி மிஷன்' அமைப்போடு இணைந்து கல்வி அறிவு இல்லாதவர்களுக்கு கல்வி அளிக்கும் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இதற்காக கிராமப் புறங்களில் சுமார் 5 மையங்களை அமைத்துள்ளோம். மேலும் முறை சேராக் கல்வி திட்டத்தையும் நடத்தி வருகிறது.

ஜீனியஸ் சமூக சேவை அமைப்பின் ஸ்தாபகரும் செயலாளருமான நளின சேகரன் ஒரு ஆன்மீகவாதியும் கூட. இவர் எப்பொழுதும் தூய வெள்ளை நிற உடைகளையே அணிவார். நெற்றியில் விபூதி, மஞ்சள், குங்குமத்துடன் இருப்பார். தினமும் காலையில் பூஜை முடித்து காலை சாப்பாடு சாப்பிட்டுவிட்டு தன்னுடைய கல்லூரி வேலையை ஆரம்பிப்பார். தன் தொழிற்கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கும் உடல் ஊனமுற்றோர் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கும் ஆன்மீக போதனையும் செய்கிறார். கடந்த 10 வருடங்களாக ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் உபவாசம் மற்றும் மௌன விரதம் அனுசரித்து மாலை 6 மணி முதல் 9.30 வரை பூஜை அபிஷேகங்கள் செய்து பிறகு தான் உபவாசத்தை முடித்துக் கொள்கிறார். பௌர்ணமி பூஜையில் மாணவர்களும் பொது மக்களும் கலந்து கொள்கிறார்கள். 36 வயதுடைய இந்த பிரம்மச்சாரி 24 மணி நேரமும் சமுதாய தொண்டு, ஊனமுற்றோர் தொண்டு, ஆன்மீகம் என்பதிலேயே தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிறார்.

தொகுப்பு: **வி.எஸ். ராமகிருஷ்ணன்.**

Edited & Published by B. Viswanatha Reddi for DOLTON PUBLICATIONS, MADRAS-600 026
& Printed by B. V. REDDI at Prasad Process Private Ltd., Madras-600 026

இந்தியாவின் மிகப் பெரிய தங்க நகைக் கடை

# சரவணா ஸ்டோர்ஸ்

(தங்க நகைகள், ஜவுளிகள், பாத்திரங்கள்)

ரெங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை 600017

**தங்க, வெள்ளி நகைகளுக்கு செய்கூலி இல்லை**



**22 CT. தங்கம்**
**1 கிராம் ரூ. 435/-**
(விலை மாற்றம் உண்டு)

**அதிகம் கல் எடையுள்ள நகைகளுக்கு மட்டும் 10% தள்ளுபடி. மேலும் செய்கூலி சேதாரம் இல்லை.**

**நாங்கள் விற்கும் தங்க நகைகள் மற்ற எந்த கடைகளையும் விட உயர்வான தரம் என்று சவால் விட்டு உறுதி கூறுகிறோம்.**

வெட்கிரைண்டர் ரூ.1,800/- முதல், கேஸ் ஸ்டவ் டபுள் பர்னர் ரூ.550/- முதல், மிக்ஸி ரூ.650/- முதல், கலர் டி.வி. ரூ.11,590/- முதல், டேப் ரிக்கார்டர் ரூ.1,212/- முதல், பிரிஜ் 165லி ரூ.8,000/- முதல், வாசிங் மிஷின் ரூ.3,700/- முதல், பூனம் சேலைகள் ரூ.120/- முதல், ரெடிமேட் ஷர்ட் ரூ.45/- முதல், ரெடிமேட் பேண்ட், ஜீன்ஸ் பேண்ட் ரூ.150/- முதல், சர்ட் பிட் 2 மீ ரூ.35/- முதல், ஜவுளிகள், ரெடி மேட் ஆடைகள், பாத்திரங்கள், பீரோ, கட்டில், பிளாஸ்டிக் பொருட்கள், சூட்கேஸ், ஃபேன் மற்றும் கடிகாரங்கள்.

இந்தியாவின் மிகப் பெரிய பட்டு ஜவுளி மாளிகை

**பட்டுப்புடவைகளுக்கு 10% தள்ளுபடி**

உண்மையே உயர்வு

ஞாயிறு விற்பனை உண்டு



L.R. SWAMI / PP

# மங்கை

## செப்டம்பர் '97 இதழ்

# 'விநாயகர் சதுர்த்தி'

## சிறப்பிதழ்


**வி**நாயகர் சதுர்த்தியை முன்னிட்டு - வினை தீர்க்கும் விநாயகரின் பெருமைகளையும் மகிமைகளையும் போற்றும் பக்திப் பரவச இதழாக செப்டம்பர் '97 மங்கை தயாராகிறது.

இந்தியாவில் உள்ள பிள்ளையார் திருத்தலங்கள் மட்டுமின்றி - இலங்கை, அமெரிக்கா மற்றும் உலகெங்கும் அருளாட்சி செய்யும் ஆனைமுகன் ஆலயங்கள் பற்றியும் - இதுவரை நீங்கள் கேள்விப்பட்டிராத வித்தியாசமான விநாயகர்கள் பற்றியும் - உங்கள் பூஜையறையை பரவசப்படுத்தக் கூடிய மோதகப்பிரியனின் முழுப்பக்க வண்ணப்படங்களுடனும் 'விநாயகர் சதுர்த்தி' சிறப்பிதழ் தயாராகிறது.